# NATURAL HISTORY.

## ANIMALS.

TAMIL.

PREPARED FOR THE USE OF SCHOOLS.

MADRAS:

PUBLIC INSTRUCTION PRESS.

1858.

# தாபரசங்கம சாஸ்திரம்.

## நாற்கால்மிருகங்கள்.

இஃது

பாடசாலைகளிற் கற்கின்ற மாணாக்கரின்
உபயோகத்திற்காகச்
சாதாரண வித்தியா விசாரணைத் தலைவரின்
உத்தரவுப்படி
பிரசித்தம்பண்ணப்பட்டது.

சென்னபட்டணம்:
துரைத்தனகல்வியச்சியந்திரசாலை.
௧௮௫௮.

# CONTENTS.

## DOMESTIC ANIMALS.


| | PAGE. |
|---|---|
| Horse. | 5 |
| Ass. | 20 |
| Ox. | 30 |
| Buffalo. | 38 |
| Sheep. | 42 |
| Goat | 49 |
| Dog. | 57 |
| Cat. | 72 |
| Hog. | 93 |
| Camel. | 103 |


## WILD ANIMALS.


| | |
|---|---|
| Lion. | 116 |
| Tiger. | 136 |
| Panther, Leopard, and Cheeta. | 148 |
| Lynx and the Caracal. | 161 |
| Hyæna. | 166 |
| Jackal. | 175 |
| Fox. | 180 |
| Wolf. | 191 |
| Bear. | 203 |
| Elephant. | 216 |
| Rhinoceros. | 238 |
| Porcupine. | 244 |
| Ichneumon or Mongoose. | 247 |
| Squirrel. | 250 |
| Bat | 255 |
| Monkey. | 259 |

# பொருளடக்கம்.

## நாட்டுமிருகங்கள்.


| | பக்கம். |
|---|---|
| குதிரை | ௫ |
| கழுதை | ௨௦ |
| மாடு | ௩௦ |
| எருமை | ௩௮ |
| ஆடு | ௪௨ |
| வெள்ளாடு | ௪௯ |
| நாய் | ௫௭ |
| பூனை | ௭௬ |
| பன்றி | ௯௩ |
| ஒட்டை | ௧௦௩ |


## காட்டுமிருகங்கள்.


| | |
|---|---|
| சிங்கம் | ௧௧௬ |
| புலி | ௧௩௬ |
| சிவிங்கி, செம்புலி, சிறுத்தை | ௧௪௮ |
| சிறுசிவிங்கியும், பாரசீகசிவிங்கியும் | ௧௬௧ |
| கழுதைப்புலி | ௧௬௬ |
| குள்ளநரி | ௧௭௫ |
| குழிநரி | ௧௮௦ |
| ஓநாய் | ௯௧௧ |
| கரடி | ௨௦௩ |
| யானை | ௨௧௬ |
| காண்டாமிருகம் | ௨௩௮ |
| முட்பன்றி | ௨௪௪ |
| கீரி | ௨௪௭ |
| அணில் | ௨௫௦ |
| வௌவ்வால் | ௨௫௫ |
| குரங்கு | ௨௫௯ |

# முகவுரை.

## தாபரசங்கம சாஸ்திரம்.

தாபரசங்கம சாஸ்திரம் என்பது பூமியிலுள்ள இயற்கையான பொருள்களை விவரிக்கும் நூலாம். மனிதரால் தொழிற்படாமல் பூமியில் உற்பத்தியான பொருள் யாவும் இயற்கைப்பொருள் என்னப்படும். பார்க்குமிடத்தில், தாபரசங்கம சாஸ்திரத்தில் சர்வ லோகங்களின் விவரமும் அடங்கும். ஆனதன்மையினால் ககோள பூகோளங்கள், வாயு, அவைகளுக்குச் சம்பந்தமான தோற்றங்கள் ஆகிய இவைகளைக்குறித்த விருத்தாந்தங்கள் யாவும் அந்த நூலுக்கே உரியவைகளாம். ஆகிலும் சாதாரணமாய்த் தா[illegible]பரசங்கம சாஸ்திரம் பூமியின் மேற்புறத்தையும், அதிலுள்ள சராசரப்பொருள்களையும்பற்றிய விவரத்தை மாத்திரம் அடக்கும். அது பூமியின் தன்மை யாதென்றும், அதில் உருவாக்கப்பட்ட பொருள்கள் இன்னவின்னவென்றும் சொல்லும்.

நூலாசிரியர்கள் இயற்கையான பொருள்களை ஜீவ, விருக்ஷ, தாதுவர்க்கங்கள் என்று மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார்கள். அவற்றுள் முதற் கூறிய ஜீவபிராணிகள் இயக்கமும், அனுபவமும், அறிவும், தொழில் செய்யும் திறமுமுடையவைகளாகையால், அவைகளே முக்கியமானவைகள். இரண்டாவதான விருக்ஷவர்க்கத்தில் அசரமாகிய பயிர், பூண்டு, மரம் இவைகள் அடங்கும். இவை பூமியில்

வேருன்றி, நிலைபெயராமல் வளருகின்றன. இவைகளுக்கு அறிவு இல்லை. மூன்றுவதான தாதுவர்க்கத்தில் பூமியில் வெட்டியெடுப்பிக்கப்படும் உலோகமுதலிய பொருள்கள் அடங்கும். ஜீவபிராணிகளைக்குறித்துச் சொல்லும் சாஸ்திரத்திற்குப் பிராணிவித்தையென்றும், தாபரங்களைக்குறித்துச் சொல்லும் சாஸ்திரத்திற்குத் தாபரவித்தையென்றும், உலோகங்களைக்குறித்துச் சொல்லும் சாஸ்திரத்திற்குத் தாதுவித்தையென்றும் பெயர். பிராணிகளைக் குறித்துச் சொல்லும் வித்தையே அம்மூன்றினுள் சிரேஷ்டம்.

பொதுவாகச் ஜீவபிராணிகள் நான்கு பெரிய வகுப்புகளாகப் பிரிக்கப்படும். க-வது-முதுகெலும்புள்ளவைகள் (வெர்த்திபிராத்தா); உ-வது-மிருதுவான தசையுடம்புள்ளவைகள் (மலஸ்கா); ௩-வது-பொருத்துடம்புள்ளவைகள் (ஆர்த்திக்குலாத்தா); ௪-வது-நட்சத்திரவடிவுள்ளவைகள் (ராதியாத்தா) இவற்றுள் முதற் கூறிய வகுப்பைச் சார்ந்த முதுகெலும்புள்ள மிருகங்கள் நான்கு வகுப்புகளாகப் பிரிக்கப்படும். அவையாவன,—க-வது குட்டிகளுக்குப் பால்கொடுத்து வளர்க்கிறவைகள் (மம்மேலியா). இந்த வகுப்பில் மனுஷசாதியே மேன்மையானது. உ-வது-பறவைகள் (அவிஸ்); ௩-வது-நகரும் ஜெந்துகள் (ரெப்திலியா); ௪-வது-மச்சங்கள் (பிஷிஸ்). மற்ற மூன்று வகுப்புகளின் உட்பிரிவுகளை இவ்விடத்திற் சொல்வதற்கு அவசியமில்லை. வகுப்பிற்குப்பின் வருணம், இனம், பொதுச்சாதி, சிறப்புச்சாதி, விபேதம் முதலிய பிரிவுகள் வரும்.

சர்வ ஜீவபிராணிகளையுங்குறித்துஇந்தச்சிறு புஸ்தகத்திற் சொல்வதற்கு இடமும் போதாது, அது பாலிய மாணுக்கர்களுக்குத் சிரப்திகரமாயிருக்கவும்மாட்டாது. ஆதலால், சில நாற்கால் மிருகங்களையும், பறவைகளையும்பற்றி மாத்திரம் எழுதுகிறோம். அவைகளில் நாட்டுமிருகங்கள் மனி

தருக்கு அடங்கி, அவர்களுடன் பழகிச் சாதுவாயிருக்கின்றன. காட்டுமிருகங்களோ, மனிதருக்கு அடங்காமல் தங்கள் இயற்கைப்படியே காடுகளிற் சஞ்சரிக்கின்றன.

பல பேதமான சாதிகளாய் வகுக்கப்பட்டிருக்கின்ற மிருகங்களிற் சில மாமிசபட்சிணிகள். மற்றவைகள் சாகபட்சிணிகள். இவைகள் புல் பூண்டுகளையும், மேயும். பருத்த பறவைகள் மாமிசம் தின்னும். சிறு பறவைகளும் குருவிகளும் தானியம், கனி, பூச்சி, புழு இவைகளைத் தின்னும். அந்தந்தச் சாதியான மிருகங்கள் அதினதின் உடம்புக் கூறுபாடுகளுக்குத் தக்கதாய் வெவ்வேறு இரைகளை விரும்பும். மாமிசத்தையும், மற்ற வன்மையான இரைகளையும் தின்கிறவைகளுக்கு மனிதனைப்போல இரைப்பை ஒன்று. பல இரைப்பையுள்ளவைகள் அதிக மிருதுவான பதார்த்தங்களைத் தின்னப் பிரியப்படும்.

# நான்குகாற் பிராணிகள்.

## நாட்டுமிருகங்கள்.

### குதிரை.

எத்தேசங்களில்உள்ளது.

குதிரை நான்குகாற் பிராணிகளில் ஒன்று. அது தண்ணீர் உறைந்து கட்டியாகின்ற குளிர்ந்த தேசங்களிலன்றி, மற்றத் தேசங்களில் எங்கும் உண்டு. அது ஆதியிலே கிழக்குத்தேசத்திலிருந்து அப்புறம் எங்கும் விர்த்தியானதாகத் தோன்றுகின்றது. காட்டுக் குதிரைகள் பல தேசங்களில் உண்டு. அவைகள் தென் அமெரிக்காவைச் சேர்ந்த சமநிலங்களில் திரள் திரளாகச் சஞ்சரிக்கின்றன. முற்காலத்தில் தென் அமெரிக்காதேசத்தைக் கட்டிக்கொண்ட ஸ்பானியர் தங்கள் தேசத்திலுள்ள அந்திலூசியாநாட்டின் குதிரைகளிற் சிலவற்றை அமெரிக்காதேசத்திற் கொண்டு போய்விட்டார்கள். அந்தக் குதிரைகளே நாளாவர்த்தியிற் பெருகி அதிகத் திரளாயின. சில காலங்களில் தென் சிபேரியாவிலும், சீனதருத்தாரியின் பாலைவனங்களிலும், சீனதேசத்தின் வடமேற்கிலும் திரளான காட்டுக்குதிரைகளைக் காணலாம். ஐரோப்பிய துருக்கதேசத்தைச் சார்ந்த மொல்தாவியாவிலும், ஆபிரிக்காதேசத்திலும் எண்ணிறந்த குதிரைகள் உண்டு. அராபியாதேசத்தில் அத்தனை

அதிகமாயில்லை. அராபியர் வெகு உபாயத்தோடே அந்தக் குதிரைகளைப் பிடிக்கிறார்கள். அராபிய குதிரைகளைப்போல் அத்தனை சிறப்பும், அறிவும், அமைவும், தீவிரமும், பொறுமையுமுள்ள குதிரைகள் மற்றெங்குமில்லை.

சாயல்.

நான்குகால் மிருகங்களுக்குள் குதிரையே அழகில் சிரேஷ்டமும், அவயவரூபத்தில் லக்ஷணமுமுள்ளது. அதின் உடல் அழகுக்கும், இறுகிப் பலத்த தேகத்திற்கும் ஒரு அச்சாக உருவாக்கப்பட்டதுபோல் இருக்கின்றது. அது பெருமிதநடையுள்ளது; பருத்துத் துலங்குகின்ற கண்களையுடையது. அதின் செவிகள் எருத்துச் செவிகளைப்போல அதிகம் பருத்திராமலும், கழுதைச்செவிகளைப்போல மிக நீண்டிராமலும் செவ்வையும், சரியான பரிமாணமுமுடையவைகளாயிருக்கின்றன. வளர்ந்து படிந்திருக்கின்ற பிடர்மயிர் அதின் தலைக்கு அலங்காரமும், கழுத்திற்கு ஆபரணமுமாயிருப்பதுமன்றி, அதை அழகும், ஆண்மையுமுள்ளதாகத் தோன்றும்படிக்குஞ்செய்கின்றது.

அதின் நீண்ட வாலின் அடிதொடங்கி முழுமையும் உரோமம் வளர்ந்து தொங்குவதினால், வாலானது அதின் சகனத்தை மறைத்து, அதின் பின்புறத்திற்கு அழகைத் தருகின்றது. பிளப்பில்லாமற் பரந்திருக்கின்ற குளம்பு அதின் அங்கமான கால்களுக்கு அலங்காரமாயிருக்கின்றது. குதிரைகளுக்குப் பல பேதமான வர்ணங்கள் உண்டு. அவை

வெண்மை, தாமிரம், ஊதா, கறுப்பு, கருஞ்சிவப்பு, இளஞ்சிவப்பு இவைகளும், இவைகளின் விகாரமான வர்ணங்களுந்தான். சில குதிரைகளுக்கு வெண்மையும், மற்ற வர்ணங்களும் பட்டைபட்டையாய்க் கலந்திருக்கும். அவைகள் புள்ளிக்குதிரைகள் என்னப்படும்.

குணவிசேஷங்கள்.

குதிரையானது சொற்கேட்கும்படி வழக்கப்படத்தக்க தன்மையும், வலிமையும், விரைவும், உற்சாகமும், எளிதில் இளைப்படைதலின்மையுமுள்ளது. அதற்கு ஞாபகசக்தி முக்கியமானது. அராபிய குதிரைகள் சனசங்கப்பிரியமுள்ளவைகள். அவைகள் தங்கள் எசமான்களும், அவர்கள் குடும்பத்தார்களும் குடியிருக்கின்ற கூடாரத்திலேதானே சஞ்சரிக்கும். கலப்பற்ற அராபியசாதிக்குதிரைகளுக்கு உல்லாசமான கண்களுண்டு. எசமான்களின் இஷ்டத்தை அறிந்து கொள்ளும் அவைகளின் அறிவு அவைகளுடைய முகக்குறியால் தோன்றும். குதிரைக்கு இயற்கையாய்ப் பெருநடை, நாயோட்டம், பாய்ச்சல் என்கிற மூன்றுவித நடைகள் உண்டு. பாய்ச்சலாவது காலை எட்டிவைத்துத் தாவியோடும் ஒழுங்கான ஓட்டம். இந்த மூன்று விதங்களில் பாய்ச்சலே அதிக விரைவுள்ளது. குதிரைக்கு இயற்கையாயுள்ள சர்வலக்ஷணங்களோடுங்கூட அதைப் பார்க்கவேண்டுமானால், தென் அமெரிக்காவிலுள்ள காட்டுக்குப் போய்ப் பார்க்கவேண்டும். அந்தக் காட்டிலுள்ள குதிரைகள் அடங்காத வீரமும், உல்லாசமான தோ-

ற்றமும், அகந்தையும் சுயாதீனமுமான நடையுமுள்ளவைகளாய், அங்கங்கே தங்கள் இஷ்டப்படி ஓடி உலாவித்திரியும். காட்டுக்குதிரைகள் வெளிகளிலுள்ள பசுமையான இளம்புல்லைக் கட்டுக்காவலின்றிப் போதுமானமட்டும் மேய்ந்துகொண்டுவருவதினால், மனிதர் வசப்பட்டுக் கைத்தீன் தின்று வளருகின்ற குதிரைகளைப்பார்க்கிலும் அவைகளே அதிக பலமும், விரைவுமுள்ளவைகளாயிருக்கின்றன. குதிரை இடுகின்ற சத்தத்திற்குக் கனைத்தல் என்று பெயர்.

வழக்கங்கள்.

குதிரைகளுக்குப் பலவிதமான இரைகள்வேண்டுவதில்லை. பசிக்குப் புல்லும், தாகத்திற்குத் தண்ணீரும் போதும். அவைகள் துஷ்டகுணமுடையவைகளல்ல. அவைகள் கட்டுப்பாடின்றி இஷ்டப்பிரகாரம் காட்டில் இருக்கும்பொழுது, கூட்டங்கூட்டமாய்ச் சஞ்சரிக்கின்றன. சிலவேளை கூட்டம் ஒன்றுக்கு ஆயிரம் பதினாயிரம் குதிரைகள் சேரும். அவைகள் மரம் அடர்ந்த வனங்களுக்கும், மேட்டுநிலங்களுக்கும் சமீபமாய்ச் செல்லாமல், வெளியான மலைச்சாரல்களிற் சஞ்சரிக்கும். தங்களை ஒழுங்குபடுத்தி நடத்தும்பொருட்டாக ஒரு தலைமைக்குதிரையைத் தெரிந்து ஏற்படுத்தும். அந்தக் குதிரை ஏதாவது அபாயம் நேரிடும்பொழுது உரத்த சத்தமாய்க்கனைத்துக்கொண்டு ஓட, அவைகள் எல்லாம் ஒருமிக்க அதைத்தொடர்ந்து செல்லும். அவைகளுக்கு எதிர்முகமாய்க் காற்று வீசும்பொழுது, மனிதர் கண்ணுக்கு எட்டாத

தூரத்தில் வந்தாலும், மணத்தினல் அறிந்துகொள்ளும். அமெரிக்காதேசத்திலுள்ள காட்டுக்குதிரைகள் நாட்டுக்குதிரைகளைத் தங்களுடன் சேரும்படி ஆசைமூட்டி அழைப்பதுண்டு. வெளிகளிலே நாட்டுக்குதிரைகள் மேய்ந்துகொண்டிருப்பதைக் கண்டால், காட்டுக்குதிரைகள் ஓடி அவைகளைச் சமீபித்து, அவைகளுக்குச் சிராட்டுச்செய்து, அவைகள் தங்களைத் தொடர்ந்துவரும்படி செய்வதற்கு அடையாளமாக மந்தமும் தீர்க்கமுமான ஓசையாய்க் கனைக்கும். இவ்விதத்தால் பலமுறையும் காட்டுக்குதிரைகளுடன் நாட்டுக் குதிரைகள் போவதுண்டு. பிரயாணிகள் அங்கங்கே வழியில் தங்கும் இடங்களில் தங்கள் குதிரைகளை மேயும்படி வெளியில் விட்டிருக்கும்பொழுது, அந்தக் குதிரைகளுக்குக்காட்டுக்குதிரைகள் ஆசைமூட்டி, அவைகளைத் தங்களுடன் அழைத்துப்போய்விடுவதினல், பிரயாணிகள் பலமுறை தாமதித்து நிற்கும்படி நேரிடுகிறது. தார்த்தாரிதேசத்தின் காட்டுக்குதிரைகளோ அப்படியல்ல. அவைகள் தங்கள் கூட்டங்களுக்குள் அன்னியகுதிரைகளை வரவொட்டுகிறதில்லை. யாதொரு அன்னியகுதிரை சமீபத்தில் வருகிறதைக் கண்டால், அவைகள் எல்லாம் அதை வளைந்து வெருட்டித் துரத்திவிடும். காட்டிலுள்ள துஷ்டமிருகங்கள் குதிரைகளுக்குத் தொந்தரை செய்கிறது மிகவும் அருமை. எப்பொழுதாவது அவைகளுக்குத் தொந்தரை செய்யும்படி யாதொரு துஷ்டமிருகம் வந்தால், அந்தக் குதிரைகள் தங்கள் கூட்டத்திலு

ள்ள பெண்குதிரைகள், குட்டிகளையெல்லாம் கூட்டத்தின் நடுவில் விட்டு, நெருங்கி மண்டலமாய் வளைந்து, பின்பு வருகிற துஷ்டமிருகங்களின்மேல் பாய்ந்து, முன் கால்களால் அவைகளை அடித்துக் கிழ்ப்படுத்துகிறது வழக்கம். குதிரைகள் அதிகமாய்த் தூங்குகிறதில்லை. தூங்கும்பொழுது பெரும்பாலும் நின்ற நிலையிலேயே தூங்கும்.

**இரை.** குதிரைக்கு இயற்கையான இரை புல். அதின் அங்க சொரூபத்தைப் பார்த்தால், அது உருசிகரமான ஒட்டுப்புல் முளைத்திருக்கின்ற வறட்சியுள்ள பெருவெளிகளிற் சஞ்சரிப்பதற்கு எற்றதன்மையுள்ளதாயிருக்கின்றது. சதுப்பு நிலத்தில் நடப்பதற்கு அதின் குளம்பு தகுதியானதல்ல. குதிரைகள் சில காலங்களில் மரம் செடிகளிலுள்ள இளந்தழைகளைத் தின்பதும் உண்டு. ஆயினும் தூற்றுக்காடுகளில், அல்லது மரம் அடர்ந்த வனங்களில் அவைகள் விருத்தியாகிறதில்லை. குதிரையின் உதடுகளும், பற்களும் ஒட்டுப்புல்லைக் கறிப்பதற்கு உபயோகமானவைகளாயிருக்கின்றன. சாகபட்சிணிகளான மற்ற மிருகங்களுக்கு வேண்டிய புல் இல்லாதிருந்தாலும் வெளிகளில் ஜலம் மாத்திரம் தாராளமாய் இருக்குமானால் அங்கே குதிரைகள் நன்றாக விர்த்திக்கும். அவைகள் தண்ணீர் அதிகமாய்க் குடிக்கும். குதிரை நீர்க்குதிரையைப்போலத் தன் இரையை நெறுநெறென்று கடிதது மென்று தின்கிறதுமில்லை; எருதைப்போல அசைபோடுகிறதுமில்லை. அது மா அரைக்கும் யந்திரம் சக்கரமாய்

உழன்றுவருவதுபோலத் தன் அலகை ஆட்டி, இரையைச் சப்பித்தின்னும். நாட்டுக்குதிரைகள் தானியங்களைத் தின்பதற்கு வழக்கப்பட்டிருக்கும்.

குட்டி.

பெண்குதிரை சினைப்பட்டுக் குட்டிபோடுவதற்குச்சாதாரணமாய்ப் பதினொரு மாதம் செல்லும். சிலவேளை இன்னும் சில நாள் அதிகரிப்பதுமுண்டு. அது ஒரு முறையில் ஒரு குட்டிக்கு அதிகமாய்ப் போடுகிறதில்லை. குதிரைகள் மூன்று நாலு வயதளவும் வளரும். அப்புறம் வளருகிறதில்லை. அவைகள் நெடுங்காலம் சீவனோடு இருக்கிறதில்லை. சராசரியாகப்பார்த்தால் குதிரைக்கு வயசு-௨௫. சில குதிரைகள் ௪௦, ௫௦-வயசாகுமட்டும் சீவனோடு இருப்பதும் உண்டு. ஏழெட்டுப் பிராயமட்டும் அந்தந்தக் குதிரைக்கு வயசு இத்தனையென்று அதின் பல்லைப்பார்த்து அறியலாம்.

உபயோகம்.

குதிரையானது மனிதருக்கு அதிக உபயோகமான மிருகங்களில் ஒன்று. அது மனிதர் கைக்கீழ் வசப்பட்டிருந்ததினால், அவர்களுடைய சீர்திருத்தத்திற்கு அதிக உதவியுள்ளதாயிற்று. அது ஒன்றுக்கும் அஞ்சாத ஆண்மையுள்ளதாயிருக்கின்றது. ஆதலால் அது இராணுவத்திற்குரிய பராக்கிரமமான தொழில்களைச் செய்வதற்கு ஏற்றது. அது அத்தனை உற்சாகமுள்ளதாயிருந்தும், அதினிடத்தில் அதிக பொறுமையும் விடாமுயற்சியும் உண்டு. ஆதலால் அது வண்டிகளை இழுக்கும்பொழுதும், அதின் முதுகில் ஏற்றப்படும் பாரமான சுமைகளை எடுக்கும்பொழுதும் உண்டாகிற

வருத்தத்தைப் பாராட்டாமல், அமைதியாய்ச் சகித்துக்கொள்ளும். இந்தியாவிலுள்ள குதிரைகளின் வளர்ச்சிக்குத் தேசசௌக்கியம் போதாதிருக்கின்றதினால், அவைகள் சிறு மட்டங்களாயிருக்கின்றன.

தென் இந்தியாவில் அங்கங்கேயுள்ள தட்டுவாணி மட்டங்கள் அதிக சிறியவைகளும், அவலட்சணமுள்ளவைகளுமாயிருக்கின்றன. அவைகள் சுமை எடுப்பதற்கேயல்லாமல், சவாரிக்கு உபயோகமுள்ளவைகளல்ல. ஐரோப்பிய துரைகள் அவைகளைச் சவாரிக்குவைக்கிறதில்லை. ஆகிலும் அந்தத் தட்டுகளுக்கு அவைகள் சுதேசிகளிடத்தில் நல்ல தீனியும் தேய்ப்பும் இல்லாமலிருந்தும், அதிகம் வருந்தி உழைக்கும். உள்நாட்டுத்தட்டுகள் சுமையெடுப்பதில் உபயோகிக்கப்படும். தக்கணத்திலும், மஹாராஷ்டிரதேசத்திலும் சிறப்புள்ள மட்டக்குதிரைகள் சில உண்டு. அவைகள் ஏறக்குறையப் பதின்மூன்று பிடி உயரத்திற்கு வளரும். இந்தியாதேசத்தில் பெரும்பாலும் பாரசீகக்குதிரைகளும், அராபியகுதிரைகளும் ஏறுவதற்கும், பண்டியிழுப்பதற்கும் உபயோகப்படும். அந்தக் குதிரைகள் அதிக பலமும் அந்தமுமுடையவைகளாய்ப் பதினலு, பதினைந்து பிடி உயரத்திற்கு வளரும். அவைகளைப் பார்க்கிலும் அதிக உயரமான குதிரைகள் ஆபிரிக்காதேசத்தைச் சேர்ந்த நன்னம்பிக்கை முனையிலும், ஆஸ்திராலியாவிலுமிருந்து இந்தியாதேசத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. இங்குள்ள அதிக வெப்பம் அவைகளுடைய சௌக்கியத்திற்கு ஈன

மாயிருப்பதினால், அவைகள் பாரசீகக் குதிரைகளைப் போல் அத்தனை நன்றாய் உழைக்கிறதில்லை. நன்னம்பிக்கைமுனைக் குதிரைகள் சாங்கமான உறுப்புடையவைகள். ஆஸ்திரேலிய குதிரைகளோ, பெரும்பாலும் அப்படிப்பட்டவைகளல்ல. இந்தியாவிலே பைகோமட்டங்களும் உபயோகிக்கப்படுகின்றன. அவைகள் ஏறக்குறையப் பன்னிரண்டு பிடி உயரம் வளரும். அவைகள் அந்தமும், பலமும், உற்சாகமும், தீவிரமான நடையுமுள்ளவைகள். சமுத்திராதீவிலுள்ள அச்சி நாட்டிலிருந்தும் சில மட்டங்கள் வருவதுண்டு. அவைகள் சிறுமட்டங்களாயினும், அதிக விரைவும், வேலைக்குத் திறமுமுடையவைகள்.

மனிதருக்குக் கைவசப்பட்டிருக்கின்ற பல சாதியான குதிரைகளுக்குள்ளெல்லாம் மிகவும் பெரிதும் விரைவுமுள்ளவைகள் அங்கிலோதேசக் குதிரைகள். அவைகளுக்கு மேம்பட்டவைகள் எங்கும் இல்லை. அங்கே வெவ்வேறு வேலைகளுக்கு உபயோகப்படத்தக்க பல சாதியான குதிரைகள் உண்டு. சில குதிரைகள் பந்தயத்திற்குத் தகுந்தவைகள்; சில வேட்டையாடுவதற்கு உபயோகமானவைகள். மற்றும் சில சவாரிவண்டி இழுக்கத்தக்கவைகள். வேறு சில சாமான் ஏற்றப்படுகிற பளுவான நாலு சக்கரப்பண்டி முதலானவைகளையும் இழுக்கும்: இன்னும் பல பேதங்கள் உண்டு. குதிரைகளுக்குள்ளெல்லாம் விரைவான ஓட்டமுள்ளது அராபிய குதிரையே. ஆயினும் அதுவும் அங்கிலோதேசத்திலு

ள்ள பந்தயக்குதிரைக்கு ஒப்பானதல்ல. அப்படிப்பட்ட பந்தயக்குதிரை ஒரு ஆளைத் தன் முதுகிற் சுமந்துகொண்டு, இரண்டு நிமிஷத்தில் ஒருமைல் விதம் ஓடும். சில குதிரைகள் இன்னும் அதிக விரைவாய் ஓடினதும் உண்டு. எந்தக் குதிரையும் நாயோட்டத்தில் அங்கிலோ குதிரையை வெல்வது அரிது. அது ஒரு மட்டான சுமை எடுத்துக்கொண்டு, ஒரு மணிநேரத்தில் ௧௫-௩மைல் வீதம் நாயோட்டத்திற் போகும். இப்படிப்பட்ட குதிரை அமெரிக்காதேசத்திலுமுண்டு. பெருநடையிற்போனால், ஒரு மணிநேரத்திற் சில குதிரைகள் ௫-மைல் வீதம் நடக்கும். ஆகிலும் அத்தனை துரிதமான கெதி அருமை. அங்கிலோதேசத்திலுள்ள பிரபுகள் தங்கள் இரதங்களில் பெரும்பாலும் இரண்டு குதிரை பூட்டிச் செலுத்துவார்கள். அங்கிலோ இராக்கினியவர்கள் பார்லிமெந்துக்குப் போகும்பொழுது, அவருடைய இரதத்தில் எட்டுக் குதிரை பூட்டிச்செலுத்தப்படும். மனிதருக்குக் கைவசப்பட்டும் பழகியுமிருக்கின்ற குதிரைகள் அவர்களுக்கு உபயோகமுள்ளவைகளாயிருக்கின்றனவென்று அறிந்தோம். அவை உபயோகமானவைகள் மாத்திரமல்ல. அவைகளுக்குச் சில விசேஷ லட்சணங்களும் உண்டு. அதற்குத் திருஷ்டாந்தம் இதன் அடியில் வரும் கதைகளிற் காண்க.

கதைகள்.

சிலகாலத்திற்குமுன் இறந்துபோன ஸர் ரோபார்த்து கிலெஸ்பி என்னும் தளகர்த்தர் கல்கத்தா நகரத்தில் வாசமாயிருந்தபோது, ஒரு வெள்ளை அராபிக்குதிரையை வைத்தி

ருந்தார். இந்துக்களுக்குரிய அதிக விசேஷமான உற்சவதினம் ஒன்றில் வழக்கமாய் நடந்துவருகிற விதம்விதமான வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டாடும்பொருட்டாக எண்ணிறந்த ஜனங்கள் பந்தயமைதானத்தில் போயிருந்தனர். மேற்படி துரையும் அவ்விடத்திற்குப் போய், தமது குதிரையைச் சமீபமாயிருந்த பந்தயச்சாலையில் நிற்கும்படி விட்டு, நடந்த வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டுநின்றார். அப்பொழுது ஜனங்கள் சடிதியில் திகிலடைந்து, கூவிக்கொண்டு ஒருவர்மேல் ஒருவர் நெருங்கி விழுந்து நெரிந்தார்கள். அதின் காரணமென்னவென்றுவிசாரித்தவிடத்தில், கூட்டிற்குள் அடைபட்டிருந்த வேங்கைப்புலி ஒன்று கூட்டிலிருந்து வெளிப்பட்டு, ஜனங்களுக்குள் ஓடித்திரிந்ததினால் இத்தனை அச்சத்திற்கு இடமுண்டாயிற்றென்று ஸர் ரோபார்த்து துரையவர்கள் அறிந்து கொண்டார். உடனே அவர் தமது குதிரைமேல் ஏறி, பக்கத்தில் ஒருவன் கையில் இருந்த பன்றி வேட்டைக்குரிய ஈட்டி ஒன்றைத் தாவிப்பறித்துக்கொண்டு, புலியைக் குத்திக்கொல்லும்படியாகத் தீவிரமாய்ச் சென்றார். புலி அவரைக் கண்டவுடனே, ஒரு பாய்ச்சலிற் பாய்ந்து கொல்லும்படி சமயம் பார்த்துக்கொண்டு பதுங்கிக் கிடந்தது. அவர் அந்த நிமிஷத்தில் சிறிதும் கலங்காமல் தமது குதிரையைத் தூண்டிச் செலுத்த, அது ஒரு பாய்ச்சலிற் புலியைக் கடந்து போகையில், தப்பாமல் அதின் முதுகெலும்பைப் பிளந்து உருவிச்செல்லத்தக்கதாக ஈட்டியினாற் குத்திவிழுந்

தினர். அந்தக் குதிரை புலியைக் கண்டு அதைரிய ப்பட்டாவது, அச்சங்கொண்டாவது தாமதித்து நிற்குமானல், அல்லது அதைத் தாண்டும்பொழுது விலகிப்போகுமானல் ஒரு நொடிக்குள்ளாகப் புலி துரையையும் குதிரையையும் பாய்ந்து கிழித்துக் கொன்றுவிடும். குதிரையோ ஊக்கத்தோடும், துணிவோடும் புலியைத் தாண்டினதினல், துரை தவருமல் ஒரு குத்தில் அதை விழுத்தலாயிற்று.

மேற்சொல்லிய தளகர்த்தரிடத்தில் மற்ருெரு படைக்குதிரை நின்றது. அதற்கு அவரிடத்தில் இருந்த பட்சம் இவ்வளவென்பதை இதின் அடியில் வரும் சங்கதியினல் அறியலாம். ஸர் ரோபார்த்து தளகர்த்தர் றலுங்காகோட்டை பீரங்கிக் குண்டுகளால் இடித்துடைக்கபட்ட சமயத்தில், யுத்தத்தில் மடிந்துபோனபின்பு, அவருடைய பொருள்கள் எல்லாம் ஏலங்கூறி விற்கப்பட்டன. அப்பொழுது அவர் ஆபிரிக்காதேசத்திலிருந்து கொண்டுவந்து உயிருக்குயிராய் நேசித்திருந்த கறுப்புக் கேப் குதிரையும் விலைப்பட்டது. அ-வது. குதிரைப்பட்டாளத்தைச் சேர்ந்த போர்ச்சேவகர்கள் தங்கள் தளகர்த்தனை மறந்துவிடாதிருப்பதற்கு ஞாபகக்குறியாக மேற்படி குதிரையை ௫,௦௦௦-ரூபாய்க்கு வாங்கினர்கள். அவர்கள் வேற்றிடங்களுக்கு மாற்றப்பட்டுப் போகிறபொழுதெல்லாம்அந்தக் குதிரை அவர்களுக்குமுன்னே நடந்துபோம். அந்தப் பட்டாளத்தார் கான்புரிக்குப் போகும்படி மாற்றப்பட்டார்கள். அங்கே அவர்கள் ராணுவசிட்சை செய்யப்ப

டும்பொழுதும், அணிவகுக்கப்பட்டு நிற்கும்பொழு தும் அந்தக் குதிரையை முன்போலக் கொடிமரத் தினிடத்தில் நிற்க விடுவார்கள். பிற்பாடு மேற்படி பட்டாளத்தார் அங்கிலோ தேசத்திற்குத் திரும்பும் படி உத்தரவாயிற்று. அவர்கள் அந்தக் குதிரையை த் தங்களுடன்கூடக் கொண்டுபோவதற்குப் பணம் போதாததினால், அதை ஒரு துரைக்கு விற்றார்கள். அவர் அதை வாங்கி, அது மரணபரியந்தம் சௌக் கியமாய் நிற்கும்படியாக நேர்த்தியான தகுந்த மை தான ஸ்தானத்தைச் செம்மைப்படுத்தி, அதில் அ தை விட்டு நன்றாகப் போஷித்தார். அந்தப் பட்டா ளத்தார் போனபின்பு எக்காளத்தின் சத்தம் ஒரு பொழுதும் கேளாததினால், அந்தக் குதிரை ஒன்று ம் தின்னாமல் நின்றது. அதைப் பராமரிக்கின்றவன் ஒருநாள் உலாவிவரும்படி அதை வெளியிற் கொண் டுபோனபொழுது, அது அவன்கையினின்று தப்பி விரைவாய் ஓடி, பட்டாளத்தார் வழக்கமாய் அணி வகுக்கப்படுகிற வெளியிலே தான் முன்பு நின்ற இ டத்திற் சேர்ந்து, சற்றுநேரம் உரத்துக் கனைத்து, பி ன்பு விழுந்து இறந்தது.

மேலும், ஐரோப்பாதேசத்தில் ஒரு குதிரை தன் எசமானிடத்தில் அதிக பட்சமாயிருந்ததைக்குறி த்து ஆச்சரியமான கதை ஒன்று சொல்லப்பட்டிரு க்கின்றது. அது வருமாறு:—அங்கிலேயருக்கும், பிரான்சியருக்கும் யுத்தம் நடந்த காலத்தில் பிரான் சியகுதிரைப் பட்டாளத்தில் எக்காளம் ஊதும் போர்ச்சேவகன் சிறந்த போர்க்குதிரை ஒன்றை

வைத்திருந்தான். அவன் அதைத் தன் பிராண னைப்போல் நேசித்தான். அதுவும் அவனுக்கு எப் பொழுதும் அமைந்து, அதிக சாதுவாக நடந்தது. அந்தக் குதிரை தன் எசமானுடைய சத்தத்தையா வது, அவன் ஊதும் எக்காளத்தின் சத்தத்தையா வது கேட்கும்பொழுதும், அவன் தரிக்கும் இரா ணுவ உடையைக் காணும்பொழுதும், அதற்கு மி குந்த உல்லாசம் உண்டாகும். அது தன் எசமான் ஏறிப்போகும்பொழுதுமாத்திரம் சந்தோஷங்கொ ள்ளுகிறதாய்க் காணப்படும். அது மற்றவர்களுக் கு அடங்குகிறதுமில்லை, உபயோகப்படுகிறதுமில் லை. ஒருமுறை அந்தக் குதிரை மற்றொருவன் ஏறிச் சவாரிபண்ணும்படி அவனுக்குக் கொடுக்கப்பட்ட பொழுது, மிகவும் முரண்டு பண்ணி, ஒரு அடிதா னும் எடுத்துவைக்காமல் திரும்பவும் தன் எசமா னிடத்திற்கு ஓடிப்போயிற்று. அந்தக் குதிரை அ ப்போதப்போது பலமுறை யுத்தகளத்தில் தன்மே ல் ஏறின எசமானைப் பல சங்கடங்களுக்கும் பிரா ணாபாயங்களுக்கும் மயிர்க்கிடை தப்பித்துக்கொண் டு வந்ததுமுண்டு. கடைசியில் அந்தப் போர்ச்சே வகன் சேர்ந்திருந்த பட்டாளம் யுத்தத்தில் முறிய டிக்கப்பட்டுப் புறங்காட்டி ஓடுகையில், அவன் பிரா ணாபாயமாய்க் காயப்பட்டு விழுந்தான். அநேக நா ட்சென்றதின்மேல் அவ்விடத்தில் அவனுடைய பி ரேதம் கிடந்ததையும், அதின் பக்கத்தில் அந்த அ றிவுள்ள போர்க்குதிரை ஒருநிலையாய் நின்றதையும் கண்டார்கள். இத்தனை நாளளவும் அது தன் எச

மானே விட்டு விலகி எங்கும்போகாமல், தனக்குள் ளபசி தாகத்தைப் பொருட்டாய் எண்ணமல், பிரேதத்தைப் பட்சிக்கவரும் மாமிசபட்சிணிகளாகிய பறவைகளே வெருட்டித் துரத்தி, அந்தப் பிரேதத்தைக் காவல்செய்துகொண்டு நின்றது. குதிரையின் காயங்களிலிருந்து அதிக ரத்தம் வடிந்ததிஞலும், விசேஷமாய் அது துக்கத்தோடே பட்டினியாயிருந்ததிஞலும், அதின் தேகம் எலும்பும் தோலும் தவிர, தசை சிறிதும் இல்லாமல் உலர்ந்து மெலிந்திருந்தது.

அராபியர் தங்கள் குதிரைகளே மிகவும் அன்பாகப் பராமரிக்கிருர்கள். அதற்குத் திருஷ்டாந்தம் பின்வரும் கதையிற் காண்க. அராபிய தேசத்தின் பாலேவனத்தில் ஒரு ஏழை அரபியன் இருந்தான். அவனுக்குப் பெண்குதிரை ஒன்றுதவிர, வேருெரு ஆஸ்தியும் இல்லே. அதைப் பிரான்சுதேசத்தின் கச-ம் லூவி அரசனுக்கு அனுப்பும்பொருட்டாக, சயித் நகரத்தில் இருந்த பிரான்சிய காரியஸ்தன் மேற்படி அரபியனிடத்தில் கிரயத்திற்குக் கேட்டான். அந்த அரபியன் நெடுங்காலமளவும் கொடுக்க உடன்படாமல், பின்பு தன் வறுமையினிமித்தம் ஒரு பெருந்தொகையான பணத்தைக்குறித்து இவ்வளவு பணம் கொடுத்தால், என் குதிரையை உமக்குத் தருவேன் என்ருன். காரியஸ்தன் பிரான்சுதேசத்திற்கு எழுதி, அந்த விலேக்கு வாங்கும்படி உத்தரவுபெற்ற பின்பு,குதிரையைக் கொண்டுவரும்படி அரபியனுக்குச்செய்தி சொல்லியனுப்பினுன். ஏழை அரபியன்

முழுமையும் பிறலாயிருந்த கந்தையால் தன் சரீரத்தை மூடிக்கொண்டு, மின்போலப் பறக்கத்தக்கவிசைவுள்ள தன் சிங்காரமான குதிரைமேல் ஏறிக்கொண்டு, சீக்கிரத்திற் போய்ச்சேர்ந்தான். சேர்ந்தபின் அவன் குதிரையைவிட்டு இறங்கி, சற்றுவேளை திரவியத்தைப் பார்த்து, அதன்மேல் தன் குதிரையை அதிக காதலாக நோக்கி, நெடிதுயிர்த்து, "என் சிறப்பே, என் திரவியமே, நான் உன்னை ஆருக்குக் கொடுக்கப்போகிறேன். ஐரோப்பியருக்கா? அவர்கள் உன்னைக் கட்டி அடித்து வருத்தப்படுத்துவார்களே. உன்னைக் கைவிட்டால் என் உயிர் பிழைக்குமா? நான் உன்னைக் கொடுத்துவிடுவதில்லை. என்கூட வா, உன்னைப் பார்த்து என் பிள்ளைகள் மகிழ்ச்சியடைவார்கள்" என்றுசொல்லி, உடனே தன் குதிரைமேல் ஏறி, நொடிக்குள்ளே காற்றுப்போலக் கண்ணுக்கு எட்டாத தூரத்தில் பறந்து மறைந்தான்,

## கழுதை.

எத்தேசங்களில் உள்ளது.

நாற்கால் விலங்குகளுக்குள் குதிரை சேர்ந்திருக்கின்ற வகுப்பு எதுவோ, அதுவே கழுதையின் வகுப்பு. இப்பொழுது பெரும்பாலும் சீர்த்திருத்தமுள்ள ஜனங்கள் வாசமாயிருகின்ற தேசங்களில் எங்கும் கழுதைகள் மனிதர்கள் வசப்பட்டு, அவர்களுக்குச் சுமைசுமப்பதற்கு உபயோகமாயிருக்கின்றன. கழுதை ஆதியிலே

ஆசியாவின் நடுத்தேசங்களில் உள்ளது. அல்லாமலும் அது தருத்தாரியாவின் மலை செறிந்த வனங்களிலும், பாரசிகதேசத்திலும், அராபியாவிலும், ஆசியாகண்டத்தைச் சேர்ந்த மற்றும் சில தென்பாகங்களிலும் உண்டு. மேற்சொல்லிய தேசங்களில் எக்காலத்திலும் காட்டுக்கழுதைகள் நூற்றுக்கணக்கான கூட்டமாய்க் கூடித்திரிவது வழக்கம். தருத்தாரிய கழுதைகள் இலையுதிர்காலத்தில் ஆயிரம் பதினாயிரமாய்ச் சேர்ந்து இந்தியாவுக்கு வரும். கச்சு, குஜிராத் என்னும் தேசங்களுக்கு அவை பல கூட்டமாய் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வந்து, அங்கிருந்து வசந்தகாலத்தில் தருத்தாரிய தேசத்திற்குத் திரும்பும். காட்டுக்கழுதைகள் தென் அமெரிக்காவிலே திரளாயுண்டு. அவைகள் அங்குள்ள சில இடங்களில் அதிகமாய் விர்த்தியாகிறதினால், அவைகளினிமித்தம் ஜனங்களுக்கு அதிக சங்கடம் உண்டு.

**சாயல்.** கால்களும் குளம்புகளும் கழுதைக்கும், குதிரைக்கும் ஒரேவிதமாயிருக்கும். ஆனாலும் கழுதைக்குச் செவி நீண்டிருக்கும்; பிடர்மயிர் குறுகியிருக்கும்; வாலில் அடி தொடங்கி முழுமையும் உரோமம் வளராமல், நுனியில்மாத்திரம் முடிச்சுப்போல் வளர்ந்திருக்கும். மனிதரால் வளர்க்கப்பட்டுச் சாதுவாயிருக்கிற கழுதைகள் அவலட்சணமான தோற்றமுடையவைகள். காட்டுக்கழுதைகளோ, சிறந்த ரூபமுடையவைகள். காட்டுக்கழுதைக்குப் பிடர்மயிர் மிருதுவானதாய்

நாலு மூன்று அங்குலம் வளர்ந்திருக்கும்; நெற்றி விற்போல் வளைந்திருக்கும்; செவி நீண்டு நிமிர்ந்து நெறித்திருக்கும். வீட்டுக்கழுதைகளின் செவி சோர்ந்து சரிந்திருக்கும்; நெற்றி தட்டையாயிருக்கும். மேலும் காட்டுக்கழுதை வீட்டுக்கழுதையைப்பார்க்கிலும் அதிக உயரமும், மெல்லிய கால்களும், அந்தமான மேனியுமுடையது. அதின் உரோமம் வெள்ளிநிறமாயிருக்கும். வயிறும், கால்களும் வெண்மையாயிருக்கும். அதின் முதுகின் மத்தியில் நேரே நெருங்கிவளர்ந்திருக்கின்ற ஊதாவர்ணமான உரோமரேகை உண்டு. வீட்டுக்கழுதையைப்போலக் காட்டுக்கழுதைக்கும் கழுத்திலே மேற்சொல்லிய வர்ணமான குறுக்குவரி இருக்கும். இத்தேசத்தில் மனிதரால் வளர்க்கப்படுகிற கழுதைகள் பெரிய வெள்ளாடுகளைப்பார்க்கிலும் அதிகம் உயர்ந்தவைகளல்ல. ஸ்பானியதேசத்தில் விர்த்தியாகின்ற கழுதைகளோ, பெரும்பாலும் பாரசீகக் குதிரைகளைப்போலப் பதினைந்து பிடி உயரம் வளர்ந்தவைகள். சாதி, பருப்பம், பலம், அழகு, பெருமிதமான தோற்றம் முதலியவைகளில் ஸ்பானிய கழுதைகளை வெல்லத்தக்கவைகள் உலகத்தில் மற்றெங்கும் இல்லை. அவைகள் சிலவேளை ஒவ்வொன்று ௬000 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கு விலைப்படுவதுண்டு.

பொதுவாய்க் கழுதைகள் மந்தமும், முரட்டுத்தன்மையுமுள்ளவைகள். ஆயினும் இந்தக் குணங்கள் அவைகளுக்கு இயற்கையாய் உள்ளவைகளல்ல. அவைகளைத் த

குணவிசேஷங்கள்.

காதவிதமாய் நடத்துவதினால் அவைகள் இப்படி மந்தமும், முரட்டுத்தன்மையுமுடையவைகளாகின்றன. காட்டுக்கழுதைகள் ஆண்மையும் விரைவான ஓட்டமுமுள்ளவைகள். எகிப்தைச் சேர்ந்தகாயிரோபுரியில் வாகனங்களாய் உபயோகிக்கப்படுகின்ற கழுதைகள் விரைவு, அடக்கம், சாந்தம் முதலிய குணங்களாற் சிறந்தவைகளாம். கழுதை விசேஷமாய் அமைதியும், பொறுமையும், தீரமுமுடையது. அது மிகவும் வருத்தப்பட்டு வேலைசெய்யும்; கிடைத்த பரும்படியான தீனைத் தின்று திர்ப்தியாகின்றது. கழுதை தன் எசமானிடத்தில் சேர்ந்து பட்சமாய் நடக்கத்தக்கது. திரளான சனங்கள் கூடி நிற்கின்ற சபையிலும் அது தன் எசமானை நிதானமாய் அறிந்து கொள்ளும். தனக்கு வழக்கமான இடங்களையும் வீதிகளையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும். கழுதையின் சத்தத்திற்குக் கத்துதல் என்று பெயர். அது செவிக்கு மிகவும் வெடிப்பும், வெறுப்பு முள்ளதாகத் தோன்றும். குதிரையைப் போலக் கழுதையும் பெருநடை, நாயோட்டம், பாய்ச்சல் ஆகிய மூன்று வித நடைகளை உடையது. ஆகிலும் அது கொஞ்சத் தூரத்திற்கு விரைவாய் ஓடிப் பின்பு மெதுவாகவே நடக்கும்.

வழக்கங்கள்.

காட்டுக்கழுதைகளும், காட்டுக்குதிரைகளும் பெரும்பாலும் ஒரே வித வழக்கமுடையவைகளாம். அவைகள் தங்களை நடத்தும்படி ஒரு தலைமைக் கழுதையை ஏற்படுத்திப் பெருங்கூட்டமாய்ச் சேர்ந்து சஞ்சரிக்கின்றன. அவைகள் அதிக கூச்சமும் சாக்கிரதையுமுடைய

வைகள். அவைகளுக்குச் சமீபத்தில் வேட்டையா டுகிறவன் வருவதைக் கண்டால், தலைமைக்கழுதை கூட்டத்தை விட்டுச் சற்றப்புறம் போய், வேட்டை க்காரனுக்குத் தூரமாக நின்று, அவனை நன்றாய்க்க ண்டறியும்படிக்கு நான்குபுறமும் சுற்றிவந்து பார்க் கும். பார்த்து ஆனதின்மேல் அது தன் கூட்டத்துக் குத் திரும்பும். அந்தக் குறிப்பு அறிந்து, உடனே அ வைகள் எல்லாம் ஒருநொடிக்குள்ளே மின்போலப் பறந்தோடிவிடும். கழுதைகளுக்குச் செவிப்புலனு ம் மூக்குப்புலனும் அதிக கூர்மையாயிருப்பதினால், மனிதர் சமீபித்து வருமுன்பு அவைகள் மணமறிந் து, தொடர்பவர்கள்யாவரும் பிடிக்கக்கூடாதபடி வி ரைவாய் ஓடும். பாரசீகர் நிலத்திற் படுகுழி தோண் டிக் கழுதைகள் அந்தக் குழிகளில் விழும்படி துரத் திவிட்டுப் பிடிப்பார்கள். அமெரிக்காதேசத்தில்திர ளான வேட்டைக்காரர் குதிரைமேல் ஏறியும், கால் நடையாகவும் காடுகளுக்குப்போய், கழுதைகளைச் சூழ்ந்து நெருங்கிப் பள்ளநிலத்தில் ஓடும்படி துரத் திவிட்டு, உட்சுருக்குக் கயிறு எறிந்து, கழுத்தில் மா ட்டிக்கட்டி இழுத்துக்கொண்டு போவார்கள். கட்டு ம்பொழுது அந்தக் கழுதைகள் திமிறி வேட்டைக் காரர்மேற் பாய்ந்து அவர்களைக் காயப்படுத்துவது முண்டு. ஆயினும் அவைகள்மேல் முதல் முறை பளுவான சுமைகளை ஏற்றிச்செலுத்தினால், பின்பு அவைகள் மதம் அடங்கி, வரவர அதிக சாந்தமும் பொறுமையுமுள்ளவைகளாகும். பாலைவனங்களிற் சஞ்சரிக்கின்ற கழுதைகள் குதிரை தங்களோடு சஞ்

சரிக்க விடுகிறதில்லை. அவைகள் மேய்கிற வெளியில் எப்பொழுதேனும் ஒரு குதிரை தன் கூட்டத்தைவிட்டுப் பிரிந்து கழுதைகள் மேயும் இடத்திற்குப் போனால், கழுதைகள் அதை ஓட ஒட்டாமல் கடித்து உதைத்து விழுத்திக் கொன்றுபோடும். குதிரையைப்போலக் கழுதையும் அதிகம் தூங்குகிறதில்லை. அது மிகவும் இளைத்துப்போனாலன்றிப் படுக்கிறதுமில்லை. நின்றநிலையில் தூங்கும்.

இரை. காட்டுக்கழுதைகள் முக்கியமாய் வெளிகளில் உவர்ப்பும் கசப்புமுடைய புல்பூண்டுகளை மேயும். வீட்டுக்கழுதைகள் புல், முட்செடி, மற்ற விலங்குச்சாதிகளால் விலக்கப்பட்டிருக்கிற பரும்படியான தழைகள்முதலியவைகளை மேயும். அவைகள் தாகத்திற்குத் தெளிந்த சுசிகரமான தண்ணீர் தேடிக்குடிக்கும். அவைகள் அழுக்கான நீரைக் குடிக்கிறதில்லை.

குட்டி. பெண்கழுதை சினையாகிக் குட்டி போடுவதற்கு ஏறக்குறையப் பன்னிரண்டு மாதம் செல்லும். அது அந்தந்த ஈற்றில் ஒரு குட்டிக்கு அதிகமாய் ஈனுகிறதில்லை. அது தன் குட்டியினிடத்தில் அதிக பட்சமாயிருக்கின்றது. அதை ஆராவது குட்டியை விட்டுப் பிரித்துக் கொண்டுபோய்விட்டால், இடைவழியில் பெருநெருப்பு இருந்தாலும், வெள்ளம் இருந்தாலும் அவைகளை ஒரு பொருட்டாயெண்ணாமல் தன் குட்டியைக் கண்டுபிடிக்கும்படி தீவிரமாய் ஓடும். கழுதைக்கு வயது உரு-முதல் ௩௦-வரையில். அதின் பல்லைப்

பார்த்து அதற்கு இத்தனை வயசென்று அறியலாம். குதிரையைப் போலக் கழுதையும் மூன்று நாலுவருஷமளவும் வளரும்.

கழுதைகள் சுமை எடுக்கும்படி ஏழைச்சனங்களுக்கு மிகவும் உபயோகமானவைகள். வண்ணார் பெரிய சீலை மூட்டைகளை அவைகளுடைய முதுகில் ஏற்றி அனேக மைல் தூரத்திற்கு ஓட்டிக்கொண்டு போவார்கள். நாட்டுப்புறங்களில் வாசமாயிருக்கின்ற ஜனங்களிடத்தில் கழுதைகள் கூட்டங்கூட்டமாயுண்டு. அவர்கள் அவைகள்மீது விறகுக்கட்டுகளை ஏற்றி, அடுத்திருக்கின்ற பட்டணத்தின் கடைத்தெருவிற் கொண்டுபோய் விற்பனைசெய்வார்கள். அந்த எளிய மிருகங்கள் கொண்டுபோகின்ற பளுவான சுமையால் அவைகளுடைய முதுகு நெரிந்தும், அவைகள் முறுமுறுமல் அடங்கிச் சுமந்துபோகும். பாரசீக தேசத்தில் கழுதைகள் அதிக உயரமாய் வளருகின்றன. அவைகள் சுமையெடுப்பதற்கு மாத்திரமல்ல, மனிதர் ஏறிப் பயணம்போவதற்கும், பண்டி இழுப்பதற்கும் பிரயோகிக்கப்படும். மேலும் அராபியாவிலும், எகிப்திலும் கழுதைகள் ஏறுவதற்கு வாகனங்களாக உபயோகிக்கப்படும். அங்குள்ளவர்கள் குதிரைகளைப்போலக் கழுதைகளையும் தினந்தோறும் தேய்த்து அவைகளுக்கு நல்ல தீனி போடுவார்கள். சில காலத்திற்குமுன் சென்னைப் பட்டணத்தில் அரபிக்கழுதை ஒன்று நின்றது. அது ஏறக்குறையப் பன்னிரண்டு கைப்பிடி உயரமுள்

உபயோகம்.

ளது. அது இரண்டுசெக்கரப்பண்டி ஒன்றை நாயோட்டத்தில் விரைவாக இழுத்துக்கொண்டுபோம். பின்பு அந்தக் கழுதை ஏலத்தில் அ௦-ரூபாய்க்கு விலைப்பட்டது. பிற்பாடு சுத்த வெள்ளைநிறமும், பன்னிரண்டு கைப்பிடிக்குச் சற்றதிகமான உயரமுமுடைய ஏழு கழுதைகள் சென்னபட்டணத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அவைகள் தனித்தும், சோடாயும் வண்டி இழுக்க வழக்கப்பட்டபின்பு, ஒவ்வொன்று ௩௫-ரூபாயாக விலைப்பட்டன. ஸ்பானியாதேசத்துக் கழுதைகள் சாதாரணமாக வேலை செய்வதில் குதிரைகளுக்குச் சமானமானவைகள். மேலும் அந்தக் கழுதைகள் கரடுமுரடானவைகளும், செங்குத்தானவைகளுமாயிருக்கின்ற இடங்களில் நடப்பதற்குத் தகுதியான ரூபமும் பழக்கமுமுடையவைகளாயிருப்பதினால், அந்த விஷயத்தில் அவைகள் குதிரைகளைப்பார்க்கிலும் அதிக உபயோகமுடையவைகளாம். லேசான மண்ணுள்ள தேசங்களில் கழுதைகள் பெரும்பாலும் ஏர் இழுக்கும். கழுதைத்தோல் விறைப்புள்ளதும், நீண்டு சுருங்கத்தக்கதுமாயிருக்கின்றது. அது மேளங்களுக்குப் போடுவதற்கும், பாதரக்ஷைசெய்வதற்கும் உபயோகப்படுவதுமன்றி, அதினால் ஞாபகக்குறிப்பு எழுதும் புஸ்தகங்களும் உண்டுபண்ணப்படும். காட்டுக்கழுதையின் மாமிசத்தைத் தருத்தாரியசாதியார் அதிக சுவையுள்ளதென்று விரும்பிப் புசிப்பார்கள். கழுதைப்பால் நெடுங்காலமாய் அனேக வியாதிகளுக்குக் கைகண்டமருந்தாய் உபயோகிக்கப்

படுகின்றது. அது லேசும், எளிதிற் சீரணிக்கத்தக்கதுமாயிருக்கின்றது; காசமுள்ளவர்களுக்கு உத்தம பானமாயிருக்கின்றது. அதைக் கறந்தவுடனே சூடு ஆறுவதற்குமுன் சாப்பிடவேண்டும்.

கதைகள்.

சில வருஷங்களுக்குமுன்பு லந்தன் நகரத்திலே கறிபதார்த்தங்களை விற்றுக் காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருந்த ஒரு கிழவனிடத்தில் ஒரு கழுதை நின்றது. அது வாசலுக்குவாசல் அந்தப் பதார்த்தங்களைக் கூடைகளிற் சுமந்துகொண்டுபோவது வழக்கமாயிருந்தது. அவன் அந்த ஜாக்கிரதையுடைய பிராணிக்குப் பல முறையும் ஒவ்வொரு பிடிக்காய்ந்த புல்லைக் கொடுப்பான். அல்லது அதற்கு ஒருவாறுபோசனமாகவும், ஒருவாறு வெகுமதியாகவும் சில அப்பத் துணிக்கைகளையாவது, கீரைகளையாவது கொடுப்பான். அந்தக் கிழவன் தன் கழுதையைத் தாற்றுக்கோல்கொண்டு ஓட்டுவது அவசியமாயிருக்கவில்லை. அவன் அதைச் செலுத்தும்படி தன் கையை ஓங்குவதற்கு நிமித்தமுமில்லை. இப்படி அவன் அந்தக் கழுதையைப் பட்சமாக நடத்திவருவதை ஜனங்கள் பார்த்திருந்தார்கள். ஒரு நாள் எவனோ ஒருவன் அந்தக் கிழவனைநோக்கி, "ஓய், உமது கழுதை முரட்டுத்தனமாய் நடப்பதுண்டா" என்று கேட்க, கிழவன், "ஐயா, அதைக் குரூரமாய் நடத்துவதினால் லாபம் என்ன. நான் அதினிடத்தில் ஒருபொழுதும் முரட்டுக்குணம் கண்டதில்லை. அது என்னென்ன வேலைகளை இட்டாலும் அவைகளையெல்லாம் செய்வதற்கும், எங்கெங்கே

செலுத்திகொண்டுபோனாலும் அங்கெல்லாம் போவதற்கும் எத்தினமாயிருக்கின்றது. நான் அதை வளர்த்தேன். அது சிலவேளை மிரண்டு உல்லாசமாய்த் துள்ளித்திரிவதுமுண்டு. ஒரு முறை அது என்னை விட்டுவெகுதூரமாய் ஓடினபொழுது, ஐம்பது ஜனங்களுக்கு அதிகமானவர்கள் அதைப் பிடிக்கும்படி தொடர்ந்துபோயும், அது ஒருவருக்கும் அகப்படாமல், பின்பு தானே ஓட்டமாய் ஓடிவந்து என்னிடத்திற் பட்சம் காட்டி, தன் மூஞ்சியை என் மார்பில் வைத்தது" என்றான். கசு-ம் நூற்றாண்டில் இருந்த நூலாசிரியர் ஒருவர் அக்காலத்தில் ஐரோப்பாவில் இருந்த ஒரு கழுதையைக்குறித்துச் சொல்வது: "ஒரு கழுதை கூத்தாடவும், மற்ற நூதனமான சேஷ்டைகளைச் செய்யவும் வழக்கப்பட்டிருந்தது. அது ஒன்றின் பின் ஒன்றாய்த்தொடர்ந்த நாலு மூன்று இராகங்களுக்கு இசைந்தபடி கூத்தாடும். எவ்வளவும் பிரயாசம் தோன்றாமல் இரண்டு காலால் எழுந்து நிமிர்ந்து நடக்கும். சடிதியில் அதற்குச் சந்தோஷம் ஒழிந்து துக்கம் வந்தாற்போலத் தரையில் அடித்துக்கொண்டு விழுந்து பிணம்போல் அசைவற்றுக் கிடக்கும். அதை அடித்தாலும் உதைத்தாலும் சற்றாவது அசையாது. எசமான் ஏதோகுறிப்பு வார்த்தைசொல்ல, அது உடனே துடிதுடித்து எழுந்து தன் முன்கால்களில் ஒன்றைத் தூக்கி, சனங்களைத் திரும்பிப்பார்த்து, அவர்களுக்கு வந்தனம்பண்ணும். மேலும் உயரப்பிடித்த ஒரு வளையத்திற்கு ஊடாக நாயைப்போலப் பாய்ந்து, தரையிலுள்ள எதை

யாவது வாயினுற் கவ்வி எடுத்துத் தன் எசமானி டத்திற் கொண்டுபோய்க் கொடுக்கும்.

## மாடு.

எத்தேசங்களிலுள்ளது.

மாடென்பது அசைபோடுகிற விலங்குகளின் வகுப்பிற் சேர்ந்தது. அது சீர்த்திருத்தமுடைய ஜனங்கள் வாசமாயிருக்கின்ற எத்தேசங்களிலும் மனுஷருக்கு அடங்கியிருக்கின்றது. காட்டுத்தன்மையான மாடு காண்பது அரிது. ஐரோப்பாகண்டத்தைச் சேர்ந்த போலாந்து தேசத்தில் இருக்கிற சதுப்புநிலமான வனத்தில் சில காட்டுமாடுகளும், நன்னம்பிக்கைமுனையைச் சேர்ந்த ஆபிரிகாக்கண்டத்தின் நடுத்தேசத்தில் மிகவும் பருத்து உயர்ந்த திரளான காட்டுமாடுகளும் உண்டு. வட அமெரிக்காவிலும், திபேத்திலும், நடு ஆசியாவைச் சேர்ந்த மற்றப் பாகங்களிலும் உறுமுமாடு என்றும், கஸ்தூரிமாடு என்றும் சொல்லப்படுகிற இரண்டு மாட்டு இனங்கள் உண்டு.

தோற்றம்.

மாடு ஒரு பெரிதான நாற்கால் மிருகம்; அதின் கால்கள் சரீர நீளத்தின் அளவிற்குத் தகுதியான நீளமுடையவைகளல்ல; சற்றே குறுகியிருக்கும். அது பருத்ததேகமுடையதாகத் தோன்றும். மாட்டுக்குக் கொம்பு இரண்டு. அந்த இரண்டு கொம்புகளும் சிரசின்

மேல் இருபக்கங்களையும் சார்ந்து முளைத்து மேல் நோக்கியாவது, முன் நோக்கியாவது பெரும்பாலு ம் பிறைபோலக் கவிந்து வளர்ந்திருக்கும். கொம்பு களின்பின் அதின் காதுகள் பரந்திருக்கும். அ வைகளை அது எப்புறமும் திருப்பக்கூடும். மாட் டினுடைய கழுத்தின் கீழ்ப்புறத்தில் தட்டையான சவ்வு நெடுக வளர்ந்து தொங்கும். அந்தச் சவ்வி ற்கு அலைதாடியென்று பெயர். மாட்டின் வால் நீண்டிருக்கும்; வால் நுனியில் உரோமம் குச்சுப் போல் நெருங்கி வளர்ந்திருக்கும்; அதின் குளம்பு இரண்டு பாகமாகப் பிரிந்திருக்கும். இந்தியாவில் எங்கும் சஞ்சரிக்கின்ற மாடுகளுக்குத் தோள்மீது கொழுப்புள்ள தசை திரண்டு பருத்திருக்கும். அ ந்தத் திரட்சிக்குத் திமில் என்று பெயர். மற்றத் தேசங்களிலுள்ள மாடுகளுக்குத் திமில் இல்லை. நன் றுகத் தின்று கொழுத்து நிற்கிற கோயில்மாட்டின் திமில் மிகவும் பருத்திருக்கும். குதிரைகளைப்போ ல மாடுகளும் பல வர்ணமுடையவைகள்.

இயல்பாய் மாடானது சாந்தமுள்ள விலங்கு. அது மனிதர் கைவசப்பட்டுப் படிந்திருக்கும்பொ ழுது, அமைதியும் அடக்கமுமுள்ளதாயிருக்கும். வ ருத்தப்பட்டு அதிக வேலைசெய்யும். அது சற்றுத்தூ ரமாத்திரம் விரைவாய் ஓடும். பசுமாட்டின் சத்தத் திற்கு அழுகை என்றும், எருத்துமாட்டின் சத்தத் திற்கு முக்காரம் என்றும் பெயர். மனிதர் கைவச ப்படாத காட்டுக்காளைகள் வெகு மூர்க்கமுடைய

வைகள். அவைகள் தங்கள் கொம்புகளினால் மிகுந்த அபாயம் செய்யும்.

வழக்கங்கள்.

காட்டுமாடுகள் மிகுந்த மேய்ச்சலுள்ள பள்ளநிலங்களிலும் வெளிகளிலுமாவது, சேறும் சதுப்புமான நிலங்களிலாவது சஞ்சரிக்கும். அவைகள் பருமையும் பாரமுமான தேகத்தையுடையவைகளாயிருப்பதினால், பெரும்பாலும் மலைசெறிந்த தேசங்களிற் சஞ்சரிக்கத்தக்கவைகளல்ல. கஸ்தூரிமாடு மாத்திரம் குன்றுகள் மலைகளில் சஞ்சரிக்கும். அது வெகு துரிதமாக மலைகளில் ஏறும். பொதுவாய் மாடுகள் ஒன்றுக்கொன்று ஆதரவாய் இருப்பதற்காக மந்தைமந்தையாய்க் கூடித்திரிவது வழக்கம். அவைகளுக்குக் கோபம் மூட்டுகிறவைகளைக் காலால் உதைப்பதுமன்றி, கொம்பினாலும் குத்தி முட்டித் துரத்தும். மற்ற மிருகங்கள் அவைகளுடன் சண்டைசெய்யச் சம்பவித்தால், அவைகளை வெல்வது அருமை. அங்கிலோதேசத்துப் பிரபு ஒருவருடைய சிங்காரவனத்தில் ஒருசாதியான காட்டுமாடுகள் விர்த்தியாகின்றன. அவைகள் எல்லாம் கறுத்த மூஞ்சியும், வெளுத்த மேனியுமுடையவைகள். அவைகளுடைய கொம்புகள் எங்கும் வெளுத்து, முனையிற் கறுத்து, கீழே கவிந்திருக்கும். அந்த மாடுகள் ஒரு கூட்டமாகச்சேர்ந்து சஞ்சரிக்கும். அவைகள் தங்களுக்குச் சமீபத்தில் ஒருவனையும் வர ஒட்டுகிறதில்லை. யாராவது வருகிறதாக அவைகளுக்கு முதல்முதல் அரவம் தோன்றும்பொழுது, இந்தியாவின் காட்டெரு

மைகள்போல் அவைகள் நெருங்கிச் சற்றுத்தூரம
ட்டும்பாய்ந்தோடித் தரித்துத்திரும்பி வளைந்து நின்
று பார்க்கும். தொடர்ந்தவர்கள் தாமதிக்காமல் து
ணிந்து கிட்டுவார்களானால், அந்த மாடுகள் அப்புற
மும் சற்றுத்தூரம் ஓடி முன்போலத்திரும்பி, முன்
னிலும் அதிக சமீபத்தில் வந்துநிற்கும். இவ்வாறு
பல தரம் செய்து மிகவும் நெருங்கிவரும்பொழுது,
சமீபித்திருக்கிறவர்கள் அபாயம் நேரிடுவதை நிச்ச
யித்து, உயிரைக் காத்துக்கொள்ளும்பொருட்டு வில
கிப்போய்விடுவார்கள். மேற்சொல்லிய சாதியிலுள்
ள பசுமாடுகள் தங்கள் இளங்கன்றுகளைக் காளைகள்
கொன்றுபோடாதபடிக்கு,ஈன்றதின் மேல் ஒருவார
ம், அல்லது பத்து நாள் செல்லுமளவும் அவைகளை
வனத்தில் மரங்கள் அடர்ந்திருக்கின்ற ஒதுக்கிடங்
களில் ஒளித்துவிட்டுப்போய் மேய்ந்து, மந்தையிலு
ள்ள மற்ற மாடுகளுக்குத் தெரியாமல் நாளொன்று
க்கு இரண்டு மூன்று தரம் திரும்பிவந்து,தங்கள் கன்
றுகளுக்குப் பால்கொடுக்கும். அந்தக் கன்றுகள் தா
மே போய் மேயத்தக்க சக்தியுடையவைகளாகும்
பொழுதோ,பசுக்கள் அவைகளைத் தங்களுடன் மந்
தைக்குச் சேர்த்துக் கொண்டுபோகும். காளைகள்
அவைகளுக்கு அபாயம் செய்யக் கருதாமல் எப்
பொழுதும் அவைகளைக் காக்க எத்தினப்படும். அந்
த மாடுகளில் யாதாவது காயப்பட்டால், அல்லது
மூப்பினாலாவது வியாதியினாலாவது மெலிந்துபோ
னால்,மற்றவைகள் எல்லாம் அதின்மேற் பாய்ந்து அ
தைக் கொம்பினால் குத்திக்கொல்லும்.

மாடுகளுக்கு இரை தாபரவர்க்கம் மாத்திரமே.

இரை. புல் பூண்டுகளின் தழை, பலவகை மரங்களின் துளிரிலை இவைகள் எல்லாம் மாடுகளுக்குப் புஷ்டி உண்டாக்கத்தக்க இரைகளாம். அசைபோடுகிற மற்ற மிருகங்களைப் போல மாடுகளுக்கும் நாலு இரைப்பைகள் உண்டு. அவைகள் தங்கள் தீனியைக் கறித்தவுடனே சப்பாமல் விழுங்க, அது முதல் இரைப்பையின் வழியாய்ச் சென்று, இரண்டாம் இரைப்பைக்குட் போய்ச் சேர்ந்து அங்கே நனைந்திருக்கும். பின்பு அவைகளுக்குச் சாவகாசம் உண்டாயிருக்கும்பொழுது, அவைகள் அந்த இரையை மீட்டு நன்றாகமென்று விழுங்க, அது முன்பு மூன்றாம் இரைப்பையிலும், பின்பு நான்காம் இரைப்பையிலும் சேர்ந்து சீரணிக்கும். இத்தேசத்தில் வீடுகளில் கைத்தீனிகொடுத்து வளர்க்கிற காளைகளுக்குச் சிலவேளை கொள்ளு வைப்பதும் உண்டு. அதிகபால் தரும்படியாகப் பசுமாடுகளுக்கும் சிலவேளை கொள் தவிடு, ஒருவிதப் பிண்ணாக்கு முதலியவைகளை வைப்பதுவழக்கந்தான். மாடு தாகமெடுத்த காலத்தில் கழுதைபோலத் தெளிந்த நீரைத் தேடாமல், எந்த நீரையாகிலும் குடிக்கும்.

கன்று. பசுமாடு சினைப்பட்டு ஈனுவதற்கு ஒன்பது மாதம் செல்லும்; அது வழக்கமாய் ஈற்றுக்கு ஒரு கன்றுக்கு அதிகம் போடுகிறதில்லை. ஆயினும் அபூர்வமாய் ஈற்றுக்கு இரண்டு கன்று போடுவதும் உண்டு. பசு ஈன்ற ஜெ

ந்து முதலில் கன்று என்னப்படும். சற்று வளர்ந்த ஆண்கன்று இளங்காளையென்றும், பெண்கன்று கடாரியென்றும் சொல்லப்படும். பசு ஈன்ற கொஞ்சக் காலத்திற்குள் அதின் கன்று உறுதியும் பலமுமுள்ளதாய்க் குதிரைக்குட்டிபோல நடந்து துள்ளித்திரியும். அது மூன்று வயசுக்குள்ளாகப் பூரணமான பலமுடையதாகும். மாட்டுக்கு இயற்கையான வயசு ஏறக்குறையப் பதினான்கு. மாட்டின் பற்களை, அல்லது கொம்புகளைப்பார்த்து, அதற்கு இத்தனை வயசு என்று அறியலாம். இளம்பருவமுடைய மாடுகளுக்குப் பல் ஒழுங்காகவும், வெண்மையாகவும் இருக்கும். அவைகள் முதிர முதிர, பற்கள் கறுத்து ஒழுங்கீனமாயிருக்கும். மாட்டுக்கு மூன்று வயசாகிறபொழுது அதின் கொம்பின் மேற்றோல் உரியும். பின்பு வருஷத்திற்கு ஒன்றாக அதின் கொம்பில் மோதிரம் போல் வட்டமான வளைகள் உண்டாகும். அந்த வளைகளை எண்ணி எத்தனைவயசு என்று அறியலாம்.

மாடு மனிதருக்கு மிகவும் உபயோகமான மிருகம். பூர்வகாலந்தொடங்கி அது பயிரிடுந்தொழிலில் உபயோகிக்கப்பட்டது. இந்துதேசத்தில் அது வயல்நிலம் உழுவதற்கும், பரம்படிப்பதற்கும் வழங்கப்படுகின்றது: மேலும் மாடு இத்தேசத்தில் அங்கங்கே சாமான்வண்டிகளையும், ஜனங்கள் ஏறிப் பிரயாணம்போகிற வண்டிகளையும் இழுக்கும். ஐரோப்பிய துரைமாரிற் சிலர் மாடுகள் குதிரைகளைப்போல் மிரளாமற்

**உபயோகம்.**

சாதுவாய் அடங்கி ஓடுகிறபடியால், அவைகளைத் தங்கள் சவாரிவண்டிகளில் பூட்டுவார்கள். இத்தேசத்தில் எங்கும் சுதேசிகள் இரண்டு சக்கரப்பண்டிகளில் ஒரு சோடு காளைகளைக் கட்டிப் போக்குவரவு செய்வது அதிக வழக்கம். அந்தக் காளைகள் எத்தனை அதிக பளுவையும் பொறுமையோடு இழுக்கும். மேலும் காளைகளின் முதுகில் தண்ணீர் நிரப்பப்பட்ட தோற்பைகளையும், வேறு பளுவான சுமைகளையும் ஏற்றிக்கொண்டுபோவதும் வழக்கம். இளமாடென்றாலும் கிழமாடென்றாலும் அவைகளின் இறைச்சி போசனத்துக்கு மிகவும் உருசிகரமுடையது. கிழமாட்டின் மாமிசத்திற்கு மாட்டிறைச்சியென்றும், இளமாட்டின் மாமிசத்திற்குக் கன்றிறைச்சியென்றும் பெயர். இந்துக்கள் தவிர மற்றெல்லாத் தேசத்தார்களும் மாட்டிறைச்சிதின்பார்கள். பசுக்களின் ஜென்மம் இந்துக்களால் புண்ணிய ஜென்மமாக மதிக்கப்படுகின்றது. காளைமாட்டைப்பார்க்கிலும் பசுமாடு மனிதருக்கு அதிக உபயோகமுள்ளது. அது நாள் ஒன்றுக்கு இரண்டு தரம் பால்கொடுக்கும்: அதின் பால் அவர்களுக்கு விசேஷித்த உணவாயிருக்கின்றது. அங்கிலோதேச முதலிய சீதளமான தேசங்களில் பசுவின் பாலைக் கறந்து சற்றுநோமள்வும் வைத்தால், அதின் சத்துத் திரண்டு தடித்து மிதந்திருக்கும். அதற்கு ஏடு என்று பெயர். ஏட்டைக் கடையும்பொழுது வெண்ணெய் திரளும். இத்தேசத்திலுள்ள பசுக்களின் பால் அதிகக்குழம்பாயிராமற் சற்றே நீர்த்திருப்பதி

னுல், அதில் ஏடு படருகிறதில்லே. சாதாரணமாய்ப் பாலேச் சுண்டக்காய்ச்சிப் பிரைகுத்திவைத்தபின்பு, மேலே படர்ந்த ஏட்டை வேருக எடுத்துக் கடைந்து வெண்ணெய் எடுப்பார்கள். உருக்கிவடித்த வெண்ணெய்க்கு நெய்யென்று பெயர். இந்துக்களுக்குப் போசனபதார்த்தங்களில் நெய் முக்கியமானது. வெண்ணெய் எடுத்தபின்பு மீந்திருப்பதற்கு மோர் என்று பெயர். அதுவும் முக்கியமான பானம். மேலும் பாலினுற் பாலடைகட்டி செய்யப்படும். அது ஐரோப்பியருடைய போசன உபகரணங்களில் ஒன்று. பசுமாட்டினுல் மனிதருக்கு உண்டாகும் உபயோகம் இவ்வளவு மாத்திரமல்ல. அது அநேகம் கன்றுகள் ஈன்று, அதிக பால்கொடுத்துத் தளர்ந்தபின்பு, அதற்கு நல்ல தீனி போட்டுக் கொழுக்கும்படி செய்து, இறைச்சிக்கடைக்காரனுக்கு விற்பார்கள். அவன் அதை அடித்து, அதின் இறைச்சியை விலேப்படுத்துவான். அந்த இறைச்சி சரீர சுகத்திற்கும், புஷ்டிக்கும் தகுதியான போசனம். இப்படி மனிதருக்கு உதவியாயிருப்பது மாட்டின் இறைச்சி மாத்திரமல்ல. அதின் உறுப்புகள் அனேத்தும் வெவ்வேறு விதங்களாய்ப் பல உபகரணங்களுக்குப் பிரயோகிக்கப்படும். மாட்டுத்தோலினுல் வண்டி இழுக்கும் குதிரைகளின் உடுப்பும், கல்லணைகளும், பாதரட்சைகளும், மற்றும் அனேகம் கருவிகளும் செய்யப்படும். கொம்பினுல் சிமிள், சீப்பு, கத்திப்பிடி, பானபாத்திரம் ஆகிய இவைகள் செய்யப்படும். மேலும் மாட்டுக்கொம்பை வெந்நீரிற்

போட்டு உருகும்பொழுது அது கண்ணாடிபோல் ஒளி ஊடுருவத்தக்க தன்மையாவதினால், அதைத் தகடாகச் செய்து கண்ணாடிக்குப் பதிலாக விளக்குகளுக்குப் போடுவார்கள். மாட்டுத்தோலில் வெட்டித்தள்ளப்பட்ட சிறு துண்டுகளைத் தண்ணீரில் அவித்து ஒருவிதப் பசை உண்டாக்குவார்கள். அதின் பருத்த எலும்புகள் யானைத்தந்தத்திற்குப் பதிலாக அனேக வேலைகளுக்கு உபயோகிக்கப்படும். சிறுத்த எலும்புகளினால் ஒருவிதத் தைலம் உண்டாக்கிக் குதிரை உடுப்புமுதலியவைகளுக்குப் பூசி மினுக்குவார்கள். அதின் இரத்தம் சர்க்கரையைத் தெளியச்செய்வதற்கு உபயோகமாகும். மேலும் புருஷிய நீலம் என்னும் துலக்கமான வர்ணத்தை உண்டாக்குவதற்கு மாட்டிரத்தம் ஒரு முக்கியமான எதுவாம். மாட்டுரோமம் பலவித வேலைப்பாடுகளில் உபயோகிக்கப்படும். மாட்டின் தொடைக்கொழுப்பு, விலாக்கொழுப்பு, நிணம், நிணம் உருக்கிய நெய் இவைகளால் விளக்கு எரிக்கும் வர்த்தி செய்யப்படும். இளங்கன்றுகளின் மெல்லிதான தோலைப் பதப்படுத்தி அதில் எழுதுவார்கள்.

## எருமை.

எத்தேசங்களில் உற்பத்தியானது.

பூர்வகாலத்தில் எருமை இந்தியாவிலும், ஆபிரிக்காவிலுமுள்ள வெப்பமான தேசங்களில் உற்பத்தியானது. பின்பு அது அங்கிருந்து ஏழாம் நூற்றாண்டில் இத்தலிதேசத்திற்குக் கொண்டுபோகப்ப

ட்டது. இப்பொழுது எருமை ஐரோப்பாவின் தென் நாடுகளில் எங்கும் சாதாரணமாய் விர்த்தியாகின்றது. காட்டெருமைகள் ஆபிரிக்கா, இந்தியா இவைகளின் பல நாடுகளிலும், போர்ணியு, இலங்கை என்னும் தீவுகளிலும் உண்டு. எருமை ஒருவாறு பசுமாட்டுக்குச் சமானமானதாயிருக்கும். ஆகிலும் அது அதிக அவலட்சணமான புறத்தோற்றமுடையது. அதின் தலை பசுமாட்டின் தலையைப் பார்க்கிலும் அதிக பெரிது. அதின் கொம்பு உருவத்திலும், வளைவிலும் பசுமாட்டுக்கொம்பிற்குப் பேதமுள்ளது. கொம்பின் வர்ணம் பெரும்பாலும் சாம்பல் நிறம், அல்லது இளங்கறுப்பு. எருமையுடைய சரீரத்தின் பரிமாணத்திற்கு அதின் கொம்பு பெரிது. காட்டெருமை மூர்க்கமும், துஷ்டத்தன்மையுமுள்ள சாயலையுடையது. அதன் மூஞ்சியோ அது மந்தகுணமுள்ளதென்பதைக் காண்பிக்கும். அதின் பருத்த தலையும், சிவத்த கண்ணும், தட்டை மூஞ்சியும், மேல் நெற்றிதொடங்கிக் கன்னத்தின் வழியாய்க் கீழுதடுவரைக்கும் நெருங்கியிருக்கின்ற சுருண்ட ரோமமும் பார்த்தவர்களுக்கு வெறுப்பை உண்டுபண்ணுகிறவைகளாகத் தோன்றும். எருமைகள் பெரும்பாலும் கறுப்புவர்ணமுடையவைகள். அவைகளின் முதுகில் பசுமாடுகளைப்போல் அத்தனை நெருக்கமாய் உரோமம் இல்லை. சில எருமைகளுடைய கால், கீழ்வயிறு, பக்கம் ஆகிய இவைகள் மற்ற அவயவங்களைப்பார்க்கிலும் சிறிது வெளுத்திருக்கும்.

**குணங்கள்.** எருமைகள் பசுமாடுகளைப்போலச் சாந்தமுடையவைகளல்ல; சற்று முரட்டுத்தனமுள்ளவைகள். காட்டெருமைகள் மூர்க்கமுடையவைகளும், எதிர்ப்படுகிறவர்களுக்கு அபாயம்செய்கிறவைகளுமாயிருக்கின்றன. அவைகள் தண்ணீரில் நன்றாக நீந்தத்தக்கவைகளாயிருப்பதினால் அதிக விசாலமான ஆறுகளை அச்சமின்றிக் கடக்கும். அவைகள் மந்தமான தோற்றமுடையவைகளாயிருந்தும், வாசனைபிடித்து மூஞ்சியை நீட்டிக்கொண்டு விரைவாய் ஓடும். எருமையின் தொனி மிகவும் உரத்ததும், பசுமாட்டின் தொனியைப் பார்க்கிலும் அதிக வெடிப்பானதுமாயிருக்கும்.

**வழக்கங்கள்.** மனிதர்கைவசப்படாத காட்டெருமைகள் வனங்களிற் சஞ்சரித்துப் பெருமந்தைகளாய்க் கூடித்திரியும். பெரும்பாலும் அவைகள் ஈரமும், சதுப்புமான நிலங்களிற் சஞ்சரிக்கும். மைதானங்களைப்பார்க்கிலும் மரம் அடர்ந்த வனங்களும், சேற்றுத்தன்மையுள்ள நிலமுமே அவைகளுக்கு அதிக இஷ்டம். அவைகள் நிழலுள்ள இடங்களை விரும்பும். சேற்றிலே புரளுவது அவைகளுக்கு அதிக கொண்டாட்டம். அவைகள் ஜலத்தின்மேல் மிகுந்த அபேட்சையுடையவைகளாயிருப்பதினால், சிலவேளை பகல்முழுதும் ஜலத்தில் மூழ்கிக்கிடக்கும். ஆயினும் எருமைகள் மாரிகாலத்தில் வெப்பமான ஒதுக்கிடங்களைத் தேடிக் காடுகளிலே மரம் அடர்ந்த மறைவிடங்களில் தங்கும். ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள காபிரோரியா

நாட்டின் எருமைகள் பகலிலே காட்டில் நின்று, இராத்திரியில் வெளி நிலங்களுக்குச் சென்று புல்மேயும். அவைகள் மூர்க்கமும், துரோககுணமுமுடையவைகளாயிருப்பதினால், பெரும்பாலும் மரங்களுக்குள்ளே மறைந்துநின்று, வழிப்போக்கர் சமீபத்தில் வரும்பொழுது, சடிதியாய் அவர்கள்மேற் பாய்ந்து, அவர்களை விழுத்திக் காலால் மிதித்து, முழந்தாளால் ஊன்றி நசுக்கிக் கொல்லும்.

**தீனி.** எருமைகள் மதர்த்த புற்களையும், மற்றப் பரும்படியான தாபரவர்க்கங்களையும் மேய்ந்து, பசுமாடுகளைப்போல அசைபோடும்.

**கன்று.** பெண்ணெருமை நாலு வயசிற் சினைப்பட்டுப் பெரும்பாலும் ஈற்றுக்கு ஒரு கன்றும், அபூர்வமாக இரண்டு கன்றும் போடும். அது சினைப்பட்டு ஈனுவதற்குப் பன்னிரண்டு மாதம் செல்லும். எருமை இளம்பருவத்திற் கன்று என்னப்படும். எருமைகள் பெரும்பாலும் பன்னிரண்டு வயசானதின்மேற் சினைப்படுகிறதில்லை. எருமைகளுக்கு ஏறக்குறையப் பசுமாடுகளைப்போல வயசு பதினாலு.

**உபயோகம்.** இந்துதேசத்திலே மனிதர்கைவசப்பட்டுப் படிந்திருக்கின்ற எருமைகள் ஏழைகளுக்கு மிகவும் உபயோகமானவைகளாயிருக்கின்றன. எருமைக்கடா நிலம் உழுவதிலும், மற்றனேக வேலைகள் செய்வதிலும் உபயோகிக்கப்படும். எருமை அதிக பாரம் ஏற்றப்பட்டிருக்கும் பண்டிகளை இழுக்கும்போது, பண்டியின்

பாரம் சரீரமுழுவதிலும் பொறுக்கும்படி க
தலையும் தாழத்தக்கதாகக் குனிந்துகொண்டு இழுக்
கும் எருமைப்பாலினால் ஏழைச்சனங்களுக்கு மி
குந்த உபயோகம் உண்டு. அது பசுமாட்டின் பா
லைப்போல் உசிதமானதல்ல. எருமைப்பாலில் எடு
க்கப்படும் வெண்ணெயைப் பெரும்பாலும் பசுமா
ட்டின் வெண்ணெயுடன் கலந்து பசுவின் வெண்
ணெயென்று சொல்லி விற்பார்கள். எருமைமாட்
டின் உறுப்புகளில் மனிதருக்கு அதிக உபயோகமா
னவைகள் தோலும், கொம்புமாம். எருமைத்தோ
ல் மிகவும் தடிப்பும், பலமும், நெடுநாள் இருக்கத்
தக்கதுமாம். ஆதலால் பலமான வேலைகளுக்கெல்
லாம் அதுவே முக்கியமானது. எருமைக்கொம்பு
வயிரமும், பலமுமுள்ளது. அதை மெருகிட்டால்
கண்ணாடிபோல் ஒப்பமுள்ளதாகும். ஆதலால் வெ
ட்டுங்கருவிகள் செய்வோரும், மற்றத் தொழிலாளி
களும் அதைக் கருவிப்பிடிகளுக்கு மேலானதாகக்
கொள்வார்கள். காளை இறைச்சி, பசுவின் இறைச்
சி இவைகளைப்போல எருமை இறைச்சி போசன
த்திற்கு ஏற்றதல்ல. அது கறுத்து, விறைத்து, து
ர்க்கந்தமுள்ளதும், சுவையற்றதுமாயிருக்கும்.

## ஆடு.

எந்தெந்தத் தேசங்களிலும் சஞ்சரிக்கின்ற ஆடு
கள் மனிதர் கைவசப்பட்டு அவர்க
ளுக்குப் படிந்திருக்கின்றன. காட்

எத்தேசங்களில் உள்ளது.

நாடுகள் இரண்டொருதேசங்களில்மாத்திரம் சொற்பமாய் உண்டு. "ஆர்கலி" என்னும் ஒரு ஜாதியாடு ஆசியாகண்டத்திலுள்ள சிபேரியா, தார்த்தாரி நாடுகளின் பாலைவனங்களில் உண்டு. "மூப்லன்" என்னும் மற்றொரு ஜாதியாடு ஐரோப்பாகண்டத்திலுள்ள கோர்சிகா, ஸர்தீனியா, கிரேக்குதேசம் இவைகளின் மலைச்செறிவான இடங்களிற் சஞ்சரிக்கின்றது.

தோற்றம். ஆடானது ஒரு சிறு மிருகம். அதின் தலை குறுகிப் பருத்திருக்கும். சில சாதி ஆடுகளுக்குக் கீழே கவிந்து சுருண்ட இரண்டு கொம்புகள் உண்டு. வேறு சிலவற்றிற்கு நாலு கொம்புகளும், ஐந்து கொம்புகளும் உண்டு. மிருகங்களுக்கு அலங்காரமாயிருக்கின்ற கொம்பானது சில ஜாதியான ஆடுகளுக்கு இல்லை. நாட்டாடுகளுடைய சரீரத்தில் அதினதின் சாதிக்கு ஏற்க நீளமாகவும், குறுக்கமாகவும் உரோமம் வளர்ந்திருக்கும். காட்டாடுகளுக்கும், இந்தியாவிலும் மற்ற உஷ்ணமான தேசங்களிலும் சஞ்சரிக்கிற ஆடுகளுக்கும் நீண்ட ரோமம் இல்லை. ஆடுகளுக்குக் குறுகியவாலும், மாடுகளைப்போலப் பிளப்பான குளம்பும் உண்டு. அரபிதேசத்திலும் பாரசிகதேசத்திலும் வேறு சில தேசங்களிலும் பின்னும் ஒருவகையான ஆடு சஞ்சரிக்கின்றது. அதற்கு வால் மிகவும் பருத்து விரிந்து நீண்டு புஷ்டியாயிருக்கும். அது நடக்கும்பொழுது வால் நிலத்தில் இழுபடும். சிலவேளை அதின் வாலின் பாரம் முழுச்சரீரத்தின் பாரத்தில் மூன்றிலொரு பங்கு அளவாயிருக்கும்.

நாட்டாடு மந்தமும்,சோம்பலுமான தோற்றமுடையது. காட்டாடோ வெகு கூர்மையும், வேகமுமுடையதாம். ஆடுகளின் நிறம் வெண்மை, கபிலம், கருமை இவைகளே.

சகல சாதியான ஆடுகளும் தீங்கில்லாதவைகள். அவைகள் பெரும்பாலும் கூச்சமும், மருட்சியுமுடையவைகள். நாட்டாடுகள் அபாயத்தினின்று தப்பித்துக்கொள்ள எவ்வளவும் சக்தியில்லாதவைகளாயிருக்கின்றன. அவைகள் விரைவாய் ஓடத்தக்கவைகளுமல்ல; நேரிட்ட அபாயத்திற்கு விலகிக்கொள்ளத்தக்க உபாயமுடையவைகளுமல்ல. கழுதை பொறுமை என்னும் குணத்தாற் சிறந்திருப்பதுபோல, ஆடு மந்த குணத்தாற் சிறந்ததாம். மேலும் ஆடு தாமதநடையும், பலவீனமுமுடையது. அது இடையன் இடும் சத்தத்தையாவது, அவன் நாய் குரைக்கும் சத்தத்தையாவது கேட்கும்பொழுது நடுக்கமுறும். காட்டாடோ தைரியமும், விரைவுமுள்ளது; பெருமிருகங்களுக்குத் தப்பித்துக்கொள்ளத்தக்கது; சிறுமிருகங்களை எதிர்த்து வெல்லத்தக்கது. நாட்டாட்டுக்கும் கைத்தீன்கொடுத்து வளர்த்துப் படியப்பண்ணி அதைப் பட்சமாய் நடத்தினால், அது மந்தமும் மருட்சியுமில்லாமல், வளர்த்தவர்களுடனே சேஷ்டைபண்ணி, நெற்றியால் முட்டித் துஷ்டகுணமடைவதும் உண்டு. ஆட்டின் சத்தத்திற்குக் கத்துதல் என்று பெயர்.

குணங்கள்.

• காட்டாடுகள் சிறு சிறு மந்தைகளாகச் சேர்ந்

சஞ்சரிக்கும். நடு ஆசியாவின் மலைகளிலும், வட இந்தியாவிலும், பாரசீகதேசத்திலும் சஞ்சரிக்கின்ற ஆர்கலி என்னும் சாதி ஆடுகள் மரம் செடிகள் இல்லாத கல் மலைகளில் நின்று வெயில் காய்வதற்கு விரும்பும். அவைகள் காடுகளுக்கும் நிழலுள்ள இடங்களுக்கும் போகிறதில்லை. குளிர்ச்சியும் வெப்பமும் அதிகரியாத தேசங்களில் இருப்பதே அவைகளுக்கு விருப்பமாம். அவைகள் மனிதர் வாசமாயிருக்கும் இடங்களிற் கிட்டுகிறதில்லை. அவைகளைப் பிடிக்கும்படி மனிதர் தொடர்ந்துபோனால் அவைகள் முயலைப்போல வட்டமாய்த் திரும்பி பல திக்கிலும் வளைந்தோடி மிகவும் தீவிரத்தோடே கல்மலைகளில் ஏறிப்போம். படிந்து சாதுவாயிருக்கின்ற ஆட்டுமந்தைகளை இடையர் பத்திரமாகப் பார்த்துப் பராமரிப்பார்கள். அவைகள் இயல்பாய் அத்தனை சாதுக்களாயிருந்தும், சிலவேளைகளில் தனித்துத் திரியும் இடங்களில் அதிக தைரியத்தைக் காட்டும். ஒரு ஆட்டுக்கடா ஒரு நாயுடன் தைரியத்தோடு எதிர்த்துச் சண்டைபண்ணி அதை வெல்வதும் உண்டு. மிகுந்த அபாயம் நேரிடுகிறபொழுது, மந்தையிலுள்ள ஆடுகள் எல்லாம் ஒரே இடத்திற் சேர்ந்து நெருங்கி நிற்க, மறிகளையும் குட்டிகளையும் நடுவில் நிற்கும்படி விட்டு, கடாக்கள் முன்னே வந்து சத்துருக்கள் வரத்துணிவுடனே காத்திருக்கும். ஆட்டுக்கடாக்கள் ஒன்றையொன்று நெற்றியால் முட்டிச் சண்டைபண்ணுவதும், நிலத்தைக் காலால் தட்டி உபாதத்துப் பயமுறுத்துவதும் வழக்கம். அவைகள் அ.

திகமூர்க்கத்துடன் சண்டைபண்ணுகையில் சிலவேளை அவைகளின் கொம்பு ஒடிந்துபோவதும் உண்டு.

ஆடுகள் புல்லையும்பலவிதச் செடிகளையும் மேயும்: அவைகள் அவித்த தானியங்களையும் தின்னும். ஆடுகள் அசைபோடுகிற சாதியான மிருகங்களின் வகுப்பிற் சேர்ந்திருக்கின்றன; அவைகள் அசைபோடுகிற மற்ற மிருகங்களைப்போல அவ்வளவு தண்ணீர் குடிக்கிறதில்லை.

தீனி

ஆடு சினைப்பட்டு ஏறக்குறைய ஐந்து மாதம் ஆனதின்மேல் சாதாரணமாய் ஈற்றுக்கு ஒரு குட்டியும், சிலவேளை இரண்டு குட்டிகளும் போடும். மூன்று குட்டி போடுவது அரிது. ஆடு ஈனுவது குட்டியென்னப்படும். ஆண் ஆடு கடா என்றும், பெண் ஆடு மறியென்றுஞ் சொல்லப்படும். ஆட்டின் கொம்பில் மோதிரம் போன்ற வட்டமான வளை வருஷத்திற்கு ஒன்று உண்டாகும். ஆதலால் அந்த வளைகளை எண்ணியும், பற்களின் ஒழுங்கைப் பார்த்தும் அதின் வயசு அறியப்படும். ஆடுகள் பெரும்பாலும் பதினலு, பதினைந்து வயதளவும் சீவித்திருக்கும்.

குட்டி.

ஆடு தன்னை வளர்க்கிறவனுக்கு அதிக பலன்தருகிற மிருகம். அதின் ஒவ்வொரு உறுப்பும் மனிதருக்கு உபயோகமாகும். ஐரோப்பாதேசத்தில் விர்த்தியாகின்ற ஆடுகளின் ரோமம் அதிக நீளமுடையது. அது பலவிதச் சகலாத்துகள் நெய்வதற்கு ஏற்றது. சகலாத்துகள் குளிர்ந்த தேசங்களில் வாசமாயிருக்கிற

உபயோகம்.

ஜனங்கள் உடுப்பதற்குத் தகுதியானவைகள். எண்ணிறந்த ஜனங்கள் சகலாத்து நெய்து ஜீவனம் பண்ணுகிறார்கள். எத்தேசத்தவர்களும் ஆட்டின் மாமிசத்தைப் புசிப்பார்கள். அது மிகுந்த சுவையுடையதும், சரீரத்திற்குச் சௌக்கியம் தருவதுமாயிருக்கின்றது. சில நாடுகளிலுள்ள பயிர்செய்யும் குடிகள் ஆட்டுப்பாலை அதிக பிரியமாய்க் குடிப்பார்கள். அது பசுவின் பாலைக் காட்டிலும் அதிக தடிப்புள்ளதும், அதிக வெண்ணெயுள்ளதுமாயிருக்கின்றது. ஆகிலும் ஆட்டுப்பாலின் வெண்ணெய் பசுவின்பால் வெண்ணெய்க்கு இளைப்பம் தான். அதின் தோல் உரோமம் நீக்கிப் பதமிடப்பட்டதின் மேல், புஸ்தகம் கட்டுவதற்கும் கல்லணை செய்வதற்கும் உபயோகமாகும். அதின் குடலினாற் சிறுபுரிக்கயிறு திரித்து, அதை வீணை முதலிய வாத்தியக் கருவிகளுக்குத் தந்திகளாகப் போடுவார்கள். லோகங்களைப் புடமிடுவோர் ஆட்டெலும்புகளை நெருப்பிற் பஸ்மமாக்கி, அந்தப் பஸ்மத்தைக்கொண்டு உலோகங்களைப் பரீட்சிப்பார்கள். அதின் கொழுப்பினால் விளக்கு எரிக்கும் வர்த்தி செய்யப்படும்.

கதைகள். மந்தையிலுள்ள ஆடுகளில் ஒன்று எவ்விடத்திற்குப் போனாலும், எந்த வழியாகச் சென்றாலும், மற்ற ஆடுகள் எல்லாம் அவ்விடத்திற்கு அந்த வழியாக அதனைத் தொடர்ந்து செல்வது அவைகளுக்கு இயற்கையாம். இந்த இயற்கை மற்ற மிருகங்களுக்கு இல்லை. அங்கிலோதேசத்திலுள்ள லிவர்பூல் நகரத்தில் இதன்

அடியில் வரும் வேடிக்கையான சங்கதி நடந்தது. அதாவது:—ஆடு மாடு அடிக்கிற ஒருவனுடைய வேலைக்காரப்பையன் மேற்சொல்லிய நகரத்தில் ஏறக்குறைய இருபது ஆடுகளை ஓட்டிக்கொண்டு போகையில், அவைகள் போகவேண்டிய வீதியை விட்டு மற்றொரு வீதி வழியாய் ஓடின. அந்த வீதியிற் சற்றுத் தூரத்திலே ஒருவன் சேறு வாரிக்கொண்டு நிற்பதை மேற்படி பையன் கண்டு, "அப்பா, அந்த ஆடுகளை அதட்டித் திருப்பிவிடு" என்று உரத்துக் கூவினான். அவன் அதுகேட்டு, தன்னால் ஆனமட்டும் இப்புறமும் அப்புறமும் ஓடி அவைகளை மறிக்கப்பார்த்துத் தன்கையில் இருந்த துடைப்பக்கற்றையைச் சுற்றி அவைகளை விரட்டினான். அவைகளோ சிறிதும் மறிபடாமல் மேன்மேலும் விரண்டு அவனுக்கு எதிரே நெருங்கி ஓடின. கடைசியில் அவன் குனிந்துகொண்டு நிற்கையில் ஒரு ஆடு அவனுக்கு நேரே நெருங்கிச் சென்றது. அவன் அது தன்மேற் பாய்ந்து கடந்துபோகும்படி வருகிறதென்று பயந்து, உடனே நிமிர்ந்து, தன் இருகைகளையும் தலைக்குமேலாக உயர்த்தித் துடைப்பக்கற்றையைக் குறுக்கே பிடித்துக்கொண்டு நின்றான். அவன் இப்படிச் சிறிது நிமிஷமளவும் நிற்கையில், அந்த ஆடு தட்டாமல் ஓரே பாய்ச்சலில் அவனைத் தாண்டியோட, உடனே மற்ற ஆடுகளெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய் அந்தப் பிரகாரம் அப்புறம் இப்புறம் விலகாமல் சரியாய் அவனைத் தாண்டின. அவைகள் மிகவும் சடிதியில் அப்படிச் செய்ததினிமி

த்தம் அவன் ஏமாந்து, விறைத்து, மரம்போல நின்றான். அவைகளுடைய காலிற் புரண்டிருந்த சேறு எல்லாம் அந்த ஏமாந்த மனிதனுடைய சரீரமுழுவதும் தெறித்திருந்ததினால் அவனைப் பார்த்தவர்களுக்கெல்லாம் அவன் ஒரு வேடிக்கையான காட்சியாகத் தோன்றினான்.

## வெள்ளாடு.

**எத்தேசங்களில் உள்ளது.**

மனிதர் கைவசப்பட்டுப் படிந்திருக்கின்ற வெள்ளாடுகள் எத்தேசங்களிலும் உண்டு. ஒரு சாதியான காட்டாடு ஐரோப்பாவிலும், ஆசியாவிலுமுள்ள மலைகளிற் சஞ்சரிக்கின்றது. அது துருவாடு, அல்லது மலையாடு என்னப்படும். ஆசியாவிலுள்ள மலையாடுகளிற் சில கௌகேஸஸ் மலையைச் சூழ்ந்த உயர்வான மலைச்சிகரங்களிலும், சில இமயமுதலிய மற்ற மலைகளிலும் சஞ்சரிக்கின்றன.

**தோற்றம்.**

உருவத்திலும், பருப்பத்திலும் வெள்ளாடு செம்மறியாட்டுக்குச் சமானமுள்ளதாயிருக்கும். ஆயினும் வெள்ளாட்டின் கொம்பு செம்மறியாட்டின் கொம்புபோலல்ல. அது மேல்நோக்கி வளைந்திருக்கும். வெள்ளாட்டுத் தோலின் புறத்திலுள்ள மயிர் குறுகியிருக்கும். சின்ன ஆசியாவிலுள்ள அங்கோரா நாட்டில் ஒரு வகையான வெள்ளாடு சஞ்சரிக்கின்றது. அதின்

சரீரமுழுவதும் நீண்டு வளர்ந்து சுருண்டு நெருங்கியிருக்கின்ற மயிர் வழவழப்பும் பிரகாசமுமாயிருக்கும். அங்கோராநாட்டின் வெள்ளாடு பெரும்பாலும் பால்போல வெள்ளைநிறமுடையது. வெவ்வேறு சாதியான வெள்ளாடுகளுக்குள் அதுவே மிகவும் சிறந்தது. பொதுவாக வெள்ளாட்டுக் கடாக்களுக்கு நீண்ட தாடிமயிரும், சரீரத்தில் சடைபற்றிய மயிரும் வளர்ந்திருப்பதினால், அவைகள் பார்வைக்கு அதிசயமாய்த் தோன்றும். சிறுபருவமுடைய கடாக்களோ, வீரமும் துரிதமுமுள்ளவைகளாய்க் காணப்படும். வெள்ளாடு கருமை, கபிலம், வெண்மை, புள்ளிமுதலிய வெவ்வேறு நிறங்களையுடையது. ஆசியாவைச் சேர்ந்த இமயமலைத் தொடரின் வடதிசையிலுள்ள தீபேத்து தேசத்தின் வெள்ளாடு பெரும்பாலும் துலக்கமான காவிநிறமுடையது.

குணவிசேஷங்கள்.

காட்டாடு இயற்கையாய்க் கூச்சமும் அச்சமுமுள்ளது. அது மனிதர்கைவசப்பட்டுப் படிந்து வரும்பொழுதோ, அவர்களை விட்டு ஓடாமல் அவர்களுடன் சேர்ந்து நடக்கப்பிரியப்படுகின்றது. அது இளம்பருவமுடையதாயிருக்கையில், அதிக உல்லாசமும், சேஷ்டைக்குணமுமுள்ளதாயிருக்கும். முதிர்ந்த பருவத்திலும் அதின் உல்லாசமான தன்மை அதை விட்டு முழுவதும் நீங்குவதில்லை. செம்மறியாட்டைப்பார்க்கிலும் வெள்ளாட்டிற்கு அதிகமான இயற்கையறிவு உண்டு. அது ஒருவன் தன்

மேல் வைத்திருக்கிற பட்சத்தை எளிதில் அறிந்து சந்தோஷப்படும். ஆகிலும் அது அடிக்கொரு நினைவு கொண்டு நடப்பதுபோல உலாவுவதும், ஒரு நிலையாய் நிற்பதும், ஓடுவதும், பாய்வதும், சமீபத்தில் வருவதும், தூரத்திற்போவதுமாய், இப்படி ஒன்றிற்கு ஒன்று வேறுபாடான பல நடக்கைகளையுடையதாயிருக்கின்றது: ஆதலால், அதனிடத்தில் உறுதியில்லையென்று அறியலாம். அதற்குக் கோபம் உண்டாகும்படி செய்யாதிருக்கும்பொழுது அது சற்றே சாந்தமுள்ளதாயிருக்கும். ஆகிலும் பல முறையும் சடிதியில் அதற்குக் கோபம் மூளுவதும், அது மிகுந்த மூர்க்கத்துடன் முட்டுவதும் உண்டு. வெள்ளாடு மிகவும் விரைவுடையது. அது ஒப்பமில்லாதிருக்கின்ற உயர்ந்த மலைகளில் மிகவும் துரிதமாய் ஏறும். பறவைகள்தவிர மற்றெந்த மிருகசாதியும் ஏறுவதற்கு அரிய உயர்ந்த செங்குத்தான மலையின் சிகரத்திலும் அது ஏறி அச்சமில்லாமல் நிற்பதுமன்றி, அதின் விரிகுளம்பின் அடிப்புறம் குழிந்து அருகு கூராய்யிருப்பதினல், சிறிதும் கால் சறுக்காமல் துள்ளிப் பாய்ந்து விளையாடியும் திரியும். அது ஒரு இடத்தைக் குறித்துப் பாய்ந்தால், அவ்விடம் பல அடி தூரத்தில் இருந்தாலும் அதிலே தவறுமற் சேரும். இரண்டு வெள்ளாடுகள் ஒன்ருகப் பிணைக்கப்பட்டிருந்தாலும், அவைகள் மனம் ஒத்திருந்தாற்போல மிகவும் அபாயமான இடங்களையும் எளிதிலே தாண்டிச் செல்லும். வெள்ளாடு செம்மறியாட்டைப்போல் அத்

தனை மிருதுவானதல்ல. அது வருத்தங்களைச் சகிக்கத்தக்கது. செம்மறியாடு அதிகமான வெப்பத்திற்குப் பயப்படும். வெள்ளாடோ, அதற்கு அஞ்சாமல் அகோரமான வெயிலிலும் உல்லாசமாய் உலாவிப் படுத்துக்கொள்ளும். மேலும் அது மிகவும் வடக்கேயுள்ள மலை நாடுகளிற் சாதாரணமாயிருக்கிற மிகுந்த குளிர், உறைந்த மழை இவைகளை வருத்தமில்லாமற் சகித்துக்கொள்ளும். வெள்ளாட்டின் சத்தம் கத்துதல் என்னப்படும்.

வழக்கங்கள். காட்டிற் சஞ்சரிக்கின்ற வெள்ளாடுகள் அங்கங்கே சிறுசிறு மந்தைகளாய்க் கூடித் திரியும். ஒவ்வொரு மந்தையில் ஏறக்குறையப் பத்து ஆடுமுதல் பதினைந்து ஆடு வரையில் நிற்கும். துருவாட்டுமந்தைகள் காடுகளில் இராத்தங்கி, பொழுதுவிடிய அங்கிருந்து புறப்பட்டு, அடுத்திருக்கிற மலைகளில் ஏறி மேய்ந்துகொண்டே அதிகம் உயர்ந்த சிகரமட்டும் போகும். மதியம் திரும்பினபின்பு, முன்போல மேய்ந்துகொண்டே அந்த மலைகளினின்று இறங்கி, மாலைநேரத்திற் காடுகளுக்கு வருவது வழக்கம். வேட்டைக்காரர் மலையாடுகளைத் தொடர்ந்து பிடிப்பார்கள். அவர்கள் கைக்கு அகப்படாமல் தப்பித்துக்கொள்வது அருமையென்று அந்த ஆடுகள் கண்டால், அவைகள் செங்குத்தான மலைகளின் சிகரத்தினின்று சேதமில்லாமல் கொம்பு நிலத்திற் குத்தத்தக்கதாகத் தாழக்குதிக்கும். வெள்ளாடுகள் மலைச்சிகரங்களில் தனித்தனியே நின்று மேயும். மலைகளின்

கரடுமுரடான உயர்ந்த இடங்களில் நிற்பதே அவைகளுக்கு அதிக பிரியம். அவைகள் ஈரநிலத்திற்கும், சதுப்பான வெளிகளுக்கும் மிகுந்த மேய்ச்சலுள்ள இடங்களுக்கும் போகிறதில்லை. மும்முரமாய் அலை அடிக்கின்ற கடலின் ஓரத்திலிருந்து மரத்தின் குறுக்குக் கிளைபோலக் கடலிற் கவிந்திருக்கின்ற மலைகளின் ஓரத்திலும், ஆழமான பள்ளநிலங்களுக்கு நேரே உயர்ந்து கவிந்திருக்கின்ற மலைகளின் ஓரத்திலும் மலையாடுகள் பயமில்லாமற் போய்ப்படுத்துத் தூங்குவது வழக்கம். வெள்ளாடு இயற்கையாய் மிகவும் துடிதுடிப்புள்ளதாயிருப்பதினால், அது மனுஷருக்கு வசப்பட்ட பின்னும் அதிக கெடுதியுள்ளதாயிருக்கும். அது ஒரு இடத்தில் மறிக்கப்பட்டிருப்பதற்கு விரும்புகிறதில்லை. சாதாரணமான உயரமுள்ள எந்த வேலியையும் தாண்டித் திரியும். அது அடிக்கடி தோட்டங்களுக்குள்ளும், பயிரிடப்பட்டிருக்கின்ற நிலங்களிலும் போய், அங்குள்ள செடிகளின் தழைகளையும், பயிர் பூண்டுகளையும் கறித்துச் சேதப் படுத்துவதும் உண்டு. ஒன்றோடொன்று சண்டைபண்ணுகிற விதத்தில் வெள்ளாட்டுக்கும், செம்மறியாட்டுக்கும் பேதம் உண்டு. வெள்ளாடுகள் தங்கள் பின்கால்களால் நிலத்தில் ஊன்றி மிதித்து நிமிர்ந்து எழும்பிப் பக்கக் கொம்பால் முட்டும். ஒருமந்தையில் வெள்ளாடுகளையும் செம்மறியாடுகளையும் சேர்த்து மேய்த்தால், எப்பொழுதும் வெள்ளாடுகளே மந்தைக்குமுன் செல்லும்.

இரை. வெள்ளாடுகள் சஞ்சரிக்கின்ற மலைகளில் வறட்சியான காலத்திலும் அவைகளுக்குப் போதுமான மேய்ச்சல் உண்டு. அங்கே அகப்படுகிற விதம் விதமான மலைப்புல்லையும், செடிகளையும், மற்றுமுள்ள பூண்டுகளையும் அவைகள் பிரியமாகத் தின்னும். அவைகளுக்கு அசவுக்கியம் தரத்தக்க புல் பூண்டுகள் மிகவும் சில. நாட்டாடுகள் எப்பொழுதும் ஓரேவித இரையை மேயும்; அவைகளுக்கு முட்செடிகள் நிறைந்த நிலத்திலும், செழிப்பற்ற நிலத்திலும், பயிரிடப்படாத நிலத்திலும் வேண்டிய அளவிற்கு மேய்ச்சல் உண்டு. அவைகள் தோட்டங்களிலும்,பயிரிடப்பட்டிருக்கின்ற மற்ற நிலங்களிலும் காவல் கடந்து போகும்பொழுது, அங்கிருக்கின்ற சகல சிறு மரக்கன்றுகளின் தழைகளையும் ஆவலுடன் கறித்து, மேல்தோலை உரித்துத் தின்றுபோடுவதினால் அந்தக் கன்றுகள் நாசமாகும் வெள்ளாடுகள் அசைபோடுகின்ற மிருகங்களின் வகுப்பிற் சேரும்.

குட்டி. வெள்ளாடு சாதாரணமாய் ஈற்றுக்கு ஒன்று, இரண்டு, சிலவேளை மூன்று குட்டிகளும் போடும். செம்மறியாட்டின் வயது அறியப்படுவதுபோல வெள்ளாட்டின் வயதும் அதின் பல்லினாலும், கொம்பினாலும் அறியப்படும். வெள்ளாட்டுக்கு வயது பதினொன்று, அல்லது பன்னிரண்டு.

வெள்ளாட்டின் மாமிசம் மனிதருக்குப் போசனம் ஆகும்; ஆயினும் அது செம்மறியாட்டின் இறைச்சி

போல் அத்தனை ருசியுள்ளதல்ல. அதை ஒருபொழுதும் தின்றறியாதவர்களுக்கு அதின் சுவையும், நாற்றமும் ஒவ்வாது. வெள்ளாட்டுக்குட்டியின் இறைச்சி வளர்ந்த ஆட்டின் இறைச்சியைப்பார்க்கிலும் உசிதம். பசுவின்பால், செம்மறியாட்டின் பால் இவைகளிலும் வெள்ளாட்டின் பால் அதிக தடிப்பும் ருசிகரமுமுடையது. கப்பல்களில் ஏற்றிக் கொண்டுபோகப்படுகின்ற மற்ற மிருகங்களைப்போல வெள்ளாடு மெலிவடையாமல் செழித்திருப்பதினால், கப்பல் யாத்திரைகாரருக்கு வெள்ளாட்டுப்பால் அதிகம் உபயோகமுள்ளதாம். அது குடித்தவர்கள் சரீரம் புஷ்டியாவதற்கும், அனேக வியாதிகளைத் தீர்ப்பதற்கும் தக்கதாயிருக்கின்றது. அசீரணத்தினால் வருத்தப்படுகிறவர்களுக்கு அது பசுவின் பாலைப்பார்க்கிலும் உத்தமமானது. ஆகிலும் பசுவின் பாலில் படருகிற ஏடும், அதில் எடுக்கப்படுகின்ற வெண்ணெயும் அதிகம். வெள்ளாட்டுப்பாலில் அவ்வளவு இல்லை. பாலடைகட்டியோ அதிகமாய் உண்டு.

வெள்ளாட்டின் கொம்பு இறகு வெட்டும் சிறு கத்திகளின் பிடிகளுக்கு உதவும். அதின் கொழுப்பினால் விளக்கு எரிப்பதற்கு வர்த்திகள் செய்யப்படும். அந்த வர்த்திகள் செம்மறியாடு, மாடு இவைகளின் கொழுப்பினால் செய்யப்படுகிறவைகளைப்பார்க்கிலும் அதிக வெண்மையும், நலமுமானவைகள். வெள்ளாட்டுத்தோல் நன்றாகப் பதமிட்டுச் சாயங்கொடுக்கப்படும். அது கடிதத்திற்குப் பதிலாய் எழுதும்படியான சுருள்களாகவும் செய்யப்படும். கை

யுறைசெய்வதற்கு வெள்ளாட்டுக்குட்டியின் தோல் மிகவும் மிருதுவாய்ச் சிறந்திருக்கின்றது. வெள்ளாட்டுத்தோல் சாயம்போட்டால் மற்ற மிருகங்களின் தோலைப்பார்க்கிலும் அதிக அழகும், பிரகாசமுமுமான நிறம் கொடுக்கும். சில ஜாதி வெள்ளாடுகளின் உரோமத்தினல் சால்வை முதலான மெல்லிய வஸ்திரங்கள் நெய்யப்படுவதுமன்றி, அது பொய்த்தலை மயிருக்கும் உபயோகமுள்ளதாகும்.

கதைகள்.

வெள்ளாடு தன் பாலை மற்ற மிருகங்களின் குட்டிகள் ஊட்டும்படி எளிதில் இடங்கொடுக்கும். இது அனேகருக்குத் தெரியும். இதுவிஷயத்தைக்குறித்து ஐரோப்பிய துரை ஒருவர் தாம் கண்ட சங்கதியை எழுதுகிறார். அது வருமாறு—களஅ0-ம் வருஷத்தில் வெள்ளாட்டின் பால் உண்டு வளர்ந்த குதிரைக்குட்டி ஒன்று இருந்தது. அதின் தாய்க்குதிரை அது சிறு குட்டியாயிருக்கையில் இறந்துபோயிற்று. அது பால் உண்ணும்பொழுது எளிதாய் உண்ணும்படியாக அந்த வெள்ளாட்டை ஒரு பீப்பாவின்மேல் நிறுத்துவார்கள். அந்த வெள்ளாடு மேயப்போகும்பொழுது குதிரைக்குட்டியும் அதன்பின்னே போகும். அது குதிரைக்குட்டியைத் தன் குட்டியாகப் பாவித்து, குட்டி சற்றுத்தூரத்திற் போய்விட்டால், உடனே அந்த ஆடு கதறி அதைத் தன்னிடத்தில் வரும்படி அழைக்கும்.

கிலார்க் என்னும் சாஸ்திரியானவர் தமது பிரயாணங்களைக்குறித்து எழுதிய புஸ்தகத்தில் ஒரு வெ

ள்ளாட்டுக்கடாவின் சமர்த்தைப்பற்றி இதன் அடியில் வரும் விஷயம் கண்டிருக்கின்றது. "நாங்கள் யெருஷலேம் நகரத்திலிருந்து பெத்லெகேமுக்குப் போகிறவழியில் பல வேடிக்கைகளைச் செய்கிற ஒரு வெள்ளாட்டுக்கடாவை வைத்திருந்த ஒரு அராபியனைக் கண்டோம். அவன் ஆழாக்குப்போலக் கடைந்த பல சிறிய மரத்துண்டுகளை வைத்திருந்தான். அவைகளில் ஒன்றை நிலத்தில் வைத்து அவன் பாட்டுப்பாட, அந்தக் கடா அதின்மேல் ஏறி, நாலு காலும் பொறுக்கத்தக்கதாக நின்றது. பின்பு அதை இறங்கும்படிபண்ணி, அந்தத் துண்டின்மேல் மற்றொரு துண்டை வைத்துப் பாட்டுப்பாடினான். அப்பொழுது கடா முன்போல ஏறி அப்புறம் இப்புறம் தவறாமல் கூட்டுக்காலில் நின்றது. இந்தப்படி ஒன்றுமுதல் ஆறு துண்டுவரையில் ஒன்றின்மேல் ஒன்றாக அவன் அடுக்கிவைக்க, அது முறையே ஏறி அந்தத் துண்டுகள் எவ்வளவும் அடுக்குக்குலைந்து விழாதபடி உறுதியாய் நின்றது" என்பதே.

## நாய்.

எத்தேசங்களில் உள்ளது.

ஆபிரிகாகண்டத்திலுள்ள கொங்கோநாட்டிலும், நன்னம்பிக்கைமுனை என்னும் நாட்டிலும், தென் அமெரிக்கா, வட அமெரிக்காகண்டங்களிலும், ஆஸ்திராலியாவிலும் மற்றும் அனேக இடங்களிலும் கா

ட்டுநாய்கள் சஞ்சரிக்கின்றன. மனிதர் கைவசப்பட்டிருக்கின்ற நாட்டுநாய்களோ, பாசுபிக் சமுத்திரத்தின் தென்பாகத்திலுள்ள சில கூட்டமான தீவுகள் தவிர, மற்றெல்லாத் தேசங்களிலும் உண்டு.

தோற்றம்.

நாய்கள் பலவகைப்படும். பொதுவாய் அவைகள் சிறந்த உருவும், உல்லாசத்தையும் அறிவையும் உடைய பார்வையும், பலமும் சுறுசுறுப்புமுள்ள உறுப்புகளும் உடையன. எவ்வகை நாய்களும் உரோமத்தால் மூடப்பட்டிருக்கும்; சில சாதிநாய்களின் உரோமம் குறுகி மெல்லியதாயிருக்கும்; வேறு சாதிநாய்களின் உரோமம் சுருண்டு பருத்திருக்கும். சில நாய்கள் நீண்டு பரந்த செவியும், மயிர் சடைபற்றிச் சுருண்ட வாலுமுடையன. இத்தன்மையான நாய்கள் அதிக அழகுடையவைகளென்று மதிக்கப்படும். ஸ்பானியல் என்னும் சாதியிலுள்ள சில நாய்கள் அதிக சிறியவைகளாயிருக்கும். அவைகளை ஐரோப்பிய துரைசானிகள் பிரியமாய் வளர்த்துச் சீராட்டுப்பண்ணுவார்கள். அவைகள் நெருங்கி வளர்ந்து சடைபற்றித் தொங்கிய மெல்லிய மயிரால் மூடப்பட்டிருக்கும். அவைகளுடைய செவிகள் நீண்டு சிறந்திருக்கும். அகவைளின் நிறம் பெரும்பாலும் கருஞ்சிவப்பு, வெண்மை அல்லது கருமை, பதமிட்டதோல் வர்ணம் ஆகிய இவைகள் சிறுபட்டைகளாய்க் கலந்திருப்பதாம். பொதுவாக வெண்மை, கருமை, கபிலம், பதமிட்டதோல் வர்ணம்முதலிய எந்தெந்த வர்ணங்களிலும் நாய்கள்

உண்டு. சில நாய்கள் சரீரமெங்கும் பலவர்ணப்புள்ளிகளையுடையவைகளாயிருக்கும்.

குணவிசேஷங்கள்.

நாய்களுக்குச் சிறந்த உருவும், உல்லாசமும், விவைவுமல்லாமல், மனிதர் அவைகளிடத்திற்பிரியம்வைப்பதற்கு ஏதுவான மற்றனேக குணங்களும் உண்டு. எசமான் தங்களிடத்தில் இரம்மியம் கொள்ளத்தக்கதாக நடப்பதே வீட்டு நாய்களுக்கு முக்கியமான விருப்பமாம். அவைகளுக்கு ஆச்சரியமான கூர்மையும், எளிதிற் கிரகித்துக் கொள்ளும்படியான சக்தியும் உண்டு. நாயானது எந்த மிருகங்களைப்பார்க்கிலும் அதிக வடிவும், அமைதியும், அறிவும், பக்ஷமாய் நடக்கும் தன்மையுமுடையது. அது எவ்வளவும் தவறுமலும், தாமதியாமலும் தன் எசமானுடைய சொற்படி நடக்கும்.. அது அவனுடைய பார்வைக்குறிப்புகளையும், ஒலிக்குறிப்புகளையும் கருத்தாய்க் கண்டு கேட்டு அவ்வாறு நடக்கும். அது தன் ஜாக்கிரதையினாலும், நெஞ்சுத்துணிவினாலும் தன் எசமான் சத்துருக்களின் கைவசப்படாதிருக்கும்படி அவனை அடிக்கடி காப்பாற்றும். அது பகலும் இரவும் அவன் பொருளைக் காவல்பண்ணும். அப்பொழுது அதற்கு எத்தனை அபாயம் நேரிட்டாலும் பின்னிடாமல் நின்று பிராணசேதப்படுவதும் மெய். அதற்குக் கோபம் மூட்டினாலொழிய அது ஒருவரையும் கடிக்கப்போகிறதில்லை. எசமான்கள் தங்கள் நாய்களை எவ்வளவு அநியாயமாய் நடத்தினாலும், அவைகள் அதை மன

திற் கொள்ளுகிறதில்லை. மற்ற மிருகங்களோ, அப்ப டியல்ல. அவைகள் சமயம்பார்த்துப் பதிற்செய் யும். நாய் தான் செய்த குற்றம் தன் எசமானுக்கு த் தெரியவந்ததென்று கண்டால், அதற்காகத் தன க்கு மன்னிப்புக்கொடுக்கவேண்டுமென்று மன்றாடு கிற பாவனையாக அவன் காலில் விழுந்து பதுங்கிக் கெஞ்சும். அவன் அதற்கு மன்னிப்புக்கொடாம ல் தண்டித்தால் அது பொறுமையுடன் அந்தத் தண் டனையை ஏற்று, பின்பு தன்னைத் தண்டித்த எச மானுடைய கைகளை நக்கும். அது தனக்கு அறி முகமானவர்கள் இன்னாரென்றும், அன்னியர் இன் னாரென்றும் எளிதிற் பகுத்தறியும். வழக்கமாய்த் தன்னிடத்திற் பட்சமாயிருக்கிறவர்களுடைய குர ல் அதற்குத் தெரியும். அது அதிக ஞாபகசக்தியு டையது. அதன் பெயரைச் சொல்லி அழைக்கு ம்பொழுது அது ஓடிவரும்.

பலவித விநோதமான வீரச்செய்கைகளைச் செ ய்யும்படி நாய்க்கு வழக்கப்படுத்தலாகும். நிமிர்ந் து உட்காந்திருக்கவும், கயிற்றின்மேல் ஏறிப் பின் காலால் நடந்து நடனஞ்செய்யவும், தலையூன்றிக் க ரணம்போடவும், பறையடிக்கவும், ஒருவன் வைத் தாவது, மறந்தாவது, இழந்தாவது இருக்கிற பொ ருளைத்தேடிப்பார்த்து எடுக்கவும் அதற்குப் பயிற்ற லாம். குதிரைகளைப்போல நாய்களையும் சிறுபண்டி யில் தொடுத்துப் பாரம் இழுக்கும்படி பழக்குகிறா ர்கள். பொதுவாய் நாய்களுக்குச் சுவாச உணர்ச் சி அதிகம். விசேஷமாய் வேட்டைநாய்கள் மோப்

பம்பிடிப்பதில் மிகுந்த சமர்த்துடையவைகளாயிருப்பதினால், அவைகள் எளிதாய்க் காட்டுமிருகங்களைத்தொடர்ந்து பிடிக்கும். தங்கள் எசமானுடைய அடிச்சுவட்டை அறிந்து அவனிடத்திற் செல்லும். ஜலத்தில் நீந்துவது நாய்களுக்கு இயற்கை. ஜலத்தில் இறங்கும்படி விரும்பாதிருக்கின்ற நாய்களையும் பலாத்காரமாய் ஜலத்தில் விட்டால், அவைகள் நீந்தும். நாய்கள் இடுகிற சத்தத்திற்குக் குரைத்தல் என்று பெயர். அவைகள் கோபமாயிருக்கும்பொழுது, அல்லது வருத்தப்படும்பொழுது செய்கிற சத்தத்திற்கு உறுமுதல் என்றும், முறுகுதல் என்றும் பெயர். மேலும் அவைகள் பல முறையும் ஊளையிடுவதும் வழக்கமாம்.

வழக்கங்கள். காட்டுநாய்கள் பெருங்கூட்டங்களாகச் சேர்ந்து மற்ற மிருகங்களில் தங்களுக்கு இரைக்குத் தகுதியானவைகளை வேட்டையாடித் தின்னும். ஆபிரிக்காதேசத்திலுள்ளவைகள் ஆடுமாடுகளையும், ஒரு வகை மான்களையும், அத்தனை பெரிய மற்ற மிருகங்களையும் கொன்று தின்னும். தென் ஆபிரிக்காதேசத்தில் வாசமாயிருக்கிற ஹொற்றிந்தொஷிய சாதியார் வளர்க்கிற ஆடுகளைக் காட்டுநாய்கள் அதிகமாய் நாசப்படுத்தும். அந்த நாய்களைப் பிடிக்கும்படி ஏற்றப்பட்டிருக்கின்ற யந்திரங்களுக்குள் அவைகள் அகப்படாமல் தந்திரமாய் விலகி விரைவாக ஓடிவிடுவதினால், அவைகளைக் கொல்வது மிகவும் அருமை. நாட்டுநாய்கள் தங்கள் இனத்துடன் சேராமல் மனித

ரிடத்திற் பட்சமாய் நடக்கும். அவைகள் தங்கள் தீனிக்காக மனிதர் கையையே பார்த்திருக்கும். காட்டுநாய்களைப்போல நாட்டுநாய்களும் அதிக ஜாக்கிரதையுடையவைகளாயிருப்பதுமன்றி, அவைகளைக் கண்டு ஓடுகிற எந்தப் பிராணிகளையும் தாமதமில்லாமல் தொடரும். விசேஷமாய் இராத்திரிகாலத்தில் அவைகள் காட்டுநாய்களைப்போலக் குரைத்துக்கொண்டு திரிவது வழக்கம். நாய்கள் துஷ்டமிருகங்களை மூர்க்கமாய் விரோதிப்பதுபோலத் திருடர்களையும் விரோதிக்கும். ஆதலால் அவைகள் வீடுமுதலானவைகளைக் காவல்செய்வதற்கு மிகவும் உபயோகமானவைகள். அவைகள் அப்போதப்போது வீட்டைச் சுற்றிவந்து காவல்பண்ணி, அன்னியர் தூரத்தில் வரும்பொழுது மோப்பம்பிடித்து நிற்கும். அவர்கள் கன்னமிட்டு வீட்டுக்குள்ளே புகும்படி வந்தால், அந்தக் காவல் நாய்கள் மூர்க்கமாய் ஓடி, அவர்களை மறித்துக்கொண்டு ஓயாமற் குரைக்கும். அதைக்கேட்டு, வீட்டிலுள்ளவர்கள் விழித்து வெளிப்பட்டு, காரியம் உண்டானால் அது என்னவென்று அறிந்துகொள்வார்கள்.

நாய்கள் இயற்கையாய் முயற்சியும், ஜாக்கிரதையுமுடையவைகள். ஆகிலும், அவைகளுக்கு அளவிற்கு அதிகமான தீனிகொடுத்துப் புஷ்டியாகும்படி செய்தால், அவைகள் அதிக சோம்புத்தன்மையுடையவைகளாகி, ஓயாமல் தூங்கும். இது எவர்களும் கண்டிருப்பார்கள். அவைகள் தூங்கும்பொழுது

அவைகளுடைய உறுப்புகள் அசைவதும், அவைக ள் மெல்லஅனுங்குவதும் உண்டு. அவைகள் சொப்பனம் காண்பதினால் இவ்வித சேஷ்டைகள் உண்டாகிறதாயிருக்கலாம். பொதுவாகப் பார்த்தால், நாய் அதிகம் தூங்குகிறதில்லை; தூங்கும்பொழுது சொற்ப சத்தம் கேட்டாலும் விழித்துக்கொள்ளும். அது தூங்கப்போகையில் தான் படுக்கக் கருதியிருக்கின்ற இடத்தை இரண்டு மூன்றுமுறை சுற்றி, படுத்து முடங்கிக்கொள்ளும். நாய்கள் ஒன்றோடொன்று சண்டைபிடிக்கும்பொழுது, முறுகி ஒன்றை ஒன்று கடித்துக் காயப்படுத்தும்.

தீன். நாய்கள் மாமிசபட்சணிகள். அவைகள் தின்கிற தீன் சீக்கிரத்திற் சீரணிக்கும். அவைகள் தீனியில் அதிக இச்சையுடையவைகள்; எவ்வகைத் தீனியையும் தின்னும். ஆகிலும், சில பட்சிசாதிகளின் மாமிசத்தை அவைகள் அருவருத்துத் தள்ளும். பாகஞ்செய்யப்படாத மரக்கறிகளை அவைகள் தின்கிறதில்லை. அவைகள் அசௌக்கியமாய் இருக்கும்பொழுதோ சில புற்களை மென்று விழுங்குவதுண்டு. அந்தப் புல் அவைகளுக்கு ஔஷதம். இப்படி நாய் தீனியில் அதிக இச்சையுடையதாயிருந்தும், நெடுநேரமளவும் பசிதாங்கத்தக்கதாயிருக்கின்றது. தீனியைப்பார்க்கிலும் தண்ணீர் தான் அதற்கு அவசியமென்று காணப்படுகின்றது. அது தண்ணீரை அடிக்கடி நக்கியும் குடிக்கிறது கொஞ்சம்.

குட்டி.

நாயானது சாதாரணமாய் வருஷத்திற்கு இரண்டு தரம் குட்டிபோடும். ஈற்று ஒன்றுக்கு நாலுமுதல் எட்டுக் குட்டிவரையிற் போடும். அந்தக் குட்டிகள் பிறந்த நாள்தொடங்கி ஏறக்குறையப் பத்து நாள்வரையில் கண்திறவாதிருக்கும். அவைகள் பிறந்து இரண்டொரு மாதத்திற்குள்ளாக அதிகமாய் வளர்ந்து பலமடைந்திருக்கும். அவைகள் கொஞ்சம் குறைய இரண்டு வருஷத்தில் பூரணமாக வளரும். நாய் பத்துமுதல் பதினாலு வருஷம்வரையிற் சீவனோடிருக்கும். சில நாய்களோ இருபது வருஷம் சீவனோடு இருக்கிறதுமுண்டு. நாய் முதிர்ந்த பருவமுடையதாகும் பொழுது சாதாரணமாய் அதனிடத்திற் பல குணங்கள் தோன்றும். அதின் பலம் வரவர ஒடுங்கும்; அதினுடைய உரோமத்தின் பளபளப்பு ஒழிந்து போம்; பல் விழும்; கண்பார்வை குன்றும்; கடைசியில் அது முழுமையும் தளர்ந்து செத்துப்போம். நாய் இளம்பருவமுடையதாயிருக்கும்பொழுது, அதற்குக் குட்டியென்று பெயர். வெவ்வேறு சாதியான நாய்களுக்கு வெவ்வேறு பெயர் உண்டு.

உபயோகங்கள்.

நாயானது பூர்வகாலந்தொடங்கி மனிதருக்கு மிகவும் உபயோகமுள்ளதாம். அதற்கு அதிக கூர்மையான சுவாசவுணர்ச்சியும், விரைவான ஓட்டமும், சரீர பலமும் இருப்பதினால், அது மிருகவேட்டைக்கு உதவும். அது மனிதருக்கு அடங்கி, அவர்களுடைய ஏவல்களைச் செய்யும். மனிதர் எங்கே போனாலும்,

அங்கெல்லாம் சுவேச்சையாக அவர்களைத் தொட ர்ந்து செல்லுகிற மிருகம் நாய் ஒன்றே.

அந்தந்தச் சாதியான நாய்கள் அததற்குரிய விதங் களுக்கேற்க மனிதருக்கு உபயோகமுடையவைக ளாயிருக்கும். முதலாவது ஆட்டிடையனுடைய நா ய்கள்,—இந்த வகுப்பான நாய்களுக்குள் மறுசாதிக் கலப்பு எவ்வளவும் இல்லாதவைகள் ஸ்கொத்திய தேசத்தின் வடபாகத்தில் உண்டு. அவைகள் ஆதி யில் இருந்த இடையருடைய நாய்களின் இனமென் று காணப்படுகின்றன. அந்த நாய்கள் ஆடுகள் மேய்ந்துகொண்டிருக்கும்பொழுது, அவைகளை ஓரி டமாய் மறிப்பதற்கு இடையனுக்கு உதவிசெய்யும்; விழிப்பாய் நின்று மந்தைகளை நன்றாய்க் காவல் பண் ணும்; அவைகளை வழிதப்பிப்போக விடுகிறதில்லை; ஓரிடத்தில் நின்று மேய்ந்ததின்மேல் மற்றோரிடத்தி ற்கு நடத்திக்கொண்டுபோகும். அன்னிய மந்தை யைச் சேர்ந்த ஆடுகள் தங்கள் மந்தையில் வரும்ப டி விடுகிறதில்லை. நன்றாக வழக்கப்பட்டிருக்கிற பட்டிநாய் திரளான ஆடுகளைத் தூரமான இடத்திற் கு ஓட்டிப்போகும்பொழுது, சாலையின் எப்புறத் திலாவது அங்கங்கே சந்துகள் இருந்தால், அவ்வி டங்களில் தான் போய் நின்று அவைகள் வழிவில காமல் ஓரிடமாகச் சேர்ந்துபோகும்படி செய்யும். வழிவிலகிப் போகப்பார்த்தாலோ, குரைத்துப் பய முறுத்தி அவைகளைத் தடுக்கும். எந்த ஆடாவது தப்பியோடினால், அதை அந்த நாய் வருத்தப்படுத் தாமல் பத்திரமாய் ஓட்டிப்போய் மந்தையிற் சேர்

க்கும். இடையன் மந்தையை விட்டு எங்கேயாவது போகவேண்டுமானால், அவன் ஆடுகளைப் பத்திரமாய்க் காவல்பண்ணும்படி தன் நாய் வசத்தில் ஒப்பித்துப் போவான். அவன் எத்தனை தூரத்தில் நின்றாவது இடையருக்குள் வழங்கிவருகிற சைகையைக் காட்டும்பொழுது, அந்த உண்மையும் அறிவுமுள்ள நாயானது சற்றும் தாமதியாமல் அவனிடத்திற்கு ஆடுகளை ஓட்டிப்போகும்.

உத்தரசக்கரத்தின் எல்லைக்குள் ஆசியாவிலே வேறொரு விசேஷ சாதி நாய் உண்டு. அங்கிருக்கின்ற குடிகள் சக்கரமில்லாமல் படகுபோன்றிருக்கிற பண்டிகளில் அந்த நாய்களைப் பூட்டி, உறைந்த பனிமேற் செலுத்துவார்கள். இரண்டு மூன்று பெயர் அவ்விதமான ஒரு பண்டியில் ஏறி, தங்கள் பிரயாணச்சாமான்களையும் அதில் வைத்து, பத்துப் பன்னிரண்டு நாய்களைப் பூட்டிச் செலுத்தினால், அவைகள் நாள் ஒன்றுக்கு ஐம்பது மைல் வீதம் ஓடும்.

வட அமெரிக்காவின் கிழ்கரையிலுள்ள நியூபௌந்திலாந்து என்னும் தீவிலே ஒருவகையான பருத்த நாய்கள் உண்டு. அவைகள் உள்நாட்டிலிருந்து கடற்கரை அடுத்த இடங்களுக்குச் சக்கரம் இல்லாத பண்டிகளில் வெட்டுமரம் இழுத்துக்கொண்டுபோகும். அந்த நாய்கள் மிகவும் படியத்தக்கவைகளும், விவேகமுடையவைகளுமாயிருக்கிறபடியால், அவைகள் ஆளில்லாமல் காட்டிலிருந்து மரம் இழுத்துப்போய், அதைக் குறித்த இடத்தில் ஒப்பித்தபின்பு, திரும்பக் காட்டுக்குப் போவது வழக்கம்.

அமெரிக்காகண்டத்தின் சில நாடுகளில் அந்த நாய்கள் ஆற்றுக்குப் போய், தண்ணீர் எடுத்து வருவதுமுண்டு. அதிகத் தண்ணீர் கொள்ளத்தக்க சாடி ஒன்றை ஒரு பண்டியில் வைத்து, அதில் குதிரைகளைப்போல ஒரு சோடு நாய்களைப் பூட்டி, ஒரு பையன் பின்னே நின்று ஆற்றங்கரைக்குச் செலுத்திக்கொண்டுபோவான். அவைகள் அங்கே சேர்ந்தவுடனே ஆற்றுக்குள் வலிய இறங்கிநிற்கும். பின்பு பையன் தண்ணீர் மொண்டு சாடிநிறையும்படி ஊற்றுவான்; நிறைந்ததின்மேல், அந்த நாய்கள் திரும்பித் தண்ணீரை வீட்டிற்கொண்டுபோய்ச் சேர்க்கும். அந்தச் சாதி நாய்கள் எவ்வளவும் வருத்தமில்லாமல் அதிக விரைவாய் நீந்தும். மேலும் அவைகள் ஆச்சரியமான கூர்மையும், மனிதரிடத்திற் சார்ந்து நடக்கும் தன்மையுமுடையவைகளாயிருப்பதினால், தற்செயலாய் ஜலத்தில் விழுந்து பிராணபாயப்படுகிற ஜனங்களை அவைகள் பலமுறையும் இரட்சிக்கிறது உண்டு. அன்றியும் தங்கள் வசத்தில் ஒப்பித்தசாமான்களை ஒருவரும் தொடவிடாமல் அந்த நாய்கள் பத்திரமாய்க் காவல்பண்ணும். இந்தச் சாதியான நாய் குழந்தைகளையும் காவல்பண்ணும்.

ஐரோப்பாகண்டத்திலுள்ள உலாந்ததேசத்திலே பருத்த நாய்கள் உண்டு. அவைகளைக் கைவண்டிகளிலும் சாமான் வண்டிகளிலும் பூட்டி வர்த்தகர் தங்கள் சாமானுடன் ஏறிப்போவது வழக்கம். அந்த நாய்கள் கொஞ்சம் குறையக் குதிரைகளைப்போல விரைவாய் ஓடும். இந்தத் தேசத்தில் நாய்கள் தங்

கள் முதுகின்மேற் பலவித விளையாட்டுகளைச் செய்கின்ற குரங்குகளைச் சுமந்துபோகக் கண்டோம். மேலும் அவைகள் இராத்திரியில் வேடிக்கைக்காகச் சின்ன இருதலைப்பந்தத்தை வாயிலே கவ்விக்கொண்டு போவதுண்டு. தனாயன் என்னும் சாதிநாயானது கடைகளிலும் வீடுகளிலும் தொந்தரைசெய்கிற எலி, சுண்டெலிமுதலானதுகளைப் பிடிக்கிறதினால் அது மனிதருக்கு மிகவும் உபயோகமுள்ளதாம். நரிகளும் மற்ற மிருகங்களும் வாசமாயிருக்கிற தரையைச் சேர்ந்த வளைகளுக்குட் போய், அவைகளை அங்கிருந்து வெளிப்படும்படி துரத்திவிடுவதினால் அதற்குத் தரையனென்ற பெயர் உண்டாயிற்று. அஞ்சாமல் தண்ணீரில் இறங்கும் தன்மையுள்ள நாய்கள் ஏரியிலாவது, ஆற்றிலாவது விழும் பட்சிகளை எடுத்துக் கரைக்குக்கொண்டு வரத்தக்கவைகளாயிருப்பதினால், அவைகள் பட்சி வேட்டைக்காரருக்கு உபயோகமுள்ளவைகளாம்.

வேட்டை நாய்கள் வெவ்வேறுவகைப்படும். அவைகள் எல்லாம் விரைவாய் ஓடத்தக்கவைகளாம். அவைகள் மான், கலைமான், நரி, முயல் முதலிய மிருகங்களை வேட்டையாடிப்பிடிக்கும். வேட்டைநாய்களுக்குள் "உதிரவேட்டைநாய்" என்னப்பட்ட ஒருசாதி நாய்கள் உண்டு. அவைகள் முற்காலத்தில் ஐரோப்பாதேசத்தில் ராஜதண்டனைக்கு விலகி ஓடி ஒளித்த திருடரையும் கொலைபாதகரையும் தொடர்ந்து பிடிக்கப் பிரயோகிக்கப்பட்டன. அந்த நாய்கள் அதிக அறிவும் கூர்மையான நாசிப்புலனு

முடையவைகளாயிருக்கின்றன: ஆனதினால், திருடரும் கொலைபாதகரும் எவ்வளவு மறைவான இடங்களில் ஒளித்திருந்தாலும், அவைகள் தப்பாமல் அவர்களைத்தொடர்ந்து பிடிக்கும். தப்பி ஓடினவன் எத்தனை மைல் தூரம்போனாலும், அடிச்சுவடுகண்டு அந்த நாய்கள் தாமதியாமல் தொடர்ந்து பிடிக்கும். வீடு, பொருள்முதலானவைகளைக் காவல்பண்ணுவதற்கு நாய்கள் திறமான ஜெந்துக்களென்பது மேலே சொல்லப்பட்டது. முற்காலத்தில் அங்கிலோ தேசத்தில் ஆண்மையும், வீரமும், அதிக பருமையுமுள்ள ஒரு வகை நாய் இருந்தது. அது உண்மையும் விவேகமுமான விதமாய்க் காவல்காப்பதற்கு மிகுந்த சமர்த்துடையது. அதின் காவலின் எல்லைக்குள் யாராவது அன்னியர் வந்தால், அவர்கள் யாதொரு பொருளைத்தொடுமளவும் அது ஒன்றும் செய்யாமல் உபாயமாகப் பார்த்திருக்கும். ஒரு பொருளைத் தொட்டாலோ, அது மெதுவாய் உறுமி எச்சரிக்கும். அவர்கள் அதைச்சட்டைபண்ணாமல் எடுத்த பொருளைக் கொண்டுபோகத்துணிந்தால், அது அவர்களைக் கடியாமல் கவ்விப்பிடித்து, நிலத்தில் விழுத்தி, எத்தனைநேரம் சென்றாலும் யாராவது தனக்குத் துணைசெய்யும்படி வருமளவும் அமர்த்திக்கொண்டிருக்கும். ஆசியா, ஆபிரிக்காகண்டங்களைச் சேர்ந்த சில தேசத்தார் நாயிறைச்சி சுவையுடையதென்று தின்கிறார்கள். ஆதலால் அவர்கள் நாய்கள் கொழுக்கும்படி அவைகளுக்குத் தீனிகொடுத்து வளர்ப்பார்கள். சீனதேசத்தார்களுக்கு நாயிறைச்சி

முக்கியமான பதார்த்தம். தென்சமுத்திரத் தீவுகளிலுள்ள ஜனங்கள் தங்கள் நாய்களுக்கு மரக்கறிகளைக் கொடுத்துவளர்ப்பார்கள். அவைகள் தெவிட்டும்படி தின்றுவிட்ட பின்பும் ஜனங்கள் அவைகளுடைய வாயைத் திறந்து மேன்மேலும் திணிப்பார்கள். ஐரோப்பியர்கள் நாயின் தோலைமாத்திரம் பதமிட்டுப் பாதரட்சைகள், கையுறைமுதலிய உடுப்புகள் செய்கிறார்கள். ருஷிய ஆசியாவின் வடகிழக்கிலுள்ளவர்கள் நாய்த்தோலை வஸ்திரமாகவும், வஸ்திரத்தை அலங்கரிக்கிறதற்காகவும் உபயோகிக்கிறார்கள். மேற்கண்டபடி ஐரோப்பியர் நாயை மேன்மையும், பலவிதத்தில் உபயோகமுமானதென்று வளர்க்கிறார்கள். மகமதியரும் இந்துக்களுமோ, அதை இழிவான ஜெந்துவாகப் பாவிக்கிறார்கள். அவர்கள் அதைத் தொட்டால், தீட்டுப்போம்படி ஸ்நானஞ் செய்வார்கள்.

கதைகள்.

மஸ்திப்பு என்னும் நாய் மிகுந்த ஞாபகசக்தியுடையதென்பது அந்தச் சாதியிலுள்ள ஒரு நாயைக்குறித்துப் பிரான்சிய துரைமகன் ஒருவர் சொல்லிய சரித்திரத்தால் அறியலாம். அவர் இந்துதேசத்தில் அந்த நாயை வளர்க்கத்தொடங்கினபொழுது அது இரண்டு மாசக்குட்டி. அவரும் அவருடைய இஷ்டன் ஒருவரும் புதுச்சேரியிலிருந்து அதற்கு வடமேற்குத் திசையில் ஏறக்குறைய ௨௦௦-மைல் தூரத்தில் இருக்கிற பங்களூருக்குப் போனபொழுது அதுவும் அவர்களுடன் போனதாம். அவர்சொல்லிய கதை வ

ருமாறு:—"நாங்கள் பங்களூருக்குப்போய்ச் சேரு வதற்கு ஏறக்குறைய மூன்று வாரம் சென்றது. இடையில் அங்கங்கே அனேக சமவெளிகள், மலைகள், ஆறுகள், கொடிவழிகள் இருந்தன. இவைகளையெல்லாம் தாண்டிப் பங்களூரிற் சேர்ந்தோம். எனது நாய் பங்களூருக்கு முன் ஒருபொழுதும் போனதில்லை. அது பங்களூரில் சேர்ந்தபொழுது வகைமோசமாய் என்னைவிட்டுப் பிரிந்தது. அது என்னைக் காணமற்போனபடியால் அங்கிருந்து புதுச்சேரிக்குத் திரும்பி, நான் பெரும்பாலும் வாசமாயிருந்த என் சினேகிதனுடைய வீட்டிற் போய்ச்சேர்ந்தது. அது திரும்பிப்போகையில் தீனிக்கு என்ன உபாயம் செய்ததோவென்று விசாரிக்கவேண்டுவதில்லை. ஒரு மாசம் சென்றதின்பின் முன் வந்த வழியை ஞாபகத்தில் வைத்திருந்து திக்குக்கெட்டுத் திரியாமல் நேரே வீட்டுக்குப் போய்ச்சேர்ந்ததே. இதுவே மிகுந்த ஆச்சரியம். இத்தனை ஆச்சரியமான ஞாபகசக்தி மனிதரிடத்தும் இல்லை" என்பது.

ஸ்கொத்லாந்திலே ஒரு இடையன் வளர்த்த நாய் அபூர்வமான சமர்த்துடையதென்று ஒரு கதை சொல்லப்பட்டிருக்கின்றது. அது வருமாறு:—"ஒருவனுக்குத் திரளான ஆடுகள் இருந்தன. அவைகளுடைய குட்டிகள் ஏறக்குறைய எ00. அந்தக் குட்டிகளைப் பத்திரமாகப் பார்த்து மேய்க்கும்படி அவன் ஒரு இடையனிடத்தில் ஒப்பித்திருந்தான். இடையனும் அவன் வேலைக்காரனும் அவைகளைக் காத்துக்கொண்டிருக்க, அவைகள் அர்த்தராத்திரியில்

மந்தையினின்று விலகி, மலைக்குள்ளே மூன்றுவ குப்பாய்ப் பிரிந்து போயின. அப்பொழுது அவ் விருவரும் தங்களால் ஆனமட்டும் ஓடியோடி அவை களை மறித்தும் ஒன்முகச் சேர்க்கக்கூடாமற்போ யிற்று. அதினிமித்தம் இடையன் அதிக மனவ ருத்தப்பட்டுத் தன் நாயைப் பார்த்து "சேரா, குட் டிகளெல்லாம் போய்விட்டன" என்று கூவினன். அன்றிராத்திரி ஆளை ஆள் தெரியாதபடி அதிக இரு ளாயிருந்தபடியால், அவன் நாயைக் காணவில்லை. ஆ னலும் அது தன் எசமானுடைய சத்தம் கேட்ட வு டனே சற்றும் தாமதமில்லாமல் மிகுந்த ஜாக்கிரதை யுடன் ஓடி, சிதறுண்ட குட்டிகளைத் தேடும்படி போ யிற்று. அவ்வேளையில் இடையனும் வேலைக்காரனும் சோர்ந்து நிற்காமல் மலைகளுக்குள்ளே அனேக மை ல் தூரவரையிற் போய், இராத்திரிமுழுவதும் குட்டி களைத் தேடித்திரிந்தார்கள். திரிந்தும் அவர்கள் ஒரு குட்டியையும் காணவில்லை. சேரா என்னும் நா யையும் காணவில்லை. சூரியனும் உதிக்கிற சமயமா யிற்று. "இனி இங்கே நிற்பதினுற் பயன் என்ன? நாம் எசமானிடத்திற்குப் போய், ஆட்டுக் குட்டிகள் ஒன்றும் மந்தையில் நில்லாமல் எல்லாம் ஓடிப்போய் விட்டன, அவைகள் எங்கே போயினவென்று இ ராமுழுதும் தேடியும் காணுமென்று தெரியப்படு த்துவோம் வா" என்று சொல்லி, அவர்கள் வீட்டுக் குத் திரும்பிப் போகையில், சூரியன் உதயமாயிற்று. அப்பொழுது ஒரு ஆழ்ந்த கணவாயின் அடியிற் சில குட்டிகள் நிற்பதையும், அவைகளுக்கு முன்னே

சேரா என்னப்பட்ட நாய் தனக்குத் துணைசெய்வதற்கு யாராவது வருவார்களாவென்று அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டுநிற்பதையும் கண்டார்கள். அவர்கள் சமீபத்திற்போய்ப் பார்த்தபொழுது, தப்பி ஓடின குட்டிகளில் ஒன்றுவது குறையாமல் எல்லாம் நிற்பதைக் கண்டு, இத்தனை சமர்த்துடைய நாயை நாம் எங்காவது கண்டதில்லையென்று பிரமிப்படைந்து, சேராவைத் தங்கள் பிராணசினேகிதனைப்போல நேசித்தார்கள்.

நாய்களின் புத்திக்கூர்மையைக்குறித்து இன்னும் பல கதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இத்தலி தேசத்திலுள்ள மந்துவாநகரத்தில் வாசமாயிருந்த ஒரு ஊமையன் ஒரு நாய் வளர்த்து, அதற்குப் பல சாடைகளையும் ஒலிக்குறிப்புகளையும் தெரிவித்து, நன்றுக வழக்கப்படுத்திவைத்தான். அதற்கு அவன் ஏதோ ஒரு குறிப்பைத் தெரிவிக்க, அது உடனே அவன் கருத்தை அறிந்து, வெளியே ஓடி, அவன் நினைத்த வேலைக்காரனை அழைத்து வரும்.

ஸ்கொத்திலாந்துதேசத்தின் ராஜதானியாகிய எதின்புர்க்கு நகரத்தில் இருந்த பலசரக்குவியாபாரி ஒருவனிடத்தில் ஒரு நாய் இருந்தது. அது அயலிலுள்ள ஜனங்களுக்கெல்லாம் அதிக விநோதமும், ஆச்சரியமுமுள்ளதாயிருந்தது. அந்த நகரத்தின் வீதிகள்தோறும் ஒருவன் மணி ஆட்டிக்கொண்டு சிற்றுண்டி விற்பது வழக்கம். அவன் ஒரு நாள் மேற்சொல்லிய நாய்க்குக் கொஞ்சம் சிற்றுண்டி கொடுத்துப் போனுன். மற்றொரு நாள் அது மணிச்சத்தம் கேட்,

ட்வுட்னே துரிதமாக வீதியில் ஓடி, அவனுடைய வஸ்திரத்தைக் கவ்வி அவனை மறித்தது. அவன் அதின் கருத்தை அறிந்து, ஒரு துட்டைத் தன் கையில் எடுத்துக் காண்பித்து எசமானைக் காட்டினான். நாய் குறிப்பறிந்து எசமானிடத்திற் போய், வாலைக் குழைத்து, அவர் முகத்தைப் பார்த்துக் கெஞ்சி, துட்டு வாங்கிச் சிற்றுண்டிக்காரனிடத்தில் கொடுத்து, சிற்றுண்டி வாங்கித் தின்றது. இந்தப்படி நெடுங் காலவரையில் நடந்ததாம்.

தண்டி என்னும் பெயருடைய ஒரு நாயைக்குறித்து ஸ்ர் வால்த்தர் ஸ்காத்துரை பல கதைகள் எழுதியிருக்கிறார். அது மனிதர் பேசுவது இன்னதென்று பல முறையும் தெரிந்துகொள்ளும். அதின் எசமான் ஒரு இராத்திரி அதிக நேரம் சென்று வீட்டுக்கு வந்தார். அப்பொழுது வீட்டாரனைவரும் படுத்துத் தூங்கினார்கள். அவர் தமது பாதரக்ஷை கழற்றும் கருவியை வழக்கமான இடத்தில் காணாமல், அதைத் தேடி எடுத்து வரும்படி தண்டிக்குச் சொன்னார். அப்பொழுது அது அவர் சொல்லிய வார்த்தைகளைத் தெரிந்துகொண்டு, அறையின் கதவைத் தன் காலால் பறுண்ட், அவர் அதைத் திறந்துவிட்டார். உடனே தண்டியென்னும் நாய் வீட்டைச் சேர்ந்த வேறொரு அறைக்கு ஓடிப்போய், தன் எசமான் அன்று காலமே பஞ்சணைமெத்தையின்கீழ் வைத்த பாதரக்ஷை கழற்றும் கருவியைத் தன் வாயிற் கவ்வி எடுத்துக் கொண்டுவந்து கொடுத்தது.

நாய்கள் தங்களுக்கு அதிக வழக்கமானவர்கள்

செய்யும் ஒலிக்குறிப்புகளை அறிந்து அவ்வாறு தாமதமின்றிச் செய்யும். சில வருஷங்களுக்குமுன் அங்கிலோதேசத்தில் ஒரு வேட்டைக்காரன் இருந்தான். அவன் தன் விசாரணைக்கீழ் இருந்த வேட்டை நாய்களுக்கு மிகுந்த செல்வாக்குடையவன். அது இதின் அடியில் வரும் வேடிக்கையான கதையினுல் விளங்கும். மேற்சொல்லிய வேட்டைக்காரனுடைய எசமானுகிய துரைமகன் அவனை வேட்டையாடும்பொழுது அடிக்கடி திட்டுவது வழக்கம். ஒரு நாள் அந்தத் துரை அவனை வைதபொழுது, அவன் மிகவும் மரியாதைத்தாழ்வாக மாறுத்தரம் சொன்னுன். துரை அதுகேட்டு, அதிகமாய்க் கோபங்கொண்டு, அவ்விடத்தில் நிற்கும்பொழுதே அவனைத் தன் சேவகத்தினின்று விலக்கினுன். பிற்பாடு ஒரு நாள் அத்துரைமகன் தன் நாய்களை அழைத்துக்கொண்டு வேட்டைக்குப் போகையில், மேற்சொல்லிய வேட்டைக்காரன் ஒரு மரத்தில் ஏறி உட்கார்ந்து, நாய்களை உரத்துக் கூவி அழைத்தான். அவைகள் அவன் குரல் கேட்ட நிமிஷமே சற்றும் தாமதியாமல் ஓரோட்டமாய் ஓடி, அந்த மரத்தின் அடியைச்சுற்றி நின்றன. எசமான் அவைகளை வெகு ஆசைகாட்டி அழைத்தும், அவைகள் சற்றுவது திரும்பிப்பார்க்கவுமில்லை. ஆதலால், அந்தத் துரை தன் வேட்டைக்காரனைத் திரும்பவும் வேலைகொள்ளப் பிரியமில்லாமலிருந்தும், நாய்களினிமித்தம் அவனை மறுபடியும் வேலைக்கு வைத்துக்கொண்டார்.

## பூனை.

எந்தேசங்களில் உள்ளது.

காட்டுப்பூனைகள் ஐரோப்பாகண்டத்தில் இருக்கின்ற ஜர்மனிதேசத்திலுள்ள அநேக வனங்களிலும், எங்கிலாந்தின் வடபாகத்திலுள்ள காடுகளிலும், அயிர்லாந்து, ஸ்கொத்திலாந்து இவைகளிலுள்ள சில மலை நாடுகளிலும் உண்டு. மேலும் ஆபிரிக்காவைச் சேர்ந்த கினி, மதகாஸ்கர், நன்னம்பிக்கைமுனைநாடுமுதலிய சில இடங்களிலும், ஜபான்தீவிலும், ஆசியாகண்டத்தின் எல்லைக்குள்ளும் அவைகள் சஞ்சரிக்கின்றன. வீட்டுப்பூனைகளோ சீர்திருந்திய ஜனங்கள் வாசமாயிருக்கிற எந்தேசங்களிலும் உண்டு.

தோற்றம்.

பூனை மிகவும் சிறந்த மிருகம். அதற்கு வட்டமான தலையும், கூர்மையான முனையுள்ள குறுகிய செவியும், நீண்ட வாலும், பட்டுப்போல மிருதுவான உரோமம் நெருங்கியிருக்கின்ற நீளமான சரீரமும் உண்டு. அதற்கு ஒவ்வொரு காலிலும் கூர்மையான நகமுடைய விரல்கள் ஐந்து. அந்த நகங்களை அது தன் இஷ்டப்பிரகாரம் நீட்டவும் சுருக்கவுங்கூடும். அதின் உள்ளங்கால் தசைப்பிடியுள்ளதும், மிருதுவானதும், விரிந்து சுருங்கத்தக்கதுமாயிருக்கின்றது. அதின் முகத்தின் இருபுறங்களிலும், மேலுதட்டிலும் இருக்கின்ற மீசைபோன்ற சில நீண்ட மயிர்கள் அதற்கு மிகுந்த அலங்காரமாகத் தோன்றும். அதின் பருத்த கண்கள் இராத்திரிகாலத்தில் வச்சிரக்கற்களுக்கு ஒப்பாகப்

பளிச்சென்று மின்னும். பட்டப்பகலில் அதின் க
ண்ணின் கருவிழிகள் ஒரு சிறு வரிபோலச் சுருங்கி
யும், இராத்திரிகாலத்திலோ விருத்தமாகப் பருத்
தும் இருக்கும். எல்லாப் பூனைகளின் முகமும் கபட
த்தையும், அச்சத்தையும், சந்தேகத்தையும் காட்
டிய சாயலையுடையதாகத் தோன்றும்: காட்டுப்பூனை
யுடைய முகத்தின்சாயலோ மேற்கூறிய குணங்களை
மாத்திரமல்லாமல், துஷ்டத்தனத்தையும் காட்டும்.
வெவ்வேறு பூனைகள் வெவ்வேறு நிறமுடையவைக
ளாயிருக்கும்; அனேகம் பூனைகளுக்குச் சிறந்த வரி
களும் புள்ளிகளும் உண்டு. விசேஷமாய்ப் பாரசீ
கதேசத்தின் பூனைகளுடைய கழுத்திலும் வாலிலுமு
ள்ள மயிர் மிகவும் நீண்டிருக்கும். பூனைகளுக்குள்
ளெல்லாம் அதிக சிறப்புடையவைகள் சின்னஆசி
யாவிலுள்ள அங்கோராநாட்டுப் பூனைகளே. அ
வைகளின் மூக்கும் உதடுகளின் ஓரங்களும் ரோ
ஜாப்பூ வர்ணமாயிருக்கும்; கண்கள் நீலநிறம், அல்
லது பொன்நிறம். அவைகள் பளிச்செனத் துலங்
கும். அவைகளின் முகப்பார்வை சாந்தமும் அ
மைதியுமான சாயலையுடையதாயிருக்கும். கண்
ணைப் பகட்டத்தக்க வெண்ணிறமுடைய உரோம
மானது மிகவும் பருத்து நீண்டு பட்டுப்போல மி
ருதுவாயிருக்கும். அவைகள் தங்கள் வாலை உயர்
த்தும்பொழுது, அது அழகான இறகுக்குச் சமா
னமாகத் தோன்றும். நன்னம்பிக்கைமுனைநாட்
டில் ஒரு சாதிப் பூனை இருக்கின்றது. அதின் முதுகு
மீதில் தலைமுதல் வால்பரியந்தம் இரத்தம்போலச்

சிவந்த இரேகை இருக்கும். அதற்குச் செம்பூனை யென்று பெயர்.

குணவிசேஷங்கள். காட்டுப்பூனைகள் உக்கிரமும், கபடமும், துஷ்டத்தனமும், தந்திரமும், மனிதரைக் கண்டால் ஒளிக்கும் தன்மையுமுடையவைகள். அவைகளைச் சிறு பருவத்திற் பிடித்து வளர்க்கப்பார்த்தாலும், அவைகள் அடங்குகிறதில்லை. சாதாரணமான வீட்டுப்பூனை மனிதரிடத்திற் சார்புள்ளதாகக் காணப்பட்டும், குருவி முதலான சிறு செந்துகளைப் பயப்படுத்தி, அவைகளுக்குக் குரூரஞ்செய்து நாசப்படுத்தும். குட்டியாயிருக்கும்பொழுது அது உல்லாசமாகத் துள்ளி விளையாடித் திரியும். வளரவளர அது விளையாட்டுத் தன்மையை மறந்து, கொள்ளையிடும் தன்மையையும், தந்திரமான குணத்தையும், மூர்க்கத்தையும் காட்டும். அது யாராவது ஒருவரிடத்திற் பட்சம்வைத்து அடங்கி நடக்கும். அப்படி எவர்களுக்கும் அமைந்து நடப்பதற்குச் சாதுவானகுணம் அதற்கில்லை. அது சிறு ஜெந்துவாயிருப்பதினுலேதான் அமைந்து நடக்கிறது. வேண்டிய தீனியும், சௌக்கியமும், ஆறுதலும் மனிதரிடத்தில் தனக்குக் கிடைப்பதினுல் அது அவர்களுக்கு அடங்கியிருக்கிறதேயல்லாமல், அதற்கு அவர்களிடத்தில் இயற்கையாயுள்ள பட்சத்தினுலல்ல. மனிதர் பூனையைப் பெரும்பாலும் அற்பமாயெண்ணிப் பராமரிக்காததினுலேதான் அது அதிக கபடமாய்த் தன் பாட்டுக்குத் தனித்திருக்கிறதென்றும், அதைப் பட்சமாய்

நடத்தி நன்றாகப் பராமரிப்பார்களானால், அது சாந்தமும் அவர்களிடத்தில் பட்சமுமுள்ளதாகுமென்றும் சொல்லுவாரும் உண்டு. அங்கோராவிலுள்ள பூனை சாந்தம், இஷ்டம், பொறுமை முதலிய குணங்களையுடையது.

பூனைகள் வழக்கமாய்ச் சஞ்சரிக்கிற வீடுகளை விட்டுப்போகாமல் அங்கேயே இருக்கும். வீடுகளிலிருந்து ஆறு ஏழு மைல் தூரத்திற்கு அப்புறம் அவைகளைக் கொண்டுபோய்விட்டாலும், அவைகள் இடையிலுள்ள ஆறுகளையும் தாண்டித் திரும்பவும் அவ்வீடுகளுக்கே வந்துசேரும். பூனைகளுக்கு ஞாபகசக்தி அதிகம்; அவைகள் பழகினவர்களுடைய முகத்தையும், குரலையும் எத்தனைகாலம்சென்றாலும் மறக்கிறதில்லை. வாத்தியம் வாசிக்கும்பொழுது கூத்தாடவும், மற்றநேக நூதனமும் சிறப்புமான வேடிக்கைகளைச் செய்யவும் அவைகள் வழக்கப்படுவதும் உண்டு. அவைகள் இவ்வித வேடிக்கைகளைச் சுவேச்சையாகவல்ல, அவைகளுடைய மெல்லிய தோலில் அடி அதிகம் உறைக்குமாதலால், அடிக்குப் பயந்து அப்படிச் செய்யும். பூனைகளுக்கு நாய்களைப் போல் அவ்வளவு அதிகமான சுவாச உணர்ச்சி இல்லை. அவைகளின் கண்களோ பகலிலும் இராவிலும் பேதமின்றிப் பார்க்கத்தக்க அத்தனை கூர்மையுடையவைகள். பூனைகளுக்குக் கேள்வியுணர்ச்சியும் அதிகம். அவைகளுடைய மூஞ்சியில் நீண்டிருக்கின்ற உரோமங்களே அவைகளுக்குப் பரிச உணர்ச்சியின் கருவிகள். அந்த உரோமங்கள்

நீண்டு வளர்ந்திருப்பதினால் பூனைகள் ஊடுருவிச்செல்லும்படியிருக்கிற துவாரத்தின் அளவு தங்கள் உடல் நுழைவதற்குப் போதுமாவென்று அறிவதற்கு அவைகள் ஏதுவாகும். பூனைகள் தங்கள் குட்டிகளில் அதிக பாசமாயிருக்கின்றன. அவைகளுக்குத் தங்கள் சாதியிலுள்ள குட்டிகள் என்றும், மற்ற மிருகங்களின் குட்டிகள் என்றும் பேதம் இல்லை. எந்தக் குட்டிகளையும் தங்கள் சொந்தக் குட்டிகள் போலக் கண்டு, அவைகளிடத்திற் பட்சமாயிருக்கும். அவைகளுக்கு இரை கிடையாதிருக்குமானால் இரண்டு மூன்று வாரமட்டும் பசியைத் தாங்கியிருக்கும். அவைகளுக்கு என்ன ஊறுபாடு செய்தாலும் எளிதிற் பிராணன் போகாது. தண்ணீருக்கும் குளிர்ச்சிக்கும் பயப்படுவது அவைகளுக்கு இயற்கை. பூனைகளுக்குத் துர்க்கந்தத்தில் எவ்வளவும் பிரியம் இல்லை. நன்றாகப் பரிமளிக்கும் புனுகு முதலியவைகளைப் பூசியிருக்கிறவர்களாற் சீராட்டப்படுவது பூனைகளுக்குப் பெரிய கொண்டாட்டம். அவைகளுடைய தோல் எப்பொழுதும் காய்ந்து மினுமினென்றிருக்கும். ஆதலால் பூனைகளின் உரோமம் மின்சாரத்தன்மையுள்ளது. இருண்ட இடத்தில் அவைகளின் உரோமத்தை ஒருவன் தன் கையினால் ஊன்றித் தடவும்பொழுது மின்பொறி பறப்பதுண்டு.

காட்டுப்பூனைகள் மலைகளில் அடர்ந்திருக்கின்ற

வழக்கங்கள். உயர்ந்த மரங்களிலும், பாறைகளிலுள்ள வெடிப்புகளிலும், செங்குத்

தான மலைகளில் இருக்கும் துவாரங்களிலும் சஞ்சரிக்கும். அவ்விடங்களில் அவைகளைச் சமீபிப்பது அரிது. காட்டுப்பூனை தனித்துச் சஞ்சரிக்கும் மிருகம். அவைகளுக்கு இரை பட்சிகளும், எலி, சுண்டெலி, அணில் முதலிய நான்கு காலுடைய சிறிய ஜெந்துகளுமாம். மேலும் அவைகள் வெள்ளைமுயல், முயல் இவைகளையும் தொடர்ந்து பிடிக்கும். மனிதர் வாசமாயிருக்கும் இடங்களுக்குச் சமீபத்திற் சஞ்சரிக்கின்ற காட்டுப்பூனைகள் வீட்டில் வளர்க்கப்படுகிற கோழி, தாரா முதலிய பட்சிகளைப் பட்சிக்கிறதுமல்லாமல், செம்மறியாட்டுக்குட்டி, வெள்ளாட்டுக்குட்டி, மான்குட்டி முதலியவைகளைக் கொன்று தின்கிறதும் வழக்கம். அவைகள் பெரும்பாலும் இராக்காலங்களில் இரை தேடித் திரியும். அவைகளுடைய உள்ளங்கால் மிருதுவும், நிலத்தில் மிதிக்கும்பொழுது பந்துபோலத் தாக்கி மீளுந்தன்மையுமுடையதாயிருப்பதினால், அவைகள் சத்தம் கேளாமல் நடக்கும். அவைகள் சொல்லும்படி தொடர்ந்துபோகின்ற மிருகம் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இருக்கும்பொழுது, வயிறு நிலத்திற் படத்தக்கதாகப் பதிந்து, சத்தங்கேளாமல் மெல்லென நகர்ந்து, சமீபிக்கும்பொழுது ஒரு பாய்ச்சலிற் பாய்ந்து பிடித்து, அந்த மிருகத்தைக் கூர்மையான நகத்தாற் கிழித்துக் கடித்துக் கொல்லும். வீட்டுப்பூனைகளும் அவ்வாறே தாங்கள் இரைக்காகப் பிடிக்கிற ஜெந்துகளைக் கடித்து வருத்திக் கொன்று தின்னும். அவைகள் சுண்டெலிகளைப் பிடிக்கும்

பொழுது, அந்தச் சுண்டெலிகளைச் சற்றுநேரமள வும் அங்கும் இங்கும் ஓடும்படி விட்டு, அவைகளுக் கு வருத்தம் உண்டாகாமல் மெதுவாய்க்கவ்வி எறி ந்து, அவைகளைக் கொல்லத் தாங்கள் கருத்துக்கொ ண்டிருக்கவில்லையென்பதுபோலக் காண்பித்து, வி ளையாடித் தொய்ந்தபின்பு, அவைகளைச் சற்றும் இர க்கமில்லாமற் கடித்துப் பட்சிக்கும். இரைக்கு உப யோகமான எலி,பக்ஷி இவைமுதலியவைகளைத் தே டும்பொழுது, பூனை சிலவேளை எலி வளைக்கு எதி ரே, அல்லது பட்சிக்கூட்டுக்குச் சமீபத்தில் ஒரு நாள் முழுதும் பொறுமையுடன் பதுங்கிக்கொ ண்டிருப்பதும் உண்டு. இத்தேசத்திலே பூனைகள் பாம்புகளைத் தொடர்ந்து ஒதுக்கமான இடங்களில் மறித்துக்கொள்ள, மனிதர்கள் அந்தப் பாம்புகளை அடித்துக் கொல்லுவது உண்டு. பூனைகள் உயரத்தி னின்று விழும்படி நேரிடும்பொழுது, தங்கள் முது கெலும்பை வளைந்துவரும்படிசெய்து, நிலத்திற் கால் பொறுக்கத்தக்கதாக விழுவதினால், அவை களுக்கு அபாயம் உண்டாகிறதில்லை. தண்ணீரில் நனைவது இயற்கையாய்ப் பூனைகளுக்குச் சற்றும் பிரியமில்லாதிருந்தும், அவை தங்கள் சுபாவத்தி ற்கு மாறாக ஆறு, ஏரி இவைகளின் ஆழமில்லாத இடத்தில் இறங்கி, அங்கே உலாவுகிற மீன்களைப் பிடிப்பதும் உண்டு. பூனைகள் போக்குப்பாங்கில் மிகவும் சுசிகரமானவைகள். அவைகள் விழித்திரு க்கும்பொழுது பெரும்பாலும் தங்கள் உரோமங்க ளை நக்கிச் செம்மைப்படுத்துவதும், தங்கள் காலை

வாய்நீரால் நனைத்து, வாய்க்கு எட்டாத தங்கள் உறுப்புகளைத் தடவிச் சுத்திசெய்வதும் அவைகளுக்கு இயற்கை. ஆறிப்படுக்க அவைகளுக்கு இஷ்டமாயிருப்பதினால், மிருதுவான இடங்களைத் தேடி, அங்கே போய்ப் படுத்திருக்கும். அவைகளுக்குச் சந்தோஷம் உண்டாகும்பொழுது, அவைகள் தொடர் ஒலியாய் உறுமுவதும், தங்கள் முன்கால்களை நீட்டி மடக்குவதுமாயிருக்கும். பூனைகள் தங்களுக்கு இஷ்டமானவர்களைக் கண்டு, அவர்களிடத்தில் ஓடும்பொழுது, பெரும்பாலும் வாலை நீட்டி உயர்த்திக்கொண்டுபோகும். அவைகள் தங்களுக்கு இஷ்டமானவர்களுடன் விளையாடுவதற்கு விரும்பினால், அவர்கள் நீட்டுகிற கையையாவது, மற்றொரு பொருளையாவது பிறாண்டாதபடிக்குத் தங்கள் நகத்தைச் சுருக்கி மிருதுவான முன்காலின் அடியால் அவைகளைப் பிடிக்கும். யாராவது அவைகளை அதிகமாய் வருத்தப்படுத்தினாலோ, அவைகள் அவர்களுடைய கையை, அல்லது மற்றொரு பொருளைத் தாவிப்பிடித்துப் பிறாண்டி ஊன்றிக் கடித்து, பின்பு தப்பித்துக்கொள்ளும்படி விரைந்து ஓடும். பூனைகள் விழித்துக்கொண்டிருக்கும் பொழுது, முன்காலை ஊன்றி நிமிர்ந்து குந்திக்கொண்டு, நாலு காலின் அடிகளையும் ஒருமிக்க வைத்து அவைகளை வாலாற் சுற்றியிருக்கும். பூனைகளுக்கு வேண்டிய அளவு உணவைக் கொடுத்தாலும், அவைகள் மனிதர் கையில் அகப்படாமல் தப்பித்துக்கொள்ளக்கூடிய சமயம்பார்த்து உணவுகளைத்

திருடுவது வழக்கம். அவைகள் ஒன்றோடொன்று சண்டைபண்ணும்பொழுது, அதிக மூர்க்கங்கொண்டு, ஒன்றையொன்று பிறாண்டி உறைக்கக் கடிக்கும். கோபம் உண்டாகும்பொழுது, அவைகள் தங்கள் முதுகை உயர்த்திப் பல்லைக்காட்டிச் சீறும்.

இரை.

காட்டுப்பூனைகள் மாமிஸமாத்திரம் தின்னும். வீட்டுப்பூனைகளோ மாமிஸம், சோறு, ரொட்டி இவைகளெல்லாம் தின்னும். அவைகளுக்குப் பாலின்மேல் அதிக விருப்பம். வண்டுமுதலிய ஜெந்துக்களையும் அவைகள் பட்சிக்கும். நாய்களைப்போலப் பூனைகளும் அப்போதப்போது வாந்திசெய்யும்படி புல்லைத் தின்னும். அவைகள் தாகமாயிருக்கும்பொழுது, நாவினால் நக்கித் தண்ணீர் குடிக்கும்.

குட்டி.

பூனைகள் வருஷத்திற்கு இரண்டு மூன்று தரம் நாலு குட்டிமுதல் ஆறு குட்டிவரையிற் போடும். பூனைக்குட்டிகள் ஒன்பது நாள்வரையிற் கண்திறவாதிருக்கும். ஆண்பூனைகள் இளங்குட்டிகளைப் பட்சிப்பதுண்டு. ஆதலால் பெண்பூனைகள் ஆண்பூனைகளுக்குத் தெரியாத ஒதுக்கிடம் தேடிப்போய்க் குட்டிபோடும். பூனை தன் குட்டிகளுக்குச் சில வாரமட்டும் பால்கொடுக்கும். அவைகள் மாமிஸம் தின்று சீரணிக்கத்தக்க பருவமுடையவைகளாகும்போது, தாய்ப் பூனை அவைகளுக்குச் சுண்டெலிகளையும் சிறு குருவிகளையும் பிடித்துக்கொடுக்கும். பூனைக்குட்டிகள் கொஞ்சம் குறையப் பதினெட்டு மாசத்திற்குள்ளாகப்

பூரணமான அளவிற்கு வளரும். குட்டிபோட்டிருக்கிற ஒதுக்கிடத்தை ஆண்பூனை கண்டதென்று பெண்பூனை அறிந்தால், அல்லது வேறு வழியாய் அதற்கு எதாவது சங்கடம் நேரிட்டால், அது தன் குட்டிகளை ஒவ்வொன்றாய் அங்கிருந்து வாயினாற் கவ்வி எடுத்து,மற்றொரு இடத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கும். பூனைகள் தங்கள் குட்டிகளை ஒரு இடத்தினின்று மற்றிடத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கின்ற விதம் மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது. தாய்ப் பூனை முதலில் வாயினாற் கவ்வி எடுப்பதற்கு எத்தனமாகத் தன் குட்டிகளில் ஒன்றின் கழுத்தில் நக்கிப் பதப்படுத்தி, பின்பு அது வருத்தம் உறாமலும், கீழே விழாமலும் இருக்கத்தக்கதாக அதைக் கவ்வும். பின்பு குட்டி நிலத்தில் உரைஞ்சாதிருக்கும்படி தலை நிமிர்ந்து தூக்கிக்கொண்டு ஓடும். கொண்டுபோய் அதை ஒரு வசதியான இடத்திற் சேர்த்துவிட்டு, பின்பு அவ்வாறே மற்றக் குட்டிகளையும் கொண்டுபோய்ச்சேர்க்கும். பூனைகள் எவ்வாறாவது தங்கள் குட்டிகளை இழந்துபோனால், மற்ற மிருகங்களின் குட்டிகளை எடுத்துப் பால்கொடுத்து வளர்ப்பதுண்டு. பொதுவாகப் பூனைகள் தங்கள் குட்டிகளைக் கருத்தாய்ப் பராமரித்தும், சிலவேளை மிகுந்த குரூரமாய்ப் பட்சிக்கும். பூனைக்கு வயசு சாதாரணமாய்ப் பத்து, அல்லது பன்னிரண்டு. சில பூனைகள் பதினேழு, இருபது வயசுக்கும் இன்னும் அதிகமான வயசுக்கும் இருக்கிறதுண்டு.

பூனையானது வீட்டுக்கு உபயோகமான மிருகம்.

உபயோகம். அது மாமிசபோசனத்திற் பிரியமாய், சில சிறு மிருகங்களைத் தனக்கு இரையாகக் கொல்வதினால், அது மனிதருக்கு மிகுந்த உபயோகமுள்ள மிருகமாம். வீட்டில் அதற்கு வேண்டிய அளவு இரைகொடுத்து மிகவும் அருமையாய் வளர்த்தாலும், அது இராத்திரிகாலங்தோறும் எலிகளும் சுண்டெலிகளும் வருகின்ற இடங்களில் திரிந்து, அவைகளை நாசப்படுத்தும் வழக்கத்தை ஒருபொழுதும் விடாது. ஆதலால் திரளாய்ப் பெருகி, உக்கிராணத்திலுள்ள பண்டங்களையும், வீட்டுச் சாமான்களையும், வஸ்திரங்களையும் கடித்துக் கெடுதிசெய்கிற எலி, சுண்டெலி முதலிய சிறு நாற்கால் மிருகங்கள் இவ்விதமாய்க் குறைக்கப்படுவதினால், அவைகள் மூலமாய் மனிதருக்கு உண்டாகும் கெடுதிகள் நீங்கும்.

பூர்வகாலத்தில் எகிப்துதேசத்திலே எண்ணிறந்த

கதைகள். எலிகளும் சுண்டெலிகளும் இருந்தன. அவைகளினிமித்தம் மனிதருக்கு நேரிட்ட கெடுதிகளை விலக்குவதில் பூனைகள் மிகுந்த உபயோகமுடையவைகளாயிருந்ததினால், அங்குள்ள மனிதர்கள் பூனைகளை அதிகமாய் மதித்துப் போற்றிவந்தார்கள். வீட்டில் ஒரு பூனை இறந்தால், அந்த வீட்டுக்காரன் அதற்காகத் துக்கங்கொண்டாடி, துக்கக் குறியாகத் தன் கட்புருவத்தின் உரோமங்களைச் சவரம்பண்ணிக்கொள்வான். எவனாவது வகைமோசமாய் ஒரு பூனையைக் கொன்றால்,

அவன் மூர்க்கமுள்ள சண்டாளர் கையில் ஒப்பிக்கப்பட, அவர்கள் அவனை அடித்துக் கொல்வார்கள். அங்கே பூனைகளுக்கு இத்தனை வழிபாடுகள் நடந்தன. இறந்தபின்னும் அவைகளுடைய பிணம் கந்தவாக்கம் இட்டுப் பிரேதாலயங்களில் அடக்கம் பண்ணப்பட்டது. பூர்வகாலத்திலே பாரசீக அரசன் ஒருவன் எகிப்துதேசத்தாருடன் சண்டைசெய்து, அவர்களை நெடுநாள்வரையில் வெல்வதற்குச் சக்தியற்றவனுயிருந்தான். அப்படி இருக்கையில், அவன் அவர்கள் பூனைகளுக்குப் பூசனைசெய்துவருவதை அறிந்து, தன் பட்சத்திலுள்ள படைவீரர் கையில் இருந்த கேடையத்தை வாங்கி, அதற்குப் பதிலாய்க் கையில் வைத்திருக்கும்படி ஆளுக்கொரு பூனை கொடுத்தான். அப்பொழுது எகிப்திய இராணுவவீரர்கள் பூனைகளைக் கொன்று தெய்வத்துரோகிகளாவதிலும், சத்துருக்கள்கையில் அகப்படுவதே உத்தமமென்று எண்ணித் தங்கள் ஆயுதங்களைத் தரையிற் போட்டுவிட்டார்கள். இப்பொழுது எகிப்துதேசத்திலே பூனைகள் பூசனை செய்யப்படுகிறதில்லை: ஆயினும் இப்பொழுதும் அத்தேசத்து ஜனங்கள் பூனைகளைத் தங்கள் வீடுகளில் பத்திரமாய்ப் பராமரித்துவருகிறுர்கள்.

மகமது என்பவனும் பூனைகளை அதிகமாய்ப் போற்றினுன். சென்ற நூற்றுண்டின் பாதியில் ஐரோப்பியன் ஒருவன் எழுதியிருக்கிறதாவது—“நான் சீரியாதேசத்திலுள்ள தமஸ்கு நகரத்திற்குப் போயிருந்தபொழுது, அங்கே பூனைகளுக்காக ஏற்படுத்தப்பட்

டிருந்த பெரிய வைத்தியசாலை ஒன்றைக் கண்டேன். அதைச்சூழ மதில் எடுக்கப்பட்டிருந்தது. அதில் பூனைகள் நிறைந்திருந்தன. அந்த அதிசயமான ஏற்பாட்டின் காரண காரியத்தைப்பற்றி விசாரணை செய்தபொழுது, மகமது முற்காலத்தில் ஒருமுறை அங்கே வாசமாயிருந்தபோது, ஒரு பூனையைக் கொண்டுபோனான். அதைத் தன் அங்கியின் கையுறைக்குள் வைத்துக்கைத்தீன்கொடுத்துப் பத்திரமாய்ப் பராமரித்தான். ஒரு நாள் அந்தப் பூனை தன் கையுறைக்குள் தூங்கும்பொழுது, அதை எழுப்பித் தொந்தரவு செய்யாதபடி தன் கையுறையை அறுத்துப்போடுவதே உத்தமமென்று நினைத்து அவன் அப்படியே செய்தான். ஆதலால் அதுமுதல் அங்கிருந்த மகமதியர்களனைவரும் பூனைகளிடத்தில் மிகுந்த பக்தியுள்ளவர்களாய் அவைகளைக் கனம்பண்ணி, அவைகளுக்கு மேற்சொல்லியவாறு தருமசகாயம் செய்து ஆதரித்துவந்தார்களென்று கேள்விப்பட்டேன்" என்பதே.

கிறேக்கதேசத்தை அடுத்த சில தீவுகளிலுள்ளவர்கள் சர்ப்பங்களை நாசப்படுத்தும்படி பூனைகளை வளர்த்துவருகிறார்கள். சில தேசங்களில் பூனைத்தோல் விசேஷமான வியாபாரப்பொருளாக வழங்கும். ஐரோப்பா, ஆசியா என்னும் தேசங்களின் வட பாகங்களிலிருந்து திரளான பூனைத்தோல் பிற தேசங்களுக்கு வியாபார முகாந்தரமாய் ஏற்றப்... டும். ருஷியர் அவைகளைத் தங்கள் அயல்தேசத்தார்களுக்கு விற்பதுமல்லாமல், சீனதேசத்திற்கும் திர

ள்திரளாய் அனுப்புவார்கள். பட்டுப்போல் மிருதுவாயிருக்கின்ற அங்கோரா ஊர்ப்பூனையின் வெள்ளை ரோமத்தால் ஒரு வகை மெல்லிய வஸ்திரம் நெசவு பண்ணப்படுகின்றது. அது மிகுந்த சிறப்பும் மென்மையுமுள்ளதாயிருப்பதினால், ஆசியாவில் எங்கும் வியந்துகொள்ளப்படுகின்றது. சில தேசத்தவர்கள் பூனையின் இறைச்சியைத் தின்பார்கள். சீனரும் சில காப்பிரிச்சாதியார்களும் அதை அதிக ருசிகரமானதென்று எண்ணுகிறார்கள்.

ஒரு முறை சிறு முயற்குட்டி ஒன்றை அங்கிலோ துரை ஒருவரிடத்தில் யாரோ கொண்டுபோய்க் கொடுக்க, அதற்கு அவருடைய வேலைக்காரர் கரண்டியிற் பால்கொடுத்துவளர்த்தார்கள். அக்காலத்தில் அவர் வீட்டில் இருந்த ஒரு பூனை குட்டிபோட்டது. அதின் குட்டிகள் ஜலத்தில் முழுகி இறந்துபோயின. பின்பு அந்த முயற்குட்டி காணமற்போயிற்று. அதை நாயாவது, பூனையாவது பட்சித்ததென்று அங்குள்ளவர்கள் நினைத்தார்கள். ஏறக்குறைய இரண்டு வாரம் சென்றதின்மேல் ஒரு நாள் மாலைநேரத்தில் மேற்படி துரை தமது தோட்டத்தில் உட்கார்ந்திருக்கையில், அவர் வளர்த்த பூனை தன் வாலை உயர்த்தி, குட்டிகளைக் கூவி அழைக்கும் பாவனையாகச் சீராட்டான சிறு சத்தம் பண்ணிக்கொண்டு அவருக்கு எதிரே போயிற்று. அதின்பின்னே முன் காணமற்போன முயற்குட்டி துள்ளி ஓடிற்று. அதை அந்தப் பூனை அன்பாய் ஆதரித்து அதற்குத் தன் பால்கொடுத்து வளர்த்ததாகத்

தெரியவந்தது. மாமிசபட்சிணியாகிய மிருகம் திருணபட்சிணியாகிய ஒரு மிருகத்திற்குப் பால்கொடுத்துவளர்த்ததற்கு இது ஒரு திருஷ்டாந்தம்.

பின்பு ஒரு முறை பையன் ஒருவன் மூன்று அணிற்குஞ்சுகளைக் கூட்டிலிருந்து பிடித்து மேற்படி துரையிடத்திற் கொண்டுபோய்க் கொடுத்தான். அவர் அவைகளை வாங்கிக் கொஞ்சக் காலத்திற்கு முன் தன் குட்டிகளை இழந்துபோன ஒரு பூனையிடத்தில்விட்டார். அந்தப் பூனை அவைகளைத் தன் சொந்தக்குட்டிகளைப்போலப் பாவித்துப் பால் கொடுத்துப் பராமரித்தது. அதைக் கேட்டு அனேகர் மிகுந்த ஆச்சரியமுள்ளவர்களாய், அந்த அணிற்குஞ்சுகள் பூனையிடத்திற் பால்குடிப்பதைப் பார்க்கும்படி போனபொழுது, அந்தப் பூனை தான் வளர்க்கிற குஞ்சுகளுக்கு அவர்கள் ஏதாவது அபாயஞ்செய்வார்களென்று பயந்து, அவைகளைக் கௌவி எடுத்துப் போய்,மனுஷர் போக்குவரவு செய்யாத ஓரிடத்தில் வைத்தது. அவைகளில் ஒன்று அங்கே இறந்துபோயிற்று.

மேலும் இரண்டு முயற்குட்டிகளை யாரோ ஒரு பூனையினிடத்தில் அது பட்சிக்கும்படி எறிந்துவிட, அது அவைகளை எடுத்துப் பால்கொடுத்து வளர்த்ததென்பதாக ஒரு கதை சொல்வார்கள்.

பொதுவாய்ப் பார்க்கும்பொழுது, பூனைகள் மனிதரிடத்திற் பட்சமுள்ளவைகளாயிருப்பதைப் பார்க்கிலும், தாங்கள் வாசமாயிருக்கும் இடங்களில் அதிக

பட்சமுள்ளவைகளாயிருக்கும். ஆயினும் அவைகள் மனிதரிடத்திலும் அதிக சார்புடையவைகளாயிருப்பதுண்டு. அதை இதின் அடியில் வரும் கதையில் அறியலாம்:—லந்தன் நகரத்திற்குச் சமீபத்தில் வாசமாயிருந்த ஒரு துரையிடத்தில் அழுக்காமையோட்டுவர்ணமுள்ள பூனே ஒன்று இருந்தது. அதற்கு அவர் ஒருபொழுதும் கைத்தீன் கொடுத்ததுமில்லே, அதைக் கவனமாய்ப் பார்த்ததுமில்லே. அப்படி இருந்தும், ஒரு நாய் தன் எசமானிடத்தில் எவ்வளவு பட்சமாயிருக்குமோ, அவ்வளவு பட்சம் அந்தப் பூனேயும் அவரிடத்தில் காட்டியது. அவர் எங்கேயாவது வெளிப்பட்டுப்போயிருந்து வீட்டிற்குத் திரும்பிவருகையில், வேலேக்காரன் வந்துகதவு திறக்கும்படியாக மணி அடிப்பது வழக்கம். அப்பொழுது அவர் மணியடிக்கிற சத்தத்தை அது பகுத்தறிந்து, வேலேக்காரன் வருமுன்னே ஓடிவந்து, அவருடைய காலில் உராஞ்சிக்கொண்டு நின்று, அவர் அறைக்குட் சென்றதின்மேல் தான் வெளியே போகும். அந்தப் பூனே மிகுந்த முயற்சியுள்ளதாயிருந்தது. அது இராத்திரிகாலத்தில் குருவி பிடிக்கப் போவது வழக்கம். அந்தத் துரை எப்பொழுதும் அதிகாலேயில் எழுந்து தோட்டத்தில் உலாவும்படி வாசலில் வருகையில், அது அவரைக் காத்துநின்று, அவருடன் போய் மரங்களில் ஏறுவதும், இறங்குவதும், துள்ளிவிளேயாடுவதுமாயிருக்கும். அவர் பகற்காலத்தில் தமது அறையில் எழுதி வாசித்துக்கொண்டிருக்கும்போது, அது பலமுறை

அவ்விடத்திற்குப் போகும். அவர் தன்னைக் கருத்தாய்ப் பார்க்கிறவரையில் அது அவருடைய காலில் உரைஞ்சிக்கொண்டிருக்கும். பின்னும் பாராதிருந்தால், எழுதுகிற பீடத்தின்மேல் ஏறி அவருடைய தோளின்மேல் மெல்லென முட்டும். அதற்கும் திரும்பிப்பாராதிருப்பாரானால் அவருடைய கன்னத்திலே தட்டும். அவர் அதைக் கவனித்து அதின் காலைப் பிடித்துத் தள்ளிவிட்டால், அல்லது அதின் தலையை இரண்டொரு முறை தடவினால், உடனே அது குறிப்பு அறிந்து வெளியே போய்விடும். அவர் வியாதியாயிருக்கும்பொழுது, அது அவருடைய அறைக்குள்ளே பல தரம் போய், அங்கே நெடுநேரம் நில்லாமல் வெளியே வந்துவிடும். வீட்டார் போசனம்பண்ணுகிற வேளையில் அது அவர்கள் சமுகத்தில் ஒருபொழுதும் போகிறதில்லை. இவ்வாறு அது தன் நயத்திற்காகத் தன் எசமானிடத்தில் பட்சத்தைக் காட்டவில்லையென்பது தெரிகின்றது. இப்படியெல்லாம் நடப்பதற்கு அதற்கு ஒருவரும் வழக்கப்படுத்திவைக்கவில்லை.

இன்னும் ஒரு கதை இதின் அடியில் வருகின்றது. அதை வாசிக்கிறவர்களெல்லாரும் மனதுருகுவார்கள். துரைசானி ஒருத்தி ஒரு பூனை வளர்த்து அதனிடத்தில் அதிக பட்சமுள்ளவளாயிருந்தாள். அது அவளைக் காக்கும்படி எப்பொழுதும் எத்தினமாயிருக்கிற ஒரு ஏவலாளைப்போல இடைவிடாமல் அவள் பாதத்தினிடத்தில் படுத்திருக்கும். தன் ஏசமாட்டி வளர்த்த பட்சிகளை அது ஒருபொழு

தும் தொடுகிறதில்லை. அவள் தவிர மற்றெவர்களாவது தீன்கொடுத்தால், அது தின்கிறதில்லை. தன்னைச் சீராட்டுப்பண்ணுவதற்கு வேறொருவர்க்கும் இடங்கொடுக்கிறதும் இல்லை. அந்தத் துரைசானி இறந்தபொழுது அவள் அறையிலிருந்து அந்தப் பூனையைப் பிடித்து வேறு எங்கேயோ கொண்டுபோய் விட்டார்கள். மறு நாட்காலையில் அது அங்கே திரும்பிப் போய், அவளுடைய கட்டிலின்மேல் பாய்ந்து, நாற்காலியில் உட்காந்து, வஸ்திர பீடத்தின்மேல் துக்கத்துடன் மெல்லென நடந்து, இறந்துபோன தன் எசமாட்டியை நினைந்து புலம்புகிற பாவனையாக, அதிக பரிதாபமாய் அழுதது. அவளுடைய பிரேதம் அடக்கம்பண்ணப்பட்டபின்பு, அதை அந்தக் கல்லறையின்மேல் செத்துக்கிடக்கக் கண்டார்கள். அந்தப் பட்சமுள்ள மிருகம் தன் எசமானி இறந்த துக்கத்தினாலேதான் இறந்தது.

## பன்றி.

எத்தேசங்களில் உள்ளது.

பெரும்பாலும் காட்டுப்பன்றி ஐரோப்பாதேசத்தில் பல இடங்களில் உண்டாயிருந்தும், பிரித்தானிய தீவுகளிலும் பால்த்திக்கடலின் வடதிசையிலுள்ள நாடுகளிலும் இல்லை. ஆசியாகண்டத்தின் அதிகமான இடங்களில் அங்கங்கே சஞ்சரிக்கிறது. இந்தியாவில் அது சாதாரணமாய் உண்டு. மேலும் ஆபிரிக்

காகண்டத்திலுள்ள பார்பரி நாட்டின் கரையிலும் தென்னமெரிக்காவின் வனங்களிலும் அதைக் காணலாம். சாதுவான நாட்டுப் பன்றிகள் பூமியின் சிதளமண்டலத்தைச் சார்ந்த தேசங்களிலும், குளிரிருந்த ஸிபேரியாதேசத்தின் கிழக்குக் கரையிலுள்ள கம்ஸ்கற்காநாட்டிலும், வேறு சில இடங்களிலும் தவிர, மற்றெங்கும் உண்டு.

பன்றி மிகவும் அவலட்சணமான தோற்றமுள்ளது.

சாயல்.

அதின் உடல் பருத்து அந்தக்கேடுள்ளதாயிருக்கின்றது. அதற்குச் சாங்கமற்றுக் குறுகியிருக்கின்ற கால்களும், விரிந்த குளம்புகளும் இருக்கின்றன. அதின் கழுத்துக் குறுகிப் பருத்திருக்கும். தலை தடித்துச் சிறப்பற்றிருக்கும். மூஞ்சி நீண்டு முனையில் மொட்டையாயிருக்கும்.

காட்டுப்பன்றிக்குச் செவி குறுகிச் சற்றே வட்டமாயிருக்கும். நாட்டுப்பன்றிக்கோ அது நீண்டு கூர்முனையுள்ளதாய்க் கீழே கவிந்திருக்கும். ஆண் பெண் ஆகிய இருவிதப் பன்றிகளுக்கும் சாதாரணமாயுள்ள பற்கள் தவிர, ஆண்பன்றிகளுக்கு மேல்வாயில் இரண்டும், கீழ்வாயில் இரண்டுமாக நாலு விசேஷமான பற்கள் உண்டு. அந்தப் பற்கள் நாலும் நீண்டிருக்கும். அவைகளில் கீழ்வாய்ப் பற்கள் இரண்டும் அதிகம் நீண்டு வாய்க்குப் புறம்பே மேல்நோக்கி வளர்ந்திருக்கும். பன்றியின் கண் மிகவும் ஆழ்ந்து சிறுத்திருக்கும். அது தூக்கமும் சுவரணைக் கேடுமுள்ளதாகத் தோன்றும். பன்றியின் உரோமம்

விறைப்பாயிருக்கும். அதற்குச் சிலிர்த்த உரோமம் என்று பெயர். மற்றனேக மிருகங்களைப்போலப் பன்றிக்கு உரோமம் அடர்த்தியாய் வளருகிறதில்லை. சீனதேசத்துப்பன்றிக்கு முதுகில் உரோமம் சற்று வது இல்லை. அதின் வயிறு கொஞ்சம் குறையத் தரையில் முட்டத்தக்கதாகத் தாழ்ந்திருக்கும். காட்டுப்பன்றி பெரும்பாலும் இருண்டு இடைக்கிடை நரைத்த கபிலவர்ணமுள்ளது. சில பன்றிகள் இளங் கறுப்பு நிறமுள்ளவைகளாயிருப்பதுமுண்டு. நாட்டுப்பன்றிகள் சாதாரணமாய் அழுக்கு அடைந்த கறுப்பு நிறமுள்ளவைகள்.

குண விசேஷங்கள்.

பெரும்பாலும் நாட்டுப்பன்றி துஷ்டத்தனமுள்ளதல்ல. அது ஒருவருக்கும் இடர் செய்கிறதில்லை. மிகவும் நீண்டு பலத்திருக்கின்ற வக்கிரதந்தங்களையுடைய காட்டுப்பன்றியோ, துஷ்டத்தனமும், மூர்க்கமுமுள்ளது. அது யாருக்கும் அஞ்சுகிறதுமில்லை; தன் சத்துருவுக்குப் புறங்காட்டுகிறதுமில்லை. ஆகிலும், அதற்கு ஆராவது கோபம் மூட்டினலொழிய, அது தானக ஒருவர்மேல் பாய்கிறதில்லை. பெண் பன்றி தன் குட்டிகளுக்கு ஆராவது அபாயம் செய்யக்கண்டால், அதிக உக்கிரத்துடன் அவைகளைக் காத்துக்கொள்ளும். நாட்டுப்பன்றியைப்போல அழுக்குள்ள மிருகம் வேறு இல்லை. சேற்றிலே புரளுவது அதன் சுபாவம். அது அதிக மந்தமும் சோம்பலுமுள்ளது. தின்பதும் தூங்குவதுமே அதற்கு வேலை. அது அழுகித் துர்க்கந்தம் வீசுகிற எந்தப்

பதார்த்தங்களையும், நரகலையும் ஆவலுடன் தின்னும்; புல்வகைகளிலோ மிகவும் சுசிகரமானவைகளைமாத்திரம் தெரிந்துமேயும். சில காலங்களில் பன்றி தன் குட்டிகளைப் பட்சிப்பதுமுண்டு. காட்டுப்பன்றிகள் தம்மைப் பிடிக்கும்படி வேட்டைக்காரனும் நாய்களும் மிகவும் தூரத்தில் வருகிறபோதே மணம் அறியும். பன்றிகளுக்குப் பருத்த உரோமமும் தடித்த தோலும் இருப்பதால், பரிசவுணர்ச்சி சற்றே குறைவுதான். பன்றி பல குட்டி போடும்.

வளர்ந்த பன்றியின் சத்தத்திற்கு உறுமுதல் என்றும், குட்டிப்பன்றியின் சத்தத்திற்குக் கீச்சிடுதல் என்றும் பெயர்.

பொதுவாகப் பன்றிகள் மந்தகுணமுள்ளவைகளாயிருந்தும், சில பன்றிகளிடத்தில் சொற்ப புத்தி உண்டென்று காணப்படுகின்றது. புத்தியுள்ள நாய்களைப்போல வேட்டைக்காரனுக்கு வன மிருகங்களைக் காட்டிக்கொடுக்கவும், எழுத்துகளை இன்னின்னதென்று தொட்டுக்காண்பிக்கவும் சில பன்றிகள் வழக்கம்பண்ணப்பட்டதுண்டு.

வழக்கங்கள்

காட்டுப்பன்றிகள் காடுகளிற் சஞ்சரிக்கும். அவைகள் சிறு பருவமாயிருக்கும்பொழுது, கூட்டம் கூட்டமாய் ஓரிடத்திற் சேர்ந்திருக்கும். அவைகளுக்கு மனிதராலாவது, மிருகங்களாலாவது அபாயம் நேரிட்டால், அதை விலக்கும்பொருட்டாக, அவைகளுக்குள்ளே பெரியவைகளும் அதிக பலமுடையவைகளுமாகிய பன்றிகள் சிறியவைகளும் பலமற்றவைகளுமாகிய

பன்றிகளைத் தங்கள் கூட்டத்திற்குள்ளே இருக்க விட்டு, தாங்கள் அவைகளை வளைந்து எதிரிக்கு முற்பட்டிருக்கும். பன்றிகள் போதுமான வயசுள்ளவைகளாகும்பொழுது, அச்சமின்றித் தனித்து அங்கங்கே திரியும். தங்களோடு எதிர்க்கிற சத்துருக்களுடைய உடலைப் பருத்த வக்கிரதந்தங்களாற் குத்திக் கிழிக்கும். பெரும்பாலும் பன்றிகள் பகலில் மரம் செடி அடர்ந்த காடுகளுக்குள் தங்கி, இரவிலே வெளிப்பட்டு இரைதேடும். பூமிக்குள் மறைந்திருக்கின்ற கிழங்கு முதலானவைகளை அவைகள் தங்கள் உரத்த மூஞ்சியினால் கிண்டித் தின்னும். விசேஷமாய்க் கரும்பு முதலிய வயற்பயிர்களை அவைகள் அதிகமாய்ச் சேதப்படுத்துவதுண்டு. ஆபிரிக்கா தேசத்துப் பன்றி எத்தியோப்பியபன்றி என்னப்படும். பயிர் செய்யப்படாமல் வெறுங்காடுகளாயிருக்கிற அதிக உஷ்ணமான இடங்களில் அது சஞ்சரிக்கின்றது. அதை ஸெனிகாநாடுதொடங்கிக் கங்கோ நாடுபரியந்தமும், மதகாஸ்கர் தீவிலும் காணலாம். அந்தப் பன்றி அதிக மூர்க்கமும், துஷ்டத்தனமுமுள்ளது. அது அசுப்பிலே அங்குள்ள ஜனங்கள் மேற் பாய்ந்து அவர்களைத் தன் வக்கிரதந்தங்களினாற் குத்திக் காயப்படுத்துவதுண்டு: ஆதலால் அவர்கள் அது சஞ்சரிக்கிற இடத்திற்குப் போகிறதேயில்லை. அந்தப் பன்றிகள் தங்கள் காலினாலும் மூஞ்சியினாலும் பூமியில் அகழ்கிற நிலவறைகளே அவைகளுக்கு முக்கியமான இருப்பிடம். ஐரோப்பா தேசத்தில் அதிக குளிர் உண்டாயிருக்கும்பொழுது,

அங்கே வீசுகிற குளிர் காற்றைச் சகிக்க ஆற்றாமையினால், அங்குள்ள பன்றிகள் வைக்கோல் தேடி வாயிற் கவ்விக் கொண்டுவந்து, தங்கள் கூட்டாளிகளை மேன்மேலும் கூவி அழைத்து, எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து தங்களுக்கு உஷ்ணமான படுக்கைகளை உண்டு பண்ணுவது வழக்கம். நாட்டுப்பன்றிகளில் ஒன்றுக்கு வருத்தமாவது, அபாயமாவது நேரிடும் காலத்தில் மற்றவைகள் தாமதமில்லாமல் ஓடி அதற்குச் சகாயம்பண்ணுவதினால், அவைகள் ஒன்றுக்கு ஒன்று அனுதாபமுள்ள சாதியென்பது தோன்றும். ஒரு கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பன்றி வருத்தப்பட்டுத் தன் வருத்தத்தைக் கூவித் தெரிவிக்குமானால், அதின் சத்தம் எட்டத்தக்க தூரத்தில் நிற்கிற மற்றப் பன்றிகள் எல்லாம் நொடிக்குள்ளே பறந்தோடிப் போய் அதற்குச் சகாயம்பண்ணும். ஒரு முறை நாயொன்று சில பன்றிகளை அலைக்கழித்தபோது, அவைகளெல்லாம் அதைச் சூழ்ந்து நெருங்கி அதின் மேற்பாய்ந்து கொன்றுபோட்டனவென்பதாக ஒரு கதை சொல்வார்கள்.

இரை.

பன்றிக்கு முக்கியமான இரை புல் பூண்டுகளும் கிழங்குவர்க்கமுமாம். கிழங்குகளை அது தன் மூஞ்சியாற் கிண்டித் தின்னும். அல்லாமலும் மேற்சொல்லியபடி அழுகி நாற்றம் எடுக்கிற பிணங்களும் நரகலும் அதற்கு உவப்பான தீனிகளாம். சமுத்திராதீவிலே ஒருவிதப் பன்றி உண்டு. அது அடர்ந்து படர்ந்திருக்கின்ற செடிகளும் சதுப்பு நிலமும் அதிகமாயுள்ள கடற்

களைகளுக்கு அடிக்கடி போய் நண்டுகளைப்பிடித்தும், பலவகைக் கிழங்குகளைக் கிண்டியும் தின்னும். பன்றிகள் எவ்வளவு தின்றாலும் அவைகளுக்கு அலுப்பு உண்டாகிறதில்லை. அதின் முகாந்தரம் என்னவென்றால் அவைகள் அதிக சீரணசக்தியுடையவைகளாயிருப்பதும், அவைகளுடைய இரைப்பை மிகுந்த இரையைக் கொள்ளும்படி பருத்திருப்பதுந்தான். அவைகள் இரத்தம் குடிப்பதில் அதிக பிரியமுள்ளவைகள். அவைகள் குழந்தைப்பிள்ளைகளைப் பட்சித்தனவென்பதற்குப் பல திருஷ்டாந்தங்கள் இருக்கின்றன. மேலும் சில பன்றிகள் ஆட்டின் இளங்குட்டிகளைப் பட்சிக்கிறதுமுண்டு. அவைகள் ஈரமான சில பதார்த்தங்களைத் தின்பதற்குமுன் அவைகளை நக்கி, பின்பு விழுங்கும். அல்லாமலும் ஒரு கூட்டத்திலுள்ள பன்றிகள் எல்லாம் புதிதாகக் கிண்டிக் கும்பாய்ப்போட்டிருக்கிற களிமண்ணைச் சூழ்ந்து நின்று, அதில் ஈரமாவது, பசையாவது எவ்வளவும் இல்லாதிருந்த போதிலும் அதை நக்குவதும் தவிர, சில பன்றிகள் அதிகமாய்க் கவ்வி விழுங்குகிறதும் உண்டு.

குட்டி.

பன்றி பெரும்பாலும் வருஷத்திற்கு இரண்டு தடவை குட்டி போடுகிறது. அது ஒரு தடவைக்குப் பத்து,பதினைந்து குட்டிபோடும். பதினேழு வருஷத்திற்கு அதிகமாகச் சீவனோடிருந்த பன்றியொன்று பல ஈற்று முறைகளில் முந்நூறு குட்டிவரையிற் போட்டது. பன்றிகள் அதிக காலத்திற்குச் சீவனோடிருக்கும்.

அவைகளுக்குச் சாதாரணமான வயது இருபது. சில பன்றிகள் இருபத்தைந்து முப்பது வயது பரியந்தம் இருந்ததுமுண்டு. பன்றிகள் ஐந்து ஆறு வயசுவரைக்கும் வளர்ந்து பலத்தில் அதிகரிக்கும். அவைகள் பருவத்தில் முதிரும்பொழுது அவைகளுடைய பற்கள் சிதைந்துபோகும். பெண்பன்றிகள் சினைப்படாதொழியும்.

உபயோகங்கள்.

பன்றி எத்தனை அழுக்கான தோற்றமுள்ளதாயிருந்தும், அது மனிதருக்கு உபயோகமுள்ளதாயிருக்கின்றது. பன்றி இறைச்சி ருசியுள்ளதும், தேகபலமும் புஷ்டியும் தருவதுமாயிருக்கின்றது. அது அதிகமாய் வேலைசெய்கிறவர்களுக்கு நல்ல போசனம். மற்ற மிருகங்களின் இறைச்சியைப்பார்க்கிலும் பன்றி இறைச்சியில் உப்பின் சாரம் நன்றாய் ஏறுவதாயிருப்பதினால் அது அதிக காலத்திற்குப் பதனழியாதிருக்கும். இதினிமித்தம் அது கப்பல் யாத்திரைகாரருக்கு முக்கியமான போசனபதார்த்தமாம். பன்றிக்கொழுப்புப் பல ஔஷதங்களில் உபயோகிக்கப்படுவதுமல்லாமல், வாசனைத்திரவியங்களிலும் கலக்கப்படும். அது தோலுக்கும் மாமிசத்திற்கும் இடையில் பன்றியின் சரீரமுழுவதும் தொடர்ச்சியான படைபோல் பரவியிருக்கும். பன்றிகள் அதிகமாய்க் கொழுப்பதினால், அவைகளுடைய கொழுப்பு மிகுந்த ஊதியம் உண்டாவதற்கு ஏதுவான வியாபாரப்பொருள் ஆகின்றது. மேலும் பன்றிகள் திரளாய் விர்த்தியாகிறதினிமித்

தம் பன்றியிறைச்சி மலிந்து விலைப்படுகின்றது. அங்கிலோதேசத்தில் வேலைசெய்து காலட்சேபம் பண்ணுகிறவர்களில் அனேகர் பன்றியிறைச்சிதவிர மற்றொரு இறைச்சியும் தின்கிறதில்லை. இறைச்சி மாத்திரமல்ல, கொஞ்சம் குறைய அதின் உறுப்புகள் எல்லாம் ஒவ்வொரு உபயோகமான விஷயத்திற் பிரயோகிக்கப்படுகின்றன. நேர்த்தியாகப் பதஞ்செய்யப்பட்ட பன்றித்தோல் சேணம் தைப்போர், புஸ்தகம் கட்டுவோர் முதலிய தோல்வினைஞருக்கு அவசியம் வேண்டும். பன்றிரோமத்தால் செய்த வர்ணம் பூசுங்கருவிகள் வர்ணக்காரருக்கு உபயோகமாகும். மேலும் அவைகளைச் சக்கிலியரும் வழங்குவார்கள். மத்தியதரைக்கடலிலுள்ள மினோர்க்கே தீவில் பன்றிகளை ஏரிற்பூட்டி உழுவார்கள். மேலும் அங்கே கழுதையையும் பன்றியையும் ஒரே ஏரிற்பூட்டி உழுவதும் வழக்கம். அவைகள் ஒன்றோடொன்று இணங்கி வேலைசெய்யும். அமெரிக்காதேசத்தில் அதிகமாயுள்ள கிலுகிலுப்பைப் பாம்பு முதலிய பாம்புகளைப் பன்றிகள் இடைவிடாமற் கொன்று தின்று அவைகள் தேசத்தினின்று ஒழியும்படி செய்வதினால், அத்தேசத்தவர்களுக்குப் பன்றிகள் மிகவும் உபயோகமுள்ளவைகளாயிருக்கின்றன. பாம்புகளினால் அந்தப் பன்றிகளுக்கு எவ்வளவும் வருத்தம் உண்டாகிறதாய்க் காணப்படவில்லை. அத்தேசத்தில் அங்கங்கே காட்டுப்பன்றிகள் உண்டு. அவைகளை அங்குள்ளவர்கள் வேட்டை யாடுவார்கள். இந்தியாதேசத்தில் வேட்டைக்

காரர் காட்டுப்பன்றிகளைத் தொடர்ந்து ஈட்டியாற் குத்திக் கொல்வதும், பொறிகளில் அகப்படுத்துவதும், படுகுழிகளில் விழுத்திப் பிடிப்பதும் வழக்கம்.

கதைகள். பன்றிகள் தங்கள் சாதியினிடத்தில் அநுதாபமுள்ளவைகள் என்பதை இதின் அடியில் வரும் கதையால் அறியலாம். ஆபிரிக்காதேசத்தின் மேற்குக் கரையில் வாசமாயிருந்த பிரான்சியதுரைமகன் ஒருவன் ஒரு புலி வளர்த்தான். அந்தப் புலியின் மூர்க்கத்தை அடக்கும்படி பலவிதங்களாய் அவன் தன்னுல் ஆனமட்டும் பார்த்தும் முடியவில்லை. அதிகம் பெரிதும் பலமுமுள்ள துஷ்டமிருகமாகிய அந்தப் புலியினிடத்திலே ஒரு பன்றியை விட்டால், அது தன் பிராணனைத் தப்பித்துக்கொள்ளமாட்டுமோவென்று அறியும்படி கருதி, அவன் ஒரு நாள் ஒரு கூட்டத்தில் நின்ற பன்றிகளில் ஒன்றைப் பிடிப்பித்து மற்றவைகளையெல்லாம் தூரமாய் ஓட்டிக்கொண்டு போகும்படி செய்து, அந்தப் பன்றியைப் புலியின் கட்டுத்தறிக்குச் சமீபத்தில் விட்டுப் புலியையும் கட்டவிழ்ப்பித்துவிட்டான். உடனே பன்றி அந்த இடத்தின் மூலைக்கு ஓடிப்போய்ப் பதுங்கிக்கொண்டு நின்றது. புலி நெடுநேரமளவும் காத்துக்கொண்டு நின்று, கடைசியில் பன்றிக்குச் சமீபித்து நெருங்கினதினல், அது பெருங்கூச்சலிட்டுக் குளறிற்று. முன்பு தூரமாய் ஓட்டிக்கொண்டுபோகப்பட்ட பன்றிக் கூட்டங்கள் சத்தம் கேட்டவுடனே விரைவாகத் திரும்பி, மிகுந்த

மூர்க்கத்துடன் புலியின்மேற் பாயும்படி எத்தினப் பட்டன. அது கண்டு புலி தன் சீவனைத் தப்பித்துக் கொள்ளும்பொருட்டாகப் பக்கத்தில் இருந்த மதிலைத் தாவி அப்புறத்தில் விழுந்தது.

## ஒட்டை.

எத்தேசங்களிலுள்ளது.

ஒட்டைகள் ஆதியில் அராபியாவின் பாலைவனங்களில் உற்பத்தியாகி, பின்பு வரவர ஆசியாவின் மற்ற இடங்களிலும், ஆபிரிக்காவிலும் விர்த்தியாயின. அரபி ஒட்டைக்கு முதுகில் ஒற்றைத் திமில் உண்டு. இந்த ஜாதி எவ்விடத்திலும் காட்டுத்தன்மையுள்ளதாயிருக்கிறதில்லை. பாக்திரியதேசத்தின் ஒட்டையோ, இரட்டைத்திமிலுள்ளது. அது தார்த்தாரிதேசத்தின் மேற்குப் பாகங்களிலும், இந்தியாவிற்கும் சீனதேசத்திற்கும் இடையிலுள்ள ஆசியாவின் சில வனங்களிலும் காட்டுத்தன்மையுள்ளதாகச் சஞ்சரிக்கின்றது.

கசு - வது. நூற்றாண்டில் நாட்டு ஒட்டைகள் ஸ்பானியதேசத்தின் தென் நாடுகளிற் சாதாரணமாய் இருந்தன. முரொக்கி மகமதியர்கள் அ-வது. நூற்றாண்டில் ஸ்பானியதேசத்தைக் கட்டிக்கொண்டபொழுதுதான் அவர்கள் முதல்முதல் அந்த மிருகத்தை ஆபிரிக்காதேசத்தினின்று ஸ்பானியாவிற் கொண்டுபோய் விட்டார்கள்: ஆகிலும் அத்தேசத்

தின் உஷ்ண-சீத சம்பந்தமான தன்மையும், நிலச்சு வாத்தியமும் அந்த மிருகத்திற்குத் தகாதவைகளா யிருந்ததினல், அது வரவரக் கேவலப்பட்டு, கடை சியில் ஒழிந்துபோயிற்று. ஐரோப்பாகண்டத்தில் இத்தாலிதேசத்திலுள்ள பீசாபட்டணத்தில் சென்ற இருநூறு வருஷகாலமாய் அரபி ஒட்டைகளை வளர்த்து வருகிருர்கள். அந்த நகரத்திற்குச் சமீபமான தரை மணற்பாங்கானது. அரபிதேசத்தில் இருப்பதுபோல, அங்கும் ஒட்டைகள் மேய்வதற்கு ஏற்ற முட்பூண்டு முதலான செடிகளுண்டு. எப்படி இருந்தும் அந்த ஒட்டைகளின் பூர்வச்சாயல் வரவர அதிகமாய் மாறுபடுகின்றது. அவைகள் ஆசியாவின் ஒட்டைகளைப்பார்க்கிலும் குறைந்த பலமும் வயசுமுடையவைகளாயிருக்கின்றன. ஆபிரிக்காவின் ஒட்டைகள் சில தென் அமெரிக்காவிலுள்ள அதிக உஷ்ணமான நாடுகளில் சென்ற நூற்ருண்டிற் கொண்டுபோய் விட்டு வளர்க்கப்படுகின்றன.

**தோற்றம்.** ஒட்டையானது ஒரு பெரு மிருகம். அது அடி தொடங்கித் தோள்வரைக்கும் பெரும்பாலும் ஆறு அடி உயரமுள்ளது. அதற்குத் தலை சிறுத்துச் செவி குறுகியிருக்கும். அதின் கழுத்து மெலிந்து வளைந்து நீண்டிருக்கும். அதின் உடல் நீண்டு மெலிந்த தோற்றமுள்ளதாகவும், கால்கள் மெல்லியவைகளாகவும் இருக்கும். அதின் பாதம் விசேஷ உருவமுள்ளதாய் அதிகம் அகன்றிருக்கும். அது ஒருவாறு யானையின் அடிபோலப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவின் நுனியிலும்

சிறிய குளம்புகள் இருந்தும், சிங்கமுதலானவைக ளின் விரல்போல அவ்வளவு அதிகமாய்ப் பிரிக்கப் படவில்லை. அதின் உள்ளங்காலே அதிக பலமும், வி றைப்பும், நீண்டு சுருங்கும் தன்மையுமுள்ள ஒருவ கைத்தோல் மூடியிருக்கின்றது. அதின் முன்காலி ன் முழந்தாளில் காலுக்கு ஒன்றும், முன்காலின் உட்புறத்தில் காலுக்கு ஒன்றும், பின்காலின் உட்பு றத்தில் காலுக்கு ஒன்றுமாகக் கடினமாய் விறைத் துச் சும்மாடுபோல் இருக்கிற இடங்கள் ஆறுண்டு. அதின்மார்பின் அடிப்புறத்திலும் விறைப்பான ஒரு ஸ்தானம் உண்டு. அது படுக்கும்பொழுது அந்த ஸ்தானத்தால் தரையில் ஊன்றிப் படுப்பது வழக்க மாயிருப்பதால், அது வரவர அதிக விறைப்புள்ள தாகின்றது. பாக்திரியாதேசத்திற் சஞ்சரிக்கிற ஒட் டைகளுடைய திமில்களில் ஒன்று சிறியது, மற்றது பெரியது. சிறியது தோளிலும், பெரியது, அதற்கு ப்பின்னே சற்றுத் தூரத்திலும் இருக்கும். அரபி ஒட்டைகளின் திமிலோ, கொஞ்சம் குறைய நடுமு துகில் இருக்கும். ஒட்டையின் உடலைச் சாம்பல் வர்ணமான உரோமம் மூடியிருக்கும். ஒரு வகையா னவெள்ளை ஒட்டைகள் சிபேரியதேசத்தின் சிலபா கங்களில் உண்டு. சாதாரணமாய் ஒட்டைகள் உரு வத்தில் அவலட்சணமானவைகள். சற்றுவது அந்த மில்லாதவைகள். அவைகளுடைய முதுகில் இருக் கின்றதிமில்களினால் அவைகள் அத்தனை அந்தக்கே டுள்ளவைகளாகத் தோற்றுகின்றன. அவைகளின் பார்வை அடக்கமும் சாந்தமுமாயிருக்கின்றது.

குணவிசேஷங்கள்.

ஒட்டையானது பொறுமை, படிவு என்னும் குணங்களினாலும், ஒருவாறு புத்தியினாலும் சிறந்தது. இந்த மிருகம் புல், பூண்டு, விருட்சம் சற்றும் இல்லாமலும், ஜலம் கிடையாமலும் இருக்கிற மணற்செறிவுள்ள பாலைவனங்களில் சஞ்சரிக்கும்படி சிஷ்டிக்கப்பட்டதினால், அது பசி, தாகம், வெப்பம், குளிர்முதலிய வருத்தங்களை எளிதிற் சகிக்கத்தக்கதாயிருக்கின்றது. அதின் பாதங்கள் வறண்ட தரையிலும், வெப்பமான கல் நிலத்திலும் மெல்லெனமிதிப்பதற்கு ஏற்றவைகளாய் உருவாக்கப்பட்டிருக்கின்றன. வனத்திலுள்ள மணல் சுழல்காற்றினால் அள்ளுண்டு எங்கும் சிதறப்படும்பொழுது, அது ஒட்டைகளின் நாசித்துவாரங்களுக்குள்ளே புகுந்து செல்லாதபடிக்கு, ஒட்டைகள் தங்கள் நாசித்துவாரங்களை இறுக்கி மூடிக்கொள்வதற்கான சக்தியுள்ளவைகளாயிருக்கின்றன. அவைகள் வாயிற்கவ்வி அப்போதப்போது மென்று விழுங்குகிற இரை, இரைப்பையிற் சென்று நெடுநேரமளவும் சீரணிக்காதிருக்கும், அவைகள் ஒரு மணிநேரத்திலே தின்னும் இரை அவைகளுக்கு ஒரு நாள்வரைக்கும்போதும். அவைகளின் இரைப்பை அத்தன்மையானது. மேலும் அவைகள் குடிக்கும் ஜலத்தைப் பழுதுபடாமல் பத்திரமாய் வைத்துக்கொள்ளும்படியான ஒருவித அறை அவைகளுடைய இரைப்பையில் இருப்பதினால், அவைகள் ஒரு கிணற்றினிடத்திற் சேர்ந்து தண்ணீர் குடித்துப் பிரயாணப்

பட்டால், மறு கிணறு எதிர்ப்படும்வரையில் ஏறக்குறைய இருநூறு மைல்தூரம் தளராமல் நடக்கும். ஒட்டைகள் பசியையும் தாகத்தையும் அதிகமாய்த் தாங்கும். ஆதலால் ஏழு, எட்டு நாள்வரையில் தண்ணீர் கிடையாமலும், நாலு, ஐந்து நாள்வரையில் இரை அகப்படாமலும் இருந்தாலும், அவைகள் வருத்தப்படுகிறதில்லை. மேலும் இப்படிப் பட்டினியாயிருக்கிற காலவரையில் பகலில் ஓரிடத்திலும் தங்கி நில்லாமல் அவைகள் ஒரே நடையாய்ச் செல்லத்தக்க பெலமும் முயற்சியுமுள்ளவைகளாயிருக்கின்றன. ஒட்டைகள் பளுவான சுமைகளை எடுத்துக்கொண்டு நெடுந்தூரமளவும் செல்லத்தக்கவைகள். ஒட்டைகள் அதனதன் பலத்துக்குத்தக்கதாக ௬00-௮00-௧,000 இருத்தல் நிறையுள்ள சுமைகளை எடுத்துக்கொண்டு, நாள் ஒன்றுக்கு ௩0-மைல் தூரம் நடக்கும். விரைவான நடையுள்ள ஒட்டைகளாகிய திராமிதரி என்பவைகள் நாள் ஒன்றுக்கு ௬0-மைல் முதல் ௯0-மைல் வரையில் பிரயாணம் போகும். ஒட்டை நடப்பது மற்ற நாற்கால் மிருகங்களைப்போல் அல்ல, அது வலப்புறத்து முன்கால் பின்கால்களை ஒன்றின் பின் ஒன்றாகவும், இடப்புறத்து முன்கால் பின்கால்களை ஒன்றின் பின் ஒன்றாகவும் தூக்கிவைத்து நடக்கும். அதின் பாதம் கடற்பஞ்சுபோல் மிருதுவாயிருப்பதினால், அது நடக்கும்பொழுது சத்தம் கேட்கிறதில்லை. அது நாயோட்டத்திற் போகும்பொழுது அடி எடுத்து வைப்பது, குதிரைகள் பெருநடையிற் போகும்பொழுது

அடி எடுத்து வைப்பதுபோல் இருக்கும். சீன தேசத்தில் ஒரு வகை ஒட்டைகள் இருக்கின்றன. அவைகள் மிகவும் அபூர்வமான விரைவுள்ளவைக ளாயிருப்பதினால் "வாயுவைப் பாதமாக உடைய ஒட்டைகள்" என்னப்படும். அவைகள் பாக்திரிய ஒட்டைகளின் இனத்தைச் சேர்ந்தவைகள். ஒட்டை கள் மிகுந்த அமைதியும் சாந்தமுமுள்ள பிராணி கள். அவைகள் ஏதும் விக்கினம் செய்கிறதில்லை. வீட்டில் வளர்க்கப்படும் இதரமான மிருகங்களு டன் மாறுபடுகிறதுமில்லை. அவைகள் பலமுறை யும் தங்கள் இரையை மறு மிருகங்கள் தின்னும்படி வந்தால், அவைகளைத் தின்னவிடுவதுமல்லாமல், தங் கள் வாயிற் கவ்வின இரையையும் அவைகள் பறித் துத் தின்னும்படி இடங்கொடுக்கும். மணல் செறிந் தபாலைவனங்களில் அவைகள் பிரயாணம்போகும் பொழுது, ஜலம் இரண்டு மைல் தூரத்துக்கு அப் புறம் இருந்தாலும் அதை அவைகளை ஓட்டிக்கொ ண்டுபோகிறவர்கள் அறிவதற்கு முன் அவைகள் வாசனையால் அறியும்.

வழக்கங்கள்.

ஆசியாவில் உஷ்ணம் சீதம் இரண்டும் மத்திமமா யுள்ள நாடுகளிற் சஞ்சரிக்கிற சொ ற்பத் தொகையான பாக்திரிய ஒட் டைகள் தவிர, மற்றெல்லா ஒட்டைகளும் பூர்வகா லம்தொடங்கி மனிதர் கைக்கீழ் அடிமைகளைப்போ ல இருந்து அவர்களுக்குத் தொண்டுசெய்துவந்த தினால், அவைகள் தங்கள் இயற்கையான காட்டுத் தன்மை மாறி அடங்கியிருக்கின்றன. ஆதலால்

காட்டொட்டைகளின் குணவிசேஷங்கள் இன்னவென்று தெரியவரவில்லே. காட்டொட்டைகளேக் காண்பது அரிது. அவைகள் சாதாரணமான நாட்டொட்டைகளேப்பார்க்கிலும் பெரியவைகளென்று சொல்லுகிருர்கள். இவ்வளவே தவிர, அவைகளேக் குறித்து வேருென்றும் தெரியாது. அரபி ஒட்டை வெப்பமான நாடுகளிலும், பாக்திரிய ஒட்டை வெப்பம் குளிர்மை இரண்டும் சமமான தேசங்களிலும் சஞ்சரிக்கும். அரபி ஒட்டை ஆசியா, ஆபிரிக்காதேசங்களின் உஷ்ணமான பாகங்களனைத்திலும் சஞ்சரிக்கின்றது. அது அனேக இடங்களில் காணப்படும். பாக்திரிய ஒட்டையோ அப்படியல்ல. ஒட்டையானது எவ்வித வருத்தங்களேயும் சகிக்கும்; எப்பொழுதும் திர்ப்தியுள்ளதாயிருக்கும்; அதிக சொற்ப உணவும் அதைத் தாங்கும்; அது தன் வேலேகளேப் பொறுமையுடன் செய்யும்; அது தன் பாகனுடைய சொற்படி முழந்தாளில் நின்று, தன் மேற் சுமை ஏற்றப்பட்டபின்பு சந்தோஷமாய் எழுந்து, பாகன் செலுத்திக்கொண்டுபோகும் இடமெல்லாம் செல்லும். அளவிற்கு அதிகமாயாவது, குறைவாயாவது பாரம் ஏற்றினல், அது தன் தலேயைத் தரையில் முட்டித் தன் பாரத்தைப் பாகன் கட்டித் தீர்க்கும்வரையில் பரிதாபமான விதமாய் அழும். காரணமில்லாமல் தண்டித்தால், அல்லது குரூரமாய் நடத்திஞல், ஒட்டையானது அதை மறவாமல் நினேவில் வைத்து, சமயம்பார்த்துப் பழிவாங்கும். ஒட்டைகளுக்கு உக்கிரம் உண்டாயிருக்கும்பொ

ழுது, அவைகள் மனிதனைப் பல்லாற் கடித்துத் தூக்கித் தரையில் வீசிக் காலால் உழக்குவதுண்டு. அவைகள் பழிவாங்கும்படி கருத்துள்ளவைகளாயிருந்தால், ஒரு முறை பழிவாங்கினதின்மேல் கோபத்தை மனதில் வைக்கிறதில்லை. தங்கள் பகை தீர்ந்ததென்று பாவித்த மாத்திரத்தில் அவைகளுடைய கோபம் தணிந்துபோம். இதை உணர்ந்து, தந்திரமுள்ள அராபியர் எப்பொழுதேனும் தற்செயலாகத் தங்கள் ஒட்டைக்குக் கோபம் உண்டாகும்படி நடந்தால், அது போக்கு வரவாயிருக்கிற ஒரு இடத்திலே தங்கள் வஸ்திரங்களைக் கொண்டுபோய், ஒருவன் தன்னை அவ்வஸ்திரங்களால் மூடிக்கொண்டு படுத்திருக்கிற பாவனையாக அவைகளை விரித்துவைப்பார்கள். ஒட்டை அவ்விடத்திற்குப் போய் அவ்வஸ்திரங்களைக் காணும்பொழுது, தனக்குக் கோபம் மூட்டின மனிதன் தூங்குகிறானென்று நினைத்து, அந்த வஸ்திரங்களைத் திடீரெனக் கடித்துக் குலுக்கி அசைத்து, உக்கிரத்துடனே காலின்கீழே போட்டு மிதிக்கும். இவ்வாறு அது தன் கோபத்தைத்தீர்த்தபின்பு, அதைக் கோபம் மூட்டினவன் பயமில்லாமல் வெளிப்பட்டு, வழக்கப்படி அதின்மேற் சுமையேற்றி அதைச் செலுத்திக்கொண்டுபோவான். ஒட்டை தூங்குகிறபொழுது தன்முழந்தாள்களை ஒட்ட மடக்கி, மார்பு தரையிற் பொறுக்கத் தக்கதாகப் படுத்திருக்கும். ஒட்டைகளுடைய உரோமம் வருஷத்திற்கு ஒருமுறை உதிர்வது வழக்கம். அவைகளுக்குப் புதிதாக உரோமம் முளைக்

கிறபொழுது, அவைகளுடைய உடம்பில் உரோமம் இல்லாமல் வெறும் தோல் இருக்கும். அவைகள் ஒன்றோடொன்று சண்டைபண்ணுவது மிகவும் அபூர்வமாயிருக்கும். அவைகள் தங்கள் தலையின் பக்கங்களால் ஒன்றையொன்று தாக்கி, கயிற்றின் புரிகளை முறுக்கும் பாவனையாகத் தங்கள் நீண்ட கழுத்துகளை ஒன்றோடொன்று முறுக்கிப் பிணைத்து முன் கால்களால் மல்லுக்கட்டி முக்கியமாய் ஒன்றையொன்று விழுத்தி வெல்லப்பார்க்கும். மேலும் அவைகள் அதிக உக்கிரத்துடன் ஒன்றையொன்று கடிப்பதும் உண்டு. அவைகள் சண்டை பிடிக்கும்பொழுது அவைகளை விலக்கிவிடுவது அருமை.

**இரை.** ஒட்டைகளுக்கு முக்கியமான இரை தழை, பூண்டுகளாம். ஒட்டைகள் அசைபோடுகிற மிருகசாதிகளுடைய வகுப்பிற் சேர்ந்தவைகள். அவைகளுக்கு இரைப்பைகள் நாலு. அவைகள் முக்கியமாய்ப் பரும்படியான பூண்டுகள், தழைகளைத் தேடித் தின்னும். மிருதுவான தழைகளைப்பார்க்கிலும் கருக்கும் முள்ளுமுள்ள பூண்டுகளே அவைகளுக்கு அதிக இஷ்டம். அவைகளுக்குப் பூண்டுகள் அகப்படுகிற வரையில் ஜலம் அக்கறையில்லை. பல மைல் தூரமட்டும் பூண்டு செடி முளையாதிருக்கின்ற பாலைவனங்களில் அவைகள் பிரயாணம் போகிறபொழுது, அவைகள் வாற்கோதுமைமாவினாற் சுட்ட ரொட்டிகளையும் அவரைக் கொட்டை முதலிய பதார்த்தங்களையும் கொஞ்சமாகத் தின்று பிழைக்கும்.

குட்டி.

ஒட்டை சினைப்பட்டுக் குட்டிபோடுவதற்கு ஒரு வருஷம் செல்லும். இதரமான பெரிய நாற்கால் மிருகங்களைப்போல அதுவும் ஈற்றுக்கு ஒரு குட்டிமாத்திரம் போடும். அதின் இளங்கன்று குட்டியென்னப்படும். அது சாதாரணமாய் ஒரு வருஷமளவும் பால் ஊட்டும். விரைவாகச் செலுத்தும்படி வளர்ப்பதற்குக் கருதியிருக்கின்ற குட்டிகளைத் தடைசெய்யாமல் இரண்டு மூன்று வருஷவரையில் பால் ஊட்டவிடுவார்கள். ஒட்டை கொஞ்சம் குறைய ஐந்து வருஷத்திற்குள்ளாகப் பூரணமான அளவிற்கு வளரும். அது சாதாரணமாய் நாற்பது ஐம்பது வருஷமட்டும் சீவனோடிருக்கும்.

உபயோகங்கள்.

ஒட்டையினுடைய தேகசுபாவத்திற்கு இணக்கமான தேசங்களில் அது மனிதருக்கு ஏவல்செய்வதற்கு உபயோகமும் அவசியமுமான மிருகமாய்க் காணப்பட்டது. ஆபிரிக்காவிலும் அராபியாவிலும் நெடுந் தூரமளவும் விஸ்தரித்திருக்கின்ற சுடுமணல் நிறைந்த பாலைவனங்களிற் சுமையெடுத்துக் கொண்டுபோவதற்குத் தகுதியான மிருகம் ஒட்டை ஒன்றே. அத்தேசங்களில் வாசமாயிருக்கின்ற ஜனங்கள் அங்கங்கே போக்குவரவுசெய்வதும், சீர்த்திருத்தம் பெற்றிருப்பதும் ஒட்டையின் உதவியினாலேதான். அராபியர் சீவனம்பண்ணுவதும், வியாபாரஞ் செய்வதும், பிரயாணம்போவதும் ஒட்டையின் உதவியாலொழிய மற்றப்படியல்ல. இதை

நினைத்து அவர்கள் ஒட்டையைக் கடவுள் தங்களு
க்கு அருளிய புண்ணிய பிராணியென்று போற்று
கிறார்கள். ஒட்டையானது தங்களுக்கு இத்தனை வி
சேஷமுள்ளதாயிருப்பதைக் கருதி அவர்கள் அதை
“பாலைவனக்கப்பல்” என்பார்கள். அவர்கள் சாதார
ணமாய் அதின் பாலைக் குடித்து மாமிசத்தைத் தின்
பார்கள். விசேஷமாய் ஒட்டைக்குட்டியின் இறை
ச்சி அவர்களுக்கு அதிக ருசிகரமானது. வருஷந்
தோறும் புதிதாக முளைத்து, மென்மையும் மிருதுவு
மாயிருக்கின்ற அதின் உரோமத்தால் அவர்கள் வஸ்
திரமுதலானவைகளை செசவுபண்ணுவார்கள். ஒட்
டைகளின் உதவியால் இத்தனை நன்மைபெறுவதி
னால், அராபியருக்கு யாதொரு குறையுமில்லை; அ
வர்கள் ஒன்றுக்கும் அஞ்சுகிறதுமில்லை. அவர்களைச்
சத்துருக்கள் தொடர்ந்துசென்றால் அவர்கள் தங்கள்
ஒட்டைமீது ஏறி, ஒரு நாளில் கடுo-மைல் தூரமட்
டும் பாலைவனத்திற் சென்று, சத்துருக்கள் கையில்
அகப்படாமல் தப்புவார்கள். இந்த உலகத்தில் எங்
குமுள்ள சமஸ்த இராணுவவீரர்களும் அவர்களைப்
பின்தொடர்ந்தாலும், பிராணசேதமடைவார்கள். ஏ
றிப்போவதற்கு ஒட்டைகள் மிகவும் உபயோகமான
மிருகங்கள். இந்துதேசத்திலும், ஆசியாவின் மற்றி
டங்களிலும் சித்திரப்பட்டாடைகளாற் செய்த தவி
சுகளை ஒட்டைகள்மீது கட்டிப் பிரபுகள் ஏறிப்போ
வார்கள். அங்கிலேயர் இராணுவத்திற்குரிய கூடார
ங்களையும், சாமான் மூட்டைகளையும் கட்டி ஒட்டை
கள்மேல் ஏற்றி அனுப்புவார்கள். சிந்துதேசத்திலே

திரளான ஒட்டைகளை ஒரு கூட்டமாகச்சேர்த்து அவைகளுக்கு "சாமான் ஒட்டைப்பட்டாளம்" என்று பெயரிட்டிருக்கிறார்கள். மேலும் ஒட்டைகள் விசேஷமாய் ஆசியாவைச் சேர்ந்த ருஷியாவில் யுத்தத்திற்குரிய சில முறைமைகளிற் பழக்கப்படுவதுண்டு. தருத்தாரிதேசத்திலே சஞ்சரிக்கிற ஒட்டைகள் பாக்திரியசாதியான ஒட்டைகள். அவைகளைக் குதிரைகளைப்போல் அத்தனை கருத்தாய்ப் பராமரிப்பார்கள். தருத்தாரியர் அவைகள்மேற்சுமை ஏற்றுகிறதில்லை. ஐரோப்பியர் குதிரைகளைவளர்த்து வாகனம் ஏறுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் உபயோகப்படுத்துவார்களே. அந்தப்பிரகாரமே தருத்தாரியரும் தங்கள் ஒட்டைகளை உபயோகிப்பார்கள். தருத்தாரியரில் ஐசுவரியவான்கள் தங்கள் குடும்பத்தார்களைக் கூடாரவண்டிகளில் ஏற்றி, ஒட்டைகளைப் பூட்டிச்செலுத்தி, அங்கங்கே போக்குவரவுசெய்வது தங்களுக்குப் பெருமையென்று எண்ணுகிறார்கள். அவர்கள் நாட்டுப்புறங்களிலிருந்து நகரிக்குப் பிரயாணஞ்செய்து கொண்டாடுவதும் வழக்கம். ஒட்டையைப்பற்றி ஐரோப்பியதுரை ஒருவர் எழுதிய குறிப்புகள் வருமாறு "ஒட்டையின் குணங்கள், அதினால் உண்டாகும் உபயோகங்கள் அனைத்தையும் யோசித்துப் பார்த்தால், அதுவே மனிதனுக்குக் கீழ்ப்பட்டிருக்கின்ற மிருகங்கள் யாவற்றுள்ளும் மிகவும் பிரயோசனமுள்ளது. கிழக்குத்தேசத்தவர்களுக்கு உண்மையான செல்வப்பொருள் பொன்னும் வெள்ளியுமல்ல. ஒட்டையே அவர்கள் திரவி

யம். ஒரு யானைக்கு வேண்டிய இரையில் இருபதில் ஒரு பங்கு மாத்திரம் ஒரு ஒட்டைக்குப் போதுமாயினும், அது யானைசெய்கிற அவ்வளவு வேலையைச் செய்யக்கூடும். ஆதலால், மனிதருக்கு யானையைப்பார்க்கிலும் ஒட்டையே அதிக உபயோகமுள்ளது. அல்லாமலும் குதிரை, கழுதை, எருது இம்மூன்றினாலும் மனிதருக்கு உண்டாகும் உபயோகமும்,ஒட்டை ஒன்றினால் உண்டாகும் உபயோகமும் சமமாயிருக்கும். ஒரு ஒட்டை இரண்டு கோவேறுகழுதைகள் எடுக்கத்தக்க சுமையை எடுக்கும். ஆகிலும் அதற்கு அவைகள் தின்கிற இரையிலும் குறைந்த இரை போதும். கழுதை தின்கிற பருப்படியான தீன் அதற்கு அகப்படுமானால் அது மிகவும் திர்ப்தியாயிருக்கும். மாட்டுரோமத்திலும் அதின் உரோமம் அதிக மெல்லியது. அது மிகவும் மிருதுவான ஆட்டுரோமத்தைப்பார்க்கிலும் வேலைக்கு அதிக பிரயோசனமுள்ளது. பசுமாட்டைப்பார்க்கிலும் ஒட்டை அதிக காலத்திற்குப் பால்கொடுக்கும். கன்றின் இறைச்சியைப்போல் ஒட்டைக்குட்டியின் இறைச்சியும் அத்தனை விசேஷித்ததும் சரீர சுகத்திற்கு உரியதுமாயிருக்கின்றது. ஆபிரிக்காதேசத்திலிருக்கிற பார்பரிநாட்டில் ஒட்டையின் நாக்குக்கு உப்பிட்டுப் புகையூட்டி, இத்தலிதேசத்திற்கும் இதரதேசங்களுக்கும் வியாபாரமுகாந்தரமாய் ஏற்றுமதிபண்ணுவார்கள். சீனதேசத்தில் ஒட்டையின் வெவ்வேறு உறுப்புகள் ஔஷதங்களாகப் பிரயோகிக்கப்படும்.

## காட்டுமிருகங்கள்.

### சிங்கம்.

---

**எத்தேசங்களில் உள்ளது.**

சிங்கமானது விசேஷமாய் ஆபிரிக்காகண்டத்தின் நடுத்தேசங்களிலுள்ள காடுகளில் சஞ்சரிக்கின்றது. மேலும் அது ஆசியாகண்டத்தின் அதி உஷ்ணமான தேசங்களாகிய அராபியாவின்மணல் செறிந்த வனங்களிலும், பாரசீகத்தின் சில காடுகளிலும், வட இந்தியாவில் நெடுந்தூரமட்டும் பரவியிருக்கின்ற செடி அடர்ந்த காடுகளிலும் அபூர்வமாய் உண்டு.

**தோற்றம்.**

சிங்கம் ஆச்சரியமானவீரத்தையும், பெருந்தகைமையையும் காட்டிய ரூபமுள்ளது. அதின் ரூபம் மிகுந்த பலமும் துரிதமும் ஒன்றாகச் சேர்ந்தால், அந்தச் சேர்க்கை எவ்வாறு தோன்றுமென்பதைத் தவறுமற் காண்பிக்கும் மாதிரியாயிருக்கின்றது. மிகவும் பருத்த சிங்கம் ஏறக்குறைய நாலு ஐந்து அடி உயரமும், வால் தவிர எட்டு ஒன்பது அடி நீளமுமுள்ளது. அதின் வால் சற்று முன்பின்னாக நாலு அடி நீளமுள்ளது. முற்றான அளவிற்கு வளர்ந்த சிறு தரமான சிங்கமோ ஏறக்குறைய மூன்றரை அடி உயரமும், வால் தவிர ஐந்து அடி நீளமுமுள்ளது. சிங்கத்தின் முன்புறத்தை எதிர்நோக்காகப் பார்த்தால், அது மிகவும் மாட்சிமையுள்ளதாகத் தோன்றும். அதின் பரு

த்த தலை, சடைபற்றிச் சுருண்டிருப்பதும் தனக்கு இஷ்டமானபொழுதெல்லாம் நிமிர்த்தக்கூடியது மாகிய பிடருரோமம், பிரமாண்டமான நெற்றிப் புருவங்கள், பந்துபோல் உண்டையாயிருக்கின்ற அக்கினிக் கண்கள், அச்சம் உண்டாக்கத்தக்க தோற்றமுள்ள பற்களின் நிரை ஆகிய இவைகள் அதைப் பார்த்தவர்களுக்கெல்லாம் திகில் உண்டாகும்படி செய்வதற்கு ஏதுவாயிருக்கின்றன. சிங்கங்கள் சாதாரணமாய் வெளிறின கபிலவர்ணமுள்ளவைகள். அவைகளின் கால்கள் தசைப்பிடியும் நரம்புப்பலமுமுடையவைகள். கால் நுனியில் ஒன்றேகால் அங்குலமட்டும் நீண்டு கொளுக்கிபோல் வளைந்த கூர்மையான நகங்கள் உண்டு. அந்த நகங்களை அவைகள் பூனையைப்போல அப்போதப்போது நீட்டவும் சுருக்கவுங்கூடும். சிங்கத்தின் செவி சிறுத்து வட்டமாயிருக்கும். அதின் முகத்தில் நீண்ட மீசையுரோமங்கள் உண்டு. பிடருரோமம் உச்சந்தலையினின்று பின்கழுத்துமுழுவதும் வளர்ந்து, தோளில்மடிந்து, கொஞ்சம் குறைய முழந்தாள்பரியந்தம் விழுந்திருக்கும். வயிறும் மார்பும் மயிரால் மூடப்பட்டிருக்கும். வால் நுனியில் சடைபற்றிய மயிர்முடியொன்று உண்டு. சரீரத்தின் மற்ற இடங்களிலுள்ள மயிர் அதிகம் குறுகியிருக்கும். பின்பக்கம் முன்பக்கத்திற்குச் சமமாயிருக்கவில்லை. பின்கால்கள் சற்று அதிகமாய் நீண்டிருக்கின்றன. முன்பக்கத்தில் உரோமம் செறிந்து வளர்ந்திருப்பதைப் பார்த்த கண்ணுக்குப் பின்பக்கம் நிருவாணமாயிருப்பதாகத் தோற்

றும். பெண்சிங்கம் ஆண்சிங்கத்திற்கு முக்கால் தரமான வளர்ச்சியுள்ளது. அதற்குப் பிடருரோமம் இல்லை. அதின் வயிற்றிலும் விலாவிலுமுள்ள உரோமம் சற்றே வெளிறியிருக்கும். பம்பாய்க்கு வடக்குத்திசையிலுள்ள குசராத்தேசத்தில் சற்றே வேறுபாடான சாயலுள்ள ஒருவகைச் சிங்கம் உண்டு. அதின் ஆணுக்காவது, பெண்ணுக்காவது பிடருரோமம் இல்லை. ஆதலால் அந்தச் சாதியான சிங்கத்திற்குப் பிடருரோமமற்ற சிங்கமெனப் பெயர் வழங்கும்.

குணவிசேஷங்கள்.

சிங்கமானது துஷ்டத்தனமும், வலிமையும், தைரியமுமுடைய மிருகம். அதின் உறுப்புகள் ஒன்றுக்கொன்று இசைவாகச் சேர்க்கப்பட்டிருக்கும் தன்மையைப் பார்க்குமிடத்தில், அது தனக்கு இரையாகத்தக்க மிருகங்களைப் பிடிப்பதற்கேற்ற இறுகிய உருவத்தையுடையதாகத்தோன்றும். அதின் வலிமை அதிகம். அது ஒரு குதிரையைத் தன் முன்காலால் அடிக்க ஏற்பட்டால், ஒரே அடியில் அதின் மண்டை உடையவும், முதுகெலும்பு முறியவும் அடிக்கவல்லது. மிகுந்த சௌரியமுள்ள ஒரு மனிதனைத் தன் வாலின் வீச்சினலே தரையில்விழுத்தும். அது ஒரு நடுத்தரமான எருதை, அல்லது எருமைக்கடாவை எளிதாகத் தூக்கிக்கொண்டு பரந்த அகழ்களைத்தாண்டி ஓடும். அதின் தொனி அச்சம் தரும்படியான முழக்கம்போன்றது. அதைக் கேட்கிற எந்த மிருகமும் ஏங்கிக்கிடக்கும். மனிதனும் நடுக்கமுற்றிருப்

பான். ஒளியைப்பார்க்கிலும் இருளில் அதிக நன்று கத்தெரியத்தக்க கண்கள் பூனையைப்போல் அதற்கும் உண்டு. ஆதலால் மற்ற மிருகங்கள் அதைக் காணக்கூடாதிருக்கிற கன இருளில் அது அவைகளை எளிதிற் கண்டு அடித்துக் கொன்று தின்னும். மேலும் அதின் மீசையுரோமங்கள் அதற்குப் பரிச உறுப்புகளாயிருப்பதினால், அது இருட்டிற் செல்லும் பொழுது இடையில் இருக்கிற மரக்கொம்பு, தழை இவற்றில் முட்டாமல் மெல்லெனச் சென்று மிருகங்களைக் கொன்று தின்கிறது. அப்படிச் செல்வதினால் அது பட்சிக்கும்படி கருதிப்போகின்ற மிருகங்கள் அரவம் கேட்டு ஓடுவதற்கு ஏதுவில்லை. பாம்பானது சத்தம் கேளாமல் நகர்வதுபோல, சிங்கமும் தன் பாதத்தின் அடியில் மிருதுவான மெத்தைபோன்ற சவ்வும், அதைச்சூழ மெல்லிய உரோமமும் இருப்பதால், பட்சிக்கப்படும் மிருகங்களுக்குச் சமீபத்தில் நடக்கும்பொழுது, எவ்வளவும் சத்தம் இல்லாமல் நடக்கும். சிங்கம் மிகுந்த வலிமையும் வேகமுமுள்ள மிருகமாதலால், அது பன்னிரண்டு பதினைந்து அடி தூரத்தை ஓரே பாய்ச்சலில் அதிக விரைவாகப் பாய்ந்து, தான் கருதிய மிருகத்தின்மேல் விழுந்து அதை அமுக்கும். மிகவும் திண்மையாயிருக்கிற அதின் மேல்வாயிலும் கீழ்வாயிலும் கூரியபற்கள் உண்டு. அந்தப் பற்களால் இறைச்சி, எலும்பென்று யாதொரு பேதமில்லாமல் எதையும் கடித்து நொறுக்கித் தின்னும். பின்னுக்குச்சரிந்த கொம்புத்தன்மை போன்ற தடிப்பான முட்

கள் அதின் நாவை மூடியிருப்பதினால், நாவானது அதற்குச்சுவையறிகருவியாயிருப்பதுமன்றி, இரையை மெல்லும் கருவியாகவும் இருக்கின்றது. சிங்கம் தன் மிகுவலியினாலும் வீரத்தினாலும் இதர மிருகங்கள் அனைத்தையும் கொல்லும்படியான திராணியுள்ளது. அதைக் கொல்லத்தக்க மிருகம் ஒன்றுவது இல்லை. ஆதலால் சிங்கம் "மிருகேந்திரன்" என்னப்படும். மனிதர் போக்கு வரவு இல்லாதிருக்கின்ற காடுகளில் சிங்கமானது அளவற்ற மூர்க்கமுள்ளதும்,அஞ்சப்படத்தக்கதுமாயிருக்கிறது என்பார்கள். அது தனக்குச் சமீபத்தில் மனிதர் வருவது கண்டால், அவர்களை அலட்சியம்பண்ணி, அவர்கள் தனக்கு ஒருபொருட்டாவென்பது போலத் துணிந்த நெஞ்சுடன் எதிர்த்து நிற்கும். அதை அவர்கள் காயப்படுத்தினால் அதற்குக் கோபம் மூளுவதேயொழிய, அச்சம் உண்டாகிறதில்லை. மேலும் எண்ணிறந்த ஜனங்கள் தன்னைத் தொடர்ந்து போனாலும், அது கிலேசப்படுகிறதில்லை. அது மனிதருடைய குணம் குறிகளையும், விவேக சக்தியையும், அவர்கள் கையிலுள்ள ஆயுதங்களின் பலத்தையும் கண்டறியும்பொழுதோ, தனது இயற்கையான சூரத்துவத்தை இழந்து, மனம் மெலிந்து, தான் அவர்களுக்குக் கீழ்மையான மிருகமென்று அறியும். இதற்குத் திருஷ்டாந்தம்—ஆபிரிக்கருடைய கிராமங்களின் சமீபத்திலுள்ள காடுகளில் ஸ்திரிகளும் பிள்ளைகளும் சிங்கங்களைப் பதிவிடங்களினின்று துரத்தும்பொழுது, அவைகள் அவர்களுக்குப்

பயந்து ஓடும். பசி இல்லாதிருந்தாலோ, சிங்கம் ஒன்றுக்கும் அஞ்சாது. என்ன விக்கினம் நேரிட்டாலும், அது பின்னிடாமல் துணிவோடும் உக்கிரத்தோடும் தான் குறித்த மிருகத்தின் மேல் விழுந்து அடித்து அதைப் பட்சிக்கும். சிங்கம் நடக்கும்பொழுது மிகவும் கெம்பீரமான தோற்றமுள்ளதாயிருக்கும். அது மெல்லென நடப்பது வழக்கம். அது மிருகங்களைப் பட்சிக்கும்படி செல்லும்பொழுது, மிகுந்தவேகமாகப் பாய்ந்தோடுவதினால், பலமுறையும் தான் கருதிப் போகிற மிருகங்களைத் தாண்டி அப்புறம் போய் விழுகிறது. அது அத்தனை கதியாகப் பாய்கிறது இடையிலே தரிப்பதற்குத் தடையாகின்றது. சிங்கமானது துஷ்டமிருகமாயிருந்தும், குரூரமுள்ளதல்ல; அது சீவபிராணிகளைப் பட்சிப்பது அவசியத்தினாலொழிய, அவாவினாலல்ல. அது தனக்குப் போதுமான அளவிற்கு அதிகமான பிராணிகளை வதைசெய்கிறதில்லை. பசி தணிந்தபின்பு, அது சாந்தமும் அமைதியுமுள்ளதாயிருக்கும். சிங்கம் சாதுவாக்கப்படவுங்கூடும். பூர்வகாலத்திலே சிங்கங்கள் போர்த்தொழிலும் வேட்டைத் தொழிலும் பயிற்றப்பட்டிருந்ததாகவும், வெற்றி வீரருடைய ரதங்களிற் பூட்டிச் செலுத்தப்பட்டதாகவும் சரித்திரமூலமாய் அறிகிறோம். ஒரு சிங்கத்தைச் சிறு பருவம் தொடங்கி நாட்டுமிருகங்களுடன் விட்டு வளர்த்தால், அது சீக்கிரத்தில் அவைகளுடன் பழகிச் சஞ்சரித்து உல்லாசமாயிருக்கும். சிங்கமானது பெருந்தகைமையுள்ள மிருகம். அதற்

குப் பகையுள்ள மிருகங்கள் சொற்ப பலமுடைய வைகளாய், அல்லது அற்பமானவைகளாயிருந்தால், அது அவைகளைப் பொருட்டாய் நினைக்கிறதுமில்லை, அவைகள் தனக்குக் காண்பிக்கும் கோபத்தைக் கவனிக்கிறதுமில்லை. அவைகளுடைய அவமரியாதையான நடக்கைகளைப் பொறுத்துக்கொள்வது அதற்குச் சுபாவம். மனிதர் அதைப் பிடித்துக் கட்டிவைத்தால், அதின் துஷ்டத்தனம் தணிந்துபோம்; பின்பு அது தன் எசமானுக்குக் கீழ்ப்படிந்து, தனக்குத் தினிகொடுக்கிறவர்களுடைய கையை முத்தியிட்டு,இரையாகப் போடப்படும் நாய்முதலிய சீவனுள்ள மிருகங்களைச் சிலவேளை பட்சியாமல் விடுகிறதுண்டு. சிங்கம் மற்ற மிருகங்களிடத்தில் இவ்வாறு உதாரகுணத்தை அனுசரித்து நடப்பதினால், அது அவைகளை எப்பொழுதும் இரட்சிப்பதே தன் கடமையென்று எண்ணியிருப்பதாகத்தோன்றும். அது அவைகளுடன் சமாதானமாகச் சஞ்சரிக்கின்றது; தனது இரையின் ஒரு பாகத்தையும், சிலவேளை முழுவதையும் அவைகளுக்கு விட்டுவிடுகிறதுண்டு; அது தன்னால் உபகரித்துப் பராமரிக்கப்படவேண்டிய அந்த மிருகங்களைப் பட்சியாமல் விட்டுப் பசியினிமித்தம் உண்டாகும் வருத்தத்தைச் சகித்துக்கொள்ளும். மேலும் சிங்கமானது அதிக நன்றியறிவுள்ள மிருகம். அது தனக்கு ஒருவர் செய்த நன்றியை எத்தனை காலம் சென்றாலும் மறப்பதரிது. அப்போதப்போது உக்கிரங்கொள்வது சிங்கத்திற்கு இயற்கையாயினும், அது பெரும்பாலும்

தன்னிடத்திற் பட்சமுள்ளவர்கள்மேல் அந்த உக்கிரத்தைக் காண்பிக்கிறதில்லை. எப்படியிருந்தும் யாராவது அதற்கு அபகாரம் செய்தால், அது கோபங்கொள்வதுமன்றி, அவர்கள் செய்த அபகாரத்தை நினைவில் வைத்துப் பழிவாங்கவும் வகைதேடும். ஆதலால் அதை நெடுநேரத்திற்குப் பட்டினியாயிருக்கவிடுவதும், தகாத வேளையில் அதற்கு அலுப்பு உண்டாகும்படி தொந்தரவு செய்வதும் மோசந்தான். சாதுவான சிங்கங்கள் ஐரோப்பாகண்டத்திற் பல இடங்களிலுள்ள மிருகாசயங்களிலும், வேறு ஸ்தானங்களிலும் வளர்க்கப்படுகின்றன. அவைகள் சாந்தமும் இரக்கமுமுள்ளவைகளென்பதற்கு அனேக திர்ஷ்டாந்தங்களுண்டு.

**வழக்கங்கள்.** சிங்கமானது அந்தந்தத் தேசத்தின் இயற்கைக்குத் தக்கதாக மலைகள், மனிதர் வாசமாயிராத வனங்கள், மரம் அடர்ந்த காடுகள்முதலிய இடங்களில் சஞ்சரிக்கின்றது. அது மற்ற மிருகங்களைக் கொள்ளையிடும் தன்மையுள்ளது; சாதிசாதியான மான்களையும், தன் கண்ணுக்கு எதிர்ப்படுகின்ற ஜீவபிராணிகளனைத்தையும் அது எதிர்க்கிறது. அது பகற்காலத்திற் கெபியிலும், காட்டிலுள்ள ஒதுக்கிடத்திலும் தங்கி, சாயங்காலம் அங்கிருந்து வெளிப்பட்டு, இராத்திரிமுழுதும் இரைதேடிப் பட்சித்து, காலையிலே கெபிக்குத் திரும்பும். அது மத்தியானத்தில் வெளிப்படுகிறது அருமை. சிங்கம் இரைதேடித் திரியும் பொழுது, மேகத்தின் முழக்கத்திற்குச் சமானமா

உரத்த சத்தமாய்க் கர்ச்சிக்கும். கேட்போருக்கு அச்சம் உண்டாகத்தக்க விதமாய் அடிக்கடி குமிறும். எங்கிருந்து சத்தம் வருகிறதென்பது மற்ற மிருகங்களுக்குத் தோன்ருதிருக்கும்படி அது சில வேளை தன்வாயைத் தரையில் முட்டும்படி வைத்துக்கொண்டு, உரத்துக் கர்ச்சிக்கும். அதின் கர்ச்சிதத்தைக் கேட்கிற ஏழை மிருகங்கள் சிங்கம் அங்கோ இங்கோ எங்கோவென்று அறியாமல் ஏங்கித் திகைத்து, எப்புறத்திலும், முன்னும், பின்னும் ஓடி, பலமுறையும் இருட்டிலே இலக்குத் தெரியாமல் சிங்கம் இருக்கிற இடத்திற் சேர்வதுமுண்டு. இயல்பாகச் சமஸ்த மிருகங்களும் சிங்கத்திற்குப் பயந்து, புத்தியாய் அதற்கு விலகிக்கொள்ளும்படி பார்ப்பதினுல், சிங்கமானது சில தந்திரங்கள் செய்தாவது தன் கருத்தை நிறைவேற்றுவது வழக்கம். அது செடிகளுக்குள்ளும், வளர்ந்த புல்லுக்குள்ளும் ஒளித்து, வயிறு தரையில் முட்டத்தக்கதாகப் பதிந்து படுத்து, யாதொரு மிருகம் தனக்கு எதிர்ப்படுமட்டும் பொறுமையுடன் காத்துக்கொண்டிருக்கும். அதற்கு இரைக்குரிய எந்த மிருகமாவது சமீபத்தில் வருகிறபொழுது, அது அதிக பலமாகவும் வீச்சாகவும் பாய்ந்து, அதை ஓரே பாய்ச்சலில் அமுக்கும். பின்பு அது அந்த மிருகத்தை முன்காலால் ஊன்றி மிதித்துக்கொண்டு, தன் நகங்களால் பீறிப் பற்களால் கடித்துமென்று பட்சிக்கும். தான் பிடிக்கப்போகின்ற மிருகத்தை ஒரு பாய்ச்சலில் அமுக்காமற்போவதுண்டானுல், அது அப்பு

றம் அதைத் தொடாமல் வெட்கப்பட்டுத் திரும்பி, தன் ஒளிப்பிடத்திற்குமெல்லெனச் செல்லும். சிங்கத்தின் வாயில் மிருகங்கள் அகப்பட்டால், அது அவைகளை உடனே கொன்றுபோடுகிறதென்றும், மனுஷர் அகப்பட்டால், அவர்களைக் காயப்படுத்திச் சற்றுநேரஞ்சென்றதின்மேற் கொல்லுகிறதென்றும் சொல்வார்கள். சிங்கம் இவ்வாறு செய்வது பெரிய ஆச்சரியந்தான். ஆதலால் அதின் வாயில் அகப்பட்ட மனுஷர் பலர் தப்பிப் பிழைத்ததுமுண்டு. மேலும் வேட்டைக்காரர் தன்னைத் தொடர்ந்து தூரத்தில் வருகிறதைக் கண்டால், அது விரைவாய் ஓடி, அவர்கள் கண்ணுக்கு எட்டாத தூரத்திற் போகும். அவர்கள் சமீபத்தில் வருகிறதைக் கண்டாலோ, அது அவர்களுக்கு அஞ்சாதிருக்கிற பாவனையாகச் சற்றே கோபங்கொண்டு, மேட்டிமையாய் மெல்லென விலகிப்போம். அவர்கள் அப்புறமும் விடாமுயற்சியுடன் தொடர்ந்தால், அது நின்று அவர்களோடு எதிர்க்கும்; அல்லது அவர்களுக்கு அஞ்சியோடுவது தனக்குப் பங்கமானாற்போல் அடிமேல் அடி வைத்து மெதுவாக விலகி, வேட்டைக்காரர் பின்னும் தொடர்ந்தார்களானால், அது நின்று திரும்பி அவர்களோடு எதிர்த்துத் தப்பித்துக்கொள்ளும்படி எத்தனப்படும். பின்பு அது மற்றெந்த மிருகங்களைப் பார்க்கிலும் அதிகமாய் அஞ்சுவதற்கு ஏதுவான தணிவற்ற கோபத்தையும் வீரத்தையும் காண்பிக்கும். சாதாரணமாகச் சிங்கத்தின் தொனியில் உண்டாகும்படி செய்யத்தக்க அத்தனை உ

ப்பானது. பகைவராற் கோபம் மூட்டப்பட்டிருக்கின்றவேளையிலோ அது அதிக சடிதியாகவும் மேதுவாகவும் சத்தமிடும். அந்தச் சத்தம் அதின் உரத்த தொனியைப்பார்க்கிலும் அதிக பயங்கரமாயிருக்கும். மேலும் அது வால் வீசி விலாவில் அடித்து, சத்தம் உண்டாகும்படி நிலத்தில் மோதி மிதித்துத் தலைரோமத்தையும் பிடரிரோமத்தையும் குலுக்கி நிமிர்த்தி, முகத்தின் தோல் திரையும்படி செய்து, மனிதருடைய கைவிரல்கள் அத்தனை நீளமுள்ள தன் நகங்களை நீட்டும். சிறுபருவமும் செளரியமுமுள்ளதாய் இருக்கிறவரையில் சிங்கமானது தான் உற்பத்தியான காடுகளிலும் வனங்களிலும் சஞ்சரித்து, அங்கே அகப்படும் இரையைத் தின்னும். தளர்ந்து வயசுமுதிர்ந்திருக்கும்பொழுதோ, அது நாட்டில் சென்று, அங்கங்கே எளிதாக அகப்படும் இரையைத்தேடி, இடையர் பயிர்க்குடிகள் இவர்களுடைய வீடுகளின் பக்கத்தில் அடைக்கப்பட்டிருக்கிற ஆடு மாடுகளையும், சிலவேளை மனிதரையும் அமுக்கிக் கவ்விக்கொண்டு ஓடிப் பட்சிக்கும். சிங்கம் பிறந்த நாள்முதல் இறக்கும் நாள்வரையில் சோம்புத்தன்மையுள்ளதாயிருக்கும். அது பெரும்பாலும் பூனையைப்போலத் தன் காலத்தைத் தூக்கத்திலும், ஆறி அமர்ந்திருப்பதிலும் கழிக்கும். அது தூங்கும்பொழுது முழுதும் அயர்ந்துபோவதினால், அதை எளிதாக விழிக்கும்படி பண்ணுவது அருமை. இதை அறிந்து, வேட்டைக்காரர் ஆபிரிக்காசிங்கத்தின் கெபிக்குப்

போய், அது தூங்குகிற சமயம்பார்த்து, நஞ்சூட்டிய அம்பை அதின் மார்பில் ஊடறுத்துச்செல்லும்படி பிரயோகிப்பார்கள். அது நொடிக்குள்ளேதுடித்து எழுந்து, தூக்கத்தின் மயக்கத்தினால் சூரத்தன்மையை இழந்து, தன் பக்கத்திற் படுத்திருக்கிற பெண் சிங்கத்தையும் எழுப்பாமல், அம்புபட்ட மான் போலத் துள்ளிக்கொண்டு ஓடும். அதுமுதல் அம்பின் நஞ்சு அதின் சரீரத்திற் பலிக்க, அது சில நாழிகைநேரத்திற்குள்ளாய் இறந்துபோம்.

இரை,

சிங்கம் மாமிசபட்சிணி. அதின் இரைப்பை புல், பூண்டு, தழை, கிளைமுதலிய சாகபதார்த்தங்கள் சீரணமாவதற்கு ஏற்றதல்ல. ஆதலால் மாமிசமே அதற்கு அவசியமான இரை. அது சாதிசாதியான மான்முதலிய சாகபட்சிணிகளைப் பட்சிக்கும். மேலும் அது மனிதரைப் பட்சிப்பதும் உண்டு. ஆபிரிக்காதேசத்தில் அது ஐரோப்பியரைப்பார்க்கிலும் ஹொற்றின்தொஷியரையே அதிகமாய் விரும்பிக் கொன்றுதின்னும். மனிதரும், மிருகங்களும் ஒரேவேளையில் அகப்பட்டால், அது மனிதரைவிட்டு மிருகங்களைப் பட்சிக்கும். சிங்கமானது ஒரு முறையில் திர்ப்தியானமட்டும் தின்கிற இரை சீரணிக்க இரண்டு மூன்று நாள் செல்லும். அதின்மேல் அது திரும்பவும் இரைதேடித்திரியும். தின்று மிஞ்சின உச்சிட்டத்தையாவது, பதனழிந்த மாமிசத்தையாவது அது தின்கிறதில்லை. அது நெடுநேரம் தண்ணீர் குடியாமல் இருக்கமாட்டாது. ஒரு நாளுக்குள் ஒரு

முறையாவது தண்ணீர்குடியாமல் விடாது. அது பூனையைப்போலத் தண்ணீரை மெதுவாக நாவால் நக்கிக்குடிக்கும்.

சிங்கம் சினைப்பட்ட நாள்முதல் நாலு ஐந்துமாதத்திற்குள்ளாகக் குட்டிபோடும்.

**குட்டி** அது வருஷத்திற்கு ஒரு முறை மாத்திரம் குட்டிபோடுவது வழக்கம். அது பெரும்பாலும் இரண்டு குட்டி முதல் நாலு குட்டிவரையில் போடும். அதின் குட்டி பூனையின் அளவுள்ளதாயிருக்கும். இயல்பாய்ச் சௌரியத்திலும், வீரத்திலும் பெண்சிங்கம் ஆண்சிங்கத்திற்கு இளப்பமானது. குட்டிபோட்டிருக்கிறபொழுதோ, அது எவர்களும் அஞ்சத்தக்க கொடிய உக்கிரமுள்ளது. அக்காலத்தில் அது ஆண்சிங்கத்திலும் அதிகமான வீரத்தைக் காண்பிக்கும்; அபாயத்திற்கு அஞ்சாது; மனிதராவது, மிருகங்களாவது எவர்கள் எதிர்ப்பட்டாலும் அது எண்ணாமல், மேல்விழுந்தடித்துக்கொன்று, இரத்தம் வடிய இழுத்துக்கொண்டுபோய், தன் குட்டிகளுக்குமுன் போட்டு இரத்தம் குடிக்கவும், மாமிசத்தைத்துண்டித்துப் பட்சிக்கவும் அவைகளுக்குப் பயிற்றும். அது பெரும்பாலும் ஒருவரும் போகக்கூடாத ஒதுக்கிடம் தேடி, அங்கே குட்டிபோடுகிறது. அவ்விடத்தை யாராவது கண்டறிவார்களென்பதாகச் சந்தேகப்படும்பொழுது, அது தன் அடிச்சுவடுகளின்மேல் பலமுறையும் அடிவைத்து நடந்தாவது, தன்வாலின் மயிரால் நிலத்தைப் பெருக்கியாவது அவைகளை அழிக்கும்.

அதிக அபாயம் நேரிட்டிருந்தால், அது தன் குட்டிகளைக் கவ்விக்கொண்டுபோய் வேறிடத்தில் வைக்கும். ஆராகிலும் அந்தக் குட்டிகளைப் பிடித்துக்கொண்டு போகும்படியாவது, நாசமாக்கும்படியாவது துணிந்து நெருங்கினுல், அது அளவற்ற உக்கிரத்துடன் அவர்களை எதிர்த்துத் தனக்கு உயிருள்ளவரையில், தன் குட்டிகளை இரட்சிக்க வகைபார்க்கும். ஆண் சிங்கத்திற்கு ஏறக்குறைய மூன்று வயசில் பிடருரோமம் முளைக்கும். அது ஆறு ஏழு வயசு ஆனதின்மேல் வளருகிறதில்லை. சிங்கத்தின் ஆயுள்காலம் இவ்வளவென்று திட்டமாய்த் தெரியாது. இருபத்தைந்துமுதல் ஐம்பது வயதுவரையில் உண்டென்று சிலர் சொல்வார்கள். லந்தன் நகரத்திலே சாதுவாக்கப்பட்ட இரண்டு சிங்கங்களில் ஒன்று கொஞ்சம்குறைய எழுபது வயசுவரைக்கும், மற்றது அறுபத்துமூன்று வயசுவரைக்கும் இருந்தன.

உபயோகங்கள்.

ஆபிரிக்காகண்டத்திலுள்ள நன்னம்பிக்கை முனைநாட்டில் வாசமாயிருக்கிற ஐரோப்பியதுரைகள் அங்குள்ள சிங்கங்களை நாசப்படுத்தும்பொருட்டாகவும், அவைகளுடைய தோலை எடுப்பதற்காகவும் அடிக்கடி வேட்டையாடிக்கொல்வார்கள். தரையில் ஆழமாய்த் தோண்டி, மெல்லிய கொம்பு, கொடி இவைகளாலும் மண்ணாலும் உபாயமாய் மூடப்பட்டிருக்கிற படுகுழிகளில் சிலவேளை சிங்கங்களை விழும்படிசெய்வார்கள். காப்பிரிகள் சிங்கத்தின் இறைச்சி தின்பார்கள். சிலர்சிங்கத்தின் இறைச்சி மிகவும் துர்நாற்ற

முள்ளதென்றும், வேறு சிலரோ அது அதிக ருசிகர மானதென்றும் எழுதியிருக்கிறார்கள். காப்பிரிகள் சிங்கத்தின் கொழுப்பை ஔஷதமாகப் பிரயோகிப் பார்கள். சிங்கத்தோல் மேலங்கியாகவும் உத்தரீய மாகவும் உபயோகிக்கப்படும். முற்காலத்தில் பெரி யோர்மாத்திரம் சிங்கத் தோலாற் செய்த மேலங்கிக ளைத் தரிப்பார்கள். சிலவேளை ஆசியாதேசத்திலும் சி ங்கம் வேட்டையாடப்படுகின்றது. ஆசியாதேசத் தில் சிலசமயங்களில் சிங்கமும் மாட்சிமைபொருந் திய இராசசின்னங்களில் ஒன்ருயிருந்ததாகத் தெரி யவருகின்றது. பாரசீக அரசன் மந்திராலோசனை மண்டபத்தில் வீற்றிருக்கும்பொழுதெல்லாம் அம் மண்டபத்தினுடைய வாயிலின் இருபக்கங்களிலும் இரண்டு பெருஞ் சிங்கம்பொற்சங்கிலியாற் கட்டப் பட்டிருப்பது வழக்கம் என்பதாகச் சென்ற நூற் ருண்டின் பாதியில் ஆசியாவிற் பிரயாணஞ்செய்த ஐரோப்பியதுரை ஒருவர் எழுதியிருக்கிருர். ஐரோ ப்பாகண்டத்திலுள்ள பலதேசங்களில் சிங்கங்களை ப் பெரிய கூடுகளில் அடைத்து நூதனக்காட்சியாக வைத்துக் காண்பிப்பது வழக்கம்.

கதைகள். ஆபிரிக்காகண்டத்திற் பிரயாணஞ்செய்த துரை ஒருவர் ஒரு சிங்கத்தைக் கண்ட கதையின் சுருக்கம் இதின் அடியில் வருகின்றது :—

"நாங்கள் வேட்டையாடுவதற்குப் புறப்பட்ட நாள் மழை மேகமாவது, மந்தாரமாவது இன்றி நன் ருக வெளுத்து இருந்தது. அதினல் எங்களுக்கு

அதிக சந்தோஷம் உண்டாயிற்று. இரண்டொரு மைல் தூரம் ஆற்றங்கரைவழியாகப் போனோம். அங்குள்ள ஆற்றங்கரையில் எங்கும் திரளான நாணற்புல் நெருக்கமாய் வளர்ந்திருந்தது. எங்கள் நாய்கள் சற்றுநேரமட்டும் சந்தோஷமாய் அங்கும் இங்கும் வேட்டைமிருகங்களைத் தேடிக்கொண்டு திரிந்தன. பின்பு அவைகள் ஏதோ ஒரு மிருகத்தைக்கண்டு உரத்த சத்தமாய் ஓயாமற் குலைத்தன. இவ்வாறு அபூர்வமான தொனியாகக் குலைத்ததினால், அவைகள் சிங்கங்களைக் கண்டிருக்கலாமென்று எண்ணி, நாங்கள் மிகவும் ஜாக்கிரதையாய் அவ்விடத்தைச் சோதித்து, அந்த மிருகத்தைத் தொடர்ந்து ஓடும்படி நாய்களைத் தூண்டிவிட்டோம். அவைகள் உற்சாகத்துடன் தொடர்ந்துபோகையில், பிரமாண்டரூபமும் கருமையான பிடரிரோமமுமுள்ள ஒரு ஆண்சிங்கத்தையும், அதனுடன் ஒரு பெண்சிங்கத்தையும் கண்டோம். அந்தப் பெண்சிங்கம் ஆற்றங்கரையினின்று நாணலுக்குள்ளே பாய்கிறபொழுது ஒரு நிமஷமாத்திரம் எனக்குத்தோன்றிற்று. ஆண்சிங்கமோ அஞ்சாமல் முன்னிட்டுவந்து, எங்களை உற்றுப்பார்த்துக்கொண்டு நின்றது. அது எங்கள் மேற்பாய்வதற்கு எத்தனம்பண்ணுகிறதாய்க் காணப்பட்டதினால், எங்கள் நிலைமை மிகவும் அபாயமுள்ளதாயிருந்தது. ஆகிலும் அஞ்சி ஒடுங்கி நிற்பதற்கு அது சமயமல்ல; சிங்கத்திற்கு விலகும்படி வகை பார்ப்பதோ விருதா. அதைக் கண்டு, மருந்து போடப்பட்டிருந்த என் கைத்துப்பாக்கிகளைச்

சிங்கத்திற்கு இலக்காகப் பிடித்து யந்திரத்தை உப யோகிப்பதற்கு எத்தினமாய் நின்றேன். துப்பாக்கி வைத்திருந்த மற்றவர்களும் அப்படிச் செய்தார்கள். அவ்வேளையில் சூரத்தன்மையுள்ள அந்த நாய்கள் எங்களுக்கும் சிங்கத்திற்கும் இடையில் மும்முரமாகச் சென்று, அதைச்சூழ்ந்து நெருங்கி மேன்மேலும் குலைத்ததினால், சிங்கம் ஒரு நிலையாக நின்றது. அந்த அறிவுள்ள நாய்களுக்கு உண்டாயிருந்த வீரத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டோம். அவைகள் மிருகேந்திரனுடைய பக்கத்தில் நெருங்கி அணுவளவும் அஞ்சாமல் நின்று, அதின் காது அடைக்கும்படியான உரத்த சத்தமாய்க் குலைத்தன. ஆகிலும் சமஸ்தமிருகங்களும் அஞ்சத்தக்க சௌரியமுடைய சிங்கமானது அவைகளுடைய சலசலப்பை இலட்சியம்பண்ணாமல் எங்களுக்கு நேரே திரும்பினபடி நின்றது. அது இப்படி எங்கள்மேல் நோக்கமாய் நிற்பதை நாய்கள் கண்டு, அதுதான் வாய்ப்பான சமயமென்று நினைந்து, சிங்கத்தின் பாதத்திற்கு அருகே சென்று, அதைக் கவ்விப் பிடிப்பதற்குக் கருத்துக்கொண்டு நின்றன. அவைகள் அப்படிச் செய்தது புத்தியல்ல; அவைகளுடைய புத்தியீனத்தின் பலன் அடிக்குள்ளே காணப்பட்டது. சிங்கமானது தனது பெருந்தகைமையான அசைவற்ற நிலைமையை விட்டு நீங்காமல் தன் முன் காலை அசைத்தது. அடுத்த நிமிஷத்தில் அந்த நாய்களில் இரண்டு சவமாய்க் கிடந்தன. சிங்கம் அவைகளைக் கொல்ல முயன்றதாக அற்பமும் தோன்றாதிரு

க்க, அவைகள் எவ்வகையாய் இறந்தனவோ இஃது ஆச்சரியம். நாய்கள் சிங்கத்திற்கு முன்னிட்டுக் குலைத்துக்கொண்டு நின்ற வேளையில், நாங்கள் சும்மாய் இருக்கவில்லை. அதின்மேற் குண்டுகளைப் பிரயோகித்தோம்; ஒரு குண்டு அதின் விலாவை ஊடுருவிச்சென்றது. அப்பொழுது இரத்தம் ஆறாகப் பாயத்தொடங்கிற்று. சிங்கமோ சிறிதும் கலங்காமலும் விலகாமலும் நின்றது. இனி எங்கள் மேற் பாயுமென்று உறுதியாய் நம்பி, துப்பாக்கிகள் எல்லாவற்றிலும் மறுபடி மருந்து போட்டுக் கெட்டித்துவைத்திருந்தோம். ஆகிலும் எங்கள் நம்பிக்கை நிறைவேறவில்லை. சிங்கம் திரும்பி மெல்லெனப் போய்விட்டது.

பின் வரும் கதையினால் ஆபிரிக்க சிங்கம் ஒன்றினுடைய தீரம் இவ்வளவென்று அறியலாகும்.

ஆபிரிக்காதேசத்தில் இருந்த ஒரு மதில் சூழ்ந்த மாட்டுத்தொழுவத்தின் கதவை ஒரு சிங்கம் பெயர்த்து, அதற்குள் சென்று, அங்கிருந்த மாடுகளில் அனேகத்தைக் கொன்று பட்சித்துப்போயிற்று. அந்த மாடுகளுக்கு உடையவர்கள் இவ்வாறு தங்களுக்கு உண்டான நஷ்டத்தினிமித்தம் துக்கித்து, "இடங்கண்ட சிங்கம் இனி விடுமா, மீதியான மாடுகளையும் கொன்றுபோடுமே. இதற்கு என்ன உபாயம்" என்று தங்களுக்குள் யோசித்தார்கள். பின்பு அவர்கள் தொழுவத்தின் கதவைத் திறந்து வாசலுக்குக் குறுக்கே கயிறுகட்டி, அந்தக் கயிறு சிங்கத்

தின் மார்பிலே தடக்கும்பொழுது பொறிந்து அதி ன்மேற் குண்டு ஏறத்தக்கதாகப் பல துப்பாக்கிகளை அதிலே தொடுத்துவைத்தாற் சிங்கத்தைக்கொன்று தங்கள் மாடுகளை இரட்சிக்கலாகுமென்று நிச்சயி த்து அப்படிச் செய்தார்கள். சிங்கமோ அஸ்தமிக் குமுன் வந்து, அந்தக் கயிற்றைக் கண்டு, அதைக் குறித்துச் சமுசயப்பட்டதினுல் அதைக் காலால் விலக்கிற்று. உடனே துப்பாக்கிகள் எல்லாம் வெ டிதீர்ந்தன. தீர்ந்தும் ஒரு குண்டாவது அதின்மேற் பட்டவுமில்லை. அது வெடியதிர்ச்சிக்குச் சிறிதும் அஞ்சவுமில்லை. அது முன்போலத் தொழுவத்தி னுள் சென்று, மீந்திருந்த மாடுகளைப் பட்சித்தது.

ஹமில்த்தன் தச்செஸ் என்னும் பெருமாட்டி வசத்தில் ஒரு சிங்கம் இருந்தது. அது தனக்கு அறிமுகமான மனிதரிடத்திற் பட்சமும் அவர்களைக் குறித்து ஞாபகமுமுள்ளதாயிருந்ததென்பதாக, அதைப் பார்த்த துரை மகன் ஒருவர் எழுதிய கதை யினுல் அறியலாம். அது வருமாறு,—“நான் ஒரு நாள் ஹமில்த்தன் தச்செஸ் பெருமாட்டியுடன் பந் திபோசனம்பண்ணினேன். பின்பு அவருடைய அரமனையில் நின்ற சிங்கத்தைப் பார்க்கும்படி விரு ந்தர்களனைவரும் பெருமாட்டியுடன் கூடிச்சென் றேம். நாங்கள் போனபொழுது அது தன் இரை யைப் பட்சித்துக்கொண்டு நின்றது. நாங்கள் அ தைப் பார்த்து அதின் மிகுந்த மூர்க்கத்தினிமித்தம் ஆச்சரியப்பட்டோம். மேலும் அது தன் இரை யை விட்டு எங்களுக்கு விரோதமாக உக்கிரம் கா

ட்டும்படி செய்வதற்கு அதைக் கொம்பாற்குத்தித் தொந்தரவுபண்ணினேம். அப்படி இருக்கையில் வாயில்காப்போன் ஓடிவந்து, பெருமாட்டியை உப சரித்து, "இராணுவசேவகன் ஒருவன் சில புதுச் சேவகர்களுடனே வந்து, இந்தச் சிங்கத்தைப் பார்க்கும்படி இடந்தரவேண்டுமென்று கேட்கிறு ன்" என்றுன். அப்பொழுது தயாள சீலியாகிய அந்தக் காருணியபெருமாட்டி விருந்தர்களைப் பார் த்து, "பிரயாணிகள் இங்குவந்து சிங்கத்தைப் பார் த்துப்போவது உங்களுக்கு இஷ்டந்தானே" என்று கேட்க, நாங்கள் "ஆம்" என்றேம். பின்பு அவ ர்கள் வரும்படி உத்தரவாயிற்று. அவர்கள் வந் தபொழுது, சிங்கம் தன் இரையைத்தின்று கர்ச் சித்துக்கொண்டிருந்தது. அந்த இராணுவசேவ கன் முந்திப்போய், சிங்கத்தைப் பார்த்து, "நீரோ, நீரோ, நீ என்னை அறியாயா" என்றுன். உடனே சிங்கமானது அவனைத் திரும்பிப் பார்த்து, இரை யைவிட்டு எழுந்து, வாலை ஆட்டிக்கொண்டு கூட் டின் ஓரத்திற் சென்றது. அவன் அதைப் பட்சமா கத் தொட்டுத் தட்டி, "இந்தச் சிங்கம் என்னைக் கண்டு மூன்று வருஷம் ஆயிற்று. நான் கப்பலே றிச் சீமைக்குப் பயணமானபொழுது இது என் வசத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. முதல் முதல் இதை அங்கிலோதேசத்திற் கொண்டுவந்து சேர் த்தவன் நான்தான். இந்த மிருகம் என்னிடத் தில் இவ்வளவு நன்றியுணர்ச்சியைக் காட்டுவது எனக்கு மிகுந்த சந்தோஷமாயிருக்கிறது" என்று

எங்களுக்குச் சொன்னான். அப்பொழுது சிங்கம் அதிக பிரியங்கொண்டு இங்கும் அங்கும் போய், அவன் நின்ற இடத்தில் கிராதியை உராஞ்சி, அவன் கைநீட்ட, அதை நக்கிற்று. இராணுவசேவகன் கூட்டுக்குட் போகும்படி தனக்கு இடந்தரவேண்டுமென்று கேட்க, அவனுக்கு ஒருவேளை அபாயம் நேரிடுமென்று எண்ணி, நாங்கள் அவன் போவதற்கு இடங்கொடுக்கவில்லை."

## புலி.

புலி ஆசியாகண்டத்தின் உஷ்ணமான பாகங்களில் உற்பவித்தது. அது முக்கியமாய் இந்தியாவிலும் இந்திய தீவுகளிலும், பொதுவாகச் சீனதேசத்திலும் சீனதருத்தாரியிலும் உண்டு. இந்துதேசத்தில் மலையாளத்திலும் வங்காளத்திலும் புலிகள் திரளாகச் சஞ்சரிக்கின்றன. மைசூரிலும் அனேகம் உண்டு.

எத்தேசங்களில் உள்ளது.

புலி சிறந்தமிருகங்களில் ஒன்றாய் எண்ணப்படும். அது பூனைச்சாதியைச் சேர்ந்தது. அதின் சரீரக்கட்டுச் சிங்கத்திற்கு ஒப்பானது. அதின் உருவமோ சிங்கத்தின் உருவத்தைப்பார்க்கிலும் அதிக நொய்மையும் அழகுமுள்ளதாயிருக்கின்றது. அதின் மத்திம உயரம் ஏறக்குறைய மூன்று அடியும், நீளம் வால்நீங்க

தோற்றம்.

லாக ஆறு அடியுமாம். ஆகிலும் புலிகளனைத்தும் ஒரே அளவையுடையவைகளல்ல. அவைகள் அளவில் அதிக பேதமுள்ளவைகளாயிருக்கின்றன. சிங்கத்தைப்பார்க்கிலும் அதிக உயரமும் நீளமுமான புலிகளைப் பலமுறையும் கண்டதுண்டு. புலிக்குப் பருத்திருக்கின்ற வட்டமான தலையும், குறுகிய செவிகளும் உண்டு. அதின் செவிகள் ஒன்றிற்கொன்று தூரமாயிருக்கும். உதடுகளில் நீண்ட உரோமங்கள் உண்டு. பற்கள் மிகவும் பயங்கரமானவைகள். அதின் சரீரம் பிரகாசமான மெல்லிய உரோமத்தால் மூடப்பட்டிருக்கின்றது. உரோமத்தின் வர்ணம் கனத்த கபிலம், அல்லது செம்மை கலந்த பொன்மை. அதற்குக் குறுக்கே எண்ணிறந்த கருவரிகள் உண்டு. அதின் முகமும், மிடறும், கீழ்வயிறும் ஒருவாறு வெண்ணிறம்பொருந்தியிருக்கும். அவைகளிற் கருவரியில்லை. சாதாரணமாய் அதின் உரோமம் குறுகியது. விசேஷமாய் அதின் தலையின் வலப்புறத்திலும் இடப்புறத்திலுமுள்ள உரோமம் ஏறக்குறைய நாலு அங்குலம் நீளமுள்ளது. அதற்குப் பிடருரோமம் இல்லை. அந்த விஷயத்தில் அது சிங்கம்போலல்ல. அதின் வால் நுனி கறுத்திருக்கும். அதில் குஞ்சம்போன்ற மயிர்த்திரள் இல்லை. அதின் கால்களும் நகங்களும் சிங்கத்தின் கால்களுக்கும் நகங்களுக்கும் ஒப்பாயிருக்கும். புலியின் சரீர அளவிற்கு அதின் கால்கள் ஒத்திராமல் மிகவும் குறுகியவைகளாயிருக்கின்றன.

துண விசே ஷங்கள்.

புலியும் மிருகசீவன்களைப் பட்சிக்கும் இயல்புள்ளதாயிருக்கிறது. புலி கொஞ்சம் குறையச் சிங்கத்தைப்போல வல்லமையுள்ளது. ஆதலால் அது ஒரு மானையாவது, குதிரையையாவது, பருத்த எருமையையாவது கொல்லும்பொழுது, அவைகளைச் சிறிதும் சங்கடமில்லாமல் எளிதில் தூக்கிக்கொண்டு விரைந்தோடும். அது எந்தப் பெருமிருகங்களின் உடலையும் ஒரு அறையிலே தன் நகங்களாற் கிழிக்கும். அதின்தொனி சிங்கத்தின் தொனிபோன்றதுமல்ல, அத்தனை பயங்கரமானதுமல்ல. அது பாயும்பொழுது அதிக தூரம் எட்டிப்பாயும். அது மிகவும் விரைந்தோடுகிற எந்த மிருகத்தையும் தொடர்ந்து பிடிக்கத்தக்க அத்தனை விரைவாய் ஓடும்படியான சக்தியுள்ளது. அது சிங்கத்தைப்பார்க்கிலும் அதிக துஷ்டத்தனமும், உக்கிரமும், கொடுமையுமுள்ளது. அது தெவிட்டத்தின்றாலும் இரத்தத்தின்மேல் அதற்கு உண்டானதாகம் ஒரு பொழுதும் அடங்குகிறதில்லை. அது ஒரு மிருகத்தைப் பட்சித்தவுடனே மற்றொரு மிருகம் அகப்படுமானால், அதையும் முன்போல் அத்தனை உக்கிரத்தோடும் ஆவலோடும் பிறித்தின்னும். அதின் உக்கிரத்திற்கு அளவில்லை, அது தனக்கு முற்பட்ட எதையென்கிலும், எவர்களையென்கிலும் தப்பவிடுகிறதுமில்லை. அதை எதிர்ப்பதினாலாவது, கட்டாயஞ்செய்வதினாலாவது, அதினிடத்திற் பட்சமாயிருப்பதினாலாவது அதின் உக்கிரத்தை அடக்குவது அருமையென்று சொல்

னுகிறார்கள். புலிக்கு நன்மைசெய்தாலும் சரி தீமைசெய்தாலும் சரி, அதற்குக் கோபம் உண்டாவது நிசம். அதை ஒரு அடிமைபோலக் கட்டுப்பண்ணி வைத்திருக்கும்பொழுது, அதற்கு இரை கொடுத்துப் பராமரிக்கிறவனை அது சிறிதாகிலும் நினைக்கிறதில்லை. தனக்கு இரைகொடுக்கிறவனென்றும், தன்னை வருத்தப்படுத்துகிறவனென்றும் பகுத்தறிவில்லாமல், எவனுடைய கை அகப்பட்டாலும் அதை நொடிக்குள்ளே கிழிக்கும். எந்தச் சீவபிராணிகளைக் கண்டாலும் அது உக்கிரங்கொண்டு கர்ச்சிக்கும். ஆகிலும் புலிக்கூட்டில் ஒரு நாயை விட, புலி அந்த நாய்க்கு ஊறுபாடு ஒன்றும் செய்யாமல் அதைப் பத்திரமாய் நிற்கும்படிவிட்டதாகத் திர்ஷ்டாந்தங்கள் உண்டு. மிகவும் சிறு பருவமாயிருக்கும்பொழுது, புலிக்குட்டிகள் அதிக விளையாட்டுக்குணமும் சற்றே படிவுமுள்ளவைகளென்பது மெய்தான். புலிக்குட்டிக்குச் சந்தோஷம் உண்டாகும்பொழுது, அது வீட்டுப்பூனையைப்போல உறுமுகிறது.

வழக்கங்கள். புலி பெரும்பாலும் காடுகளிலும் பாலைவனங்களிலும், சிறுபான்மை மலைகளிலும் சஞ்சரிக்கின்றது. அது சகலத்தையும் நாசமாக்கும் தன்மையுள்ளது. அது ஆடு மாடுகள் மேல் உக்கிரத்தோடு தந்திரமாய் விழுந்து, அவைகளைக் குரூரமாய்க்கொன்றுதின்கிறது. அது யானை, காண்டாமிருகம் இவைகளையன்றி, சிலவேளை சிங்கத்தையும் எதிர்க்கும். அது மனிதர்களுக்கும்

அஞ்சுகிறதில்லே, அவர்கள் தன்னே எதிர்த்தாலும் அதற்குப்பயமில்லே. அது ஒரு மிருகமும் தன்னேக் காணுதிருக்கும்படி தான் மறைந்திருக்கத்தக்க இடம் பார்த்து, அங்கே பதிவிருந்து, தனக்கு இரைக்கு ஏற்ற மிருகம் சமீபத்தில் வருமளவும் பொறுமையாய்க் காத்து,வந்தவுடனே அச்சம் உண்டாகத்தக்க விதமாய்க் கர்ச்சித்துக்கொண்டு ஒரு பாய்ச்சலாக அதின்மேற் பாய்ந்து, அதை அமுக்கித் தூக்கித் தன் குகைக்குக் கொண்டோடும். அது கருதிப்பாய்ந்த மிருகத்தை ஒரு பாய்ச்சலில் அமுக்கக்கூடாது போனல், சிங்கத்தைப்போல் அதைப் போகும்படி விட்டுத்திரும்பாமல், விரைந்து தொடர்ந்து பிடித்துக் கொல்லும். அது தான் பிடித்த மிருகத்தைக் கடித்து, அதின் இரத்தத்தைக் குடிக்கும். அதற்கு அனேகம் மிருகங்கள் ஒருமிக்க அகப்பட்டால், அவைகளே ஒவ்வொன்ருய்க் கொன்று, அவைகளின் இரத்தத்தைக் குடிக்கும். அது கோபம் மூட்டப்படும்பொழுது, தன் பற்களே நெறுநெறெனக் கடித்து, ஒருவாறு சிங்கத்தைப்போல் உரத்த சத்தமாய்க் குமுறும். அது சோம்பல்தன்மையாகத் தன் குகைக்குள்ளே படுத்திருந்து, பசி உண்டாகும்பொழுது வெளிப்பட்டு இரைதேடித்திரியும். சிங்கம், பூனேச்சாதியைச்சேர்ந்த மற்ற மிருகங்களாகிய இவைகளேப்போலப் புலியும் மாமிசத்தைப் பட்சிக்கின்றது. புலி தான் கீழ்ப்படுத்தத்தக்க வன மிருகங்கள் அனேத்தையும் கொன்று பட்சிக்கும். அதற்கு வன மிருகங்கள் அகப்படாதிருக்கும்பொழுது, அது

மனிதர் வாசமாயிருக்கும் இடங்களுக்குச் சென்று, மனிதரைப் பட்சிக்கும். மிருகங்களின் இறைச்சியைப்பார்க்கிலும் மனிதரின் இறைச்சிதான் அதற்கு மிகுந்த பிரியம். அதற்கு அதிக பசி தீபனம் உண்டு. ஆதலால் அது தன் இரையை அளவற்ற ஆவலுடன் தின்னும். அது பூனையைப்போலத் தண்ணீரை நாவால் நக்கிக் குடிப்பது வழக்கம்.

புலி ஒரு ஈற்றுக்கு நாலு ஐந்து குட்டி போடும்.

குட்டி.

பெண்புலி எக்காலத்திலும் உக்கிரமுள்ளதுதான். ஆயினும் அதைக் குட்டிப்புலிகள் சூழ்ந்திருக்கும்பொழுதும், அவைகளை இழந்துபோகும்படியான அபாயம் நேரிட்டிருக்கும்பொழுதும் அதற்கு உண்டாகும் உக்கிரத்திற்கு அளவில்லை. பெண்புலி தனக்கு என்ன அபாயம் நேரிட்டிருந்தாலும், அதற்கு அஞ்சிப் பின்னிடாமல், தன் குகைக்குத் துணிந்த நெஞ்சுடன் செல்லுகிறவர்களோடு எதிர்க்கும். யாராவது அதின் குட்டிகளைத் திருடிக்கொண்டு குதிரைமேல் ஏறி வாயுகதிக்கு ஒப்பான விரைவுடன் சென்றாலும், அது ஆச்சரியமான வேகத்தோடும் உக்கிரத்தோடும் அவர்களைத் தொடர்ந்து நெருங்கும். அவ்வேளைகளில் அவர்கள் புலியைச் சற்றுவது தாமதித்து நிற்கும்படி செய்வதற்காக அதின் குட்டிகளில் ஒன்றைக் கீழே போட்டுவிட்டுப் போவார்கள். அந்தக் குட்டியை அது எடுத்துப் பக்கத்திலுள்ள புதரில் அடைக்கலமாய் வைத்து, பின்னும் அவர்களைத் தொடரும். அவர்கள் அதின் குட்டிகளைக்கொண்டு

ஊர்சேர்ந்தார்களேயாகில், அந்த ஊர்வரையில் அது போய் விசனத்தோடு கூச்சலிடும். அவர்கள் கப்பலில் ஏறினால் அது கடற்கரைபரியந்தம் சென்று, பிராண அவஸ்தைப்பட்டுப் பயங்கரமாய்க் குமுறும்.

புலி வேட்டை இத்தேசத்து அரசர்களுக்கு மிகவும் விநோதமான விளையாட்டு. அவர்கள் வேட்டைக்குப் போகும்பொழுது, குதிரைவீரர், காலாட்கள் ஆகிய இராணுவத்தார்களும் வேட்டைக்காரரும் சேர்ந்த பரிவாரங்கள் சூழ, தங்கள் நிலைமைக்குரிய வரிசைகளுடனும் ஆடம்பரத்துடனும் போவார்கள். புலிகள் எழுப்பப்பட்டவுடனே, அந்த வீரர்களும் வேட்டைக்காரரும் நான்கு புறத்திலும் வளைந்து நெருங்கி, அவைகளை ஈட்டியாற் குத்தியும், கத்தியால் வெட்டியும், அவைகள்மேல் அம்புகளைப் பிரயோகித்தும் சீக்கிரத்திற் சங்கரிப்பார்கள். இந்து தேசத்தில் புலிமுதலான துஷ்டமிருகங்களைக் கொன்றவர்களுக்குத் துரைத்தனத்தார் வெகுமதிபண்ணிவருகிறார்கள். வேட்டைத்தொழிலால் சீவனம் பண்ணுகின்ற ஷிகாரி என்னும் சாதியார் திரளான புலிகளைச் சங்கரிப்பார்கள். இத்தேசத்தில் வந்திருக்கிற ஐரோப்பியதுரைகளும் மிகுந்த நெஞ்சுத் துணிவுடன் அப்போதப்போது நெருங்கிப் புலிகளைச் சுட்டுக்கொல்வதினால், அவைகளுடைய தொகை வரவரக் குறைகின்றது. புலித்தோல் ஆசியா முழுவதிலும், முக்கியமாய்ச் சீனதேசத்திலும் அதிகமாய் மதிக்கப்படும். சீனதேசத்திலுள்ள நீதியதி

பர்கள் நீதிவிசாரணை செய்யும்பொழுது உட்காரு கிற பீடங்கள் புலித்தோலால் உறையிடப்பட்டிருக்கும். இந்தியாவில் இருக்கிற சில சாதியார் புலி இறைச்சி தின்பது வழக்கம். அது உருசிகரமும் சௌக்கியமுமானதென்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதின் சரீர உறுப்புகளிற் பல மனிதருக்குச் சாதாரணமாய் உண்டாகிற அனேக வியாதிகளுக்குச் சிரேஷ்ட ராஜ ஔஷதமாயிருக்கிறதுமன்றி, விசேஷமாய் அதின் கொழுப்புச் சொறிமுதலிய தோற்புணாவியாதிகளுக்கெல்லாம் கைகண்ட ஔஷதமாயிருக்கிறதென்றும் சொல்வார்கள்.

**கதைகள்.** புலிகளைக்குறித்து இதின் அடியில் வரும் வர்த்தமானங்கள் இந்தத் தேசத்தில் நடந்தன. சென்ற நூற்றுண்டின் தொடக்கத்தில் சில துரைகளும் துரைசானிகளும் பங்காளத்திலுள்ள ஒரு ஆற்றங்கரைக்குச் சமீபமான சில மரங்களின் நிழலில் உட்காந்திருக்கையில், ஒரு புலி தங்கள்மேற் பாய்வதற்கு எத்தனப்படுவதைச் சடிதியிற் கண்டு பயந்தார்கள். அந்தத் தறுவாயில் ஒரு துரைசானி சிறிதும் கலங்காமல் தன் கையில் இருந்த குடையை விரித்துப் புலியின் முகத்திற்கு எதிரே பிடிக்க, அது தான் முன் ஒருபொழுதும் பார்த்திராத அந்த அபூர்வமான காட்சியை அத்தனை சடிதியாய்க் கண்டதினுல் கலக்கமுற்று, உடனே அவ்விடத்தினின்று திரும்பிப்போய்விட்டது. இவ்வாறு அவர்கள் தங்களுக்கு நேரிட்டிருந்த பிராண அபாயத்திற்கு விலகிப் பிழைத்தார்கள்.

களகூஉ-ம் ஆண்டு ஸர் ஹெக்தர் மன்ரோ என்னும் துரையுடைய குமாரன்மேல் ஒரு புலி விழுந்தடித்து, அவனை இழுத்துக்கொண்டுபோனதினால், அவருக்குப் பிராணாபாயம் உண்டாயிற்று. அந்தப் பயங்கரமான சங்கதி நடந்தபொழுது, அதைப் பார்த்து நின்றவர்களில் ஒருவன் எழுதியதாவது:— “மான்வேட்டையாடுவதற்காக ஸாகர்தீவின் கடற்கரைவழியாய் நாங்கள் போனபொழுது மான், புலி இவற்றின் எண்ணிறந்த அடிச்சுவடுகளைக் கண்டு, மதியம் திரும்பி மூன்று மணியளவும் வேட்டையாடித்திரிந்து, பின்பு ஒரு காட்டின் ஓரத்தில் முசிப்பாறும்படியாக உட்கார்ந்தோம். உட்கார்ந்திருக்கையில், இடிமுழக்கம்போன்ற ஒரு சத்தம் கேட்டது. நொடிக்குள்ளே பெரிய புலி ஒன்று வந்து, துரதிஷ்டனாகிய எங்கள் சினேகிதனைப் பிடித்து இழுத்துக்கொண்டு திரும்பிக் காட்டிற்குள் விரைவாய் ஓடிற்று. ஆச்சரியமான சௌரியமுள்ளதாயிருந்ததினால், அது வேகமாய் ஓடும்பொழுது எதிர்ப்பட்ட அடர்ந்த செடிகள், புதர்கள் எல்லாம் அதற்கு விலகி வழிவிட்டன. அப்பொழுது ஒரு பெண்புலியும் அதைத் தொடர்ந்துபோயிற்று. அது கண்டு, எங்களுக்கு அவஸ்தையும், விசனமும், அச்சமும் அதிகமாயிருந்தும், நான் அந்தப் புலிக்கு இலக்குப்பிடித்து, அதின்மேல் ஒரு துப்பாக்கிக்குண்டைப் பிரயோகித்தேன். புலி சற்றே கலங்கினாற்போலக் காணப்பட்டது. உடனே என்னுடன் நின்றவரும் ஒரு குண்டு பிரயோகித்தார்.

சில நிமிஷம் சென்றதின்மேல் புலிவாயில் அகப்பட்ட எங்கள் சினேகிதன் சரீரமுழுதும் இரத்தம் தோய்ந்தவராக எங்களிடத்திற்கு வந்தார். அவருடைய காயங்களுக்கு எவ்வளவு அதிகமாய் வைத்தியம்பண்ணியும், அனுகூலம் இல்லாமற் போயிற்று. புலியின் பற்களாலும் நகங்களாலும் அவர் பட்ட காயங்கள் பிராணாபாயமான காயங்களாயிருந்ததினால், அவர் இருபத்துநாலு மணிநேரத்திற்குள்ளாக இறந்தார். இந்தப் பரிதாபமான சங்கதி நடந்தபொழுது, பக்கத்திலுள்ள பத்துப் பன்னிரண்டு மரங்கள் சமூலமும் சுவாலித்தெரிந்ததினால் அங்கே பெருவெளிச்சம் உண்டாயிருந்தது. அந்தச் சமயத்தில் சுதேசிகளில் பத்து, பதினைந்து பெயர் எங்களுடன் நின்றார்கள். அந்தப் பயங்கரமான காரியத்தைக் கண்டவர்களல்லாமல், மற்றவர்கள் அதை மனதினாற் கிரகிப்பது அருமை. நாங்கள் படகில் ஏறிப் பிரயாணப்பட்டோம். மேற்சொல்லிய பெண்புலி பித்தங் கொண்டாற்போலக் கர்ச்சித்துக்கொண்டு, படகு கண்ணுக்கு எட்டாத தூரத்திற் போகிறவரையிற் கடற்கரையில் நின்றது."

புலிக்குட்டிகளைச் சாதுவாக்கிக் கீழ்ப்படுத்தக் கூடுமென்பது பின்வரும் கதையால் தெரியலாகும்.

௧௭௯௧ - ம் வரு சிறந்த புலியொன்று அங்கிலோதேசத்தின் அரசனுக்குக் காண்பிக்கும்பொருட்டாகப் பங்காளக்கரையிலிருந்து கப்பலில் ஏற்றி அனுப்பப்பட்டது. கப்பலில் இருந்த காலத்தில் அந்தப் புலி ஒரு பூனைக் குட்டியைப்போல் விளை

யாட்டுக்குணமுள்ளதும், துஷ்டத்தன்மையற்றது மாய் இருந்தது. அது கப்பலில் அங்கும் இங்கும் அடிக்கடி ஏறி விளையாடும். அது ஏறும்பொழுது அங்குள்ளவர்கள் அதை ஒரு விநோதமாகப் பார்ப் பார்கள். அது சிலவேளை கப்பற்காரர் ஒருதலையணை போலத் தன்மேல் தலைசார்த்திப் படுப்பதற்கு இடங் கொடுக்கும். கப்பல் அங்கிலோகணாயிற் சேர்ந்த பின்பு, அது அரசனுக்கு ஒப்பிக்கப்பட்டது. அர சன் அதைலந்தன் நகரத்திலுள்ள நூதனமிருகால யத்தில் வைக்கும்படி உத்தரவுசெய்தார். இரண்டு வருஷத்திற்கு அதிகமான காலம் சென்றதின்மேல், அந்தப் புலியுடன் கப்பலில் இருந்த தச்சன் அதைப் பார்க்கும்படி போனான். அவனைக் கண்டவுடனே, அவன் இன்னானென்று புலி அறிந்து, கூட்டின் கிரா திகளில் உராஞ்சி, மிகுந்த மனமகிழ்ச்சியடைந்தி ருந்ததாகக் காணப்பட்டது. அது கண்டு, அந்தத் தச்சன் கூட்டுக்குள்ளே போவதற்கு உத்தரவுகேட் டான். கூட்டுக்குள் போவது அபாயமென்று சிலர் சொல்லியும், பின்பு உத்தரவு கொடுத்தார்கள். அவன் உள்ளே போனபொழுது, புலிக்கு அள வற்ற சந்தோஷம் உண்டாயிற்று. அது அவனி டத்தில் அதிக நன்றியுணர்ச்சிகொண்டிருந்ததாகக் காணப்பட்டது. அது அவன்மேல் உராஞ்சி, அவன் கைகளை நக்கி, ஒரு பூனைக்குட்டிபோல் அவனுடன் கொஞ்சிக் குலாவிற்று. எவ்வாறுவது அவனை ஊறுபடுத்தத் துணியவில்லை. தச்சன் அந் தக் கூட்டுக்குள் இரண்டு மூன்று மணிநேரவனா

யில் இருந்தபின், புலி அவனுடன் மிகுந்த சிராட்டுப்பண்ணி, அவனை விட்டுப் பிரிவதற்குச் சற்றும் விரும்பாததுபோல் இருந்ததினால், அங்கிருந்து வெளிப்படுவது சற்றே சங்கடமாகுமென்று கண்டான். அப்பொழுது புலிக்காரன் புலியை உபாயமாய்க் கூட்டின் அடுத்த அறைக்குள் போகும்படிசெய்து, கதவைத் தள்ளிவிட்டு, தச்சனை விடுதலைபண்ணினான். ஒரு நாள் புலி அதின் இரையைத் தின்றபின்பு, புலிக்காரன் ஒரு நாய்க்குட்டியை அதின் கூட்டிற்குள் விட்டான். புலி அதற்கு ஒருவருத்தமும் செய்யாமல் அதினிடத்தில் அதிக நட்பாயிருந்தது. எப்பொழுதேனும் நாய்க்குட்டிக்குத் தீன்கொடுப்பதற்காக அதை வெளியே பிடித்துக்கொண்டுபோனால், புலி வெகு விசாரப்படும். அதைத் திரும்பவும் கூட்டில்விட்டால், புலி சந்தோஷங்கொண்டு அதை நக்கும். இரண்டொருமுறை புலி இரை தின்றுகொண்டிருந்தபொழுது, நாய்க்குட்டியும் கூட்டில் நின்று அதின் இரையைத் தின்னத் தலைப்பட்டது. புலி அதினிடத்தில் சற்று வெறுப்புள்ளதாய்க் காணப்பட்டதேயொழிய, அதற்கு யாதொரு வருத்தமும் செய்யவில்லை. மற்றொரு காலத்தில் வேறொரு நாய் அந்தக் கூட்டிற்குள்விடப்பட்டது. அப்பொழுது புலி தன் கூட்டிற்குள் புதிதாக வந்த நாயுடன் அதிகரம்மியப்பட்டிருந்தது. அது தன்னைப் பார்த்துக் குலைத்துச் சிலவேளை கடித்தபோதிலும், புலி அதின்மேற் கோபங்கொள்ளவில்லை. அது கூட்டில் வைக்கப்பட்ட இரையைப் பட்சித்த பின்பு, அதின்

கூட்டிற்குள் எந்த நாயை விட்டாலும், அது ஒரு ஊறுபாடும் செய்யாது என்பதாகப் புலிக்காரன் சொன்னான். மேற்சொல்லிய புலி லந்தன் நகரத்தின் காவற்கோட்டையில் பதினைந்து வருஷமட்டும் இருந்தது. அந்தக் காலவரையில் அது மிகவும் சாதுவானதாகவும், இரைகொடுக்கிறவனுக்குக் கீழ்ப்படிவுள்ளதாகவும் இருந்தது.

## சிவிங்கி, செம்புலி, சிறுத்தை.

எத்தேசங்களிலுள்ளது.

சிவிங்கியும், செம்புலியும் பூர்வத்தாருக்கு அறியப்பட்டிருந்த தேசங்களின் உஷ்ணமான பாகங்களில் எங்கும் விர்த்தியாகின்றன. அவைகள் உற்பத்தியாகிச் சஞ்சரிக்கிறது ஆபிரிக்கா, பாரசீகம், சீனு, இந்தியா என்னும் தேசங்களிலும், பல இந்திய தீவுகளிலுமே சிறுத்தை, அல்லது வேட்டைச்செம்புலியென்பது ஆசியா, ஆபிரிக்காகண்டங்களின் அனேக பாகங்களிற் சஞ்சரிக்கின்றது.

தோற்றம்.

சிவிங்கி, செம்புலி இரண்டும் ஏறக்குறைய ஒரே சாயலுள்ளவைகளாயிருப்பதினால், அது சிவிங்கி, இது செம்புலி என்கிற பேதம் தெளிவாய்த் தோன்றுகிறதில்லை. அவ்விரண்டினுள் சிவிங்கி பெரிது. அது பரிமாணத்தில் புலிக்கு இரண்டாம் தரமானது. அது முன்பின்

னக இரண்டு அடி உயரமும், வால் நீங்கலாக ஐந்து, ஆறு அடி நீளமுமுள்ளது. அதின் வால் கொஞ்சம் குறைய மூன்று அடி நீளம். அதின் உரோமம் குறுகி மிருதுவாயிருக்கும். பொதுவான வர்ணம் பொன்மை கலந்த கபிலம். அதின் சரீரத்தின் மேற்பகுதிகளிலும், தொடைகளிலும் வட்டமான கரும் புள்ளிகள் செறிந்திருக்கும். சிவிங்கி ஒரு மட்டான நீளமுள்ள தலையும், நிமிர்ந்த செவியும், மங்கிய பொன்மை வர்ணமான கண்களுமுள்ளது. அது முழுவதும் உக்கிரமான தோற்றமுடைய மிருகம். செம்புலி மூக்குத்தொடங்கி அடிவால் பரியந்தம் ஏறக்குறைய நான்கு அடி நீளமும், சிவிங்கியிலும் சற்றுக் குறைவான உயரமுமுள்ளது. அது சாதாரணமாய் ஒருவாறு பொன்மை வர்ணமுடையது. அதின் சரீரமுழுவதும் சிவிங்கியின் புள்ளிகளைப்பார்க்கிலும் அதிகமாய்ச் சிறுத்துச் செறிந்து துலக்கமற்றிருக்கும் கரும் புள்ளிகள் உண்டு. இவ்விரண்டு மிருகங்களின் பொதுவான தோற்றம் இதுவே. ஆகிலும் சிவிங்கிகளும், செம்புலிகளும் வர்ணத்திலும், சாயலிலும், புள்ளிகளின் பரிமாணத்திலும் ஒன்றுக்கொன்று பேதமாயிருப்பதும் உண்டு. சிவிங்கி, செம்புலி இரண்டும் சிறந்த சூட்சுமமான அவயவங்களையுடைய மிருகங்கள். அவைகளில் அதிகம் சிறந்தது செம்புலியே. புலியைப்போல் அவைகளும் பூனைச்சாதியைச் சார்ந்தவைகளாயிருப்பதினால் சாயல், கால், நகம், மேல் உதட்டின் உரோமம் ஆகிய இந்த இலட்சணங்களில்

அவைகள் புலிக்குச் சமானமுள்ளவைகளாயிருக்கின்றன. சிறுத்தையென்பது செம்புலியின் சம்பந்தமான ஒரு சாதிப்பிரிவு. அதின் சரீரம் செம்புலியின் சரீரத்தைப்பார்க்கிலும் அதிக நொய்மையானது, கால்களோ நீளமானவைகள். அதின் வர்ணம் துலக்கமான பொன்மை சேர்ந்த கபிலம். அதின் முதுகிலும், பக்கங்களிலும், மற்ற அவயவங்களிலும் திரளான சிறிய கரும்புள்ளிகள் உண்டு; அந்தப் புள்ளிகள் வால்நுனிபரியந்தம் தொடர்ச்சியாகச் செறிந்திருப்பதினால், அவைகள் பல மோதிரவளயங்கள் போலத்தோன்றும். சிறுத்தையின் செவிகள் குறுகி வட்டமாயிருக்கும். அவைகளின் அடியில் அகலமான கரும் புள்ளிகள் உண்டு.

சிவிங்கி, செம்புலி இரண்டும் உக்கிரமும், துஷ்டத்தனமும், தந்திரமுமுள்ளவைகள். அவைகளுக்கு இரத்தத்தின்மேல் அதிக வாஞ்சையுண்டு. சிவிங்கி செம்புலியைப்பார்க்கிலும் பெரிதாயிருப்பதினால், அதுவே அதிக பலமுடையது. அவை இரண்டும் மிகுந்த விரைவாய் ஓடுவதுமன்றி, மரங்களில் எளிதாக ஏறவும் தாவவும் கூடும். விசேஷமாய்ச் செம்புலியின் சரீரம் அதிகம் வளையத்தக்கதாயிருப்பதினால், அது ஆச்சரியப்படத்தக்க அவ்வளவு தூரத்தை எட்டிப்பாயவும், சர்ப்பம்போலத் தரையில் நகரவும் சக்தியுள்ளது. சிவிங்கி, செம்புலி என்பவைகள் அதிக விரைவுள்ளவைகளாகையால் அவைகள் மரத்தில் இருக்கிறபொழுது, அவைகள்மேல் குண்டு ஏறும்படிதுப்பாக்கியாற் சுடுவது மிகவும் அருமை.

இந்தியாவில் சஞ்சரிக்கிற சிவிங்கையைச் சுதேசிகள் "மரப்புலி" என்பார்கள். உக்கிரங்கொண்ட நாயானது குலைக்கின்ற சத்தமும், அவைகளின் சத்தமும் ஒன்றுக்கொன்று சமானமாயிருந்தும், அவைகளுடைய சத்தம் அதிக பலத்ததும் கரகரப்பானதுமாயிருக்கும். புலிச்சாதியைச் சார்ந்த மிருகங்களில் சிவிங்கி, செம்புலி இவ்விரண்டையும் சாதுவாக்குவது மிகவும் அருமை. அவைகளின் முகம் எப்பொழுது பார்த்தாலும் உக்கிரமான தோற்றமுள்ளதாயிருக்கும். அவைகள் ஓயாமல் மிணுமிணென்று உறுமிக்கொண்டிருக்கும். ஆகிலும் சில சிவிங்கிகள் சாதுவாக்கப்பட்டதும் உண்டு. எப்படியும் அவைகள் எப்பொழுதும் சாதுவானவைகளாயிராமல் அப்போதப்போது தங்கள் இயற்கையான குணத்தைக் காண்பிக்கிறதினால், அவைகளை நம்பி அசாக்கிரதையாயிருப்பது புத்தியல்ல. சிறுத்தை, அல்லது வேட்டைச்செம்புலியென்பது பூனைச்சாதிக்குரிய குணங்களனைத்தையும் உடையதாயிருப்பதுமன்றி, நாய்களுக்குரிய கூர்மையும் அறிவுமுள்ளதாகவும் இருக்கின்றது. அது எளிதாகச் சாதுவாக்கப்படும். அதின் சாதியிலுள்ள இதர மிருகங்களின் நகத்தைப்போல் அதின் நகம் அவ்வளவு சுருக்கப்படும் தன்மையுள்ளதல்ல. இந்த ஒரு விஷயத்தில் அதற்கும் அவைகளுக்கும் பேதம் உண்டு. அதின் கால்கள் நீண்டவைகளாயிருந்தும், அது சில மிருகங்களைப்போல் அத்தனை தூரம் ஓடமாட்டாது.

சிவிங்கி, செம்புலி, சிறுத்தை ஆகிய இந்த மிருகங்கள் வனத்தில் ஒதுக்கமாயிருக்கிற பகுதிகளிற் சஞ்சரித்து, சாதிசாதியான மான்களையும், தங்கள் வல்லமையினாலும் விரைவினாலும் மேற்கொள்ளக் கூடிய மற்றெல்லா மிருகங்களையும் மேல்விழுந்து அடித்துக்கொல்லும். மேலும் மிருகங்கள் தண்ணீர் குடிக்கும்படி வழக்கமாய்ப் போகிற ஆற்றங்கரைகளுக்குச் சமீபமான அடர்ந்த செடிகளின் மறைவிற் பதிவிருந்து, அவைகள் போதுமான தூரத்தில் வந்தவுடனே அவைகள்மேற் சடிதியாய்ப் பாய்ந்து அமுக்கியாவது, வயிற்றால் தவழ்ந்துபோய்ப் பிடித்தாவது அவைகளைக் கொன்று பட்சிக்கும். அவைகள் குரங்குகளையும் வேறு சிறு மிருகங்களையும் தொடர்ந்து மரங்களில் ஏறுவதும் வழக்கந்தான். வனங்களின் ஒதுக்கமான இடங்களில் அவைகளுக்குப் போதுமான இரை அகப்படாதிருக்குமானால், அவைகள் வெளிகளில் வந்து இரைதேடுவதுமுண்டு. சிவிங்கி அதிக பெரிய நாற்கால் மிருகங்களை அடித்துக்கொல்வதுமல்லாமல், குதிரைகளையும் ஒட்டைகளையும் சேதப்படுத்துவதுமுண்டு. செம்புலி வெள்ளாடு, செம்மறியாடு இவைகளையும், வேட்டைக்குரிய பலவித மிருகங்களையும் திரள் திரளாய்க் கொன்று பட்சிக்கும். மேற்சொல்லிய மூன்று வகுப்பான மிருகங்கள் சாதாரணமாய் மனிதனைப் பட்சிக்கிறதில்லை. பசியினால் அதிக வருத்தப்படும்பொழுதோ, அவைகள் மனிதர்களையும் பட்சிக்கும். வேட்டைக்காரன் அவைகளை நெருங்கித் தொடர்ந்து

போகும்பொழுது, அவைகள் திரும்பி அவனைக் கொல்வதும் வழக்கந்தான். சிவிங்கி செம்புலி இவைகளுக்குரிய வழக்கங்களே சிறுத்தைக்குமுரியவாயினும், அது அவைகளிலும் சிறிதாயிருப்பதினால், அத்தனையாய் உயிர்ச்சேதம் செய்கிறதில்லை. அது சாதுவாக்கப்பட்டிருக்கும்பொழுது மிகவும் விளையாட்டுத்தன்மையுள்ளது.

இரை.

இந்தச் சாதியிலுள்ள மிருகங்கள் எல்லாம் மாமிச பட்சிணிகள். அவைகள் எவ்வகை மாமிசமும் தின்னும். என்றாலும் அவைகள் செத்து அழுகின பிணத்தையாவது, வேறொரு மிருகம் கொன்று விட்டதையாவது தின்கிறதில்லை. சிவிங்கி செம்புலி இரண்டும் நரமாமிசத்தைக் காட்டிலும் மிருகங்களின் மாமிசத்தையே விருப்பமாய்த் தின்னும். ஆதலால் மனுஷர் அவைகளுக்குப் புலியைப்போல் அத்தனையாகப் பயப்படவேண்டுவதில்லை. விசேஷமாய்ச் செம்புலி அதிக இரை தின்னுமாயினும், அது எப்பொழுதும் இளைத்து மெலிந்திருப்பதாகத் தோன்றும்.

குட்டி.

சிவிங்கி, செம்புலி, சிறுத்தை என்னும் மிருகங்கள் குட்டிபோடுகிற விவரணம் அதிகமாய்த் தெரியாது. ஆயினும் அவைகள் புலியின் வகுப்பைச் சேர்ந்திருப்பதினால் ஒரு ஈற்றுக்குப் புலி எத்தனை குட்டிபோடுகிறதோ, அத்தனைகுட்டிகளையே அவைகளும் போடுமென்றும், புலியைப்போல் அத்தனை கருத்தாகவும் கவலையாகவும் தங்கள் குட்டிகளைப் பராமரிக்குமென்றும் நிதா

னிக்கலாம். சிவிங்கி சினைப்பட்டுக் குட்டிபோடுவ தற்கு ஒன்பது வாரம் செல்லும்; அதின்குட்டிகள் பிறந்த நாள்முதல் ஒன்பது நாள்வரையிற் கண்தி றவாதிருக்கும்.

**உபயோகங்கள்.**

சிவிங்கி, செம்புலி இவற்றின் இறைச்சி ருசிகரமும், கன்றின் இறைச்சி போல் அத்தனை வெண்மையுமாயிருக்கின்றது. ஆபிரிக்காகண்டத்தில் வாசமாயிருக்கிற காப்பிரிகள் அவைகளுடைய இறைச்சி, தோல் இவற்றினிமித்தம் அவைகளைப் படுகுழிகளில் விழுத்திப் பிடிப்பார்கள். பின்பு அவைகளின் பல்லை ஒடித்து, கழுத்தாபரணமும், கடகம் முதலிய ஆபரணங்களுமாகச்செய்து காப்பிரிப்பெண்கள் அலங்கார பூஷணங்களாகத் தரித்துக்கொள்வார்கள். மேலும் அவைகள் சூனியத்தைப் பலிக்கவொட்டாத ரட்சாபந்தனங்களாகவும் மதிக்கப்படும். ஐரோப்பாகண்டத்தில் வாசமாயிருக்கிறவர்கள் செம்புலித்தோலை மிகவும் மெச்சுவார்கள். அதிக சிறப்பான சில தோல்கள் ஒவ்வொன்று நூற்றைந்து ரூபாய்க்கு அதிகமாய் விலைப்படும். சென்னபட்டண ராஜதானியின் அதிபதியுடைய மெய்க்காவற் பட்டாளத்தார்களின் குதிரைக்கல்லணைகள் செம்புலித்தோலால் மூடப்பட்டு மிகுதியும் அலங்காரமாகத் தோன்றுகின்றன. சிறுத்தை, அல்லது வேட்டைச் செம்புலியென்பது இந்தியாவிலும் பாரசீகத்திலும் பெரும்பாலும், மான் வேட்டையாடுவதற்குப் பயிற்றப்படும். அதைச் சங்கிலியாற் கட்டி, அதின் கண்களை மூடி, ஒரு சிறு

பண்டியில் ஏற்றி, வேட்டையாடுகிற காட்டிற்கொண்டுபோய்விட்டு, வேட்டைக்காரர் மான் கூட்டங்களைக் கண்டவுடனே, அதை அவிழ்த்து அதற்கு அந்த வேட்டை மிருகங்களைக் காண்பிப்பார்கள். அது உடனே அவைகளைத் தொடர்ந்து விரைந்து போகாமல் அவைகளின் சமீபத்திற் சேருகிறவரையில், பதுங்கி மெல்லென நடந்து, பின்பு மிகவும் விரைவாக ஓடி நாலைந்து பாய்ச்சலில் அந்த மிருகங்களில் ஒன்றின்மேல் விழுந்து, க்ஷணப்பொழுதில் அதின் தொண்டையை நெரித்துக்கொல்லும்; அது முதல் பாய்ந்தபாய்ச்சலில் தான் தொடர்ந்த மிருகத்தைப் பிடிக்கக் கூடாமற்போனாலோ, அப்புறம் அதைத் தொடர்வதை நிறுத்தித் தன் எசமான் அழைக்கும்பொழுது அவனிடத்திற்குத் திரும்பும். திரும்பும்பொழுது அது மிகுந்த துயர் அடைந்து பெரும்பாலும் சோர்ந்திருக்கும். மைசூரின் சுல்த்தானாகிய திப்பு ஸாஹிப் என்பவன் கஎஅ௨-ம் வருஷத்தில் வேட்டையாடுவதற்காக அனேகம் சிறுத்தைகளை வளர்த்தான்.

கதைகள்.

கஅ௨0-ம் வருஷம் ஒரு அழகான சிவிங்கிக்குட்டி லந்தன் நகரத்தின் அரணான ஸ்தானத்தில் நூதனக் காட்சியாகக் காண்பிக்கப்பட்டது. அதைக் கப்பலில் ஏற்றி அங்கிலோதேசத்திற்குக் கொண்டுபோகையில், அது மிகவும் சாதுவாய்க் கப்பலின் கீழ்த்தட்டில் ஓடி விளையாடிக்கொண்டிருக்கும். அதை அங்கிலோ போர்க்கப்பல் தளகர்த்தன் ஒருவன் அரசனுக்கு வெகும

தியாகத் தன் வேலைக்காரப் பையனிடத்தில் ஒரு நாய்க்கூட்டில் விட்டுக் கொடுத்தனுப்பினன். பையன் மிருகாசயத்தண்டைபோய்ச் சேர்ந்தபொழுது, அதைக் கூட்டிலிருந்து எடுத்துத் தன் மார்பில் அணைத்து நெடுநேரமட்டும் அதினுடன் சீராட்டுப்பண்ணி அதற்கு முத்தங்கொடுத்து அதை விட்டுப் பிரிவதற்குச் சற்றுவது விருப்பமில்லாதவனுயிருந்தான். கடைசியில் அதிகமாய் மன முருகத்தக்க விதமாக அதற்குப் பிரயாணவந்தனம் சொல்லிப்போனுன். சிவிங்கிக்குட்டியும் அவனிடத்தில் அதிக பட்சம் காண்பித்தது. அது தன் புதிதான வாசஸ்தலத்திற் சேர்ந்து பழகுவதற்குச் சில காலம் சென்றது.

கொஞ்சக் காலத்திற்குமுன் மரணமடைந்த ஸர் அஷ்தன் லீவர் துரை லெஸ்தர் மாகாணத்திலுள்ள தமது வீட்டில் ஒரு செம்புலியைக் கூட்டில் விட்டு வளர்த்தார். அது வரவர மிகவும் சாதுவானதாகி, அதைச் சீராட்டுப்பண்ணிக் கவனமாய்ப் பார்க்கும்பொழுது, சந்தோஷங்கொண்டு, ஒரு பூனையைப் போல முறுகல் ஓசையிட்டுக் கூட்டின் கிறுதியில் உராஞ்சிக்கொண்டு நிற்கும். பின்பு மேற்படி அஷ்தன் துரை அதை அரணுன ஸ்தானத்திலுள்ள ராஜமிருகாசயத்திற்கு அனுப்பினர். அது அங்கிருக்கும்பொழுது, முன் அதற்கு அறிமுகமுள்ளவனுயிருந்த ஒருவன் அதைப் பார்க்கும்படி போயிருந்தான். அது அவனைப் பார்த்து ஒரு வருஷமாயினும், கண்டவுடனே நினைவுகூர்ந்து தன் வழக்கப்படி சீராட்டி விளையாடத் தொடங்கிற்று.

முன் இலங்கைத்தீவின் அரசாட்சியைச் சார்ந்த உத்தியோகஸ்தரான துரை ஒருவர் ஒரு சிறுத்தையைக் கண்டு அதனோடு எதிர்த்த சங்கதிகளைக் குறித்து எழுதுகிறதாவது.

"நான் கஅகக-ம் ஆண்டு இலங்கைத்தீவின் வடமுனையிலுள்ள யாழ்ப்பாணத்தில் இருந்தபொழுது, ஒரு நாள் அதிகாலையில் சாதாரணமாய் நித்திரையினின்று எழுந்திருப்பதற்கு இரண்டு ஒரு மணி நேரத்திற்குமுன், என் வேலைக்காரன் என்னை எழுப்பி "ஐயா, ஐயா ஊருக்குள்ளே ஒரு புலி வந்திருக்கிறதாம். தங்கள் நாய்களைக் கொண்டுபோவதற்கு ஜனங்கள் வந்திருக்கிறார்கள்" என்றான். என் நாய்கள் உயர்ந்த சாதி நாய்களாயினும் சீர்கெட்டவைகளாயிருந்தன. அவைகள் சுருண்ட ரோமமுள்ள ஒரு வகையான வேட்டைநாய்கள். அவைகள் மோப்பம்பிடிக்கும் சக்தியுள்ளவைகளல்ல. அவைகளுக்கு "பாளயப்பட்டு நாய்கள்" என்று பெயர். நரி வேட்டையாடுவதற்காக நான் அவைகளை விட்டிருந்தேன். நரிக்கும் புலிக்குமுள்ள பேதம் சொல்லவேண்டியதில்லை. இலங்கைத்தீவிலே புலி மருந்துக்கும் கிடையாது. செம்புலிகளும் சிவிங்கிகளும் உண்டு. அவைகளையே இங்குள்ள ஐரோப்பியரும் சுதேசிகளும் புலியென்பது வழக்கம். ஊருக்குள் வந்தது புலியல்ல, சிறுத்தை. என் துப்பாக்கி எத்தினமாயிருக்கவில்லை. உறுப்பு உறுப்பாய்க் கழற்றப்பட்டிருந்தது. வேலைக்காரன் அவைகளை எடுத்துப் பொருத்தி உருவாக்கிக்கொண்டிருக்கையில்,

கலெக்தர் துரையும் சீமையிலிருந்து சில காலத்திற்குமுன் வந்த வைத்தியர்கள் இருவரும் என் விட்டு வாசலில் வந்து "துப்பாக்கியைப்பற்றித் தாமதிக்கவேண்டாம். புறப்படும், போவோம்" என்றார்கள். அது எனக்குச் சமாதானமாயிருக்கவில்லை; ஆயினும் அவர்கள் சொற்படி போனேன். கலெக்தர் கையில் ஒரு துப்பாக்கியும், வைத்தியர்களிடத்தில் தலைக்கு ஒருபன்றிகுத்தும் ஈட்டியும் இருந்தன. சிறுத்தை ஒரு குடிசைக்குட் புகுந்திருந்தது. அந்தக் குடிசையின் மேற்கூரை குடைபோலத் தரைமட்டமாய்க் கவிந்திருந்தது. இலங்கைத்தீவில் இவ்விதமான குடிசைகளைக் கட்டுவது வழக்கம். அந்தக் குடிசைக்குள் போவதற்கு நாலு அடி உயரமுள்ள ஒரு வாசல் இருந்தது. சிறுத்தையைத் தாமதமில்லாமல் வெளிப்படும்படி செய்யவேண்டுமென்று கலெக்தர் சொல்ல, "நான் அப்படியல்ல, என் துப்பாக்கி வரட்டும்" என்றேன். அவர் என் பேச்சைத் தட்டி, "அல்லவே, குண்டுபோட்டுக் கெட்டித்த என் துப்பாக்கியும் இந்த இரண்டு ஈட்டிகளும் போதாவா" என்று சொன்னார். அவர் சொற்படியே வேலியில் இருந்த ஒரு கொம்பை எடுத்துவைத்துக் கொண்டு, என்ன நடக்குமோவென்று ஏங்கி நின்றேன். நொடிக்குள்ளே கோட்டையிலிருந்து சேனைத்தலைவரான துரை ஒருவரும், பீரங்கிப்பட்டாளத்தார் இருவரும், வேறொரு சேனைத்தலைவனும் வந்தார்கள். அவர்கள் வந்தது எனக்கு மிகுந்த சந்தோஷமாயிருந்தது. அவர்கள் வராதிருந்தால்,

எங்கள் சீர் எப்படியாகுமோ அது சொல்லவேண்டுவதில்லை. அடியில் வரும் சங்கதிகளால் அறியலாம். நான் சிறுத்தையை வெளிப்படுத்தி அதனோடு எதிர்ப்பதற்கு எத்தனமாக நிற்கையில், என் துப்பாக்கியும் வந்துசேர்ந்தது. ஏறக்குறைய இருபது அடிச்சதுரமான இடத்தில் பின்வரும் துயரமான நடக்கைகள் சம்பவித்தன. அந்த இடத்தின் மூன்று பக்கங்களில் பனையோலைவேலி அடைக்கப்பட்டிருந்தது; ஒரு பக்கத்தில் மேற்படி குடிசை இருந்தது. பீரங்கிப்பட்டாளத்தார் இருவரும் குடிசையின் வாசலில் நிற்க, கடைசியில் வந்த சேனைத்தலைவன் குடிசையின் கூரைமேல் ஏறி, சிறுத்தை வெளிப்படும்படி செய்வதற்காகக் கூரையைப் பிரிக்கத் தொடங்கினன். குடிசைகள் சாதாரணமாய்த் தென்னோலையால் மூடப்படுவதினல் கூரை பிரிப்பது பிரயாசமல்ல. பின்பு பீரங்கிப் பட்டாளத்தாரில் ஒருவன் குடிசைக்குள்ளே சிறுத்தையினிடத்திற் போகத் துணிந்தபொழுது, நாங்கள் அபாயம் உண்டாகுமென்று அஞ்சி, அவனைத் தடுத்தோம். கடைசியில் அந்தத் துஷ்ட மிருகம் அவன் மேற் பாய்ந்தது. அவன் அதின் தொண்டையிலே துப்பாக்கிச் சனியனைக் குத்தி அதன்மேல் ஒரு குண்டு பிரயோகித்தான். குண்டு அதின் கன்னத்தைப் பீறிக்கொண்டுபோனதுபோலிருந்தது. அதற்குக் காயம் அதிகமாயில்லை. துப்பாக்கிச் சனியன் ஒடிந்து, கொஞ்சம் குறைய மூன்று அங்குலமளவு துப்பாக்கியில் இருக்க, மீந்த துண்டு சிவிங்கியின் தொண்

டைக்குட் புதைந்து சிக்கியிருந்தது. உடனே அது முன்கால்களை உயர்த்தி எழுந்து, உரத்துக்கர்ச்சித்துக்கொண்டு, பீரங்கிப்பட்டாளத்தானுடைய மார்பில் இறுக்கிப்பிடித்து அவனை இழுத்து மல்காந்துகிடக்கும்படி கீழேவிழுத்தி, தானும் அவன்மேல் விழுந்தது. அப்பொழுது எங்களுக்குச் சொல்வதற்கு அரிய திகில் உண்டாயிற்று. சிறுத்தையைச் சுட்டால் பட்டாளத்தானும் மடிந்து போவானேயென்று பயந்து சற்றுத் தாமதித்து நின்றோம். அப்படி நிற்கையில், அவனுடன் நின்ற மற்றப் பட்டாளத்தான் அவனைப்போல் அதிக வீரதீரத்துடன் நெருங்கித் துப்பாக்கிச் சனியனால் சிவிங்கியின் தலையிற் குத்தினான். அது அவன்மேற் பாயும்படி எத்தனித்துநிற்க, அவன் ஒரு குண்டு பிரயோகித்தான். அந்தக் குண்டு அதின்மேற் பட்டுக் காயம் உண்டாகும்படி செய்த்தினால் சிறுத்தை சற்றுத் தள்ளாடிப் பின்வாங்கிற்று. உடனே நாங்கள் எல்லாரும் அதின்மேற் குண்டுகளைப் பிரயோகித்தோம். பின்னும் அது துடித்துக் காலை உதறிக்கொண்டிருந்தது. அப்பொழுது ஈட்டி வைத்திருந்த துரைகள் இருவரும் அதின்மேல் ஈட்டிகளைப் பாய்ச்ச, சுதேசிகள் சிலர் வேலிக்கொம்புகளால் அதின் சிரசில் அடித்துக் கொன்றார்கள். மேற்சொல்லிய வீரனாகிய பட்டாளத்தானுக்கு மிகுந்த காயமில்லை. சிறுத்தையின் தோல் அவன் கேட்டுக்கொண்டபடி அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அதின் தலையை வெட்டிப் போடவேண்டுமென்று சுதேசிகள் உரத்த சத்தமா

ய்க் கூவினார்கள். வெட்டினபொழுது கத்தி தொண்டையில் ஏறியிருந்த சனியன் துண்டில் முட்டிற்று. அந்த மிருகம் வாலின் அடிதொடங்கி மூஞ்சிவரைக்கும் சரியாய் நாலடி நீளமுள்ளதாயிருந்தது. அதற்குமுன் எப்பொழுதாவது சிறுத்தை யாழ்ப்பாணத்திற்கு வந்ததென்று சொல்லக் கேட்டதில்லை. பார்க்குமிடத்தில் அது ஏறக்குறைய இருபது மைல் தூரத்திற்கு அப்புறமிருந்து வந்திருக்கவேண்டும்; அல்லது கிட்டத்தட்ட இரண்டு மைல் அகலமுள்ள கடற்கால்வாய் ஒன்றைத் தாண்டிவந்திருக்கவேண்டும்" என்பதே.

## சிறுசிவிங்கியும், பாரசீகசிவிங்கியும்.

எத்தேசங்களில் உள்ளது.

"லிங்ஸ்" என்னும் சிறு சிவிங்கி ஐரோப்பா, ஆசியா, அமெரிக்காகண்டங்களின் குளிர் அதிகரித்த தேசங்களில் உள்ளதாகக் காணப்படுகின்றது. அது பரிமாணத்திலும், வர்ணத்திலும் அங்கங்கே சற்றுப் பேதமுள்ளதாயிருக்கின்றது. "காரைக்கல்" என்னும் பாரசிகசிவிங்கி உஷ்ணதேசங்களில்மாத்திரம் சஞ்சரிக்கின்றது. அது ஆசியாவிலுள்ள பாரசீகம், வட இந்தியா இவைகளிலும், ஆபிரிக்காவிலுள்ள பார்பரிதேசத்திலும் சாதாரணமாயுண்டு. அதற்குப் பாரசிகபாஷையில் "ஸேயா கோஷ்" எனப் பெயர் வழங்கும்.

இந்த இருவகையான மிருகங்களும் பூனைச்சாதியைச் சார்ந்தவைகள். அவைகளுக்கு நீண்ட செவியும், செவியின் முனைகளில் முடிச்சுப்போன்ற மயிரும், குறுகிய வாலும், பின்பக்கம் உயர்ந்த முதுகும் உண்டு. இந்த விஷயங்களில் அவைகளுக்கும் பூனைச்சாதியிலுள்ள மற்ற மிருகங்களுக்கும் பேதம் உண்டாயிருக்கின்றது. சிறு சிவிங்கி வால் நீங்கலாக இரண்டரை அடிமுதல் மூன்று அடிவரையில் நீளமும், ஏறக்குறையப் பதினைந்து அங்குலம் உயரமுமுள்ளது. அது அந்தந்தப் பருவகாலங்களுக்கும் தேசத்தின் உஷ்ணசீத அளவிற்கும் தக்கதாக வர்ணத்தில் விகாரப்படும். ஆயினும் அது பெரும்பாலும் இளஞ்சிவப்புச் சேர்ந்த துலக்கமற்ற வெண்மைநிறமுடையது. அதின் முதுகுமுதலிய மேற்புறங்களில் துலக்கமாய்த் தோன்றாத கரும்புள்ளிகள் இருக்கும். அதின் உரோமம் அதிக தடிப்பும் மிருதுவுமானதாயிருக்கும். அதின் கண்கள் வெளிறிய பொன்மைநிறமும், பிரகாசமும், கூர்மையுமுள்ளவைகள். அது சாதுவான தோற்றமுள்ளது. அது துள்ளாட்டமும் வசீகரமுமான சாயலையுடையதாகத் தோன்றும். பாரசீகசிவிங்கியும் சாதாரண சிறு சிவிங்கியும் ஏறக்குறைய ஒரே பரிமாணமுடையவைகள். மேலும் சரீரத்தின் உருவத்திலும் தலையின் சாங்கத்திலும் பாரசீகசிவிங்கி சிறு சிவிங்கிக்குச் சமானமுள்ளதாயிருக்கின்றது. அதின் வர்ணம் வெளிறிய இளஞ்சிவப்புக்கபிலம். அதின் சரீரத்திற் புள்ளி இல்லை; உரோமம் அதிக விறைப்பா

னது; வால் நீண்டது; முகம் ஒரு போக்கானது. இந்த விஷயங்களில் அதற்கும் சிறு சிவிங்கிக்கும் வித்தியாசமுண்டு. அதின் கருஞ்செவிகளினிமித்தம் அதற்கு "ஸேயா கோஷ்" என்று பெயர் உண்டாயிற்று. மேலும் அதின் முகம் சாதாரண சிறு சிவிங்கியின் முகம்போல் அத்தனை சாதுவான தோற்றமுள்ளதல்ல.

குணவிசேஷங்கள்.

இந்த மிருகங்கள் பூனைச்சாதியைச் சார்ந்த மற்ற மிருகங்களைப்பார்க்கிலும் குறைந்த தீரமுள்ளவைகளாயிருப்பதுமன்றி வெடுவெடுப்பும், சந்தேகத்திற்கு ஏதுவான தோற்றமும், மிகுந்த தந்திரமுமுள்ளவைகளாகவும் இருக்கின்றன. அவைகள் கோநாய்களும் காட்டுநாய்களும் ஊளையிடுவதற்கு ஒப்பாகச் சத்தமிடும். அவைகளுக்கு யாராவது கோபம் மூட்டும்பொழுது, அவைகள் அதிக உக்கிரங்கொண்டு, ஒருவகையாய் முறுகிக் கதறுவதினால், தங்கள் கடுங்கோபத்தை வெளிப்படுத்தும். அவைகள் பூனையைப்போல் ஓடிப் பாய்ந்து துள்ளித்திரியும்; மரங்களில் அதிக விரைவாய் ஏறும். அவைகளுக்கு மிகவும் கூர்மையான பார்வையுண்டு. ஆதலால் இரைக்குரிய மிருகங்கள் மிகுந்த தூரத்தில் இருக்கிறபொழுதிலும் அவைகள் அந்த மிருகங்களைக் கண்டறியக்கூடும். பாரசீக சிவிங்கியைச் சிறு பருவத்திற் பிடித்து வெகு சாவதானமாய் வளர்த்தால், அதைச் சாதுவாக்கலாகும். சிறு சிவிங்கியோ அளவற்ற உக்கிரமுள்ளதாயிருப்பதி

ஞல், அதை எதுவிதத்திலும் சாதுவாக்குதல் கூடாது.

வழக்கங்கள்.

சிறுசிவிங்கி, பாரசீகசிவிங்கி என்னும் மிருகங்கள் மரம் அடர்ந்த காடுகளிற் சஞ்சரித்து, புதராயிருக்கின்ற ஒதுக்கிடங்களில் மறைந்திருக்கும். அவைகள் உயர்ந்த மரங்களில் ஏறி, அணில்களையும் பட்சிகளையும் தொடர்ந்து பிடிப்பதும் வழக்கம். மேலும் சிறுசிவிங்கி மரங்களில் ஏறி, கொம்புகளின் மறைவில் உட்காந்திருந்து, மான், ஆடுமுதலிய பெருமிருகங்கள் சமீபமாய் வருகிற சமயம்பார்த்து, அவைகள்மேற் பாய்ந்து அமுக்கித் தொண்டையை நெரித்து, இரத்தம் குடித்து, பின்பு அவைகளைவிட்டு வேறு, இரைகளைத் தேடிச்செல்லும். சிறுசிவிங்கி சஞ்சரிக்கின்ற இடத்திற்குச் சமீபமாய் ஆட்டுமந்தைகள் அடைக்கப்பட்டிருப்பதுண்டானுல், அது பட்டியின் வாசற்படலுக்குக்கீழே நிலத்தைக் குடைந்து உட்சென்று, இடையனல் தடுக்கப்படாதிருந்தால், ஆடுகளைப் பட்சித்து மிகுந்த சேதம் உண்டாக்கும். இடையன் அதை எதிர்த்தால், அது மல்காந்து விழுந்து அவனுக்கு அதிக காயம் உண்டாகும்படி காலால் விசிநகங்களாற்பீறும். பாரசீகசிவிங்கியானது மிருகங்களைப் பிடித்துப் பட்சிப்பதில் சிறு சிவிங்கியைப் போல் அத்தனை சமர்த்துள்ளதல்ல. ஆனதன்மையால், அது சிங்கத்திற்குப் பின்சென்று, அது தின்றுவிடுகிற உச்சிட்டத்தைத் தின்னும். இதினிமித்தம் அதை அராபியர் "சிங்கத்தின் கூட்டாளி" என்

பார்கள். சிங்கம் இரைதேடிப்போகிறவேளையில் இதைப் பட்சிக்கும்படி திரும்பினால், இது அடுத்த மரத்தில் ஏறித் தப்பித்துக்கொள்ளும்.

இரை.

இந்த மிருகங்கள் நானாவித மாமிசங்களைப்பட்சிப்பதுமல்லாமல், சிலவேளை நீரில் இறங்கி மீன்களைப் பிடித்துப் பட்சிப்பதுமுண்டு. சிவிங்கி தான் பிடிக்கின்ற செம்மறியாட்டையாவது, வெள்ளாட்டையாவது முழுமையும் தின்னாமல், அதிற் சிறிதுமாத்திரம் தின்னும்.

குட்டி.

மேற்சொல்லிய மிருகங்கள் ஈற்றுக்கு இரண்டு மூன்று குட்டி போட்டு, காட்டிலுள்ள செடிமறைவுகளில் அவைகளைப் பத்திரமாகவைத்துப் பராமரிக்கும்.

உபயோகங்கள்.

சிவிங்கி தடித்து மிருதுவாகிய ரோமத்தை உடையதாயிருப்பதினால் அது மனிதருக்கு உபயோகமான மிருகம். பெரும்பாலும் அது சஞ்சரிக்கின்ற தேசம் எத்தனை அதிக குளிர்ச்சியுள்ளதாயிருக்கின்றதோ, அதின் உரோமமும் அத்தனை அதிகமாய்த் தடித்திருக்கும். வெளிறின, அல்லது சற்று வெண்மையான வர்ணம்பொருந்தி, துலக்கமான புள்ளிகளையுடைய அதின் தோல் மிகுந்த சிறப்பும், மெதுவும், அனலுமுள்ளதாயிருப்பதினால், அதிக விலைக்கு விற்கப்படும். வட ஆசியாவிலிருந்து சிறுசிவிங்கித் தோல் வருஷம்தோறும் சீனதேசத்திற்கும் ஐரோப்பாதேசத்திற்கும் திரளாய்அனுப்பப்படும். சில

வேலை பாரசிகசிவிங்கிக்கு வேட்டை பழக்குவது முண்டு. அது முயல், வெள்ளைமுயல் முதலிய சிறு நாற்கால்மிருகங்களை மிகவும் சமர்த்தாகத் தொடர்ந்து பிடிக்கும். ஆயினும் தன்னிலும் அதிக சௌரியமுள்ள மிருகங்களைக் கண்டால், அது மனம் தளர்ந்து பின்வாங்கும் என்பார்கள். கொக்கு, நாரை, கூழைக்கடா, மயில் முதலிய பெரும்பட்சிகளை அது சடிதியில் அமுக்கிச் சமர்த்தாய்க் கீழ்ப் படுத்திப் பட்சிக்கும். அது மிருகங்களைப் பிடிக்கும்பொழுது, அவைகளை வாய்க்குள் அடக்கி நெரித்து, சற்றுநேரமளவும் அசைவின்றி அவைகள் மேற் படுத்திருக்கும்.

## கழுதைப்புலி.

எத்தேசங்களில் உள்ளது. கழுதைப்புலியென்பது வரிப்புலி, புள்ளிப்புலி, சடைப்புலியென மூவகைப்படும். அவற்றுள் வரிப்புலி ஆபிரிக்காகண்டத்திலுள்ள பார்பரி, எகிப்து, அபிசினியாதேசங்களிலும், ஆசியாகண்டத்திலுள்ள சீரியா, பாரசீகம், இந்தியாதேசங்களிலும் உற்பத்தியானது. புள்ளிப்புலியும் சடைப்புலியும் தென்ஆபிரிக்காவிற் சஞ்சரிக்கின்றன; அவைகள் நன்னம்பிக்கைமுனைநாட்டில் திரளாயுண்டு. அங்குள்ளவர்கள் புள்ளிப்புலியைப் "புலியோநாய்" என்பார்கள்.

கழுதைப்புலியின் வகுப்பிலுள்ள மிருகங்கள் நாய்ச்சாதியைச் சார்ந்தவைகள். வரிக்கழுதைப்புலி பாதம் தொடங்கித் தோள்வளையில் பத்தொன்பது அங்குல முதல் இருபத்தைந்து அங்குலமட்டும் உயரமுள்ளது. மூஞ்சிமுதல் வால்பரியந்தம் அதின் நீளம் ஏறக்குறைய மூன்றேகால் அடி. அதின் வர்ணம் கபிலம் சேர்ந்த நரை. அதின் சரீரத்தில் இடையிடையே இருண்ட கபிலமான குறுக்குப்பட்டைகள் உண்டு. அதின் நடுமுதுகில் தொடர்ச்சியாக ரோமம் வளர்ந்து நிமிர்ந்திருக்கும். அந்த ஜெந்து மார்பு, தோள், கழுத்து இவைகளில் அதிகபலமுள்ளது; ஆயினும் அதின் பின்பக்கம் தாழ்ந்து, பின்கால்கள் மெலிந்திருக்கும். அது மோப்பம் பிடிக்கின்ற நாயைப்போலத் தலைகுனிந்து நடக்கும். புள்ளிக்கழுதைப்புலி சாதாரணமாய் உருவத்திற் சிறியதாயினும், அதின் சாயல் வரிக்கழுதைப்புலியின் சாயலுக்கு ஒத்ததாயிருக்கும். சாதாரணமாய் அதின் உரோமத்தின் வர்ணம் துலக்கமற்ற பொன்மை. அதற்கு இடைக்கிடையே சற்றுக் கருமையான கபிலவர்ணப்புள்ளிகள் உண்டு. அதின் மூஞ்சி கறுத்திருக்கும். அதின் பிடருரோமம் வரிப்புலிக்கு இருப்பதுபோல் அத்தனை நிறைவுள்ளதல்ல. அது மூர்க்கமும் கோபமுமான தோற்றமுள்ளது. சடைக்கழுதைப்புலிக்கு உரோமம் அதிகமாய் நீண்டு பருத்துச் சடை பற்றியிருக்கும். அதின் பொதுவான வர்ணம் நரைக்கபிலம்.

தோற்றம்.

குணவிசேஷங்கள்.

கழுதைப்புலி குரூரமும் மூர்க்கமுமுள்ள மிருகம். அது இயற்கையாய் ஒரு இடத்தில் அடைக்கப்பட்டிருக்க விரும்புகிறதில்லை. அதை ஒடுக்கமான கூட்டில் விட்டிருக்கும்பொழுது அது மிகவும் சிரமப்பட்டு அதிகமாய் உக்கிரங்கொள்ளும். அதினுடைய சத்தம் செவிக்கு இனிதல்ல. அது அழத்தொடங்கும்பொழுது அதின் சத்தம் மனிதர் புலம்புகின்ற பாவனையாகவும், ஓயும்பொழுது வாந்தி செய்வதற்கு ஓக்காளிக்கின்ற பாவனையாகவும் இருக்கும். அது கொள்ளையாடும் தன்மையுள்ள மிருகம். அது ஒருவாறு தீரமுள்ளதாயிருப்பதினால், தன்னிலும் அதிக பலமுள்ள மிருகங்களுடனும் எதிர்க்கும். ஒரு முறை ஆபிரிக்காதேசத்தில் ஒரு வரிக்கழுதைபுலி இரண்டு சிங்கங்கள்மேல் நெருங்கி விழுந்து அவைகளைப் புறங்காட்டி ஓடும்படி செய்தது. இந்த மிருகத்தின் கண்கள் இருட்டில் பிரகாசமுள்ளவைகளாகத் தோன்றும். இதற்குப் பகலிலும் இரவில் அதிக நன்றாகக் கண் தெரியுமென்று எண்ணுகிறார்கள். வரிக்கழுதைப்புலி ஓடத்தொடங்கும்பொழுது பார்த்தவர்கள் அதின் பின் கால்களில் ஒன்று முறிந்துபோயிற்றென்று நினைப்பதற்கு ஏதுவாய்ச் சற்றுநேரமட்டும் நொண்டி நொண்டி ஓடும். அதின்மேல் சிறிதும் நொண்டுதல் இல்லாமல் மிகுந்த விரைவாய் ஓடும். இத்தன்மை அதினிடத்தில் ஆச்சரியப்படத்தக்க விசேஷமாயிருக்கின்றது. புள்ளிக்கழுதைப்புலியும், வரிக்கழுதைப்

புலியும் குணுகுணங்களில் ஒன்றுக்கொன்று ஒத்தி ருக்கின்றன. அவைகளுக்குத் தாடைகள் அதிக பலமுள்ளவைகளாயிருப்பதினால், அவைகள் எவ்வி தக் கடின எலும்புகளையும் சின்னபின்னமாகக் கடி த்து நொறுக்கும். மேலும் அவைகளுக்கு நாசிப் புலன் அதிகரித்திருக்கும். சில வேளை புள்ளிக்க ழுதைப்புலியானது காடுகளிற் பிரயாணஞ்செய்கிற வழிப்போக்கர்களை நயவஞ்சனையாய் அழைத்து நா சப்படுத்துவதற்கு, நகைக்கிறபாவனையாகச் சத்த மிடுவதினால், அதற்கு "நகைக்கழுதைப்புலி" என் றும் பெயர் உண்டு.

வழக்கங்கள். மேலும் வரிக்கழுதைப்புலி, புள்ளிக்கழுதைப் புலி இவை இரண்டும் வழக்கங்களி லும் சமானமுள்ளவைகளாயிருக்கி ன்றன. அவைகள் பெரும்பாலும் மலைச்செறிவான இடங்களிலும், குகைகளிலும் சஞ்சரிப்பதுமல்லா மல், தரையிலே குழிதோண்டி வாசம்பண்ணுவது முண்டு. சடைக்கழுதைப்புலி முக்கியமாய்க் கட ற்கரைக்குச் சமீபத்திற் சஞ்சரித்து, அங்கே அகப் படும் செத்த மிருகங்களையும், சமுத்திரத்தின் அலை யினால் தள்ளப்பட்டுக் கரையடைந்திருக்கிற திமிங் கிலமுதலிய சீவனில்லாத மச்சங்களையும் பட்சிக் கிறதாகத் தெரியவருகின்றது. அதற்கு இரை அகப் படாமல் அது பட்டினியால் வருந்தும்பொழுது, ஆடுமாடுகள்மேல் விழுந்தடித்து அவைகளைப் பட் சிக்கும். கழுதைப்புலிகள் இராத்திரிதோறும் இ ரைதேடித் திரிவது வழக்கம். அவைகள் தங்கள்

சிவனைத் தப்பித்துக்கொள்வதற்கன்றி மற்றப்படி ஒருபொழுதும் மனிதனைப் பீறுகிறதில்லை. இயற்கையாய் அவைகள் தனிமையாகச் சஞ்சரிக்கும் தன்மையுள்ளவைகள். ஆயினும் சில காலங்களில் அவைகள் ஒரு கூட்டமாகச் சேர்ந்து, யுத்தகளத்தில் இறக்கிற மனிதருடைய மாமிசத்தைப் பட்சிக்கும்பொருட்டாக, படையெடுத்துச் செல்லுகின்ற இராணுவவீரரைத் தொடர்ந்துபோவதுண்டு. அவைகள் சஞ்சரிக்கின்ற தேசங்களிலுள்ள ஆடுமாடுகளைத் திரளாக நாசப்படுத்தும். அவைகள் நிலத்திற் புதைக்கப்பட்ட பிரேதங்களைக் கிளறித் தின்னும். அந்த மிருகங்கள் இராத்திரிகாலத்தில் இரைதேடித்திரியும்பொழுது அடிக்கடி அச்சம் உண்டாகத்தக்கதாக உரத்து ஊளையிடுவதினால், தங்களை எளிதிற் காட்டிக்கொடுக்கின்றன. மேலும் அவைகள் சில காலங்களில் தந்திரமாய் ஆடு, மாடு, கழுதை, குதிரை இவைகளைப்போல் அழ, மேற்சொல்லப்பட்ட மிருகங்களின் குட்டிகள் அந்தச் சத்தம் தங்கள் தங்கள் ஜாதியான மிருகங்களின் சத்தமென்று எண்ணிச் சமீபத்தில் வரும்; வரவே அவைகள் அந்தக் குட்டிகளைப் பிடித்துப் பட்சிக்கும். நன்னம்பிக்கைமுனைநாட்டில் அவைகள் ஹொற்றிங்தோஷியருடைய குடிசைகளுக்குட் புகுந்து குழந்தைகளைப்பிடித்துக்கொண்டு ஓடிப் பட்சிக்கும்.

இரை. வரிக்கழுதைப்புலியும், புள்ளிக்கழுதைப்புலியும் எவ்வளவு தின்றாலும் அவைகளுடைய பசி தணிகிறதில்லை. அவை

கள் சீவனுள்ள மிருகங்களைப் பிடித்துப் பட்சிப்பதுண்டு. ஆயினும் அவைகள் அதிக ஆவலுடன் தின்கிற முக்கியமான இரை செத்து அழுகி நாற்றம் எடுக்கின்ற பலவிதமான பிணங்கள். தங்கள் சாதியான மிருகங்களின் பிரேதங்களையும் அவைகள் தள்ளாமல் தின்னும். மாமிசம் அகப்படாதிருக்கும்பொழுது, அவைகள் பயிர் பூண்டுகளின் கிழங்குகளையும், பேரீந்து முதலிய மரங்களின் இளந் தழைகளையும் தின்னும்.

குட்டி.

கழுதைப்புலிகள் நாய்ச்சாதிகளைச் சார்ந்தவைகளாயிருப்பதினுல், அவைகளுடைய ஈற்றுக்காலங்களின் கிரமமும், அவைகள் போடுகின்ற குட்டிகளின் தொகையும் நாய்களைப்போலவே இருக்கும். ஆயினும் இதுவிஷயத்தைப்பற்றி உறுதியாக ஒன்றும் தெரியவில்லை.

உபயோகங்கள்.

கழுதைப்புலிகள் நாற்றம் எடுக்கின்ற பிணங்களைப் பட்சிப்பதினுல், அவைகள் தேச சுவாத்தியத்திற்கு உபயோகமாயிருக்கின்றன. அங்கங்கே கிடந்து நாறுகின்ற பெரு மிருகங்களின் பிரேதங்களை அவைகள் பட்சிக்க அசௌசம் நீங்கும். அந்தப் பிரேதங்கள் இவ்வாறு பட்சிக்கப்படாதிருக்குமானுல், அவைகள் மூலமாய் ஆகாயத்தில் நச்சுக்காற்று உண்டாகிப் பெருவாரிநோய்களைப் பிறப்பிக்கும். முற்காலத்தில் நன்னம்பிக்கைமுனைநாட்டில் கழுதைப்புலிகள் இராத்திரிதோறும் வீதிகளிலும் இறைச்சிக்கடைகளிலும் திரிந்து, அங்கே விழுந்திருக்கி

ன்ற இறைச்சித்துண்டு, எலும்பு, தோல்முதலிய வைகளைப் பட்சித்து, அவ்விடங்களைச் சுத்திசெய் வது வழக்கமாயிருந்தது.

ஆபிரிக்காதேசத்திலுள்ள புள்ளிக்கழுதைப்புலி கள் அதிக உக்கிரமுடையவைகளாயிருந்தும், அவை களை அங்குள்ள கிராமங்களில் வாசமாயிருக்கின்ற குடிகள் தங்கள் வீடுகளில் வளர்த்துச் சாதுவாக் குவார்கள். எசமான்களிடத்தில் பட்சமாயிருப்ப திலும், விவேகத்திலும், வேட்டையாடுவதிலும் நாய் களைப்பார்க்கிலும் அவைகளே அதிக உபயோகமா னவைகளாயிருக்கின்றன.

ஆயிரத்து எண்ணூற்று முப்பதாம் வருஷமளவில் லந்தன் நகரத்திலுள்ள எக்ஸிற்றர் சாலையில் ஒரு வரிப்புலிக்குட்டி இருந்தது; அப்பொழுது அதற்குப் பருவம் ஆறு மாசம்; அது மிகவும் சாதுவாக்கப்பட்டிருந்ததினுல், அதை அப்போதப்போது கூட்டில் நின்று வெளிப் படுத்திச் சாலையில் ஓடித்திரிய விடுவார்கள். எவர்க ளாவது கிட்டப்போய் அதைத் தொட்டாலும், அது சற்றும் வெறுப்புக் காட்டாமலிருக்கும். அந்தச் சாலையில் போகிற நாய்களுடன் அது சந்தோஷ மாய் விளையாடும். எப்படியும் அது வளரவளர வெடுவெடுப்பும் துஷ்டகுணமும் கொள்ளத் தொ டங்கிற்று. பின்பு காட்டுமிருகங்களைச் சேர்த்துக் கொண்டு அங்கங்கே திரிந்து நூதனங்காட்டுகிற ஒருவனுக்கு அது கிரயத்திற்குக் கொடுக்கப்பட் டது. அவன் அதை அதிக கட்டாயமாய் அடைத்

கதைகள்.

துவைத்திருந்ததினால், அது சீக்கிரத்தில் மிகுந்த மூர்க்கமுள்ளதாகி, அதைப் பார்த்து அதினுடன் சிராட்டுப் பண்ணும்படி போயிருந்தவர்களைத் தனக்குச் சமீபத்திற்செல்ல ஒட்டாதிருந்தது. அதின் மேல் அது நெடுங்காலம் சீவனோடிருக்கவில்லை. நாளுக்குநாள் மெலிவுற்றுக் கடைசியில் இறந்து போயிற்று.

ஆபிரிக்காதேசத்திலுள்ள புள்ளிக்கழுதைப்புலி ஒன்றைக்குறித்து ஒரு வேடிக்கையான கதை சொல்லப்பட்டிருக்கின்றது. கேப்தவுன் என்னும் நகரத்திற்குச் சமீபமான ஒரு இடத்தில் ஒரு இராத்திரி சில இராணுவசேவகர் விருந்துகொண்டாடினார்கள். அவர்களில் ஒருவன் எக்காளம் ஊதும் இராணுவ சேவகன். அவன் மது உண்டு வெறிகொண்டிருந்ததினால், அவனை வெளியில் இட்டுக்கொண்டுபோய், வெறிதெளியும்படி நிறுத்தினார்கள். அப்பொழுது கழுதைப்புலி ஒன்று மதுவாசனை பிடித்து அவனிடத்திற்குப் போய், அவனை மல்லாக்கத் தள்ளி விழுத்தி இழுத்துக்கொண்டு பீடமலைச்சாரலுக்கு நேரே போயிற்று. அதுவழியில் அந்தப் புலி அவனைச் சவமென்று எண்ணித் தனக்குத் திர்ப்தியுண்டாகும்படியான இரை வாய்த்ததென்று சந்தோஷப்பட்டிருந்தது. இப்படி இருக்கையில் அந்த மனுஷன் வெறிதெளிந்து எழுந்து, தனது அபாய நிலைமையைக்கண்டு, தன் இடுப்பிற் கட்டப்பட்டிருந்த எக்காளத்தை எடுத்து உரத்து ஒலிக்கும்படி ஊதினான். எக்காளச்சத்தம் கேட்டு, அந்தக் கழுதைப்புலி தன

க்குள்ளே பயந்து சற்றும் நில்லாமல் ஓட்டம்பிடித்தது. அவன் ஒரு எக்காளவாத்தியக்காரனுயிருந்த நிமித்தம் இவ்வாறு தந்திரமாகத் தப்பித்துக் கொண்டான். மற்றொருவன் அந்தத் தறுவாயில் அகப்பட்டால் கழுதைப்புலிக்கு இரையாகாமல் போவானு?

மேற்சொல்லிய மிருகங்கள் அளவற்ற வலிமையுடையவைகளென்பதை இதின் அடியில் வரும் கதையால் அறியலாம். அதிலுள்ள சங்கதிகள் லந்தன் நகரத்தில் நடந்தன. ஜனங்களுக்கு நூதனமாகக் காண்பிக்கும்பொருட்டு ஒரு புள்ளிக்கழுதைப் புலி கூட்டில் விடப்பட்டிருந்தது. அந்தக் கூடு சற்றே பழுதாய்ப் போயிருந்ததினுல் அதைத் தச்சன் ஒருவன் பழுதுபார்க்கத் தொடங்கி, அதின் அடியில் ஏழு எட்டு அடி நீளமுள்ள ஒரு கனங்கொண்ட பலகையைப் பதித்து, அதற்கு ஏறக்குறையப் பன்னிரண்டு ஆணிகளை அறைந்தான். அந்த ஆணிகள் எல்லாம் கையின் நடுவிரலைப்பார்க்க நீளமானவைகளாயிருந்தன. அந்தப் பலகையின் ஒரு முனையில் அறையப்பட்ட ஆணி முழுமையும் ஏருமல் மற்ற ஆணிகளைப்பார்க்கிலும் சற்றே மிதந்திருந்ததினுல், தச்சன் அதை மட்டமாய்த் தறிப்பதற்குத் தகுதியான உளி எடுத்துவரும்படி கம்மியசாலைக்குப் போயிருந்தான். அவன் போயிருக்கையில், சில ஜனங்கள் கழுதைப்புலியைப் பார்க்கும்படி கூட்டினிடத்திற்கு வந்தது கண்டு, புலிக்காரன் அதைத் தச்சன் பலகை பதித்த அறையில் வரும்படி

விட்டான். அது அந்த அறைக்குள் விடப்பட்டவுடனே பலகைக்குமேல் மிதந்திருந்த ஆணியைக் கண்டு, அதைத் தன் பல்லாற் கடித்து அசைத்துப் பிடுங்கி, மற்ற ஆணிகளையும் இழுத்து, பலகையைக் கிளப்பிற்று.

## குள்ளநரி.

எத்தேசங்களில் உள்ளது

குள்ளநரி ஆசியாகண்டத்திலுள்ள இந்தியாதேசத்திலும், உஷ்ணம் அதிகரிப்பாயும், உஷ்ணம் சீதம் இரண்டும் மத்தியமமாயும் இருக்கின்ற மற்றப் பாகங்களிலும் சஞ்சரிக்கின்றது. அது ஆபிரிக்காகண்டதிலும் பல இடங்களில் உண்டு.

தோற்றம்.

குள்ளநரி நாய்க்குலத்தைச் சார்ந்தது. அதின் சாயல் நாயின் சாயலுக்கு ஒப்பாயிருக்கும். மூக்குத்தொடங்கி அடிவால்வரையில் அதின் நீளம் சராசரி இரண்டரை அடி. பாதம்தொடங்கி முதுகின் உயரமான பகுதிவரைக்கும் உயரம் ஏறக்குறைய ஒன்றரை அடி. அதின் வர்ணம் இளம்பசுமை கலந்த பொன்மை, அல்லது சற்றுப் பொன்மை சேர்ந்த நரை. முதுகு கருமை அடைந்திருக்கும். அதின் செவிகள் மிகவும் சிவந்து நிமிர்ந்திருக்கும். மூஞ்சி கூர்மையுள்ளதாயிருக்கும். அதின் உடல் விறைத்த உரோமத்தால் மூடப்பட்டிருக்கும். பொதுவாக அது காட்டுத் தன்மையான தோற்றமுள்ளது.

குள்ளநரிகளும் நாய்களும் பெரும்பாலும் ஒரே தன்மையானவைகள். குட்டிகளாயிருக்கும்பொழுது அவைகளைப் பிடித்து வளர்த்தால் எளிதிற் சாதுவாக்கலாம். அவைகள் மனிதருடன் சேர்ந்து, தங்கள் வாலை ஆட்டுவதினால் அவர்களை உபசரிக்கும். யாராவது அவைகளைத் தடவினால் சந்தோஷப்படும். தங்கள் எசமான்கள் ஜனங்களுக்குள் இருக்கும்பொழுதும் அவர்களை இன்னாரென்று பகுத்தறியும். அவைகளுக்கு இடப்பட்ட பெயரைச் சொல்லி, அவைகளை வரவழைக்க ஓடிவரும். தீனைக் கையில் வைத்துக்கொடுத்தால் பயப்படாமல் கவ்வித் தின்னும். நாய்களைக் கண்டால் அவைகளுக்கு அஞ்சிப் பின்னிடாமல், அவைகளிடத்திற்கு ஓடிக் கூடிவிளையாடும். குள்ளநரிகள் மிருகங்களை மணம் பிடித்துத் தொடரும். அவைகளுக்கு நாசிப்புலன் அதிக கூர்மையாயிருக்கும்.

குண விசேஷங்கள்.

அவைகளுடைய சத்தம் செவிக்குச் சற்றுவது இனிமையானதல்ல. அதில் தெளிவற்ற குரைத்தலோசையும், பரிதாபமான ஊளையோசையும் கலந்திருக்கும்.

குள்ளநரிகள் குழிகளிலும், காடுகளிலுள்ள பார் நிலங்களிலும் வாசமாயிருக்கும். அவைகள் நிலத்திற் குழிதோண்டி, பகல் முழுவதும் அதற்குள் இருந்து, இராத்திரியில் வெளிப்பட்டு இரைதேடித்திரியும். அவைகள் பெரும்பாலும் நாற்பது ஐம்பது வரையிலும், சிறு

பழக்கங்கள்.

பான்மை இருநூறுவரையிலும் ஒரு கூட்டமாகச் சேர்ந்து, ஊளையிட்டுக்கொண்டு வேட்டைநாய்களைப்போல மிருகங்களைத் தொடரும். வீட்டில் வளர்க்கப்படும் வாத்து, கோழிமுதலிய பறவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், காவலின்றித் தனித்திருக்கிற சிறு குழந்தைகளையும் அவைகள் பிடித்துப் பட்சிக்கிறதுமன்றி, கிராமங்களின் வீதிகளிலுள்ளவைகளையும், நகரங்களுக்குச் சமீபமான தோட்டங்களிலுள்ளவைகளையும் கொள்ளையடிக்கும். எவ்வகையான மிருகங்களாவது, பட்சிகளாவது மனிதருக்கு எதிரே நின்றாலும், குள்ளநரிகள் அவர்களுக்கு அஞ்சாமல் அவைகள்மேல் விழுந்தடிக்கும். அவைகள் மாட்டுத்தொழுவம், குதிரைப்பந்திமுதலிய இடங்களுக்குப் போய், அங்கே மாமிசம் ஒன்றும் அகப்படாதிருக்கும்பொழுது, தோலினுற் செய்யப்பட்ட குதிரையுடுப்பு, பாதரக்ஷைமுதலியவைகளைப் பட்சிக்கும். அவைகள் புதைக்கப்பட்டிருக்கிற பிணங்களை அடிக்கடி கிளறி எடுத்துப் பட்சிப்பதுமுண்டு. ஆதலால் அவைகள் இவ்வாறு பிரேதங்களைச் சேதமாக்காதிருக்கும்படி ஜனங்கள் குழிகளைத் தரையில் ஆழமாய்த் தோண்டிச் சவச்சேமம் செய்து மண்போட்டு நன்றாய்க் கெட்டிப்பார்கள். குள்ளநரிகள் ஒருமுறை சவம் தின்று உருசிகண்டால், இராணுவவீரராவது, பிரயாணிகளாவது கூட்டமாய்ச் செல்லும்பொழுதெல்லாம் அவர்களைத் தொடர்ந்து சென்று, அவர்களுக்குள் எப்போது சவம் விழுமென்று காத்திருக்கும். குள்ளநரிகள் பகல்முழுதும் அமைதியாயி

ருந்து இராத்திரிதோறும் பயங்கரமான விதமாய் ஊளையிட்டுக்கொண்டு திரியும். அவைகள் சற்றுச் சமீபத்தில் ஊளையிடும்பொழுது அவைகளுடைய சத்தம் மிகவும் உரப்புள்ளதாயிருப்பதினுல், ஒருவர் பேச்சு ஒருவருக்குக் கேளாதிருக்கும்படி காதடைக்கும். அவைகள் ஊளையிடுகிற சத்தம் வெவ்வேறு பருவமுள்ள பல பிள்ளைகள் ஒரு கூட்டமாய் நின்று ஒருமிக்கக் கூவினுல் எப்படியோ, அப்படி இருக்கும். குள்ளநரி ஒன்று ஊளையிடத்தொடங்கும்பொழுது, அதின் கூட்டத்திலுள்ள நரிகள் அனைத்தும் ஒத்து ஊளையிடும். அவைகள் காடுகளில் நின்று இவ்வாறு ஊளையிடும்பொழுது, அங்கே சஞ்சரிக்கிற கோழைத்தனமுள்ள நாற்கால் மிருகங்களாகிய விதம்விதமான மான்கள் எல்லாம் அச்சங்கொண்டு விரைந்தோடும். சிங்கமானது குள்ள நரிகளின் சத்தத்தை உற்றுக்கேட்பது இயற்கை. கேட்டபின் நரிகளுக்கு இரை அகப்படுகிறவரையில் அவைகளைத் தொடர்ந்துபோய், அவ்விரையை அவைகளிடத்தினின்று பறித்து, பூர்த்தியாய்த் தின்று, சிறிது மிஞ்சினுல், அதைப் பட்டினியாற் சோர்வடைந்திருக்கிற அந்த நரிகளுக்குப் பட்சணமாகும்படி விட்டுப்போவது வழக்கம் என்பார்கள். இவ்வழக்கத்தைப்பற்றித்தான் "சிங்கத்திற்கு ஆகாரம் சம்பாதிப்போன்" என்னும் பெயர் நரிக்குச் சாதாரணமாய் வழங்குகிறது. பெரும்பாலும் குள்ளநரிகள் கூட்டமாகச் சேர்ந்து மிருகங்களைத் தொடர்ந்து பட்சிப்பது வழக்கமாயினும், அவைகள் அடிக்கடி

சத்தமில்லாமல் வீடுகளின் பின்கட்டுக்குள் தந்திரமாகத் தனித்துச் சென்று, அங்குள்ளவைகளைப் பட்சிப்பதுமுண்டு. அங்கிருக்கும்பொழுது சற்றுத் தூரமான இடத்தினின்று மற்ற நரிகள் ஊளையிடுகிற சத்தம் கேட்டால் அதுவும் ஒத்து ஊளையிட்டு, தன் களவை வீட்டாருக்குக் காட்டிக்கொடுக்கும்.

இரை. குள்ளநரிகள் மாமிசபட்சிணிகள். ஊசிப்போகாத சுத்தமான இறைச்சி தின்பதே அவைகளுக்கு அதிக இஷ்டமாயிருந்தும், அது அகப்படாதிருக்கும்பொழுது ஊசி நாறிப்போன மாமிசத்தை அவைகள் தின்னும். அவைகளுக்கு அடிக்கடி அதிக தீபனம் உண்டாவதினால், காய்ந்து முறுகினதோல்களும் உருசிகரமான இரையாயிருக்கும். மாமிசம் சிறிதும் அகப்படாதிருக்குமானால்,அவைகள் மூலபலாதிகளைத் தின்னும். சாதுவாக்கப்பட்ட குள்ளநரிகளுக்கு ரொட்டிகொடுத்தால் ஆவலுடன் தின்னும். குள்ளநரிகள் நாய்களைப்போலத் தண்ணீரை நக்கிக்குடிக்கும்.

குட்டி. குள்ளநரி வருஷத்திற்கு ஒருமுறைமாத்திரம் குட்டிபோடுகிறது. அது சினைப்பட்டு நாலு வாரத்திற்குள்ளாகக் குட்டி போடும். ஈற்றுக்கு நாலுமுதல் ஆறுகுட்டிவரையில் போடும்.

உபயோகங்கள். உஷ்ணதேசங்களில் வாசமாயிருக்கிற ஜனங்களுக்குக் கழுகு, காகம், கழுதைப்புலி இவைகளைப்போலக் குள்ளநரியும் அத்தனை உபயோகமுள்ளது.

செத்தமிருகங்கள் எங்காவது கிடந்து ஊசி நாறினுல், அது எத்தனை தூரத்தில் நின்றாலும் மணம் பிடித்து, அவ்விடத்திற்கு விரைந்தோடி அவைகளைப் பட்சித்து, அவைகளினுல் ஆகாயத்தில் உண்டான நாற்றத்தை நீக்கும். இந்துதேசத்தில் பலமுறையும் குள்ளநரிகளை விநோதத்திற்காக வேட்டையாடுவார்கள்.

## குழிநரி.

**எத்தேசங்களில் உள்ளது.** குழிநரிகள் பொதுவாக வடதேசங்களிலும், உஷ்ணசீதமத்தியமதேசங்களிலும் சஞ்சரிக்கின்றன. அவைகள் ஐரோப்பாவின் பல பாகங்களிலும், வட ஆசியாவிலும், அமெரிக்காவிலும் வர்ணம், பரிமாணம் இவைகளில் பேதமுள்ளவைகளாயிருக்கின்றன.

**தோற்றம்.** குழிநரியினுடைய பொதுவான ரூபம் நாயின் ரூபத்திற்குச் சமானமாயிருப்பதினுல், அது நாய்க்குலத்திற் சேர்க்கப்பட்டது. அதற்குப் பரந்த தலையும், கூர்மையான மூக்கும், நிமிர்ந்து கூர்மையாயிருக்கிற செவியும், திரளான ரோமத்தால் மூடப்பட்டிருக்கிற நீண்ட உடலும், சற்றுக் குறுமையான கால்களும், தொங்கும்பொழுது தரையில் முட்டும்படியாக நீண்டு சடைபற்றி நேர்மையாயிருக்கின்ற வாலும் உண்டு.

அதின் சாதாரண வர்ணம் சற்றுக் கபிலமான பொன்மை; அதின் செவிகளின் நுனியும் பாதங்களும் கருமையாகவும், வால் இளஞ் சிவப்புக் கலந்த பொன்மையாகவும் இருக்கும். வால்நுனி பால்போல வெண்மையாய் இருக்கும்.

இதுவே சாதாரண குழிநரியின் வர்ணம்: அதுவன்றி மற்றொரு வகையான குழிநரியுண்டு. அதற்கு "உத்தரதேசத்துக் குழிநரி" என்றுபெயர். அது உறைந்த சமுத்திரத்தைச்சார்ந்த தேசங்களிற் சஞ்சரிக்கின்றது. அதின் வர்ணம் மாரிகாலத்தில் சுத்த வெண்மையாக மாறும். இன்னும் ஒருவிதக் குழிநரி உண்டு. அதின் வர்ணத்தின் விசேஷத்தால் அதற்கு "செங்குழிநரி" என்று பெயர் வழங்கும். அது வட அமெரிக்காவில் எங்கும் சஞ்சரிக்கின்றது. பின்னும் ஒரு வகுப்பான நரி உண்டு. அதின் உடல் இருண்டு பிரகாசிப்பதினால், அதற்கு "கருங்குழிநரி" என்றும், உறுப்புகளின் ஓரங்களிலுள்ள உரோமம் வெள்ளிக்கு ஒப்பான வெண்மையாயிருப்பதினால், "வெள்ளிபோன்ற குழிநரி" என்றும் பெயர். இவைகளல்லாமல், "நரைக்குழிநரி" என்றும், "பலவர்ணகுழிநரி" என்றும் மற்றும் இருவகைக் குழிநரிகள் உண்டு. குழிநரிகள் பரிமாணத்தில் ஒன்றுக்கொன்று பேதமுள்ளவைகளாயிருக்கும்; ஆயினும், அவைகள் பொதுவாகப் பதினாலு அங்குல உயரமும், வால் உள்ளிட மூன்றரை அடி நீளமுமுள்ளவைகள். வாலின் நீளம் பதினாறு அங்குலம். குழிநரிகள் சூதும் தந்திரமுமான முகச்

சாயலையுடையவைகள். அவைகளுடைய கண்க விசேஷித்த துலக்கமுள்ளவைகளும், உள்ளக்குறிப் பைக் காண்பிக்கிறவைகளுமாய் இருக்கின்றன.

குணவிசேஷங்கள்.

இரைதேடிக்கொள்வதிலும், ஒருவருக்கும் அகப் படாமல் உபாயமாய் விலகுவதிலும் மிருகங்களுக்குள் எல்லாம் மிகுந்த தந்திரமும் விவேகமுமுடையது குழிநரியே. அது அடங்காமையும் குரூரமுமுள்ள தாயிருப்பதினிமித்தம் அதை முழுமையும் சாது வாக்குவது அருமை. தான் பெற்ற நன்றியை மற வாமல் தன் உபகாரிகளைச் சார்ந்து நடப்பது நாயி னது இயற்கை. குழிநரியோ அப்படியல்ல. அதனி டத்தில் எவ்வளவாகப் பட்சம் காட்டி நடந்தாலும் அது எப்பொழுதும் தந்திரமும், அச்சமுமுள்ளதா யிருக்கும். எந்த விதத்திலாவது ஒருவரிடத்தில் சார்ந்து நடக்கும் தன்மை குழிநரிக்கு இல்லை. குழி நரி தீவிரத்தன்மையும் விரைவுமுள்ள மிருகம். அத ற்கு மிகுந்த கூர்மையான கட்புலனும் ஆச்சரிய மான நாசிப்புலனும் உண்டு. அதின் சத்தம் மந்த மான குரைத்தல் ஓசைக்கு ஒப்பாயிருக்கும். அது சத்தமிடும்பொழுது ஒத்த ஓசைகள் பல ஒன்றை யொன்று அடுத்துத் தொடர்ந்ததுபோல் இருக்கும். அது ஊளையிட்டு ஓயும்பொழுது ஒருவாறு மயிலின் ஓசைக்கு ஒப்பாகத் தன்குரலை உயர்த்தும். அது நாயைப்போலத் தன் விருப்பு வெறுப்புகளை வெவ் வேறு ஓசைகளால் வெளிப்படுத்தும். அது கடிக் கும்பொழுது அதிக மூர்க்கமாகவும், மிகுந்த வருத்

ம் உண்டாகும்படியான விதமாகவும் கவ்விப்பிடித்துக்கொள்வதினால், அதை விடுவிப்பதற்கு மரச்சலாகையையாவது, இருப்புச்சலாகையையாவது அதின் வாய்க்குள் குறுக்காகச் செலுத்தித் தாடைகளை அகலச்செய்யும்படி நேரிடுவதுமுண்டு.

வழக்கங்கள். குழிநரி வசதியான குழியைத் தேர்ண்டிப் பகற்காலத்தில் அதிக நேரமட்டும் ஒளித்துக் கிடக்கும். அது குழியைத் தானாகத் தோண்டுவதுமன்றி, பெரும்பாலும் சிறு மிருகங்கள் செய்த குழிகளைக் கைக்கொண்டு விசாலமாக்குவதும் உண்டு. அது தனக்கு அபாயம் நேரிடாதிருக்கும்படியாக ஒருவரும் போகாத ஒதுக்கமான இடங்களில் சஞ்சரிக்கவிரும்பி, மரங்களின் வேரருகே குழிவைத்து, அதில் வாசம் பண்ணும்; அல்லது மலைகளிலுள்ள ஆழமான வெடிப்புகளில் தங்கும். மேலும் அபாயம் நேரிடும் பொழுது தப்பித்துக்கொள்ளும்பொருட்டாகத் தன் குழிகளுக்குக் கள்ளவாயில்களை ஏற்படுத்தியிருக்கும். குழிநரி விசேஷமாய்க் காட்டோரங்களிலும், வயல், கிராமம் இவைகளின் சமீபத்திலும் வாசமாயிருக்கும். அது மாலைதொடங்கிக் காலைவரையில் இராத்திரிகாலந்தோறும் இரைதேடித் திரிவதும், இரைக்காகக் காத்திருப்பதும் வழக்கம். குழிநரி தகுதியான சமயம் கண்டு, தான்போகிற மார்க்கத்தையும், தன் நோக்கத்தையும் ஒருவரும் அறியாதிருக்கும்படி முன்பின் பார்த்துப்போகும். அது இரைதேடிப்போனபின்பு எப்பொழுதேனும்

பயன்படாமல் திரும்புவது அருமை. அதுவீட்டில் வளர்க்கப்படும் கோழி, வாத்து முதலிய பட்சிகளைத் திரளாய்க் கொள்ளையாடும். தனக்கு அகப்பட்டவைகளனைத்தையும் கொன்று எடுத்துக்கொண்டு மெல்லெனத் திரும்பிப்போய், அவைகளைப் புல் பூண்டு செடிகளுக்குள் ஒளித்துவைக்கும்; அல்லது தன் குழியிற்கொண்டுபோய்ச் சேர்க்கும். கொஞ்ச நேரத்திற்குள்ளாக அது திரும்பவும் இரை தேடிப் புறப்பட்டு அகப்பட்டவைகளை முன்போல வேறிடங்களில் பத்திரமாய் வைக்கும்; அல்லது குழிக்குக்கொண்டுபோகும். இவ்விதமாக அது சூரியன் உதயமாகிறவரையில் திரிவது வழக்கம். இப்படி இருக்கும்போது யாதொரு அபாயக்குறிப்பைக் கண்டால், அது தன் உழைப்பை அவ்வளவில் நிறுத்திக் குழிக்குத் திரும்பி ஒதுங்கியிருக்கும். மேலும் வேடர்கள் பட்சிகளைப் பிடிப்பதற்குச் சாயங்காலத்தில் வலைவிரித்து, அல்லது பசைவைத்துப்போயிருக்க, குழிநரிகள் விடியற்காலமே அவ்விடத்திற்குப் போய், அகப்பட்ட பட்சிகளைப் பிடித்துக்கொண்டு ஓடிவிடுவதினால், அவ்வேடர்களுடைய பிரயத்தினங்கள் வியர்த்தமாகின்றன. குழிநரிகள் இந்தப் பிரகாரம் அபகரித்த பட்சிகளை வெவ்வேறு இடங்களில் பத்திரமாக வைக்கும். அவைகளைச் சிலவேளை இரண்டு மூன்று நாள்வரையில் அவ்வவ்விடங்களில் இருக்கும்படி விட்டுத் தங்களுக்குவேண்டியபொழுது எடுத்துப் பட்சிக்கும். அந்த இடங்களைக்குறித்து அவைகள் சிறிதும் ஞாபகப்பிசகா

ருக்கிறதில்லை. அல்லாமலும் குழிநரிகள் மைதான ங்கள் இருக்கிற முயல்களை வேட்டையாடிக் குழி களில் இருக்கிற முயல்களைத் தோண்டிப்பிடித்து, கவுதாரி, காடை இவைகளையும் பிடித்துப் பட்சிப் பதும், சிறு ஆட்டுக்குட்டிகளைக் கொன்று தின்ப தும், தீவிதிராட்சத் தோட்டங்களில் புகுந்து கனி ந்திருக்கின்ற பழங்களைக் கொள்ளையாடிக் கொண் டுபோவதும் வழக்கம். கூடுகளில் இருக்கிற காட் டுத் தேனீக்கள், குளவிகள் ஆகிய ஜெந்துக்களும் குழிநரி செய்கிற கெடுதிகளுக்கு நீங்கலானவைக ளல்ல. குழிநரி தேன்கூடு, குளவிக்கூடு இவைகளி டத்திற் போகிறபொழுது, அங்குள்ள திரளான ஈக் கள் அதைக் கொடுக்கினுற் குத்தி வருத்தப்படுத்து வதினுல் அது சற்றுப் பின்னிடும். பின்னிடுவது அவைகளுக்கு அஞ்சித் தப்பித்துக்கொள்ளும்படி யாகவல்ல. தன் சரீரத்தில் ஒட்டிக்கிடக்கிற ஈக்க ளைத்தரையிற் புரண்டு நசித்துக் கொல்லுவதற்காகத் தான். பின்பு அது அடிக்கடி ஈக்களிடத்திற் போய், அவைகளை வருத்தப்படுத்தும். அவைகள் சகிக்க க்கூடாமல் தங்கள் கூடுகளைவிட்டுப் பறந்தோட, குழிநரியானது அந்தக் கூடுகளைச் சீக்கிரத்தில் குலை த்து, அங்குள்ள தேனையும், மெழுகையும் கொள் ளையாடிக் கொண்டுபோம். குழிநரி சாதாரணமா ய்ப் பகற்காலத்தில் தூங்கும். அது அயர்ந்து தூங் குவது வழக்கமாதலால், அக்காலத்தில் யாராவது அதற்குச் சமீபத்திற் போனுலும், அது அரவம் கே ட்டு எழுந்திருக்கிறதில்லை. அது தூங்கும்பொழு

துமாத்திரம் நாயைப்போலச் சுருண்டு படுத்திருக்கும். உறங்காமல் இளைப்பாறும்பொழுதோ [illegible]யிறு தரையில் பொறுக்கும்படியாகக் கால் நீட்டிப் படுக்கும். காக்கை முதலிய சில பட்சிகள் குழிநரிக்குப் பிராண விரோதிகள். ஆதலால் அவைகள் அதின் வளைக்குச் சமீபத்தில் இருந்து உரத்த சத்தமாய்க் கூவி அதைக் காட்டிக்கொடுப்பதுமன்றி, அது எத்தனை தூரமட்டும் ஓடினாலும், அவைகளும் அதைத் தொடர்ந்து பறந்தோடிப் பெருஞ்சத்தமாய்க் கூவும். குழிநரி துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்கும்பொழுதும், வெடிமருந்து மணக்கும்பொழுதும் விரைந்து பாய்ந்தோடும். குழிநரிகள் அபாயத்திற்கு அஞ்சாமல் தங்கள் ஒதுக்கிடங்களில் இருக்கும்பொழுது, அவைகள் விளையாடுவதைப் பார்ப்பது மிகுந்த வேடிக்கையாயிருக்கும். சடைபற்றிச் சிறந்திருக்கின்ற தங்கள் வால்களைப் பிடிப்பதற்கு அவைகள் நெடு நேரமளவும் வட்டமிட்டோடி விநோதம்பண்ணிக்கொண்டிருப்பதைப் பார்த்தவர்கள் உண்டு.

இரை. குழிநரிகள் அதிதீபனமுள்ள மிருகங்கள். அவைகள் எவ்வித மாமிசத்தையும் தின்னும். ஆகிலும் முயல்கள், வீட்டில் வளர்க்கப்படும் கோழிமுதலான பட்சிகள், வேட்டையாடிப் பிடிக்கப்படும் பறவைகள், குழிமுயல்கள் ஆகிய இவைகளே குழிநரிகளுக்கு மிகவும் இஷ்டமான இரைகள். அல்லாமலும் அவைகள் எலி, வயற்சுண்டெலி, பாம்பு, பல்லி, தேரை

ஆகிய ஜெந்துகளையும் தின்னும். இதுவன்றிப் பழம், முட்டை, பால், பாலடைகட்டி முதலியவைகளைக் குழிநரிகள் ஆவலோடும் திருடித் தின்னும். பசிவருத்தம் பொறுக்கக்கூடாதிருக்கும்பொழுது, குழிநரிகள் கிழங்கு, காய்கறிபதார்த்தம், வண்டு, தத்துக்கிளி, புழுமுதலானவைகளைத் தின்று வாட்டமில்லாதிருக்கும். கடற்கரைக்குச் சமீபத்திற் சஞ்சரிக்கிற குழிநரிகளுக்கு நல்ல இரை அகப்படுவது சற்றுக் கஷ்டமாயிருக்குமானால், அவைகள் நண்டு, இறால், மட்டி இவைகளைப் பிடித்துத் தின்னும்.

குட்டி. குழிநரி குட்டிபோடுவது வருஷத்திற்கு ஒருமுறை. அது ஒரு ஈற்றுக்கு நாலு, ஐந்து குட்டிபோடும். அது தன் குட்டிகளை மிகுந்த பட்சத்துடன் வளர்க்கும். அவைகளுக்கு யாதேனும் அபாயம் நேரிட்டிருக்கும்பொழுது, அது வெகு தீரத்தோடும் உற்சாகத்தோடும் அவைகளைக் காக்கும். வேட்டைக்காரர் அதைத் தொடர்ந்து சென்றால், அது தன் குட்டிகளை வாயினாற் கவ்விக்கொண்டு அனேக மைல் தூரமட்டும் ஓடும். அவர்கள் தன் வளையைக் கண்டு, தன் குட்டிகள் கலக்கமுற்றிருக்கும்படி செய்தார்களென்று அதற்குத் தெரியவந்தால், அது அவைகளை ஒவ்வொன்றாய் எடுத்துப்போய் வேறொரு இடத்தில் சேர்க்கும். நாய்க்குட்டிகளைப் போலக் குழிநரிக் குட்டிகளும் பிறக்கும்பொழுது கண் திறவாதிருக்கும். நாய்களைப்போலவே குழிநரிகளும் பூரணமான அளவிற்கு வளர ஏறக்குறைய ஒன்றரை

வருஷம், இரண்டு வருஷம் செல்லும். அகாலமரணம் நேரிடாதிருக்குமானல் குழிநரி பதின்மூன்று, பதினலு வருஷமட்டும் சீவனேடு இருக்கும்.

உபயோகங்கள்.

குழிநரியைப்பார்க்கிலும் அதிக வழக்கமாய் வேட்டையாடப்படுகிற மிருகமுமில்லை; அதைப்போல வேட்டைக்காரருக்கு அதிக கஷ்டத்தைக் கொடுக்கிற மிருகமுமில்லை. அது வேட்டைக்காரர் தொடர்ந்துவரக் காணும்பொழுது, தன் குழிக்குநேரோ விரைந்தோடி, அடிக்குழியில் அமைதியாயிருப்பது வழக்கம். அப்படி இருக்கும்போது, வேட்டைக்காரர் தரையன் என்னும் ஒரு நாயை விடுவார்கள். அது நரிக்குழிக்குட் சென்று, அங்கிருக்கும் நரியானது அதிக ஆழமாய்க் குழிபறியாதிருக்கும்படி அதைத் தடுத்து நிற்கும். தடுப்பதேயொழிய, குழிநரி அதிக சௌரியமுள்ள மிருகமாதலின் அதைப்பிடித்து வெளியிற் கொண்டுவருவதற்கு மேற்படி நாய் போதுமான சக்தியுள்ளதல்ல. இவ்வண்ணம் நரி தடுக்கப்பட்டிருக்க, வேட்டைக்காரர் நிலத்தைத் தோண்டி அதைப் பிடிப்பார்கள். குழிநரி மலைகளுக்குள்ளும், வேர்களுக்குள்ளும் இருக்குமானல் அதை அங்கிருந்து வெளிப்படச்செய்வதற்கு வகை ஒன்றும் இல்லாதிருப்பதினல், அதற்கு அபாயம் இல்லை. குழிநரி வேட்டைக்காரரைக் கண்டு தன் குழிக்கு ஓடும்பொழுது, வேட்டைக்காரர் குழிக்குப் போகிற மார்க்கத்தில் நின்று அதைத் தடுப்பார்கள். அந்தச் சமயத்தில் அவர்

கள் கைக்குத் தப்பித்துக்கொள்ளும்படியாக அது
பலவித ஆச்சரியமான தந்திரங்களையும் சூதுகளை
யும் பண்ணும். அது எப்பொழுதும் காடுகளுக்கு
ஓடி, அங்கே முக்கியமாய் முட்செடிகளும் முட்பூ
ண்டுகளும் அதிகரித்திருக்கிற பாதைகளைத் தேடி
அவைகளிற் செல்லும். வேட்டைநாய்கள் குழி
நரியைத் தொடர்ந்து சற்றுச் சமீபத்திற் செல்லும்
பொழுது அது அவைகளுக்கு நேர்திசையாக ஓடும்.
நாய்கள் நெருங்கித்தொடர்ந்தால், தாழ்ந்து ஈரம்
ஏறியிருக்கின்ற நிலத்தில் மற்றிடங்களைப்போல் அத்
தனை எளிதாக மோப்பம்பிடித்தல் கூடாதென்பது
நரிக்குத் தெரிந்திருப்பதினால், அப்படிப்பட்ட நிலத்
தைத்தேடி ஓடும். அதை நாய்கள் நெருங்கித்தொ
டர்ந்து மறித்துக்கொண்டால், அது சொல்வதற்கு
அரிய மூர்க்கத்துடன் அவைகளோடே எதிர்த்துப்
பல சூதுகள்செய்து அவைகளின் பல்லுக்குத் தப்ப
வகைபார்க்கும். எலி, வயற்சுண்டெலி, சர்ப்பமு
தலான ஜெந்துகளைக் குழிநரி திரள்திரளாக நாசப்
படுத்துவதினால், அது மனிதருக்கு அதிக உப
யோகமாயிருக்கின்றது. அதின் தோல் அனலும்
மிருதுவுமானதாயிருக்கும்: ஐரோப்பியர்கள் அதி
னால் கையுறைகள் செய்வதும், அதை உடுப்புக
ளுக்கு உள்ளாடையாகத் தைப்பதும் உண்டு. கரு
ங்குழிநரியின் உரோமம் (முக்கியமாய் ஆசியாவிலு
ள்ள கருங்குழிநரியின் உரோமம்) உரப்பும், சிறப்
பும், உயர்ந்த விலையுமுள்ளது. விசேஷமாய்த் தி
ராட்சப்பழம் தின்று வளர்ந்த குழிநரிகளின் மாமி

சத்தை ஐரோப்பாகண்டத்தின் சில இடங்களிலுள்ள ளவர்கள் தின்பார்கள்.

கதைகள்.

குழிநரி தன் குட்டிகளிடத்தில் அதிக பட்சமுள் ளது என்பதற்குப் பின்வரும் கதை யைத் திர்ஷ்டாந்தமாய்க் கொள்ள லாம். ஒரு துரையுடைய வேட்டை நாய்கள் ஒரு குழிநரியையும் அதன் குட்டியொன்றையுங் குழியிலிருந்து வெளிப்படச்செய்து துரத்திக்கொ ண்டு ஓடின. அப்பொழுது அந்தக் குழிநரி தன் குட்டியைவிட்டுப்போனால், அதை நாய்கள் கடித்து வருத்தப்படுத்துமென்று பயந்து, பிராண அபாய நேரிட்டிருந்தும் அதை நினைத்துப் பின்னிடாமல் தன் குட்டியை வாயினால் கவ்விக்கொண்டு சில மைல் தூரமட்டும் ஓடிற்று. கடைசியில் அது ஒரு விவசாயக்காரனுடைய தோட்டத்திற்கு நடுவாக சென்றபொழுது, அங்கே நின்ற பெருநாயொன்று அதை எதிர்த்து மிரட்டிற்று. உடனே நரி த மாறித் தன் குட்டியை வழுவவிட்டுப் போயிற்று அதை அந்த விவசாயக்காரன் எடுத்தான். குட் டியினிடத்தில் இத்தனை பட்சமாயிருந்த தாய் ந யோ கடைசியில் நாயின் வாய்க்குத் தப்பி உயிர் பி ழைத்தது.

பின்வருங்கதையினால் குழிநரி விவேகமுள்ளதெ ன்று அறியலாம்:—ஒருமுறை சில வேட்டைநாய் கள் ஒரு குழிநரியைத் துரத்தி, அதைப் பிடிக்கும படி நெருங்கினபொழுது, அது மிகவும் தடுமாறி பக்கத்தில் இருந்த ஒரு கிணற்றின் மூடுபலகையின்

லுள்ளு ஒதுங்கியிருந்தது. வேட்டைக்காரர் அங்கிருந் தும் அதைத் துரத்திவிடும்படியாக வகை பார்த்ததி ஞல், அது நூறு அடி ஆழமான அந்தக் கிணற்றுக் குள்ளே தவறி விழுந்தது. அப்பொழுது அது பிடி பட்டு ஏறிவெளிப்படுவதற்காக ஒரு நீர்ச்சாலேக் கிண ற்றுக்குள் விட்டார்கள். அது அதைப் பிடித்துக் கொண்டிருக்க, அவர்கள் அதை இழுத்தார்கள். சற் றுத் தூரம்இழுத்தபின்பு அது திரும்பவும் கிணற் றில் குதித்தது. சாலேத்திரும்பவும் கிணற்றுக்குள் விட்டார்கள். குழிநரி அதைப்பிடித்து வெளிப்ப ட்டது. பின்பு அது வெளியில் ஓட, வேட்டைநா ய்கள் அதைத் தொடர்ந்து பிடித்துக் கொன்றன.

## ஓநாய்.

**எத்தேசங்களிலுள்ளது.** உஷ்ணம் சீதம் இரண்டும் மத்தியமமாகவும், சீதம் அதிகரித்தும் இருக்கின்ற தேசங்களிலும், பொதுவாய் எத்தேசங்களிலும் ஓநாயைக் காணலாம்.

**தோற்றம்.** ஓநாய் நாய்ச்சாதியைச்சேர்ந்ததாயினும், நாயிலும் பெரிது. அதற்குக் குறுங்கழுத்தும், நெடுந்தலேயும், கூரிய மூக்கும், நிமிர்ந்து கூர்மையாயிருக்கின்ற செவியும், நெருங்கிய உரோமமுள்ள நீண்ட கால்களும், குச்சைபற்றிய வாலும் உண்டு. அதின் பசிய கருவிழிகள் அக்கினிபோன்றிருப்பதினல், கண்கள் துலங்கி மின்னும். அது தன் கண்களை

ஒருவிதமாய் மேல்நோக்கித் திறக்கும். அது அ
திக மூர்க்கமும் அடங்காமையுமுள்ளதாகத் தோ
றும். சராசரியாய்ப் பார்த்தால் அது ஏறக்குறைய
இரண்டரை அடி உயரமும், மூக்கின் முனை தொட
ங்கி வாலின் அடிபரியந்தம் மூன்றரை அடி நீளமு
முள்ளது. ஓநாயின் உரோமம் மிகவும் விறைத்து
கடினமுள்ளதாயிருக்கும். சாதாரணமாய் அதின்
வர்ணம் பொன்மை கலந்த வெண்கபிலம். வடதே
சங்களில் சில கறுப்பு ஓநாய்களும், சில சுத்த வெ
ள்ளை ஓநாய்களும் உண்டு. அவைகளில் கறுப்பு
ஓநாய்களே அதிகம் பருத்தவைகள். சற்றேறக்கு
றைய நானுசாதி ஓநாய்களுக்கும் முகத்தில் அச்ச
மும் மூர்க்கமும் ஒன்ருய்க் கலந்து காணப்படும்.

குணவிசேஷங்கள்.

ஓநாயானது பயங்கரமான தோற்றமும், குரூரகு
ணமுமுடையதாயினும், அதினிடத்
தில் தைரியம் இல்லை; அது தந்திர
முள்ள மிருகம்: சிறு குட்டியாயிரு
க்கும்பொழுது பிடித்தாலொழிய, அதைச் சாதுவா
க்குவது கஷ்டம். அதின் பலம் விசேஷமாய் கழு
த்து, தாடை இவற்றின் நரம்புகளில் இருக்கின்றது.
அது ஒரு ஆட்டைத் தன் வாயினுற் கவ்விக்கொ
ண்டு வெகுவிரைவாய் ஓடும்படியான சக்தியுள்ளது.
இடையன் அதைத் தொடர்ந்து பிடிக்க வல்லவன
ல்ல. நாய்கள்மாத்திரம் முந்தியோடி மறித்துப் பிடி
க்கக்கூடும்; சில வேளை நாய்கள் தொடர்ந்து ஓடும்
பொழுது அது தன் வாயிற் கவ்விய ஆட்டை வழு
வவிட்டு ஓடித்தப்பும். அது கண்ணியில் அகப்

டும் சமயங்களில், சற்றுநேரமளவும் திகிலடைந்து செயலற்றுக்கிடக்கும். அப்பொழுது அதை உயி ரோடு பிடித்துக்கொள்வதும், கொல்வதும் எளி து. அதைப் பிடித்து வாய்கட்டிச் சங்கிலிதொ டுத்து அங்கங்கே கொண்டுதிரிந்தால், அது எவ் வளவேனும் கோபமாவது, மனக்குறையாவது கொண்டிருப்பதாகக் காணப்படாது. ஓநாயைப் பிடிக்கும்பொருட்டாக வெட்டப்பட்ட படுகுழிக ளில், ஓநாய்களும் மற்ற மிருகங்களும் அகப்பட் டால், அந்த ஓநாய்கள் ஏக்கமுற்றிருப்பதினால், மற் ற மிருகங்களுக்கு யாதொரு இடையூறும் செய்கிற தில்லை. சில வேளை படுகுழிகளில் மனிதரும் ஓநா ய்களும் ஒன்றாய் அகப்பட்டிருந்தும்,வேடர் போய் விடுவிக்கிறவரையில், ஓநாய்கள் அந்த மனிதருக்கு ஈனம் செய்யாதிருந்ததாகக் கேள்வியுண்டு. அவ்வேளைகளிலொழிய, மற்றப்படி எப்பொழுதும் ஓநாய்க்கு ஐவகைப்புலன்களும், அவற்றுள் முக்கி யமாய் நாசிப்புலனும் அதிகரித்திருக்கும். சீவனு ள்ள மிருகங்களாவது, செத்த மிருகங்களாவது வெகுதூரத்தில் இருக்கும்பொழுதும், அது அவை களின் மணத்தைக் கிரகித்துக்கொள்ளும். ஓநாய் அச்சம் உண்டாகும்படி உரத்து ஊளையிடும். ஓநா யும், நாயும் ஒரே சாதியைச் சார்ந்தவைகளாயிருந் தும், அவைகளைப் பார்க்கிலும் ஒன்றுக்கொன்று அதிக பகையுள்ள மிருகங்கள் வேறே இல்லை. குட் டிநாய் ஓநாயைக் கண்டால் நடுங்கும்; அதிக சௌ ரியமுள்ள வளர்ந்த நாயோ தன் உரோமங்களைச்

சிலுப்பிக்கொண்டு துணிவுடனே அதின்மேற் பாயும். ஓநாயும் நாயும் எதிர்ப்படும்பொழுது, ஒன்றுடன் ஒன்று சண்டைபண்ணுமலும், ஒன்றுக்கு ஒன்று அஞ்சியோடாமலும் இருக்கிறதில்லை. நாயிலும் ஓநாய் அதிக பலமுள்ளதாயிருந்தால், அது நாயைப் பிறிப் பட்சிக்கும். ஓநாயிலும் நாய் அதிக வலியதாயிருந்தாலோ, அது ஓநாயை ஜெயித்துக் கொண்டு திர்ப்தியடைந்துபோவதேயொழிய, அதற்கு அப்புறம் சேதம் ஒன்றும் செய்கிறதில்லை.

வழக்கங்கள். ஓநாய் காடுகளில் சஞ்சரிக்கும். அதற்குக் கடும் பசி உண்டாகும்பொழுதல்லாமல், மற்றப்படி அங்கிருந்து வெளிப்படாது. பசியின் வருத்தத்தைச் சகிக்கக் கூடாதிருக்கும்பொழுது, துணிந்த நெஞ்சுடனே மனிதர், குதிரைகள், நாய்கள், ஆடு மாடுகள் இவைகள்மேல் விழுந்து அடித்துப் பட்சிக்கும். சிலவேளை ஓநாய்கள் ஆட்டுமந்தைகள் அடைக்கப் பட்டிருக்கும் பட்டிகளுக்குத் திரள்திரளாய்ப் போய், வாசற்படியின் கீழ் மண்ணைத்தோண்டி வழி உண்டுபண்ணி, அவ்வழியாய் உட்சென்று ஆடுகளைத் துடிக்கப் பதைக்கக் கொன்று பட்சிக்கும். ஓநாயானது எவ்வகையான கூட்டத்திற்கும் சத்துரு. அது தன் இனத்தோடும் ஒத்திருக்கிறதில்லை. இது விஷயத்தில் அதற்கும் நாய்க்கும் அதிக பேதம். பல ஓநாய்கள் ஒரு கூட்டமாய்ச்சேர்ந்து போகும்பொழுது, அவைகள் தம்முடன் சமாதானமாயிருக்கும் முகாந்தரமாகவல்ல, மான், எருது, பயங்கரமான பெருநாய் முதலிய

பெருமிருகங்கள்மேல் விழுந்து சண்டை பண்ணும் மூகாந்தரமாகவே போவதாய் அறியலாம். அவைகள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றினவுடனே பிரிந்து, அதது அங்கங்கே தன் வளைக்குச் செல்லும். ஓநாய் கொள்ளையாடுகிற மிருகமென்பது மெய்தான். ஆகிலும் அது அச்சமும் சந்தேகமுமுள்ளதாயிருப்பதினால், "அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்" என்பதுபோல், அது தன் கண்ணுக்கு எதிர்ப்பட்டதெல்லாம் தன்னை அகப்படுத்தும்படி வைக்கப்பட்ட கண்ணியென்று நினைக்கும். பால் கறக்கப்படும்படியாக ஒரு மான் கட்டுத்தறியில் நிற்பதைக் கண்டால், ஓநாய் தன்னைப் பிடிப்பதற்காக அது அவ்விடத்திற் கட்டப்பட்டிருக்கிறதென்று எண்ணி, அதற்குக் கிட்டப்போகும்படி துணியாமல் எட்ட நிற்கும். ஆனாலும் மான் அவிழ்த்துவிடப்பட்டவுடனே, ஓநாய் அதைத்தொடர்ந்து பிடித்துப் பட்சிக்கும். அது தொடர்ந்து செல்லும்பொழுது, மானானது திரும்பி அதை எதிர்க்கும்படி தொடங்கினால், அது ஒரு நொடிக்குள்ளே பயந்து பின்னிடும். ஓநாய் எந்தப் பிராணியையாவது எதிர்க்கும்படி போகும்பொழுது, அற்ப அசைகையையும் அறியத்தக்கதாக அதிக எச்சரிக்கையுள்ளதாயிருக்கும். அதினிமித்தம் ஐரோப்பாகண்டத்தின் சில பாகங்களில் ஒருவன் காட்டுக்கு நடுவாகத் தனித்துப்பிரயாணம்போகிற சமயங்களில், ஒரு வைக்கோற்புரியையாவது, விறகுசுள்ளிகளையாவது கட்டி இழுத்துக்கொண்டுபோவான்;

அப்பொழுது ஓநாய் இரைதேடிக்கொண்டு திரிந்தாலும், அவனுக்குச் சமீபத்திற் போகத் துணியாது. ஓநாய் தன் இருப்பிடத்தினின்று வெளிப்படும்பொழுது, காற்றுவீசுகிற திசை எதுவென்று கருத்தாகப் பார்த்து, அதற்கு எதிரே செல்லும். அது காட்டோரங்களில் தாமதித்துநின்று, நான்கு திசைகளிலும் திரும்பி மோப்பம்பிடித்து, தன் கூர்மையான நாசிப்புலனுக்குத் தோன்றுகிற நாற்றமானது பகைவரின் நாற்றமோ, பட்சணைக்கு ஏற்ற மிருகங்களின் நாற்றமோவென்று பகுத்தறியும். வலியச் செத்த மிருகங்களிலும், தம்மாற்கொல்லப்பட்ட மிருகங்களே ஓநாய்களுக்கு அதிக விருப்பமானவைகளாயினும், செத்து நாறுகிற மிருகங்களையும் அவைகள் தின்னும். மேலும் சேனைவீரர்கள் யுத்தகளத்திற்குச் செல்லும்பொழுது, ஓநாய்கள் கூட்டம் கூட்டமாய் அவர்களைத் தொடர்ந்துபோய், அங்கே விழுந்திருக்கிற பிரேதங்களையும், நன்றாய்ச் சேமிக்கப்படாதிருக்கிற பிரேதங்களையும் மிகுந்த ஆவலுடன் பட்சிக்கும். மனிதர்வசத்தில் சாதுவாக்கப்பட்டிருக்கின்ற ஆடுமாடுகள் மைதானங்களில் மேய்ந்துகொண்டு நிற்கிறபொழுது, ஓநாய்கள் அவைகளை அடித்துப் பட்சிக்கக் கருத்துக்கொண்டிருந்தால், உரத்த சத்தமாய் ஊளையிட்டு, இடையர்களை மிரட்டி ஓட்டும்படி செய்யத் துணியும். ஆகிலும் அவ்வேளையில் இடையர்கள் ஊதும் குழற்சத்தம் கேட்கிற நிமிஷமே அந்த ஓநாய்கள் ஓட்டம் பிடிக்கும். ஓநாய்கள் அதிக வலிமையும் விரைவுமுள்ள

மிருகங்கள்; அவைகள் இளைப்பில்லாமல் நெடுநேரமட்டும் ஓடும். ஆனதுகொண்டு எந்த மிருகங்களைப்பிடிப்பதிலும் ஓநாய்களைப்பிடிப்பது மிகுதியும் கஷ்டமாகத் தோன்றும். ஓநாய்கள் பட்சணைக்கேற்ற மிருகங்களைக் கண்டால், எத்தனை நாள் சென்றாலும் இரவும் பகலும் அவைகளைத் தொடர்ந்து போய்ப் பிடிக்கும். ஓநாய்கள் இராத்திரிகாலத்திலல்ல, பகற்காலத்திலேயே அதிகமாய்த் தூங்கும். அவைகள் தூங்கும்பொழுதெல்லாம் பொய்யுறக்கமாயிருப்பதேயொழிய அயர்ந்து தூங்குகிறதில்லை.

இரை.

ஓநாய் மாமிசபட்சணமிருகமென்பதற்கு ஐயமில்லை. அது எவ்விதமாமிசத்தையும் அவாவுடன் பட்சிக்கும். அதற்கு நரமாமிசத்தில் அதிக இஷ்டம். அதற்கு இன்னும் சற்று அதிக பலமும், சூரத்துவமும் இருக்குமானல், அது நரமாமிசமொன்றையே எப்பொழுதும் தின்னுமென்று உத்தேசிக்கலாம். அதற்குக் கடும் பசி உண்டாகும்பொழுது, அது தன் சாதி மிருகங்களையும் பட்சிக்கும். அல்லாமலும் எலும்பு, ரோமம், பாதி பதஞ்செய்து சுண்ணும்பு பூசப்பட்டிருக்கின்ற தோல் முதலாக மிருக உறுப்புகளில் எது அகப்பட்டாலும், எவ்வளவும் பேதமில்லாமல் அதையெல்லாம் ஓநாய் தின்னும். சிலவேளை சகிக்கக்கூடாத பசிவருத்தத்தினுல் அதற்கு வயிறு எரியும்பொழுது, அது மரம், கல் இவைகளிற் படருகிற பாசியையும், சேற்றையும் தின்று பசியா

றும். அது அடிக்கடி தண்ணீர் குடிக்கும். தண்ணீர்மாத்திரம் அகப்படுமானால் அது நாலைந்து நாள் வரையிலும் பசிதாங்குவதுமுண்டு.

குட்டி.

ஓநாய் சினைப்படுகிற காலம் தொடங்கி ஏறக்குறைய மூன்றரைமாசத்திற்குள்ளாகக் குட்டிபோடும். குட்டிபோட எத்தினமாயிருக்கும்பொழுது, அது நடுக்காட்டிலே ஒதுக்கிடம்தேடிப்போய், அங்குள்ள முட்செடிகளையும் புதரையும் பல்லால் நோண்டித் தரையை ஒப்புரவுள்ளதாக்கி, பின்பு பாசி எடுத்துப்போய், அதை ஒருமெத்தைபோலச்செம்மையாகப் பரப்பி அதின்மேற் பெரும்பாலும் ஐந்து ஆறு குட்டிவரையிலும் போடும். ஓநாய் மூன்றுகுட்டிகளுக்குக் குறைவாக ஒருபொழுதும் போடுகிறதில்லை. பிறக்கும்பொழுது ஓநாய்க் குட்டிகள் நாய்க்குட்டிகளைப்போலக் கண்திறவாதிருக்கும். சில வாரமட்டும் தாய் அவைகளுக்குப் பால்கொடுத்துப் பின்பு மாமிசத்தை மென்று துண்டுதுண்டாக்கி அவைகளுக்கு ஊட்டும். அவைகள் இப்படி நாளாவர்த்தியில் மாமிசம் தின்னப் பழகும். பழகியதின்மேல், தாய் ஓநாய் முயற்குட்டி, கவுதாரி முதலிய பட்சிகள் ஆகிய ஜெந்துக்களைப் பிடித்துக்கொண்டுபோய்த் தன் குட்டிகளுக்கு முன்னேவிட, குட்டிகள் அவைகளுடன் விளையாடத்தொடங்கி அவைகளை வருத்தப்படுத்தும். பின்பு தாய் அந்தப் பிராணிகளைத் தன் பல்லினால் சின்னபின்னமாய்க் கிழித்துக் குட்டிகளுக்குப் பங்கிட்டுக்கொடுக்கும். அந்தந்தச் சாதி

யிலுள்ள பெண்மிருகங்கள் ஆண்மிருகங்களைப்போல் அத்தனை வீரியமுள்ளவைகளல்ல. பெண் ஓநாயும் அப்படித்தான். ஆயினும், அதின் குட்டிகளுக்குப் பிராணாபாயம் நேரிட்டிருக்கும்பொழுது, அது தன் பிராணனைச் சிறிதும் பேணாமல், மிகுந்த வீரியமும் மூர்க்கமும்கொண்டு அவைகளைத் தன்னால் ஆனமட்டும் இரட்சிக்க வகைபார்க்கும். ஓநாய்கள் இரண்டு மூன்று பிராயத்திற்குள்ளாகப் பூரண வளர்ச்சியடையும். அவைகள் பதினைந்து, இருபது வயசுமட்டும் சீவனோடிருக்கும். அவைகள் பருவத்தில் முதிரும்பொழுது அவைகளுடைய ரோமம் நரைத்துப் பல் மிகவும் தேய்ந்துபோம்.

உபயோகங்கள்.

ஓநாயின் உறுப்புகளில் அதின் தோல்தவிர மற்றொன்றாவது உபயோகமுள்ளதல்ல. ஓநாய்த்தோல் உஷ்ணந்தரும் அங்கியாய் உபயோகிக்கப்படும். அது நெடுநாள் வரையில் சிதையாதிருக்கும். ஓநாயின் மாமிசத்தை ஓநாய் தின்னுமேயொழிய மற்றொரு மிருகமும் தின்னாது. அது அத்தனைகெட்ட மாமிசம். முக்கியமாய்ப் பாரசீகம்முதலிய கீழ்தேசங்களில் ஓநாய்கள் ஜனங்களுக்கு நூதனக் காட்சிகளாய்க் காட்டப்படும். அங்குள்ளவர்கள் ஓநாய்க் குட்டிகளைப் பிடித்து, அவைகளுக்கு ஆட்டம் கற்றுக்கொடுப்பதுமன்றி, மனிதருடன் ஒருவகையான மல்யுத்தம்பண்ணுவதற்கும் பழக்குவார்கள். இவ்விரண்டு வித்தைகளிலும் நன்றாகப் பயின்றவைகள் சிலவேளை உயர்ந்த கிரயத்திற்கு விற்கப்படும். இதினால் ஓநாய்கள்

எதென்கிலும் ஒரு தொழிலிற் பயிற்றப்படக்கூடிய வைகளாயிருக்கின்றனவென்பது திர்ஷ்டாந்தப்பட டும். பல தேசங்களிலும் வேட்டைக்காரர் வேக முள்ள நாய்களைக்கொண்டு ஓநாய் வேட்டையாடுவ துண்டு. மேலும் ஓநாய்கள் நஞ்சூட்டிக்கொல்லப் படுவதுமன்றி, மேற்சொல்லியபடி படுகுழிகளில் விழுத்திப் பிடிக்கப்படுவதும் வழக்கம். ஓநாய் ஊரு க்கு அதிக கெடுதிசெய்வது. ஆதலால் பயிரிடும் குடிகளில் ஒருவன் ஒரு ஓநாயைக் கொல்லும்பொ ழுது, அவனுக்குக் கிராமத்தார்கள் ஏதாகிலும் வெகுமதி கொடுப்பார்கள். பாரசீகத்திற்கு வட கிழக்குத்திசையில் இருக்கின்ற சுவாதீனதருத்தாரி யென்னும் தேசத்தில் "பெர்குத்" என்னும் ஒரு விதப் பெரும்பருந்தின் உதவியால் ஓநாய்கள் பிடி க்கப்படும். ஓநாய்களை எதிர்த்து அடிக்கும்படி அத் தேசத்தார் அந்தப் பருந்தைப் பழக்குவித்திருப்பா ர்கள். அது ஒன்றைக் கண்டமாத்திரத்தில் பறந்து மறித்து, அதின் தலையைப் பிறாண்டிப் பிடித்துக் கருத்தாய்ப் பார்த்து அதின் கண்களைக் கொத்திப் பிடுங்கும். ஐரோப்பாகண்டத்தில் பல தேசங்களி லும் ஓநாய்கள் நூதனங்களாய்க் கூடுகளில் விட்டு வளர்க்கப்படும்.

கதைகள்.

பிரான்சுதேசத்தில் ஒரு முறை பல ஓநாய்களை வளர்த்த துரைமகன் ஒருவர் அவைகளைக்குறித்துச் சொல்லுகிறது— "நான் வளர்த்த ஓநாய்கள் ஒரு வயசுள்ளவைகளா கிறவரையில் மிகவும் சாதுவானவைகளும் சிராட்

டுள்ளவைகளுமாயிருந்தன. திர்ப்தியாய் இரைகொடுத்தால், அவைகள் வாத்து, கோழிமுதலிய வீட்டுப் பக்ஷிகளையாவது, மற்றெந்த மிருகங்களையாவது தொந்தரவுபண்ணுகிறதில்லை. அவைகள் ஒன்றரை வயசு, இரண்டு வயசுடையவைகளானபின்போ அவைகளுடைய பிறவிக்குணம் வெளிப்படத்தொடங்கிற்று. ஆதலால் அவைகளால் ஒரு கெடுதியும் நேரிடாதபடிக்கு அவைகளைச் சங்கிலியிற் கட்டிவைத்தேன். அவைகளில் ஒன்று பதினெட்டு, பத்தொன்பது மாசப்பருவமுடையதாகிறவரையில், அதை எனது முற்றத்தில் மற்ற வீட்டுப்பட்சிகளுடனே கூட வளர்த்தேன். அது அவ்வளவு காலமாக அவைகளுக்குத் தீங்குசெய்யாதிருந்தும், பின்பு ஒரு இராத்திரி அவைகளெல்லாவற்றையும் ஒருமிக்கக் கொன்றுபோட்டது. மற்றொரு ஓநாய் சங்கிலியை முறித்துக்கொண்டு, இத்தனை காலமாய் அதினுடன் பழகியிருந்த ஒரு நாயைக் கடித்துக் கொன்றுபோட்டு ஓடிவிட்டது" என்பதே.

ஒரு பிரான்சிய துரைமகன், சாதுவாக்கப்பட்ட ஓநாய் ஒன்றைக்குறித்துச் சொல்லிய கதை மிகுந்த ஆச்சரியத்திற்கு இடமாயிருக்கின்றது. அதிக அறிவும் சாந்தகுணமுமுள்ள வீட்டுநாய்கள் வளர்த்தவர்களிடத்தில் அமைவும் பட்சமுமுள்ளவைகளாயிருப்பதுபோல, அந்த ஓநாயும் தன் எசமானிடத்தில் அமைவும் பட்சமுமுள்ளதாயிருந்தது. அது ஒரு நாய்க்குட்டி வளர்க்கப்படுகிற பாவனையாக வளர்க்கப்பட்டுப் பெரிதாகிறவரையில் அந்தத் துரை

யிடத்திலே நின்றது. பின்பு துரை பிரயாணம் போகவேண்டியிருந்ததால், பரீஸ் நகரத்திலுள்ள வனமிருகாசயத்தில் அதைக் கொண்டுபோய் விட்டுப் போனார். அது தன் எசமானிடத்தினின்று பிரிக்கப்பட்டதினிமித்தம் அனேக வாரங்களாக மிகவும் கலக்கமுற்று, இரையொன்றும் தின்னமலும் பராமரிக்கிறவர்களைப் பாராமலுமிருந்தது. ஆகிலும் வரவர அது அங்கே தன்னைப் பராமரிக்கிறவர்களைச் சார்ந்து, ஆதியிலே தன்னை வளர்த்த துரையை மறந்ததுபோலக் காணப்பட்டது. பின்பு பதினெட்டு மாதம் சென்றதின்மேல், அந்தத் துரை திரும்பிவந்து மேற்சொல்லிய வனமிருகாசயத்திற்குப் போனார். அவர் அந்தத் தோட்டத்திலே ஜனங்களுக்குள் நின்று பேசின சத்தம் அவ்வோநாயின் செவியில் விழுந்தவுடனே, அது மிகவும் பரபரத்து நிற்கையில் அதை வெளியில் வரவிட்டார்கள். அப்பொழுது அது தன் எசமானைக் கண்டு அளவிறந்த சந்தோஷம் அடைந்தது. மறுபடியும் அந்தத் துரை அதை விட்டுப்போனதினிமித்தம் அது முன்போலத் துயரப்பட்டது. அப்பால் மூன்று வருஷமானதின்மேல் இன்னும் ஒரு முறை மேற்படி துரை அந்த வனமிருகாசயத்திற்குப் போனார். அப்பொழுது அவ்வோநாய் ஒன்றும் தெரியாதபடி தொட்டியில் அடைக்கப்பட்டிருந்தும், துரையுடைய சத்தம் கேட்டமாத்திரத்தில் பதைபதைத்துக் கூச்சலிட்டது. அப்பொழுது பராமரிப்புக்காரன் அதை வெளிப்படவிட்டான். உடனே அது ஒரு ஓட்ட

மாய் ஓடி, தன் எசமானுடைய தோளின்மேற் பாய்ந்து, அவர் முகத்தை நக்கிக்கொண்டிருக்கையில், அதின் பராமரிப்புக்காரர் அதை விலக்கிக்கொண்டுபோகும்படி எத்தினப்பட்டார்கள். அப்பொழுது அது அவர்களைக் கடிப்பதாக உறுமிப் பயமுறுத்திற்று. பின்பு அந்தத் துரை அதைப் பலாத்காரமாய் விடுவித்துப் போய்விட்டார். அதினிமித்தம் ஓநாய் வியாதிப்பட்டு, இரைதின்னுமல் வெகுநாளாய்ச் சந்தேகமான ஸ்திதியிலிருந்து, பின்பு சௌக்கியம் அடைந்தது. சௌக்கியமானதின்மேல் அதற்கு அறிமுகமில்லாதவர்கள் அதின் கிட்டப்போவது அபாயகரமாயிருந்தது. அது நூதனமாக எவர்களுடனும் சேர்வதற்கு விரும்பவில்லை. ஓநாய் மனிதரிடத்திலே சேர்மானமுள்ளதாய் நடந்ததாக இதுவரையில் நமக்குத் தெரியவந்த திருஷ்டாந்தம் இதொன்றுதவிர வேறில்லை.

## கரடி.

எத்தேசங்களில் உள்ளது.

ஐரோப்பா, ஆசியா, அமெரிக்காகண்டங்களில் கரடிகள் அதிகமாய் உண்டு; ஆபிரிக்காகண்டத்திலோ அவைகள் சற்று அருமைதான். கபிலவர்ணமுடைய சாதாரண கரடிகள் ஐரோப்பா, ஆசியா கண்டங்களின் வடபாகங்களில் சற்றேறக்குறைய எங்கும், லங்காதிவு முதலிய இந்தியதீவுகள் சில

வற்றிலும் சஞ்சரிக்கின்றன. அவைகள் பரிமாண த்திலும், வர்ணத்திலும் அங்கங்கே சற்றுப் பேத முள்ளவைகளாயிருக்கின்றன. கரடிச்சாதியில் வி த்தைக்காரர் வளர்க்கிற கரடிகள் இந்தியாவில் மலே செறிந்த இடங்களில் விர்த்தியாகின்றன. வெண் கரடி ஐரோப்பா, அமெரிக்காகண்டங்களின் வட சக்கரங்களைச் சார்ந்த அதிக குளிர்ச்சியான தேச ங்களில் உற்பத்தியானது. அதற்குத் "துருவதே சங்களின் கரடி" என்னும் பெயர் வழங்கும்.

தோற்றம். கரடி பருப்பமும் பளுவுமான ரூபமுடைய மிரு கம். அதற்கு நெடுந்தலேயும், நீண் ட மூஞ்சியும், சிறுத்த கண்ணும், முனேயில் வட்டமான குறுஞ்செவியும் உண்டு; அ தின் அவயவங்கள் பலத்துப் பருத்து அவலட்சண மானவைகளாகத் தோன்றும். அதின் உரோமம் சடைபற்றி நீண்டு அதின் குறுகிய வாலே மூடியிருக் கும். அதின் காலடி பருத்தும், உள்ளங்கால் உரத் துமிருக்கும். பாதம் ஒன்றுக்கு ஐந்து விரல்களும், விரல்முனேயில் நீளமான நகங்களும் உண்டு. சாதா ரண கரடி பெரும்பாலும் நாலு அடி நீளமும், ஏற க்குறைய இரண்டரையடி உயரமுமுள்ளது. கர டிகளெல்லாம் ஒரே நிறமுடையவைகளல்ல; சாதா ரணகரடி துலக்கமற்ற கபிலவர்ணமுள்ளது. அமெ ரிக்காகண்டத்தில் சஞ்சரிக்கின்ற கரடிகள் சில இரு ண்ட கறுப்புவர்ணமுள்ளவைகளும், சில கருமை யும் வெண்மையும் கலந்த ரோமமுள்ளவைகளு மாம். பின்சொல்லிய வர்ணபேதமுள்ள கரடிக

க்கு "நரைக்கரடிகள்" என்று பெயர். அவைகள் முகத்தின்முனைதொடங்கி வால்பரியந்தம் ஒன்பது அடி நீண்டிருக்கும். துருவதேசங்களிலுள்ள கரடிகள் சுத்தவெள்ளை; மூக்குமுனையும் நகங்களும் மாத்திரம் சுத்தக்கறுப்பு. அவைகள் சாதாரணகரடிகளிலும் மும்மடங்கு அதிகமான பரிமாணமுடையவைகள். பொதுவாய்க் கரடி மந்தமும் வெடுவெடுப்புமான தோற்றமுள்ளது. அதினிடத்தில் முகக்களை சிறிதுமில்லை.

குணவிசேஷங்கள்.

பெரும்பாலும் கரடிகள் உக்கிரகுணமும் துஷ்டத்தன்மையுமுள்ளவைகள். அவைகளைக் குட்டிப்பருவத்திற் பிடித்துக் கட்டாயப்படுத்திவைத்தால், அவைகளுக்குச் சில விளையாட்டுகளைப் பயிற்றலாம். அவைகளை நெருப்பில் காய்ந்த இருப்புத்தகடுகளின்மேல் நிற்கும்படிபண்ணி, குரூரமாய் அவைகளுக்கு ஆட்டம் பழக்குவார்கள். கரடிகளைக் கண்டிப்பாய் நடத்துவதினால் அவைகள் மனிதருக்கு அமைந்து நடப்பதாகத்தோன்றியும், அவைகளை ஒருபொழுதும் நம்பப்படாது; அவைகளால் அபாயம் நேரிடாதபடி எப்பொழுதும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஒருபொழுதும் கரடிகளைக்கின்முனையில் அடிக்கவொண்ணாது; அடித்தாலோ அவைகள் அடங்காத மூர்க்கம் கொள்ளும். கரடிகளுக்குக் கட்புலன், செவிப்புலன், பரிசவுணர்ச்சி ஆகிய இம்மூன்றும் மிகவும் கூர்மை. முக்கியமாய்க் கரடிகளுடைய நாசித்துவாரங்கள் அக

ன்று, வாசனைகளை உட்கொள்வதற்குத் தகுந்தவை களாயிருப்பதினால், கரடிகளைப்போல் அத்தனை கூர்மையான நாசிப்புலனுடைய மிருகங்கள் வேறில்லையென்று சொல்வார்கள். கரடிகள் அதிக பலமுள்ள மிருகங்கள். சிலசாதியான கரடிகள் எளிதில் மரம் ஏறும். துருவதேசங்களிற் சஞ்சரிக்கிற கரடிகள் ஜலத்தினுள்ளே மிகுந்த விரைவாக முழுகுவதுமன்றி, பதினெட்டு இருபதுமைல்தூரம் நீந்தவும்கூடும். கரடிக்குரலோசை ஒருவிதமாக வெடுவெடுப்பாய் உறுமுவது போலிருக்கும்.

கரடிகள் தனித்திருக்கும் தன்மையுள்ளவைகள்.

வழக்கங்கள். சாதாரண கரடி ஒருவரும் போகாத ஒதுக்கமான இடங்களில் அடையும். அதில் இருள் நிறைந்த காடுகளில் சில குகைகளையாவது, முதுமரங்களிலுள்ள பொந்துகளையாவது தெரிந்து அங்கே தங்கும். அவைகள் அகப்படாதிருக்கும்பொழுது, அது தானாகத் தரையை நோண்டித் தகுதியான குழியை உண்டாக்கிக்கொள்வதும், மரக்கொம்புகளினால் பரும்படியான இருப்பிடத்தைச் செய்து அதற்கு மிருதுவான புல்லணை போட்டுக்கொள்வதும் வழக்கம்.

கரடிகள் ஆடுமாடுகளைச் சங்கரிப்பதுண்டு. வயலில் விளைந்திருக்கின்ற தானியங்களையே அவைகள் பெரும்பாலும் சேதம் பண்ணும். யாராவது கரடிகளைக் காயப்படுத்தினால், அவைகள் பயங்கரமான பகைவருக்கு ஒப்பாய் அவர்கள்மேல் உக்கிரத்துடன் பாய்ந்து விழுந்து, அவர்களை முன்

கால்களால் இறுக்கிப் பிடித்துத் தொண்டையை நெரித்துக்கொல்லும். கரடிகளுக்குக் கோபம் உண்டாகும்பொழுது, அவைகள் பயங்கரமாய் உறுமிப் பறகடிக்கும். கார்காலத்தில் அவைகள் அங்கங்கே தங்கள் குழிகளுக்குத் திரும்பி நாற்பது ஐம்பதுநாள்வரையில் ஒன்றும் தின்னமல் சோம்பலாயிருக்கும்.

துருவத்திற்குச் சமீபமான தேசங்களின் கரடிகள் கடற்கரையிலும், நீர் உறைவதினல் உண்டாகும் தீவுகளிலும் சஞ்சரிக்கும். பசி உண்டாகும்பொழுது, அவைகள் ஜலத்தில் நீந்தி அப்படிப்பட்ட பல தீவுகளைக் கடந்து கரையிற் சென்று இரை தேடும். அவைகள் சூரியனுடைய ஒளி தோன்ருதிருக்கின்ற கார்காலத்தில் பனிக்கட்டியில் ஆழமாய்க் குழி தோண்டி, அதின் ஒளி திரும்பவும் தோன்றத் தொடங்கும் வரையில் அந்தக் குழிகளில் அசையாதிருக்கும். அவைகள் உஷ்ணத்தைச் சகிக்கும் தன்மையுள்ளவைகளல்ல. உஷ்ணம் அதிகரிக்கும்பொழுது அந்தக் கரடிகள் மிகவும் வருத்தப்படும். இந்தவகுப்பைச் சார்ந்தகரடிகள் மிகுந்த பலமும் மூர்க்கமுமுடையவைகள். சில கரடிகள் கப்பற்காரரை வாயினற் கௌவி எளிதாய் இழுத்துக்கொண்டோடி, அவர்களுடைய கூட்டாளிகள் பார்த்திருக்கப் பட்சித்ததுமுண்டு.

கபில வர்ணமுள்ள சாதாரண கரடியானது சில வேளை மாமிசம் தின்பது வழக்கமாயினும், அது முக்கியமாய்க் கிழங்கு,

இரை.

கீரை வகைகள், தானியம், கனி இவைகளையே தின்னும். மேலும் அது தேனில் மிகுந்த விருப்பமுடையதாதலால், அதிகம் உயர்ந்த மரங்களிலும் ஏறித் தேன் எடுத்து உண்ணும். கருங் கரடிக்கும், நரைக்கரடிக்கும் மாமிசத்தில் அதிக பிரியம். என்றாலும் கருங்கரடி பெரும்பாலும் கனிகளையும், கிழங்குகளையும் தின்னும். துருவத்திற்குச் சமீபமான தேசங்களிற் சஞ்சரிக்கின்ற கரடி மச்சம், நீர்நாய், செத்ததிமிங்கிலம், பிணம் இவைகளைத் தின்னும். அது மனிதருடைய இரத்தம் குடிப்பதற்கு மிகுந்த அபேக்ஷையுள்ளதாகையால், அச்சமின்றிச் சிறுபடவுகளில் ஏறி மனிதனைக் கொலைசெய்ய வகைபார்க்கும். மேலும் அது பறவைகளின் மாமிசத்தையும், அவைகள் அங்கங்கே தரையில் இட்டிருக்கும் முட்டைகளையும் தேடித் தின்னும், முயல் முதலிய சிறு மிருகங்களையும் பிடித்துப் பட்சிக்கும்.

குட்டி.

கரடி குளிர்காலத்தில் குட்டிபோடுகிறது. அதுபெரும்பாலும் ஈற்றுக்குஇரண்டுகுட்டி போடுகிறது. கரடி தன்குட்டிகளிடத்தில் பிரியாவிடையான பட்சமுள்ளதாயிருக்கும். அவைகளுக்கு அபாயம் நேரிடும்பொழுது தன் உயிருள்ளவரைக்கும் அவைகளை இரட்சிக்க வகைபார்க்கும்; தானும் அவைகளும் வதைக்கப்பட்டால், அது தன் காயங்களுக்காக விசாரப்படாமல், அவைகளுக்காகப் புலம்பும். கபிலவர்ணக்கரடி வகுப்பிலுள்ள ஆண்கரடிகள் தங்கள் குட்டிகளைப்

பிறந்தவுடனே பட்சிக்கும்படி வகைதேடுவது வழக்கமாதலால், பெண் கரடிகள் அவைகளை ஒளித்துவைத்துக் காத்துக்கொள்ளும். கரடி இருபது பருவமாகிறவரையில் வளர்ந்து, ஐம்பது வருஷம் சீவனோடிருக்கும்.

பலதேசத்தார்கள் கரடிமாமிசம் தின்பார்கள்.

உபயோகங்கள்.

தானியம் தின்று வளர்ந்து கொழுத்திருக்கின்ற கரடியின் மாமிசம் மிகுந்த ருசிகரமானது. கரடிக்குட்டியின் மாமிசம் அதிலும் அதிக ருசியுள்ளது. கிழக்கரடிகளின் முன்காலிறைச்சிக்கு நிகரில்லை. அது அத்தனை உத்தமமான உணவாக மதிக்கப்படும். கரடிக்கொழுப்பு வெண்மையும் மதுரமுமானது. அதினால் உண்டாக்கப்படும் தைலம் முறிவு நெரிவுக்குப் பரமௌஷதம். அதைத் தலையில் பூசினால் மயிர் மிகவும் நீளமாய் வளரும். கரடியின் பின்தொடை இறைச்சிக்கு உப்பிட்டு அதை வற்றலாகவைத்திருந்து ஐரோப்பியரிற் சிலர் சாப்பிடுவார்கள். அது சரீரபுஷ்டி தருவதும் ருசிகரமுள்ளதுமாயிருப்பதினால், அவர்கள் அதை அதிகமாய் மதிப்பார்கள். கம்ஸ்கற்காநாட்டார் கரடிகளைப் பலவிதங்களில் உபயோகப்படுத்துவார்கள். கரடி இறைச்சி அவர்களுக்குப் போசனமாகும்; அதின் தோலினால் மஞ்சங்களும், மஞ்சங்களின் மேற்கட்டிகளும், குல்லாக்களும், ஜலம் கற்போல் உறைந்திருக்கின்ற நிலத்தில் சக்கரமில்லாத பண்டிகளை இழுக்கிற நாய்களின் கழுத்தில் இடப்படும் கருவிகளும்

உண்டாக்கப்படும். மேலும் கம்ஸ்கற்காநாட்டார் தங்கள் பாதரட்சைகளின் அடியில் கரடித்தோல் வைத்துத்தைப்பார்கள். கரடிக்கொழுப்பில் இற க்கப்படும் தைலத்தினல் விளக்கு எரிப்பார்கள் கரடித்தலைகளைச் சிறப்புக்காகவும், வெற்றிமுத்தி ரைகளாகவும் அங்கங்கே மரங்களில் தூக்குவார் கள். அன்றியும் அந்த நாட்டார்கள் ஔஷதப் பிர யோகத்தையும், இரணவைத்திய விஷயத்தையுங் குறித்து அடைந்த சொற்ப அறிவைக் கரடிகளின் உதவியினலேயே அடைந்தார்கள். எப்படியெனில், கரடி காயம்பட்டிருக்கும்பொழுது, அக்காயங்களு க்குமேல் இடுகின்ற மூலிகைகளையும், வியாதியாயி ருக்கும்பொழுது, அது உட்கொள்ளுகின்ற பயிர் பூண்டுகளையும் கருத்தாய்க் கண்டறிந்திருப்பதின லேதான். ஆதியிலே அவர்கள் கரடி கூத்தாடுவ தைக்கண்டு நடனம்பழகினர்கள். ஆதலால் அவர் கள் நடனத்திற்குக் கரடிநடனமென்று பெயர். உரு ஷியாதேசத்திலுள்ள பெரியோர்கள் கரடித்தோலை அதின் உரோமத்தினிமித்தம் வியந்துகொள்வார் கள். அவர்கள் அதைக் குளிர்காலத்தில் அங்கி களாகத் தரிப்பார்கள். அமெரிக்காதேசத்திலே இறைச்சி, தோல் இவைகளுக்காக எண்ணிறந்த கரடிகள் வருஷந்தோறும் கொல்லப்படும். அத்தே சத்திலே கரடித்தோல் முக்கியமான வர்த்தகப்பொ ருளாயிருக்கின்றது. அங்கிலோதேசத்தில் கரடித் தோலால் கைத்துப்பாக்கியுறைமுதலியவைகள் செ ய்யப்படுவதுமன்றி, சாரதிகள் பண்டிசெலுத்தும்

படி உட்காந்திருக்கும் பீடங்களும் மூடப்படும். பதஞ்செய்யப்பட்ட கரடித்தோல் அனேக பலமான வேலைப்பாடுகளுக்கு உபயோகிக்கப்படுகின்றது. இந்துதேசத்திலும் மறுதேசங்களிலுமுள்ளவர்கள் ஜனங்களுக்கு விரோதம் செய்வதற்காக, மேற்சொல்லியபடி கரடிகளுக்கு விளையாட்டுகளைக் கற்றுக்கொடுப்பார்கள். மேலும் வெவ்வேறு வகுப்பான கரடிகள் அந்தந்தத் தேசங்களிலுள்ள வனமிருகாசயங்களில் வேடிக்கை காண்பிக்கும்பொருட்டாகச் சேர்க்கப்படுவதுண்டு.

கதைகள். ஒரு துரைமகன் மலாக்காதேசத்திலே கரடிக்குட்டியொன்றைப் பிடித்துத் தமது வீட்டில் விட்டுச் சாதுவாக்கியிருந்தார். அதைக்குறித்து அவர் சொல்லுகிறது.

“நான் ஒரு கரடிக்குட்டியை என் வீட்டிலே பிள்ளைகள் இருக்கும் சாலையில் விட்டு வளர்த்தேன். அதைச் சிலவேளை போசனசாலைக்கு வரும்படிவிடுவது வழக்கமாயிருந்தது. அது அங்கே வந்திருக்கும்பொழுது பழமும், ஷாம்பேன்என்னும் திராட்சரசபானமுமொழிய,மற்றொன்றை விரும்பாது. அதினால் அது பதார்த்தங்களின் உருசி அறியும்படியான சக்தியுடையதென்பது திர்ஷ்டாந்தமாயிற்று. ஒரு முறை ஷாம்பேன் என்னும் திராட்சரசபானம் பந்தியிற் கொண்டுவரப்படுவதற்குச் சற்றுத் தாமதமான பொழுதில்மாத்திரம் அதற்குக் கோபம் உண்டாயிற்று. இயல்பாய் அது மன உருக்கமுடையது. அதைச் சங்கிலியாற் கட்டவாவது,

தண்டனை செய்யவாவது ஒருபொழுதும் நிமித்தம் உண்டாகவில்லை. அந்தக் கரடியும், பூனையும், நாயும், ஒரு சிறிய நீலவர்ணமான மலைக்குருவியும் ஒரே கலத்தில உணபது வழக்கம். அந்த நாய்தான் அதற்கு மிகவும் கொண்டாட்டமான விளையாட்டுச் சினேகனுயிருந்தது. நாய் அதை எவ்வளவாய் அலைக்கழித்துத் தொந்தரவுபண்ணினாலும், அது எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு சந்தோஷமாயிருக்கும். அது வளர வளர அதிக சௌரியமுள்ள மிருகமாயிற்று. அது தோட்டத்தில் உலாவித்திரிகிற வேளைகளில் அங்கிருக்கும் பெரிய வாழைகளை அடியோடே பிடுங்கிச் சின்னபின்னமாய்க் கிழிக்கும்.

துருவத்திற்குச் சமீபத்திற் சஞ்சரிக்கிற கரடிகள் மிகுந்த மூர்க்கமுடையவைகளென்பது பின்வரும் கதையினுல் திர்ஷ்டாந்தப்படும். இதிற் சொல்லிய சங்கதி ஜலம் கற்போல் உறையும்படியான குளிருள்ள தேசத்தில் ஏறக்குறைய முப்பது வருஷத்திற்கு முன் சம்பவித்தது:—திமிங்கிலம் என்னும் மீன் பிடிக்கிற பாய்மரக்கப்பல் ஒன்றைச் சேர்ந்த சிறு படவுக்காரர்கள் சற்றுத்தூரத்தில் உறைந்த ஜலத்தின்மேல் ஒரு கரடி நிற்பது கண்டு, அதைத் துப்பாக்கியினுற் சுட்டுக் காயப்படுத்தினார்கள். உடனே அது பயங்கரமாய் ஊளையிட்டுக் கொண்டு அந்தப் படவுக்குநேரே ஓடிற்று. அது படவைச் சேருமுன் மறுதரமும் அதன் மேல் ஒரு குண்டு பிரயோகித்தார்கள். அதினுல் அந்தக் கரடி

யின் மூர்க்கம் அதிகரித்ததேயொழியச் சற்றுவது தணியவில்லை. அது அதிக விரைவாக நீந்திப்போய்ப் படவைச் சேர்ந்தபொழுது, அதில் ஏறும்பொருட்டாகத் தன் முன் கால்களில் ஒன்றை அதின் பக்கப் பலகையில் வைக்க, ஒரு படவுக்காரன் தன் கையில் இருந்த கோடரியால் அதைத் தறித்தான். தறித்தும் கரடி சலிக்காமல் அவர்கள் கபபல் சேரும் வரையில் படவைத் தொடர்ந்து நீந்திப்போயிற்று, அவர்கள் கபபலிற் சேர்ந்தபின்பு அதின்மேல் உறைக்கும்படியாகப் பலதரம் துப்பாக்கியினுற் சுட்டும், அது பின்னிடாமல் கப்பலில் ஏறி அவர்களைத் தொடர்ந்தது. அவர்களோ பாய்மரத்தில் ஏறி நின்றுகொண்டு பின்னும் ஒருதரம் அதைச் சுட்டார்கள். அது உடனே கப்பலின் தட்டிற் பிணமாய் விழுந்தது.

தாய்க்கரடியும் குட்டிக்கரடியும் ஒன்றுக்கொன்று அளவிறந்த பட்சமுடையவைகளாயிருப்பதினல், அவைகளில் ஒன்று துன்பப்படுகிறபொழுது, மற்றது தனக்குப் பிராணுபாயம் நேரிடுவதாயிருந்தாலும், அதைக் கைவிடாது. இதற்குச் சாட்சி பின்வரும் கதையிற் காண்க :—சில வருஷங்களுக்கு முன் நூதனங்களைக் கண்டறிவதற்காக அங்கிலேயர் சிலர் கப்பலேறி, வடதுருவததிற்கு நேரே பிரயாணமாய்ப்போனபொழுது, அவர்கள் கப்பல் கற்போல் உறைந்த ஜலத்திற் பொறுத்தது. பொறுத்திருக்கையில் ஒரு நாள் அதிகாலையில் கப்பலாட்களில் ஒருவன் பாய்மரத்தின்மேல் ஏறிப்பார்த்து, மூன்று

கரடிகள் உறைந்த ஜலத்தின்மேல் அதிக விரை வாய் நடந்து கப்பலுக்கு நேரே ஓடிவருகின்றன வென்று அறிவித்தான். அவைகள் உறைந்த ஜல த்தின்மேல் எரிந்துகொண்டிருந்த கடற்குதிரைக் கொழுப்பின் மணம் பிடித்து வந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. அவைகள் தாயும்குட்டிகளுமாயி ருந்ததாகப் பின்பு தெரியவந்தது. குட்டிகள் சற்று ஏறக்குறையத் தாயின் அளவிற்கு வளர்ந்திருந்தன. அவைகள் நெருப்பு எரிந்த இடத்திற்குத் துரித மாய் ஓடிவந்து, எரியாமல் மீந்திருந்த கொழுப்பை எடுத்து அகோர பசியுள்ளவைகளாகையால் ஆவ லுடன் பட்சித்தன. அதுகண்டு கப்பற்காரர் தங்க ளிடத்தில் மீதியாய் இருந்த பெரிய இறைச்சிக் கண் டங்களை அவைகளுக்கு எதிரே எறிய, தாய்க்கரடி அவைகளை ஒவ்வொன்றாய் எடுத்துப்போய்த் தன் குட்டிகளுக்குமுன் வைத்துப் பங்கிட்டு அவைகளு க்குக் கொடுத்து, தனக்கும் சிறிது வைத்துக்கொண் டது. அது கடைசியான கண்டத்தை எடுத்து க்கொண்டுபோகிறபொழுது, கப்பற்காரர் அதின் குட்டிகளை இலக்காக வைத்து, துப்பாக்கியினால் சுட்டு விழுத்தினதுமன்றி, தாயையும் சுட்டுக் காய ப்படுத்தினார்கள். குட்டிகள் மரண அவஸ்தைப் படுகையில், அவைகள் நிமித்தம் தாய்க்கரடி துடி த்துப் பதைத்து விழுந்ததைப் பார்த்தவர்கள் ஆர் தான் பரிதபித்து அழார்கள். தாய்க்கரடியானது பயங்கரமான விதமாய்க் காயம்பட்டிருந்ததினால், நடக்கத் திராணியில்லாததாய் மெல்லென நகர்ந்து,

அந்த இறைச்சித்துண்டைப் பங்கிட்டுக் குட்டிகளுக்குமுன் வைத்தது. அவைகள் தின்னுமல், இருந்ததுகண்டு, அது கூவி அலறிக்கொண்டு அவைகளை ஒவ்வொன்ருய்த் தன் முன்காலால் தடவி எழுப்பும்படி பார்த்தது. அவைகளோ அசையவுமில்லை. ஆதலால் அது அவைகளை விட்டுச் சற்றுத் தூரம் போய், நின்று திரும்பிப்பார்த்து அழுதது. இன்னும் அவைகள் எழும்பாததினுல், அது மறுபடியும் அவைகளிடத்திற்போய் அவைகளைச் சுற்றிமோந்து, காயங்களை நக்கிற்று. பின்னும் அது சற்றுத் தூரம்போய், மறுபடியும் திரும்பிப் பார்த்துக்கொண்டு நின்றது. குட்டிகள் எழும்பாததுகண்டு, அது அப்புறமும் அவைகளிடத்திற்குத் திரும்பி, சொல்லிமுடியாத துயரத்துடன் அவைகளைச் சுற்றிவந்து காலால் தடவி அழுதது. பின்பு தன் குட்டிகள் மரித்து மரம்போல விறைத்துப்போயினவென்று கண்டு, அந்தக் கரடி நிமிர்ந்து கப்பலைப்பார்த்து, மிகவும் துயரடைந்து ஊளையிட்டது. அப்பொழுது கப்பற்காரர்கள் கைத்துப்பாக்கிக் குண்டுகளை அதன்மேற் பிரயோகிக்க, அது தன் குட்டிகளை நக்கினபடியே நொடிக்குள்ளே அவைகளினிடையில் விழுந்து இறந்தது.

## யானை.

---

யானையானது ஆசியா, ஆபிரிக்காகண்டங்களில் உற்பத்தியானது. அது ஆசியாகண்டத்தில் இந்துதேசத்திலும், சில பெருந்தீவுகளிலும் சஞ்சரிக்கின்றதுமல்லாமல், சீனு, ஆவா, கொச்சின்சீனு முதலிய தேசங்களிலுமுண்டு. முக்கியமாய் யானை இந்துதேசத்தில் பங்காளத்தின் தென்கிழ்ப்பாகத்திலுள்ள ஈரமதிகரித்த காடுகளில் சஞ்சரிக்கும். அதை மேற்குககாத்துமலைகளின் சில பாகங்களிலும் காணலாம். ஆபிரிக்காகண்டத்தில் கேப் கலனி நாட்டில் நெடுங்காலவரையில் யானைகள் திரளாயிருந்தன. ஆகிலும் கொஞ்சக்காலத்திற்குமுன்பு அந்நாட்டார்கள் சீர்த்திருத்தத்தில் விர்த்தியாக விர்த்தியாக, அங்கிருந்த யானைகள் உள்நாடுகளுக்கு அகன்றுபோயின. இப்பொழுது அதிக செழுமையாயிருக்கின்ற பெருவெளிகளிலும், காப்பிராரியாநாட்டிலுள்ள ஆற்றோரங்களிலும் மாத்திரம் யானைக்கூட்டங்களுண்டு.

**எத்தேசங்களில் உள்ளது.**

தேசத்தில் சஞ்சரிக்கின்ற மிருகங்களுக்குள் அதிக பெரியது யானை. பருத்தயானை வாலின் அடிதொடங்கி நெற்றிவரைக்கும் ஏறக்குறையப் பதினறு அடி நீளமும், பதினலு அடி உயரமுமுள்ளது. அதின் சரீரத்தில் அதிகம் பருத்திருக்கின்ற பாகத்தின் சுற்றளவு

**தோற்றம்.**

இருபத்தாறு அடி; காலின் சுற்றளவு ஆறு அடி. ஆகிலும் வெவ்வேறு தேசத்து யானைகள் வெவ்வேறு பரிமாணமுடையவைகள். சில தேசத்து யானைகள் ஏழு அடிக்கு அதிகம் உயர்ந்தவைகளல்ல. யானை பளுவான தலையும், மிகவும் சிறுத்த கண்களும், அதிகமாய்ப் பரந்து தொங்குகிற செவிகளும், ஸ்தூல சரீரமும், விற்போல் வளைந்த முதுகும், அந்தசந்தமில்லாமல் மொத்தாகாரமாயிருக்கின்ற கால்களுமுடையதாகையால், பொதுவாகப் பார்க்குமிடத்தில், அது அவலட்சணமான தோற்றமுள்ளதுதான். யானையின் மூஞ்சிக்கும் மற்ற நாற்கால் மிருகங்களின் மூஞ்சிக்கும் அதிக பேதம். அதின் மூஞ்சியின் மேற்பாகம் நீண்டிருக்கும். அதற்கு "தும்பிக்கை" என்று பெயர். அதின் நுனி ஐந்து அங்குலமளவு நீண்டு அசையத்தக்க கொளுவியைப் போன்றிருக்கும். தும்பிக்கையின் அடியின் இருபக்கங்களிலும் வாய்க்குள்ளிருந்து வெண்ணிறமான பருத்த கொம்புகள் இரண்டு முளைத்து வளர்ந்திருக்கும். அதிகம் பருத்த கிழயானைகளின் கொம்பு ஆறு ஏழு அடி நீளமாயிருக்கும். பெண்யானைக்குக் கொம்பு முளைப்பது அபூர்வம். முளைத்தாலும் அது மிகவும் சிறுத்துக் கீழ்நோக்கியிருக்கும். தும்பிக்கை அடியின் கீழ்ப்புறத்தில் யானையின் வாய் இருப்பதினால், அதற்கு மேலுதடு தும்பிக்கைதான். அதின் கீழுதடு குறுகி முனையுள்ளதாயிருக்கும். அதின் பாதம் ஐந்து வட்டமான குளம்புகளாக ஒருவாறு பிரிந்திருக்கும். யானைத்தோல் மனிதருடைய

உள்ளங்கையைப்போலப் பல திரைவுகளுள்ளது. அதின் மேல் உரோமம் அதிகம் இல்லை. யானையின் சாதாரண வர்ணம் கருநரை,அல்லது சற்றுக்கறுப்பு. வெண்மையான, அல்லது பாலேட்டின் வர்ணமான யானைகள் இந்துதேசத்தில் காணப்பட்டதுண்டு. ஆயினும் அவைகள் மிகவும் அருமையானவைகள். இந்துதேசத்தரசர்கள் அவைகளை அதிகமாய் மெச்சிக்கொள்வார்கள். ஆபிரிக்காகண்டத்திலுள்ள யானைகளின் கொம்பு ஆசியாகண்டத்திலுள்ள யானைகளின் கொம்பிலும் அதிகம் நீண்டதும், காது பருத்து நீண்டு பரந்து தொங்குவதுமாயிருக்கும். எப்படி இருந்தும், பொதுவாகப் பார்க்குமிடத்தில் ஆபிரிக்காவிலுள்ள யானைகள் ஆசியாவிலுள்ளவைகளிலும் சிறியவைகளென்பார்கள். ஆசியாவின் யானைகளிற் சில, விசேஷமாய் இலங்கைத்தீவிலுள்ள யானைகள் அதிகம் பருத்தவைகள்.

காட்டு யானைகள் உக்கிரமில்லாதவைகள். அவைகள் கோபம் மூட்டப்படும்பொழுதல்லாமல், மற்றப்படி ஒருபொழுதும் ஆருக்கும் தீமைசெய்வதில்லை.

குணவிசேஷங்கள்.

ஆகிலும் தங்களுக்குச் செய்த தீமைகளை யானைகள் பாரமாய் நினைத்துப்பாராட்டுவது வழக்கமாயிருப்பதினால், அவைகளின் கைகாலுக்குத் தப்பித்துக்கொள்ளும்படி நடப்பது யுத்தி. யானை மிகுந்த பலமுடைய மிருகம். அதின் சரீரம் அதிக பளுவுள்ளதாயிருப்பதினால் அதின் பலம் அதிகரித்திருக்கின்றது.

அது நடக்கும்பொழுது நிலம் அதிரும். யானை மரங்களை வேரோடே தும்பிக்கையால் பிடுங்கும். அது மதில்களையும் முட்டி விழுத்தும். யானை முதுகில் அம்பாரிகட்டி, ராணுவ வீரர் உட்காந்திருக்க, அது அவர்களைச் சுமந்துகொண்டுபோகும். ஆறு குதிரைகள் சுமப்பதற்கு அருமையான பாரங்களையும் யானை சுமக்கும். அது மிகவும் எளிதாகச் சாதுவாக்கப்படும். சாதுவாக்கப்பட்டு மனிதர்வசத்தில் நிற்கிற யானை அதிக அறிவும், பட்சமும், கீழ்ப்படிவுமுள்ளதாயிருக்கும். அதற்கு இரைபோட்டுப் பராமரிக்கின்ற பாகனிடத்தில் அது பட்சமாயிருப்பதுமன்றி, கொஞ்சக் காலத்திற்குள்ளாக, அவன் கண்டிதமாகவும், கட்டளையாகவும், திரப்திகரமாகவும் சொல்லுகிறவைகளை அறிந்துகொள்ளும். யானை பாகன் சொல்வதைக் கருத்தாய்க் கேட்டு, பதறாமல் புத்தியாகவும் சந்தோஷத்தோடும் அவ்வாறு செய்யும். மனுஷர் தன் முதுகில் எளிதாய் ஏறும்படியாக அது முழந்தாட் படியிட்டு நிற்கும். யானை தனக்கு அறிமுகமானவர்களைத் துதிக்கையினால், சீராட்டுவதுமன்றி, பாகன் சுட்டிக்காண்பிக்கிறவர்களை உபசரிப்பதுமுண்டு. மேலும் அது தும்பிக்கையினால் சுமைகளைத் தூக்கித் தன் முதுகின்மேற் பாரம் ஏற்றுகிற ஜனங்களுக்கு உதவிபண்ணும். அது தன்மேற் போடப்படும் அலங்காரமான அணிகலங்களைப்பார்த்துச் சந்தோஷப்படும். அது பாரங்களை இழுக்கச் சீக்கிரத்திற் பழகும். இழுக்கும்போது முகாந்தரமில்லாமல் அடித்தால், அது முரா

ண்டுபண்ணும். யானை தன் பாகனிடத்தில் ஒருபொழுதும் விட்டு நீங்காதிருக்கும்படியான அத்தனை பட்சமுள்ளதாயிருக்கும். ஆதலால் பெரும்பாலும் அது அவனையன்றி மற்றொருவனுடைய ஏவற்படி நடக்கப் பிரியப்படுகிறதில்லை. ஒரு யானை கடுங்கோபத்தினால் தன் பாகனைக் கொன்றுபோட்டு, பின்பு அதினிமித்தம் மிகுந்த துக்கத்தினால் இறந்தது. யானைக்கு நல்ல ஞாபகம் உண்டு. ஒருவர் செய்த நன்மையையாவது, தீமையையாவது அது மறக்கிறதில்லை. அதின் கண்கள் சிறியவாயினும், மிகவும் துலங்கி விசேஷித்துத் தோன்றும். அதின் கண்களின் குறிப்பைக் கண்டு அதற்குள்ள அந்தரங்கமான குணகுணங்களை நிதானிக்கலாம். யானை யாதொன்றைச் செய்யுமுன்பு அதைக்குறித்து யோசிக்கும். அதற்குச் செவிப்புலன் கூர்மையாகவும், நாசிப்புலன் அதிகரித்துமிருக்கும். கீத வாத்தியங்களைக் கேட்பது அதற்கு வெகு இஷ்டம். அது சதிமிதிக்கும்படி பயிலக்கூடும். அது எவ்வகையான சுகந்த திரவியங்களையும், வாசனையுள்ள புஷ்பங்களையும் மோக்கவிரும்பும். பரிசவுணர்ச்சியை நுட்பமாய் நிதானிக்கும் விசேஷமான உறுப்பு மனுஷருக்குக் கை; அதுபோல யானைக்குத் துதிக்கை. துதிக்கை சவ்வு, நரம்பு இவைகள் சேர்ந்து உண்டானது. அது பரிசவுணர்ச்சிக்குரிய உறுப்பாகவும், அசையத்தக்க அவயவமாகவும் இருக்கின்றது. யானை தன் துதிக்கையை அசைக்கவும், வளைக்கவும், குறுக்கவும், நீட்டவும், நான்கு பக்கங்க

ளிலும் இருப்பவுங்கூடும். சிறு காசை யானை தன் துதிக்கையினால் எளிதில் எடுக்கும்; கொட்டை களையும் புஷ்பங்களையும் பொறுக்கும்; புட்டியில் அடைக்கப்பட்டிருக்கின்ற குச்சை இழுக்கும்; கயி ற்றின் முடியை அவிழ்க்கும்; சார்த்தப்பட்டிருக் கிற கதவைத் திறக்கும்; திறக்கப்பட்டிருக்கிற கத வைச் சார்த்தும்; திறவுகோலினால் பூட்டுகளைத் திறக்கும். எழுதுகோல்போன்ற சிறு கருவியினால் தரையில் அட்சரமுதலியவைகளை எழுதும். யானை யின் சரீரம் மிகவும் பருத்திருந்தும், அது விரை வாய் நடக்கும். யானை நடையும் குதிரை ஓட்ட மும் சரி. யானை பெரும்பாலும் ஓடுகிறதில்லை. காட்டுயானை கோபங்கொண்டிருக்கும்பொழுதும், மிரளும்பொழுதும் மாத்திரம் வேகமாய்ப் பாய்கி ன்ற குதிரையைப்போல் அத்தனை விரைவாய் ஓடும். பொதுவாக யானை ஒன்றுக்கும் அஞ்சுகிறதில்லை. அடுத்தடுத்துப் படபடென்று வெடிக்கின்ற பட் டாஸ் முதலியவைகளுக்கு மாத்திரம் அது பயப் படும். நாட்டிலுள்ள யானைகள் நாள் ஒன்றுக்கு ஐம்பது அறுபது மைல் தூரம் தொய்ந்துபோகா மல் ஒரு நடையாய் நடக்கும்; துரிதமாகச் செலு த்தினால், நூறு நூற்றிருபது மைல் தூரமட்டும் நட க்கிறதும் உண்டு. யானைக்குச் சந்தோஷம் உண் டாகும்பொழுது, அது தன் தும்பிக்கையினால் எக் காளத்தொனிக்கு ஒப்பாகத் தெளிந்து வெடித்த குரலாகவும், அதற்குப் பசியுண்டாகும்பொழுதும், மிகுதியான மேய்ச்சலுள்ள இடத்திற்கு வந்தால்

தன் கூட்டத்திலுள்ள மற்ற யானைகளுக்குத் தெரி விக்கவேண்டியிருக்கும்பொழுதும் வாயினால் உறு மி ஒருவிதப் புலம்பல் ஓசையாகவும், பகைவர் மேல் விழுந்தடிக்கத் தொடங்கும்பொழுதும், தன க்குத் துணைசெய்யும்படி தன் கூட்டத்தைச்சேர் ந்த யானைகளை வரவழைக்கும்பொழுதும், சிங்கத் தின் கெர்ச்சனைக்கு ஒப்பாக உரத்து நெடுநேரமள வும் படைக்குரலாகவும் இப்படி மூன்றுவிதமாகச் சத்தமிடும்.

வழக்கங்கள்.

யானைகள் மரங்களும் புதர்களும் அடர்ந்திருக்கி ன்ற வனங்களிலும் காடுகளிலும் கூட்டங்கூட்டமாய்ச் சஞ்சரிக்கும். யானைகள் தனிமையாய்ச் சஞ்சரிப்பது வழக்கம ல்ல. தூரமான இடங்களுக்குப் பிரயாணம்போ கும்பொழுது, அவைகள் பெருங்கூட்டங்களாய்க் கூடி, வயசிலும் அனுபோகத்திலும் முதிர்ந்தவை கள் முதலிலும், சிறுபருவமும் பலட்சயமுமான வைகள் நடுவிலும், நடுப்பிராயமுள்ளவைகள் கடை யிலும் போவது வழக்கம். பயிர்செய்யப்பட்டிரு க்கின்ற நிலங்களிலுள்ளவைகளைப் பிடுங்கித் தின்று சேதம்பண்ணுவதற்குப் போகும்போதும், தங்களு க்கு அபாயம் நேரிடுமென்று அஞ்சுவதற்கு ஏதுவா னமற்றிடங்களுக்குப் போகும்போதும் மாத்திரம் அவைகள் இந்தக் கிரமமாய் அணிவகுத்துப்போவ தொழிய, மற்றப்படியல்ல. அவைகள் மைதானவெ ளிகளிலும் நெருக்கமான காடுகளிலும் பிரயாணம் போகையில் மேற்சொல்லியபடி நிரையாய் ஒருமிக்

கக் கூடிப்போகிறதில்லை. அங்கும் இங்கும் சிதறுண்டுபோனால் அபாயம் நேரிடும் காலத்தில் ஒன்றுக்கொன்று துணைசெய்யக்கூடாமையால் அப்படிக் கலந்துபோகிறதில்லை. யாராவது யானைகளை வருத்தப்படுத்தி, அல்லது அவைகளுக்கு ஊறுபாடுசெய்து ஓடிப்போனால், அவைகள் அத்தனை பளுவான சரீரமுடையவைகளாயிருந்தும், எட்டி அடிவைத்துத் துரிதமாய் நடந்து ஓடினவர்களை எளிதில் மறித்துப் பிடித்துக் கொம்புகளாற் பீறி, ஆகாயத்திற் சுழற்றி எறிந்து, காலால் மிதித்து நசுக்கிக்கொல்லும். ஆதலால் எவ்விதத்திலாவது யானைகளை வருத்தப்படுத்துவது அபாயந்தான். யானைகள் பயிர் நிலங்களிற் போனால், கொஞ்ச நேரத்திற்குள்ளாக வெகு தூரமட்டும் இருக்கின்ற பயிர்களைச் சேதம்பண்ணும். அவைகள் தின்று சேதம்பண்ணுவதிலும் காலால் உழக்கிச் சேதம்பண்ணுவது அதிகம். விசேஷமாய் மரங்கள் செறிந்து நிழலிட்டிருக்கின்ற ஆற்றங்கரைகளும், பள்ளத்தரைகளும், சதுப்பு நிலங்களுந்தான் யானைகளுக்கு ரம்மியம். அவைகள் குளிர்ச்சியையாவது, அதிக வெப்பத்தையாவது சகிக்கமாட்டாது. ஆதித்தனுடைய அகோரமான உஷ்ணத்திற்குத் தப்பித்துக்கொள்ளும்படியாகவே, அவைகள் நெருங்கிய காடுகளில் போய்த் தங்கும். அவைகள் அடிக்கடி முழுகும்; துதிக்கைக்குள் தண்ணீர் மொண்டு நான்கு திக்கிலும் வீசி விளையாடும். யானை ஸ்தூல ரூபமுள்ளதாயினும், தண்ணீரில் மிகவும் எளிதாக நீந்தும்; நீந்

தும்பொழுது துதிக்கையை நீர்மட்டத்திற்குமேலாய் உயர்த்திக்கொண்டு அதின் வழியாய்ச் சுவாசம் விடும்.

இரை. யானை சாகபட்சிணி. அது புல், கிழங்கு, கீரை, கரும்பு, மரத்தின் இளங்கொம்பு, பழம், பலவகைத்தானியம் இவை முதலியவைகளைத் தின்னும். யானை மாமிசமாவது, மச்சமாவது தின்கிறதில்லை. அது தன் இரையைத் துதிக்கையால் எடுத்தும், தாகத்திற்குத் தண்ணீரை அதினால் உறிந்தும் உண்பது வழக்கம்.

குட்டி. பெண்யானை இரண்டு மூன்று வருஷத்திற்கு ஒரு முறை குட்டி போடுகிறது. அது ஈற்றுக்கு ஒரு குட்டிமாத்திரம் போடும். ஈன்றவுடனே யானைக்குட்டி பசுவின் இளங்கன்றைப்பார்க்கிலும் அதிக பெரிதல்ல. அது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பூரணமான பரிமாணத்திற்கு வருவதற்கு இருபது முப்பது வருஷம் செல்லும். யானைக்குட்டி விளையாட்டுக்குணமுள்ளதும் தீங்கற்றதுமாயிருக்கும். யானை தன் குட்டிக்கு நெடுங்காலமட்டும் பால் கொடுக்கும். ஆயினும் குட்டியினிடத்தில் அது அதிக பட்சமாயிருக்கிறதில்லையென்று சொல்வார்கள். யானை தீர்க்காயுசுடைய பிராணி. மனிதர் வசப்பட்டிருந்த யானைகள் சில காடு0-வருஷமட்டும் சீவனோடிருந்ததுண்டு. தன்னிஷ்டமாய்க் காட்டிற் சஞ்சரிக்கின்ற யானைகள் உ00-வருஷத்திற்கு அதிகமாய்ச் சீவனோடிருக்கும். யானை சீவனோடிருக்கும் காலவரையில்

அதின் தந்தமும் வளரும். ஆதலால் இளயானைத் தந்தம்போலக் கிழயானைத்தந்தமும் அத்தனை பல முள்ளதாயிருக்கும்.

உபயோகங்கள்.

அதிக வலிமைகொண்டு செய்யவேண்டியிருக்கின்ற வேலைகளில் யானை பலவிதங்களாய் உபயோகிக்கப்படும். ஆபிரிக்காவின் பல பாகங்களிலும், கிழக்கிந்தியதீவுகளிலும் பெரும்பாலும் யானையே சுமை எடுத்துக்கொண்டு போகும். யானைக்கழுத்தில் மாவுத்தன் ஏறி உட்காந்து ஒலிக்குறிப்பினாலும், செவியிலும் தலையிலும் தோட்டியாற் குத்துவதினாலும் அதைச் செலுத்துவான். யானைமுதுகிலும், கழுத்திலும், தந்தத்தின்மீதும் சுமை ஏற்றுவது வழக்கம். சிலவேளை பளுவான சுமையைக் கயிற்றினாற் கட்டி, அக்கயிற்றின் இருமுனைகளையும் துதிக்கையில் கொடுக்க, யானை அவைகளை வாய்க்குள் வைத்து, கடித்து இழுத்துக்கொண்டுபோகும். அதினிடத்தில் ஒப்பித்த எந்த வஸ்துவையாவது அது போக்கடிக்கிறதுமில்லை, சேதப்படுத்துகிறதுமில்லை. ஏற்றுமதிசெய்யப்படும் சரக்குமூட்டைகளை யானையின் முதுகில் ஏற்றிச் செலுத்திக்கொண்டு போகும்பொழுது, அது கப்பல்துறைமுகத்தில் போய்நின்று, சுமையை இறக்கி, ஜலத்தில் நனையவிடாமல் பத்திரமாய்த் தூக்கிப் படவில் வைக்கும். வைத்தபின்பு மூட்டைசரிந்து விழாமல் பக்குவமாய் வைக்கப்பட்டிருக்கிறதாவென்று தன் துதிக்கையினால்தள்ளிப்பார்க்கும். அது பீப்பாய்களைச்

சுமந்துகொண்டுபோனால் இறக்கினவுடனே, அவைகள் உருளாதபடி கல்லை எடுத்துப்போய் அவைகளுக்கு அடியில் வைக்கும். யானைகள் அதிக பாரம் ஏற்றப்பட்ட ஒற்றை உருளைவண்டிகளைத் துதிக்கையினால் தள்ளிக் குன்றுகளில் ஏற்றும். நிறுத்தவேண்டும்பொழுது முழங்காலால் முட்டுக்கொடுத்து நிற்கும். பெருந்தீராந்திகளைத் தரையில் இழுத்துக்கொண்டுபோகும்பொழுது, இடையிலே தடைகள் நேரிட்டால், அவைகளை எடுத்தெறியும்; அல்லது தீராந்திமுனைகளைத் தூக்கித் தடைகளைத் தாண்டி இழுத்துக்கொண்டுபோகும். பீரங்கிமுதலிய யுத்த உபகரணங்கள் கண்டறியப்படுமுன், பலதேசத்தவர்கள் யானைகளை யுத்தத்தில் உபயோகித்தார்கள். சத்துருக்களுடைய நகரங்கள், துருக்கங்கள் முதலியவைகளின் கதவுகளை யானைகள் மஸ்தகத்தால் முட்டிப் பெயர்த்தெறிந்தன. இந்நாள்வரைக்கும் இந்துதேசத்தில் யானைகள் மலைகளுக்குமேலாகப் பீரங்கி வண்டிகளை இழுத்துக்கொண்டுபோவதும், மூவாயிரம் இறாத்தலுக்கு அதிகமான பாரமுள்ள கூடாரச்சாமான்களை முதுகிற் சுமந்துகொண்டுபோவதும் வழக்கம். மேலும் முற்காலத்தில் இந்துதேசத்து அரசர்கள் கொலைக்குரிய குற்றவாளிகளை யானைகளைக்கொண்டு கொல்லுவிப்பார்கள். அவைகள் மாவுத்தன்சொற்படி குற்றவாளிகளுடைய கைகால்முதலிய அவயவங்களைத் துதிக்கையால் துணித்துக் காலால் மிதித்துக் கொல்லும்; அல்லது தந்தத்தால் குத்திக்கிழித்து வதைசெய்யும். கிழக்குத்

தேசத்திலே யானைகள் நெடுங்காலவரையில் வேட்டைத் தொழிலில் உபயோகிக்கப்பட்டன. இக்காலத்தில் யானைகள் மேற்சொல்லிய விஷயங்களில் அத்தனை உபயோகமுள்ளவைகளல்ல. ஆயினும் இந்துதேசத்தரசர்கள் அவைகளை அலங்காரத்திற்காகவும் பெருமைக்காகவும் விட்டிருக்கிறார்கள். அவைகளுக்கு நாள்தோறும் எண்ணெய் தேய்த்து முழுக்காட்டித் துடைத்து நன்றாகப் போஷிப்பார்கள். பவனிவரும்பொழுதும், வேறுவித வேடிக்கை விநோதங்கள் செய்யும்பொழுதும் யானைகளுக்குச் செவியிலும், தலையிலும், துதிக்கையிலும் பலவர்ணச் சித்திரம் எழுதி, புடமிட்ட வெள்ளித் தகட்டினாற் செய்யப்பட்ட நெற்றிப்பட்டமும், தந்தங்களில் விசித்திரமாய்ச் செய்யப்பட்ட தங்கப்பூணும் வெள்ளிப்பூணும், செவிகளில் வெள்ளிக் குண்டலமும், கால்களில் சிறுமணிகள் நிரைநிரையாய்க் கோக்கப்பட்டிருக்கின்ற வெள்ளிச்சங்கிலிகளும், சரீரத்தில் பொற்சரிகை வெள்ளிச்சரிகை இரண்டும் கலந்து இழைக்கப்பட்ட சூரிய காந்திப்பட்டுப் போர்வையும் தரிப்பார்கள். யானைமீது செல்லும் சீமான்களுடைய வரிசைப்படியே முதுகில் அம்பாரி கட்டுவார்கள். யானைகள் திரளாய்ச் சஞ்சரிக்கின்ற ஆபிரிக்காதேசத்தில் காப்பிரிகள் அவைகளை வேட்டையாடி, அவைகளுடைய மாமிசத்தைப் புசிப்பார்கள். காப்பிரிகள் யானையின் மாமிசத்தை மிகவும் ருசிகரமான உணவாக மதிப்பார்கள். தந்தங்களை ஐரோப்பியருக்கு விக்கிரயஞ் செய்வார்கள். ஐரோப்பியர் அவை

களாற் கத்திப்பிடிகளும், காகிதம் அரியும் கருவிகளும், வேறு பல உபயோகமான உபகரணங்களும் செய்வார்கள். யானைத்தந்தம் விலையுயர்ந்த அலங்காரப்பொருள். யானைத்தோல் அதிக உரப்புள்ளது. அதை உலர்த்திப் பக்குவமாய்ப் பதஞ்செய்தால், துப்பாக்கிக்குண்டும் உருவிச்செல்லமாட்டாது. யானைகள் மனிதர் கைவசப்பட்டிருக்கும்பொழுது குட்டிபோடுவது அருமை. நாட்டிலுள்ள யானைகள் பெரும்பாலும் காட்டிலிருந்து பிடித்துச் சாதுவாக்கப்பட்டவைகள்தான். இந்துதேசத்திலும் இலங்கைத்தீவிலும் காட்டுயானைகள் நாட்டுயானைகளைக்கொண்டு பிடிக்கப்பட்டுச் சங்கிலி தொடுத்து மதம் அடங்கும்வரையில் பெரிய மரங்களில் கட்டிவைக்கப்படும். அல்லது நான்கு திக்கிலும் பலமான அடைப்புள்ள இடங்களில் விடப்படும். யானைகளைப் படுகுழிகளில் விழுத்திப்பிடிப்பதும் வழக்கம். இலங்கைத்தீவில் யானைகள் திரள் திரளாய் உண்டு. அவைகள் அங்குள்ள நெல்வயல்களில் விழுந்து உழக்கிச் சேதம்பண்ணுவதினால், அவைகளைக் கருவறுப்பதற்குக்குடிகள் மிகவும் ஆவலாயிருப்பார்கள். சில வேளை அவர்கள் இருநூறு முந்நூறு பெயர் ஒரு கூட்டமாய்ச் சேர்ந்து யானைபிடிக்கப் போவார்கள். பிடிக்கப்படும் யானை ஒன்றுக்கு ௩௦ ரூபாய் வீதம் துரைத்தனத்தார் அவர்களுக்கு வெகுமதி கொடுப்பார்கள். ஐரோப்பாதேசத்தில் பல இடங்களிலுள்ள மிருகாசயங்களில் யானைகள் இருக்கின்றன.

யானே சாதுவாகும் தன்மையும் கீழ்ப்படிவுமுள் ளதென்பது இதின் அடியில் வரும் கதையால் அறியலாம். க௮௧௧-ம் ஆண்டு இந்திய துரைத்தனத்தாருடைய சேவகத் தில் இருந்த சேனைத்தலைவராகிய துரை ஒருவரும், அவருடைய மனைவியும் திருவாங்கூர்க் கோட்டை க்குச் சமீபமான ஒரு வீட்டிற் குடியிருந்தார்கள். ஒரு நாள் காலமே ஒரு யானை பளுவுள்ள பல பெ ட்டிகளை ஒன்றின்பின் ஒன்றுய்ப் பாகனில்லாமல் தனியே கோட்டைக்குள்ளே கொண்டுபோய் அணி யணியாக வைத்தது. அது அப்படிச் செய்ததை மேற்படி துரையுடைய மனைவி பார்த்து நின்று ஆச்சரியப்பட்டாள். காரியத்தை விசாரித்தபொ ழுது, அதற்கு முதல்நாள் இரவு திருவாங்கூர் அரசன் காலஞ்சென்றுவிட்டதினுல், அவருடைய சொத்துக்களைக் காவல்செய்திருந்த அங்கிலோதுரை அதிக விலைபெற்ற செல்வப்பொருள்களைப் பத்திரப்படுத்துவதற்காக, மேற்சொல்லிய கிரம மாய் யானையினிடத்தில் அனுப்பினுரென்று தெரி யவந்தது.

கதைகள்.

யானையானது செய்நன்றி மறவாதிருக்கும் என்ப தைக்குறித்துப் பல திர்ஷ்டாந்தங்கள் உண்டு. பின் வரும் திர்ஷ்டாந்தங்கள் இரண்டும் இங்கே சொல்ல ப்படுவதற்குத் தகுதியானவைகள். அவைவருமா று—ஆஜ்மீரத்தில் ஒரு யானை இருந்தது. அது அடி க்கடிகடைத்தெருவழியாய்ப் போவது வழக்கம். போகும்பொழுதெல்லாம் அங்கே கீரைவிற்றுக்கொ

ண்டிருந்த ஒரு மனுஷி அதற்குக் கீரைகொடுத்து வருவாள். கடைசியாய் ஒரு நாள் அது மதங் கொண்டு,கட்டப்பட்டிருந்த சங்கிலிகளை அறுத்து, மிகுந்த மூர்க்கத்துடனே கடைத்தெருமார்க்கமாய் ஓடிற்று. ஓடுகையில் கடையிற் கொள்வன விற்ப னசெய்த சகலரும் பயந்து விரைந்து ஓடினார்கள். அப்பொழுது மேற்சொல்லிய கீரைக்காரி தனக்கு உண்டான படபடப்பினால் தன் குழந்தையை எடு த்துக்கொண்டு போவதற்கு மறந்துவிட்டுத் தான் ஓடிப்பறந்தாள். அதை யானை கண்டு அவள் தன க்குச் செய்துவரும் நன்மையை நினைத்து, அந்தக் குழைந்தையைத் தன் தும்பிக்கையால் தூக்கி, அய ல்வீட்டுத் திண்ணையில் வைத்துவிட்டுப் போயி ற்று.

புதுச்சேரியில் இராணுவசேவகருக்கு மதுபா னம் கொடுக்கப்படும் வேளைகள்தோறும், அவர் களில் ஒருவன் தன் பங்கில் கொஞ்சம் அங்கிருந்த யானைகளில் ஒன்றுக்குக் கொடுத்து வருவான். அதி னிமித்தம் அவனுக்கும் அந்த யானைக்கும் மிகுந்த சம்பந்தம் உண்டாயிற்று. இப்படி இருக்கும் காலத் தில் ஒரு நாள் அவன் குடித்து வெறி கொண்டிருப் பதை அறிந்து, காவற்சேவகர் அவனைக் காவற் கிடங்குக்குப் பிடித்துப்போகும்படி தொடர்ந்தார் கள். அவனோ அந்த யானை நின்ற இடத்திற்கு ஓடி, அதின் வயிற்றின் கீழே ஒதுங்கினான். அவர்கள் அ வனைப் பிடிக்கப் பார்த்தும், யானை அவனைத் தன் து ம்பிக்கையினால் காத்துக்கொண்டதினிமித்தம் கூடா

மற்போயிற்று. அங்கேதானே அவன் படுத்து உறங்கினான். மறுநாட்காலையில் அந்த இராணுவ சேவகன் வெறிதெளிந்தபொழுது, யானைவயிற்றின்கீழே தான் படுத்திருப்பதை அறிந்து பயந்து நடுக்கமுற்றிருந்தான். யானையானது அவனுடைய மனக்கலக்கத்தைக் கண்டு, அவனைத் தேற்றுமே படியாகத் தன் கையால் தடவிச் சீராட்டி, இனி ஒன்றுக்கும் அஞ்சாமல் போகலாமென்று அவன் அறியும்படி பண்ணிற்று.

யானை தனக்கு அபகாரம் செய்தவர்களை நினைத்திருந்து சிலவேளை அவர்களுக்குச் சரசமான விதமாய்ப் பதில் அபகாரம் செய்வதும் உண்டு. இதைத் தில்லியில் இருந்த ஒரு யானையைக்குறித்து நடந்த சங்கதியினால் அறியலாம்:—தில்லிநகரத்தில் வாசமாயிருந்த தையற்காரன் ஒருவனுடைய தொழிற்சாலைக்கு அடுத்த வீதிவழியாய் ஒரு யானை நாள் தோறும் போவது வழக்கம். போகும்பொழுதெல்லாம் அவன் அதற்கு ஏதாவது ருசிகரமான பலகாரத்தைக் கொடுப்பான். ஒருநாள் அது தன் வழக்கப்பிரகாரம் பலகாரம் வாங்குவதற்கு அவனுடைய தொழிற் சாலையின் பலகணியில் தும்பிக்கையை வைத்தது. அன்றையதினம் அவனுடைய மனம் சற்று விகாரப்பட்டு இருந்ததினால், "உனக்குக் கொடுக்க என்னிடத்தில் ஒன்றும் இல்லை, போ" என்று சொல்லி, தான் தைத்துக்கொண்டிருந்த ஊசியால் அதின் தும்பிக்கையிற் குத்தினான். அது அமைதியாகச் சென்று, சேற்று நீருள்ள ஒரு குளத்

தண்டையில் சேர்ந்தபொழுது, தன் கைக்குழாய் நிறையும்படி அந்தச்சேற்று நீரை உறிந்து கொண்டு, மேற்படி தையற்காரனுடைய தொழிற்சாலையின் பலகணி வாயிலண்டை திரும்பிப்போய், அவனுடைய சரீரமும், அவனைச்சூழ இருந்த வஸ்துகளனைத்தும் முழுமையும் சேறுபடும்படியாகத் தும்பிக்கைக்குள் இருந்த சேற்றுநீரை இறைத்தது.

வேறு ஒரு கதை:—இந்தியாவில் இராணுவத்திற்குரிய சாமான்களை அங்கங்கே எடுத்துக்கொண்டு போகிற வேலையில் ஒரு யானை உபயோகிக்கப்பட்டிருந்தது. அதை யாவரும் வழக்கமாய் மதிகெட்ட யானை என்பார்கள். அது தான் மதிகெட்டதல்ல, மதியுள்ள யானையென்கிற பெயர் பெறுவதற்குப் பாத்திரமானதென்பதை மிகவும் ஆச்சரியமான விதமாய்க் காண்பித்தது——அதற்கு இஷ்டமான அளவிற்கு அதிகமான பளுவுள்ள சாமான்களை அதன்மேல் ஏற்றினபொழுது, அது அவைகளிற் சிலவற்றை அடிக்கடி தன் முதுகினின்று எடுத்து எறிந்தது. இராணுவ சாமான் விசாரணை உத்தியோகஸ்தர் ஒருவர் அதைக் கண்டு, அது இப்படி அடங்காமையாயிருந்ததினிமித்தம் கோபம் மூண்டவராகி, கூடாரமுளை ஒன்றை அதின் தலையில் எறிந்தார். சில காலம் சென்றதின்மேல் ஒரு நாள் அந்த யானைக்குத் தண்ணீர் காட்டும்படி அதைப் பாளயத்தினின்று ஒரு குளத்திற்குக் கொண்டுபோனார்கள். அப்பொழுது அது மேற்படி உத்தியோகஸ்தனை மறித்துத் துதிக்கையாற் பிடித்து எடுத்துச்

சாலைக்கு மேற்பக்கத்தில் வளர்ந்திருந்த புளிய மரத்தின் கொம்பின்மேல் ஏற்றி அதிலே தொங்கும்படி விட்டது.

மற்றொரு கதை—இதினால் ஒரு யானை அதிக ஞாபகமும், தான் பயின்றிருந்த வழக்கத்தின் பிரகாரம் தவறாமல் நடக்கும் தன்மையுமுள்ளதாயிருந்ததென்று அறியலாம்.—கல்கத்தாநகரத்திலே ஒரு துரையிடத்தில் இருந்த பெண்யானையொன்றை மேட்டுத்தரையான தேசத்தினின்று சித்தைகாங்குக்குக் கொண்டுபோகையில், அது ஏதோவகை மோசமாய்ப் பாகன் கைக்குத் தப்பி அடுத்த காட்டுக்குள்ளேபோய் மறைந்துவிட்டது. அவன் தன் எசமானிடத்தில் அதைப்பற்றி அறிவித்தான். அவன் சொன்ன சங்கதிகள் அவருக்குச் சமாதானமாயிருக்கவில்லை. ஆதலால் அவர் நீதித்துரைக்கு அதை அறிவித்தார். நீதித்துரை விசாரணைபண்ணி, அவன் யானையை விலைப்படுத்தி இப்படி வீண்சாட்டுச் சொல்லுகிறானென்று நினைத்து, அவனை மண்ணுக்குப்போட்டார். ஏறக்குறையப் பன்னிரண்டு வருஷம் சென்றபின்பு, காட்டுயானைகளைப் பிடித்து வரும்படி மேற்படி பாகன் துரைத்தனத்தாரால் அனுப்பப்பட்டு, அவனும் மற்றனேகரும் காட்டுக்குள்ளே போகையில், திரளான யானைகள் ஒரு கூட்டமாய் நிற்பதைக் கண்டார்கள். அந்தப் பாகன் வசத்தினின்று நெடுங்காலத்திற்குமுன் தப்பியோடின பெண்யானையும் அவைகளுக்குள்ளே நிற்பதாக அவனுக்குத் தோன்றிற்று. உடனே அவன்

அதனிடத்திற்குப் போகத்துணிந்தான். அவனுடைய கூட்டாளிகள் அவனைப் பார்த்து, "நீ இத்தனை பயங்கரமான பிராணபாயம் நேரிட்டிருப்பதைச்சிறிதும் மதிக்காமல் யானையினிடத்திற் போகத்துணிவது புத்தியல்ல" என்று தடுக்கப்பார்த்தார்கள். அவன் கேளாமல் யானைக்கூட்டத்துக்குச் சமீபமாய்ப் போனான். அப்பொழுது அவன் நினைத்துப் போன யானை அவனை அறிந்து, தன் தும்பிக்கையை உயர்த்தி ஆட்டுவதினால் அவனை உபசரித்து, காலை மடக்கிநின்று அவனைத் தன் முதுகின்மேல் ஏற்றிக் கொண்டது. அல்லாமலும் அது வேறு யானைகளைப் பிடிக்கும்படி துணைசெய்ததுந்தவிர, மேற் சொல்லிய காலவளையில் தான் போட்ட குட்டிகள் மூன்றையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டும்போயிற்று. அதின்மூலமாய் அந்தப் பாகனுடைய நடக்கையைக்குறித்து உண்டாயிருந்த சந்தேகம் நிவர்த்தியாயிற்று. மேலும் அவன் அநியாயமாகப் பட்ட துன்பங்களுக்காகவும், அவனுடைய துணிவுக்காகவும் அவனுக்கு மரணபரியந்தம் உபகாரச் சம்பளம் ஏற்படுத்தப்பட்டது. பின்பு அந்தப் பெண்யானை வேறஸ்திங்ஸ் என்னும் கவர்னர் ஜெனறலவர்கள் வசத்திலிருந்தது.

யானை விவேகமுள்ளதென்பதைப் பின்வரும் திர்ஷ்டாந்தங்கள் காட்டும்:— கொஞ்சக் காலத்திற்கு முன் இந்துதேசத்தில் அங்கிலேயருக்கும் பிரான்சியருக்கும் யுத்தம் நடக்கையில், பிரான்சியர் அநேகர் ஒரு பிரங்கிக்குண்டினாற் காயம்பட்ட யா

னை ஒன்றைக் கண்டார்கள். அந்த யானையை இரண்டு மூன்று நாள் வைத்தியசாலைக்குக் கொண்டு போய் அதின் காயத்தைக் கட்டுவித்தார்கள். ரண வைத்தியன் காயங்கட்டும்பொழுது அது தரையில் விழுந்து அமைவாகப் படுத்திருக்கும். பிற்பாடு அது தானாக வைத்தியசாலைக்குப் போக வர வழக்கப் பட்டிருந்தது. ரணவைத்தியன் அதின் காயத்திற்கு அவசியமான ஔஷதங்களைக் கட்டினான். சிலவேளை அதின் காயத்தை நெருப்பினாற் சுட்டதுமுண்டு. அவ்வேளையில் அது வருத்தம் பொறுக்காமல் அழுதது. ஆயினும் அது குமிறினதேயொழிய ஒருபொழுதென்கிலும் உக்கிரகுணத்தைக் காட்டவில்லை.

மற்றொரு இடத்தில் ஒரு யானைக்குட்டி தலையில் அதிகமாய்க் காயம்பட்டது. அந்தக் காயத்தினால் அதற்கு மிகுந்த வருத்தம் உண்டாயிருந்ததினிமித்தம் அது பைத்தியங்கொண்டதுபோல் ஒருவருக்கும் அடங்காமல் சீறிக்கொண்டிருந்தது. அதின் காயத்தைக் கட்டும்படி அது இடங்கொடுக்கவில்லை. யாராவது அதற்குச் சமீபத்திற் போனால் அது ஓடிப்போய்விடும். ஒருவரையும் கிட்டவொட்டாது. கடைசியில் அதின் பாகன் சற்றுநேரம் தனக்குள்ளே யோசித்து, சிலவார்த்தைகளின் மூலமாகவும் சைகைகளின் மூலமாகவும் அதின் தாய் யானைக்கு நீ நடப்பிக்கவேண்டுவது இன்னதென்று தெரிவித்தான். அந்த அறிவுள்ள தாய் யானையானது அவன் செய்த குறிப்புகளை அறிந்து, உடனே தன் குட்டியைக் கையால் இழுத்துத் தரையில் விழுத்தி அசை

யாமல் பிடித்துக்கொள்ள, இரணவைத்தியன் அதின் காயத்தைச் செவ்வையாய்ப் பார்த்துக் கட்டினுன். அந்தக் குட்டியானையினுடைய காயம் சொஸ்தமாகிறவளாயில் அதின் தாய் தினந்தோறும் இந்தப் பிரகாரம் செய்தது.

யானையைப்பற்றி இன்னும் ஒரு ஆச்சரியமான கதை சொல்லி முடிப்போம். இந்தியாவில் வாசமாயிருந்த ஒரு துரைசானி அங்கிலோதேசத்திலுள்ள தெவன்ஷர் தியூக்பிரபுவுக்கு வெகுமதியாக ஒரு பெண்யானை அனுப்பினுள். அதினுடைய சாந்தமான குணத்தைக் கண்டு எவர்களும் ஆச்சரியப்படுவார்கள். அது அதிக பட்சமாய் நடத்தப்பட்டதினுலும், ஓடி உலாவித்திரியும்படி வசதியான இடம்பெற்றதினுலும், காட்டிற் சஞ்சரிக்கிற யானைகளைப்போல் அவ்வளவாகத் தன்னிஷ்டமுள்ளதாயிருந்தது. அங்கிலோதேசத்திற்கு அப்போதப்போது கொண்டுபோகப்பட்ட எந்த யானைக்காவது அத்தனை சிலாக்கியம் கிடைத்ததில்லை. அதற்குக் கட்டப்பட்ட வீடு போதுமான விஸ்தாரமுள்ளதும், காற்றடைப்பில்லாததுமாயிருந்தது. மேலும் அதிக விசாலமுள்ள ஒரு வெளிநிலம் அதற்காக விடப்பட்டுமிருந்தது. பாகன் அழைக்கும்பொழுது அது தன் வீட்டினின்று வெளிப்பட்டு வெளிநிலத்திலுள்ள புற்களுக்குள்ளும் பாதையிலும் விழுந்திருக்கிற செத்தையைப் பெருக்குவதற்காக அதுதுடைப்பம் ஒன்று கையில் எடுத்துக்கொண்டு அவமூடத்திற்குச் செல்லும்; அல்லது தண்ணீர்க்குடம்

தூக்கிக்கொண்டு அவன் பின்னே போகும். அது செய்கிற வேலைகளுக்காக அவன் அதற்கு ஒரு வெண்சிவப்புக்கிழங்கும், கொஞ்சம் தண்ணீரும் கொடுப்பான். அது தண்ணீர் குடிக்குமுன்னதாக, ஒரு புட்டியின் அடைப்புக்குச்சை அதிக சூழ்ச்சியாய்த் திறந்து, அதிலுள்ள ஔஷதநீரைக் குடிக்கும். திறக்கும்படி யானைமுதலில் புட்டியை எடுத்து அதுநிலத்திலே சார்பாகப் பதிந்து அசையாதிருக்கும்படி அதைத் தன் காலால் ஊன்றி அமர்த்தும். பின்பு புட்டிக்கழுத்தின் விளிம்புடன் ஒட்டக் குறுகி இறுகியிருந்த அடைப்புக் குச்சைத் தன் கைநுனியால் மெல்லெனத் திருகிக் கழற்றி, புட்டியைக் கையின் துளைக்குள்ளே கவிழ்த்து ஒரு துளிநீராவது சிந்தாமல் ஊற்றிக்கொண்டு, புட்டியைப் பாகனிடத்தில் ஒப்பித்து, பின்பு கைத்துளையில் விடப்பட்ட நீரை வாய்க்குள் விட்டுக் குடிக்கும். அந்த யானை தன் பாகன்மீது அதிக நட்புள்ளதாயிருந்ததினால், அவனை இரண்டு மூன்று மணிநேரத்திற்கு மேற்படக் காணாதிருந்தால் அது சத்தமிட்டு அழும். அது ஏறக்குறைய இருபத்தொன்பது பிராயத்தில் ஈரற்காசத்தால் இறந்தது.

## காண்டாமிருகம்.

காண்டாமிருகம் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் காணப்படுகின்றது. ஆசியாவிலுள்ள காண்டாமிருகமானது வங்காளம், சீயாம், கொச்சின்சீனம், யாவ கதீவு, சமுத்திராதீவு, சீனதேசத்தின் ஒரு பாகம் ஆகிய இவைகளிற் சஞ்சரிக்கின்றது. ஆபிரிக்காவிலுள்ள காண்டாமிருகம் அபிசினியாவிலும், நன்னம்பிக்கைமுனைநாட்டிலும் சஞ்சரிக்கின்றது.

எத்தேசங்களில் உள்ளது.

காண்டாமிருகமானது அவலட்சணமான தோற்றமுள்ள பெரு மிருகம். அதின் நீளம் மூஞ்சியின் முனைமுதல் வாலின் அடிபரியந்தம் பன்னிரண்டு அடி; உயரம் ஆறு, ஏழு அடி. அதின் உடலின் சுற்றளவு நீளத்தைப்பார்க்கிலும் சற்றுக்குறைவு. காண்டாமிருகத்தின் முதுகு யானையின் முதுகுபோல் வில்வளைவானதல்ல. அது அதிகமாய் உள்ளே கவிந்திருக்கும். அதின் தலை ஒருபரியாயமாகப் பருத்திருக்கும்; மேலுதடு ஒருவிதமாகச் சிறுத்த தும்பிக்கைபோலச் சற்று நீண்டிருக்கும். காதுகள் நிமிர்ந்து கூர்மையாயிருக்கும்; பாதிக்கண் திறந்தாற்போல் இருக்கிற அதின் கண்கள் மூக்கிற்கு மிகவும் சமீபமாயிருக்கும். மூக்கிற்கு அத்தனை சமீபத்திற் கண் இருக்கின்ற நாற்கால் மிருகம் நாம் அறிந்தவற்றுள் இது ஒன்று தவிர, வேறு இல்லை. காண்டாமிருகத்தின் கால்கள் உரத்துப் பருத்துக் குறுகியி

தோற்றம்.

ருக்கும். அதின் குளம்பு மூன்று பாகமாகப் பிரிந்து முன் நோக்கியிருக்கும். இந்தியாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள காண்டாமிருகங்களின் பொதுவான தோற்றம் இதுவே. ஆயினும் இரண்டு விஷயங்களில் அவைகள் ஒன்றுக்கொன்று வெகு பேதமுள்ளவைகளாயிருக்கின்றன. ஆசியாவிலுள்ள காண்டாமிருகத்தின் மூக்குக்குமேலே கடினமானதும் சற்று வளைந்து கூர்முனையுள்ளதுமாகிய ஒற்றைக்கொம்பு இருக்கின்றது. அதின் நீளம் ஏறக்குறைய இரண்டு அடி; அடிக்கொம்பின் சுற்றளவு பதினெட்டு அங்குலம். அந்தச் சாதியான காண்டாமிருகத்தின் தோல் மிகவும் தடித்து விறைத்திருக்கும். அதின் மேற்புறத்தை வயிரமான கட்டிகள் மூடியிருக்கும். காண்டாமிருகத்தின் தோல் கழுத்திலும் கால்களிலும் பல பெருமடிப்புகளாகத் திரைந்திருக்கும். ஆபிரிக்காதேசத்திலுள்ள காண்டாமிருகத்தின் தோலில் அத்தனை பெரிய மடிப்புகள் இல்லை. அதின் தோளிலும், பின்பக்கங்களிலும், வயிற்றுப்பக்கங்களிலும் சிறு திரைவுகள் மாத்திரம் உண்டு. இப்படி இருப்பதினால் அதை ஆசியாவிலுள்ள சாதாரணமான காண்டாமிருகத்தினுடன் ஒத்துப்பார்க்குமிடத்தில் அதின் தோல் கொஞ்சம் குறைய முழுமையும் ஒப்பமானதாகத் தோன்றும். ஆயினும் காரியத்தளவில் அது விறைத்ததும், கட்டிகளால் நிறைந்ததுமாயிருக்கின்றது. அதனிடத்திலுள்ள மற்றொரு விசேஷம் அதற்கு இரண்டு கொம்புகள் இருப்பதே. அவற்றுள் ஒன்று சிறிது, மற்

றது பெரிது. சிறிது மேலும் பெரிது கீழுமாய் இரண்டும் மூக்கின்மீது இருக்கும். இத்தன்மையான விசேஷத்தையுடையதாகிய ஆபிரிக்காவின் காண்டாமிருகம் சாந்தமாயிருக்கும்பொழுது அதின் கொம்புகள் தசைபோலத் தளர்ந்தும், உக்கிரங்கொள்ளும் பொழுது உரத்து விறைத்தும் இருக்கும். மேற்சொல்லிய இருவகையான காண்டாமிருகங்களும் சற்றுக் கருமையான வர்ணமுடையவைகளாயிருக்கும். அவைகளுடைய சரீரத்திற் செவி நீங்கலான மற்றிடங்களில் உரோமம் இல்லை. எவ்வகைக் காண்டாமிருகங்களும் மந்தமும் தூக்கமுமான சாயலுள்ளவைகள். ஆபிரிக்காதேசத்தில் வேறு இரண்டு சாதியான வெள்ளைக் காண்டாமிருகங்களும் உண்டு.

குணவிசேஷங்கள்.

காண்டாமிருகம் கோபம் மூட்டப்படும்பொழுதும், எதிர்க்கப்படும்பொழுதும் மூர்க்கமுள்ளதும் அபாயம் செய்வதுமாயிருக்கும். மற்றப்படி இயற்கையாய் அது அமைதியும் சாந்தமுமான மிருகந்தான். அது விரைவாய் ஓடும்; அது மந்தமான சாயலுள்ளதாயினும், அதின் செவிப்புலன் கூர்மையாகவும், நாசிப்புலன் மிகவும் அதிகரித்தும் இருக்கும். அது மூர்க்கமுள்ளதுமல்ல, அதிக துஷ்டகுணமுள்ளதுமல்ல : எப்படியும் அறிவும் படிவும் அதற்கு இல்லை. இதுவிஷயத்தில் அது காட்டுப்பன்றியோடு ஒக்கும். அதைச் சாதுவாக்குவதுமிகவும் அருமை. அது கோபமில்லாதிருக்கும்பொ

ழுது அதின் சத்தம் காட்டுப்பன்றி உறுமுவது போல் இருக்கும்; கோபம் கொண்டிருக்கும் பொழுது, அது வெகு தூரமட்டும் கேட்கத்தக்கதாக மிகவும் உரத்துக் கத்தும். சாதாரணமான காண்டாமிருகத்தின் தோல் கண், செவி இவைகளின் சுற்றுப்புறங்களிலன்றி, மற்றெவ்விடங்களிலும் கத்தி வெட்டுக்கு அருமலும், துப்பாக்கிக்குண்டு உருவாமலும் இருக்கும்படியான அத்தனை கடினமாயிருக்கின்றது. ஆபிரிக்காதேசத்திலுள்ள காண்டாமிருகத்தின் தோல் சற்று மிருதுவானது. காண்டாமிருகம் மிகுந்த வலிமையுள்ளது. அதின் மூக்கின் மீது முளைத்திருக்கின்ற கொம்பு அதைக் காப்பதற்கு ஏற்ற அதிக பயங்கரமான கருவி. அதின் கண்கள் உருவத்திலும் ஸ்தானத்திலும் விகாரமுள்ளவைகளாயிருப்பதினல், அது தனக்கு எதிரே இருக்கிற பொருள்களை மாத்திரம் காணக்கூடும். காண்டாமிருகத்தின் கூர்முனையுள்ளதாகிய மேலுதடு ஆறு ஏழு அங்குலமளவிற்கு நீளும் தன்மையுள்ளதும், ஒருவாறு யானையின் துதிக்கைக்கு ஒப்பானதுமாயிருப்பதினல், அது தனக்குச் சமீபித்த பொருள்களை எளிதில் எடுக்கும்.

வழக்கங்கள். நிழலுள்ள மரங்கள்செறிந்த காடுகளிலும், ஆறுகளின் அயலிடங்களிலும், சதுப்பு நிலங்களிலும் சஞ்சரிப்பதே காண்டாமிருகத்திற்கு இஷ்டம். அப்போதப்போது தண்ணீரில் முழுகிப் பன்றிகளைப்போலச் சேற்றிற் புரள்வது அதற்குத் திர்ப்தி. யானைகளைப்போலக்

காண்டாமிருகங்கள் கூட்டம் கூட்டமாய்ப் போகிறதில்லை. அவைகள் தனிமையாயிருக்கும் தன்மையுள்ளவைகள்; யானையிலும் அதிக காட்டுக்குணமுள்ளவைகள். அவைகளைக் கீழ்ப்படுத்துவது பிரயாசம். அவைகளைக் கோபம் மூட்டினாலொழிய அவைகள் மனிதர்மேற் பாய்கிறதில்லை. கோபம்கொண்டாலோ அவைகள் அதிக உக்கிரத்தைக்காட்டும். அப்பொழுது அவைகளைப் பார்த்தால் மிகுந்த பயங்கரம் உண்டாகும். அவைகளுக்கு உக்கிரம் உண்டாகும்பொழுது, தங்கள் கொம்புகள் தரையிற்புதையும்படி குத்தி, மண் கட்டிகளையும் கற்களையும் பெயர்த்து, தலைக்குமேலாக நெடுந்தூரமட்டும் செல்லும்படி வீசும்.

இரை. காண்டாமிருகம் பரும்படியான கிரை, புல் இவைகளையும், முட்பூண்டுகளையும் தின்னும். அதற்குச் செழித்த மைதானங்களிலுள்ள மிருதுவான புற்களிலும் இவைகளே அதிக விருப்பம். மேலும் அது கரும்பில் மிகுந்த இஷ்டமுள்ளது; தானியவகைகள் எல்லாம் தின்னும். அது மாமிசபட்சிணியல்ல. அது தன் நீளமான மேலுதடு, நா இவைகளைக்கொண்டு மரங்களின் இலைகளையும், இளந்தழைகளையும் கொய்து வாய்க்குள் வைத்துத் தின்னும். அது தண்ணீர் அதிகமாய்க் குடிக்கும்.

குட்டி. காண்டாமிருகம் ஈற்றுக்கு ஒரு குட்டிக்கு அதிகம் ஈனுகிறதில்லை. ஈன்று ஒரு மாதமளவும் அதின் குட்டி ஒரு

பெருநாயைப்பார்க்கிலும் பெரிதாயிராது. அது ஐந் து ஆறு வயசுவரைக்கும் வளரும்; பின்பு வளருகிற தில்லை. காண்டாமிருகம் எண்பது வயசுமட்டும் சீவனோடிருக்கும்.

உபயோகங்கள். இந்துதேசத்தார்களும், காப்பிரிகளும் காண்டா மிருகத்தின் இறைச்சி தின்பார்கள். அது ருசிகரமான இறைச்சியாக மதிக்கப்படும். எத்தேசத்திலாவது பதமிடப்பட்டு வழங்குகிற தோல்களுக்குள் காண் டாமிருகத்தின் தோலைப்போல் அத்தனை கடினமும் உசிதமுமான தோல் வேறில்லை. ஆதலால் காண்டா மிருகத்தின் உறுப்புகள் எல்லாவற்றிலும் அதின் தோலே மிகுந்த உபயோகமுள்ளது. காண்டா மிருகங்கள் சஞ்சரிக்கின்ற தேசங்களில் வாசமா யிருப்பவர்கள் அவைகளுடைய கொம்பு, குள ம்பு, பல் இவைகளையும், வேறு சில உறுப்புகளை யும், இரத்தத்தையும் ஔஷதமாய் உபயோகிப்பார் கள். சிலவேளை வேட்டைக்காரர் விநோதத்திற்கா கக் காண்டாமிருகங்களை வேட்டையாடுவார்கள். ஐரோப்பாவில் அங்கங்குள்ள மிருகாசயங்களில் காண்டாமிருகம் காணப்படும்.

கதைகள். ௧௭௯0-ம் வருஷத்தில் பங்காள ராஜதானியைச் சேர்ந்த லக்ஷ்மணபுரியிலிருந்து ஒ ரு காண்டாமிருகம் அங்கிலோதே சத்திலுள்ள துரை ஒருவருக்கு வெகுமதியாய் அனுப்பப்பட்டது. பின்பு அவர் அதை மிருகாசய த்தலைவன் ஒருவனுக்கு ௭000-ரூபாய்க்கு விற்றார்.

அந்தக் காண்டாமிருகத்திற்குத் துஷ்டகுணம் சற்றுமில்லை. அதற்கு அறிமுகமில்லாதவர்கள் அதனிடத்திற் போய், அதன் முதுகிலும் விலாப்பக்கங்களிலும் தட்டினாலும் அது சும்மாயிருக்கும். அது ஒரு நாட்டுப்பன்றிபோல் அத்தனை சாதுவாயிருந்தது. அதைப் பராமரித்தவன் அதைப் பார்த்து, அறையில் உலாவித்திரியவும், பார்க்கவந்த ஜனங்களுக்குத் தெரியும்படி நிற்கவும் ஏவும்பொழுது, அது அவன் சொற்படி செய்யும். தித்திப்புள்ள திராட்ச ரசங்களில் அதற்கு மிகுந்த விருப்பம். அது அடிக்கடி கொஞ்சநேரத்திற்குள்ளாக நாலு மூன்று புட்டி நிறைந்த ரசத்தைக் குடிக்கும். கனிகளைத் தின்பதும் அதற்கு மிகுந்த பிரியந்தான்.

## முட்பன்றி.

எத்தேசங்களில் உள்ளது.

முட்பன்றி ஆபிரிக்காகண்டத்திலும், ஆசியாவின் கீழ்ப்பாகங்களிலும், இந்தியாவிலும் உற்பத்தியானது. மேலும் ஐரோப்பாவிலுள்ள சில தென்னாடுகளிலும் அதைக் காணலாம்.

தோற்றம்.

முட்பன்றி ஆச்சரியமான தோற்றமுள்ளது. மோதிரம்போல் வளைந்திருக்கிற வெண்மையும் கருமையுமான வளைகளுள்ள முட்கள் அதின் சரீரத்தின் மேற்பாகங்களை மூடியிருக்கும். பன்றிமுள் பட்சிகளின் இறகுகள் போல் அதின் சரீரத்தில் முளைத்துவளரும். முள்

ளின் இடை பருத்து, அடியும் தலையும் படிப்படியா கச் சிறுத்திருக்கும். அதின் தலைமுனை முட்போ லக் கூர்மையாயிருக்கும். சாதாரணமாய்ப் பன்றி முட்கள் புறவளைவுள்ளவைகளாயிருக்கும். முட் பன்றிக்குக் கோபம் உண்டாகும்பொழுதோ முட் களின் கூர்முனைகள் எல்லாம் நான்கு திக்கையும் நோக்கி யிருக்கும்படி நிமிர்ந்திருக்கும்.

குணவிசேஷங்கள்.

முட்பன்றி பகைவர்மேல் தன் முட்களைப் பிர யோகிக்கிறது என்பதாகச் சொல் லப்படும் கதைகள் நகைப்புக்கு இடமாயிருப்பதேயொழிய, அவை களிற் சிறிதும் உண்மையில்லை. அதின் முட்கள் பகைவரை வருத்துவதற்கல்ல; முக்கியமாய் அ தைக் காத்துக்கொள்வதற்கே கடவுள் கொடுத்தி ருப்பதாகக் காணப்படும். அது தானகச் சண் டைதொடங்குவது அருமை; அதனேடு பகைவர் எதிர்த்தால், அது தன் முட்களை எத்திசையிலும் பரப்பிக்கொண்டு நிற்கும். அப்பொழுது அதன் மேல் நெருங்கி விழுவது கடினம். முட்பன்றியும் பாம்பும் ஒன்றுக்கொன்று பிராணவிரோதிகள். எதி ர்ப்படும்பொழுதெல்லாம் அவைகளுக்குச் சண்டை நேரிடும். சண்டை நடக்கும் சமயங்களில் முட்ப ன்றி பாம்பின்மீது உருண்டு புரண்டு அதை நாசப் படுத்தும்: ஆயினும் அதின் சாதாரண குணங்களைப் பார்க்குமிடத்தில், அது கோழைத்தன்மையும் நிர் விக்கினமுமுள்ள மிருகமென்று அறியலாம். அதை நாய்களாவது, மற்ற மிருகங்களாவது தொடர்ந்

தால், அது மரங்களில் ஏறியும், புற்றுகளில் நுழைந்தும் தன்னைத்தொடர்ந்த பகைமிருகங்கள் சலிப்புற்றுத் திரும்புகிறவளையில் அங்கே தங்கியிருக்கும்.

வழக்கங்களும், இரையும்.

முட்பன்றியானது ஏகாந்தமாயிருந்து இராத்திரிகாலத்தில் உலாவித்திரியும். அது பகல் முழுதும் தன் குழியின் அடியில் பதுங்கியிருக்கும்; இராத்திரிகாலத்தில் வெளிப்பட்டு இரைதேடும். அது தன் குழியைப் பல அறைகளும் ஓரே வாயிலுமுள்ளதாகச் செய்திருக்கும். முட்பன்றி முக்கியமாய்க் காய், கிழங்கு, மரப்பட்டை முதலானவைகளைத் தின்பதினால் தோட்டங்களுக்குச் சேதம் உண்டாக்கும்.

குட்டி.

பெரும்பாலும் முட்பன்றி ஈற்று ஒன்றுக்கு இரண்டு குட்டி போடும்; அது தன் குட்டிகள் விரகு அறியுமட்டும் அவைகளுக்குப் பால் ஊட்டி வளர்க்கும்.

உபயோகங்கள்.

சிலவேளை வேட்டைக்காரர் மாமிசத்திற்காக முட்பன்றிகளை வேட்டையாடிக் கொல்வதுண்டு: ஆகிலும், மாமிசமல்ல, அதின் முட்களே மிகுந்த உபயோகமானவைகள். அவைகள் விசேஷமாய் வேலைப்பாடுகளைச் சிறப்பிக்கும் கருவிகளாய்ப் பிரயோகிக்கப்படும். அவைகள் தையற்பெட்டி, கூடைமுதலானவைகளை அலங்கரிக்கிறதற்கு உபயோகிக்கப்படும். அவ்வித வேலைப்பாடுகளில் கருமையும் வெண்மை

யும் அடுக்கடுக்காய்க் கலந்து தோன்றுவதினால், அவைகள் கண்ணுக்கு அழகாயிருக்கும்.

## கீரி.

கீரி கீழ்கடலில் இருக்கின்ற பல தீவுகளிலும், ஆசியாவைச் சேர்ந்த தீவுகளிலும் உண்டு. ஆபிரிக்காகண்டத்தில், முக்கியமாய் எகிப்திலும், அதனை அடுத்த நாடுகளிலும் அதைக் காணலாம். அங்குள்ளவர்கள் கீரியை "பார்வோனது எலி" என்பார்கள்.

எத்தேசங்களில் உள்ளது.

கீரிப்பிள்ளை சற்றேறக்குறைய ஒரு சிறு பூனையின் பரிமாணமுள்ளது. அதின் உடல் பூனையின் உடலைப்பார்க்கிலும் அதிகம் நீண்டு மெல்லிதாயிருக்கும்; கால்களும் பாதங்களும் குறுகியிருக்கும். அதின் நகங்கள் தோலுக்குள் சற்றே சுருங்கும் தன்மையுள்ளவைகள். அது சிறுத்துத் துலங்கிய கண்ணும், உடுக்கையின் இடைபோலக் குவிந்து முனையிற் கூர்மையாயிருக்கின்ற மூஞ்சியும், நீண்டு சடைபற்றியிருக்கின்ற வாலும் உடைய மிருகம். அதின் அங்கம் முழுவதும் ஒருவிதமான நரைத்த மெல்லிய ரோமம் செறிந்திருக்கும்.

தோற்றம்.

கீரி குரூரமான குணமுள்ளது; அதனிடத்தில் இரக்கம் இல்லை. அது திரளாகச் சஞ்சரிக்கின்ற எகிப்து நாட்டில் நைல் ஆற்றங்கரையில் கண்ணுக்கு

குணவிசேஷங்கள்.

எதிர்ப்படுகிற முதலை முட்டைகளையெல்லாம் எப்பொழுதும் நாசம்பண்ணிக்கொண்டிருக்கும். அது ஜலத்திற்குள் போவதற்குச் சக்தியில்லாத சிறுமுதலைக்குட்டிகளையும் கொலைசெய்யும். இந்துதேசத்திலே கீரி விஷ சர்ப்பங்களைச் சண்டைசெய்து வெல்வதினால் விசேஷித்திருக்கின்றது. அது தனக்கு எவ்வளவும் அபாயமில்லாதபடி சர்ப்பங்களைச் சமர்த்தாகத் தலையிற் கவ்விப்பிடித்துக் கொல்லும். அதை எளிதிற் சாதுவாக்கலாம்; சாதுவானபின்பு அது மிகுந்த அறிவுள்ளதாகத் தோன்றும். அதை வழக்கமாய் வைத்து வளர்க்கின்ற இடத்தில் அது சார்புள்ளதாயிருக்கும். எப்படியும் அதின் இயற்கையான மூர்க்கருணம் ஒருகாலும் முழுமையும் மாறுகிறதில்லை.

பழக்கங்கள்.

காட்டுக்கீரிகள் பெரும்பாலும் ஆற்றோரங்களிற் சஞ்சரிக்கும். ஆறுபெருகி, அவைகள் தங்கும் வளைகளை மூடும்பொழுது, அவைகள் தூரமாக நாட்டுக்குள் செல்லும். அவைகள் நீர்நாய்போல ஜலத்தில் நீந்தி முழுகுவதுமன்றி, வெகுநேரமட்டும் ஜலத்தின் கீழே மறைந்திருக்கும். அவைகள் கொள்ளையாடித் தின்பது வழக்கம். காட்டுக்கீரிகள் அடிக்கடி மனிதர் வாசமாயிருக்கின்ற இடங்களுக்குப் போய், வீட்டில் வளர்க்கப்படும் வாத்து, கோழிமுதலிய பட்சிகளையும், தங்களுக்குக் கீழ்ப்படத்தக்க சிறு மிருகங்களையும் பிடித்துப் பட்சிக்கும். பகற்காலத்தில் அவைகள் சற்றே சோம்புத்தன்மையுள்ளவைக

ளாயிருந்தும், இராத்திரியில் இரைக்காகத் திரியும் பொழுது, அதிக முயற்சியுள்ளவைகளாயிருக்கும். தரையிற் குழிதோண்டுவது அவைகளுக்கு உல்லாசம். பெரும்பாலும் அந்தக் குழிகளைத் தங்களுக்கு உபயோகப்படுத்துவதற்காகவல்ல, அவைகள் அமைதியற்ற குணமுடையவைகளாதலால், அவ்விதமாய்த் தங்களுக்குத் திர்ப்திசெய்வதற்காகத்தான். சிலவேளை அவைகள் தரையைக் கிண்டி அதற்குள் இருக்கிற புழுக்களைப் பிடித்துத் தின்னக் கண்டதும் உண்டு. கீரி தனக்கு இரைக்குரிய மிருகங்களைக் கண்டால், பாம்பைப்போலத் தவழ்ந்து அவைகளைத் தொடர்ந்து, அசுப்பிலே பாய்ந்து அமுக்கிப் பிடரியிற் பிடித்துக் கொல்லும். அது மிகுந்த சுறுசுறுப்புள்ள மிருகம்; மதில்களிலும் மரங்களிலும் எளிதாய் ஏறும். அது தூங்கும்போது தலையையும் வாலையும் வயிற்றுக்குள் வைத்துக்கொண்டு பந்துபோலச் சுருண்டு கிடக்கும். கீரிகள் சிலவேளை அணில்களைப்போலப் புட்டத்தில் உட்காந்துகொண்டு முன்காலால் இரையெடுத்துத் தின்னக் கண்டதுண்டு.

இரை. கோழி, வாத்துமுதலிய பறவைகள், சிறு மிருகங்கள், ஊரும் ஜெந்துகள், எலி, சுண்டெலி, சர்ப்பம், பல்லி ஆகிய இவைகளைக் கீரி பிடித்துப் பட்சிக்கும். மேலும் அது முட்டைகளிலும் அதிக விருப்பமுள்ளது; முட்டைகளை மிகுந்த ஆவலோடு பட்சிக்கும்.

ஆபிரிக்காதேசத்திலே கிரி முதலைகள் அதிகமாய் விர்த்தியாகாதபடி செய்வதினால், அது அங்குள்ளவர்களுக்கு மிகுந்த உபயோகமுள்ளது. இந்து தேசத்தில் சுண்டெலி, எலிமுதலான கெடுதிசெய்கின்றஜெந்துக்கள் வீட்டினின்று தொலையும்படி செய்வதற்காக, கீரி வீடுகளில் வளர்க்கப்படுவதுண்டு. அது அந்தத் தொழிலைச் சமர்த்தாகச் செய்யும்.

உபயோகம்.

## அணில்.

அணில் ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும், ஆசியாவின் சில பாகங்களிலுமுள்ளது.

எத்தேசங்களிலுள்ளது.

அணிற்சாதியில் பல பேதங்கள் உண்டு. இந்து தேசத்தில் எவர்களும் சாதாரணமாய் அறிந்திருப்பது நரைவர்ணமுள்ளதாயிருக்கும். அதின் முதுகில் மஞ்சள்வர்ணமான ரேகைகள் மூன்று உண்டு. அணில் எலியிலும் அதிகம் பெரிதல்ல. அதற்கு நிமிர்ந்து குறுகிய செவியும், பருத்துத் துலங்கி, வட்டமாயிருக்கின்ற கண்ணும், சிறுத்துக் கூர்மையாயிருக்கின்ற மூஞ்சியும், மூக்கும், குறுகி வலிய நரம்புள்ளதாயிருக்கின்ற காலும், சடைபற்றிச் சிறந்திருக்கின்ற வாலும் உண்டு. பல பேதங்களுள்ளதாயிருக்கின்ற அணிற்சாதியில் அதிகம் விசேஷித்தது பறவை

தோற்றம்.

அணில் என்பது. அது பட்சிகளைப்போல ஆகாயத்தில் பறக்கச் சக்தியுள்ளதாயிருப்பதினாலல்ல, பறப்பதற்குச் சமானமாய் அத்தனை தூரத்திற்கு எட்டிப் பாயும்படியான சக்தியுள்ளதாயிருப்பதினாலேயே அதற்கு இந்தப் பெயர் உண்டாயிற்று. பறவை அணில் இந்துதேசத்தில் திரளாய் உண்டு. அது சாதாரண அணிலைப்பார்க்கிலும் சற்றே சிறியது. அதற்கு முன்கால் தொடங்கிப் பின்கால்வரைக்கும் விலாப்புறத்திலுள்ள தோல் விரிந்திருப்பதினால், அது கால்நீட்டும்பொழுது அதின்தோல் வெளவாலின் கால்களுக்கு இடையிலுள்ள சவ்வைப் போல் அகலும். ஆனதுபற்றி அது சற்றுவேளை அந்தரத்தில் நிற்கத்தக்க சக்தியுள்ளதாயிருக்கின்றது. அந்தவகையான அணில்கள் அமெரிக்காகண்டத்திலும் திரளாய் உண்டு.

அணிலானது மரங்களில் சஞ்சரிக்கும் ஜெந்து.

குணவிசேஷங்கள்.

மரம்செறிந்த காடுகளே அதற்கு இயல்பான இருப்பிடம். அது ஒரு கொம்பிலிருந்து மற்றொருகொம்புக்கு மிகவும் ஆச்சரியமாய் அதிக விரைவாகப் பாயும். அதினிமித்தம் அது பாயும்பொழுது அதைத் துப்பாக்கிகொண்டு சுட்டு விழுத்துவது அருமை. அது அதிக அழகும் சுறுசுறுப்புமுள்ளது; அதினிடத்தில் துஷ்டகுணம் இல்லை ; அது சாதுவான ஜெந்து : ஆனதன்மையினால் அதை எளிதாக மனிதர் தங்களுடன் பழகும்படி செய்வார்கள். அது ஏக்கமுற்றிருக்கும்பொழுதும், இன்பமுற்றிருக்கும்

பொழுதும் மிகுந்த வெடிப்பாகவும் விரைவாகவும் சத்தமிடும்.

வழக்கங்கள்.

அணிற்சாதிகள் எல்லாம் மரங்களிற் சஞ்சரித்து, கிளைக்குக்கிளை பாய்ந்து திரியும். அவைகள் ஒரு மரத்தினின்று ஒரு பாய்ச்சலில் தாவக்கூடாதிருக்கும்படியான தூரத்திலுள்ள மற்றொருமரத்திற்குப் போகவேண்டுமானால், அப்பொழுதுமாத்திரம் தரையில் இறங்குவதேயொழிய, மற்றப்படி இறங்குவது அருமை. இந்துதேசத்தில் அணில்கள் தரையிலும், வீடுமுதலிய கட்டடங்களின் முகட்டிலும் உல்லாசமாய் விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்தோம். காடுகளில் சஞ்சரிக்கின்ற அணில்கள் மிகுந்த ஜாக்கிரதையுள்ளவைகள். அவைகள் இருக்கின்ற மரத்தை ஆராவது மெல்லெனத் தொட்டாலும் தொட்டமாத்திரமே அவைகள் திகிலடைந்து தடுமாறித் தங்களுக்கு முழுமையும் க்ஷேமமென்று காணப்படுகிறவரையில் மரத்துக்கு மரம் மாறிப் பாய்ந்துகொண்டிருக்கும். சுறுசுறுப்புள்ள இச்சிறுஜெந்துவாகிய அணிலைப் பிடித்து, கூட்டில் அடைத்திருக்கும்பொழுதும், அது ஓயாமல் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டேயிருக்கும்.

இரை.

அணிலுக்கு இரை விதம் விதமான கொட்டைகள், இளமரங்களின் பட்டைகள், இலையரும்புகள், இளந் தளிர்கள் முதலியவைகளே. அது பின்காலிற் குந்திக்கொண்டு, முன்காலால் இரையை எடுத்து வாய்க்குள்

வைத்துத் தின்பது வழக்கம். அங்கிலோதேசத்தி லேஅணில்கள் குளிர்காலத்திற்குத் தங்களுக்குவே ண்டிய கொட்டைமுதலிய இரைகளை முன்னமே புத்தியுடன் தேடி ஒன்றாகச் சேர்த்து, தங்கள் இருப்பிடத்திற்குச் சமீபத்தில் பத்திரமாய் வைக் கும். குளிர்காலத்தில் மரங்களில் இலை கனி ஒன் றும் இல்லாதிருக்கும்பொழுது, அணில்கள் முன் சேர்த்து வைத்த இரைகளைத் தின்னும். அவை மனிதர் கைவசப்பட்டு அடைக்கப்பட்டிருக்கும் பொழுது, ரொட்டி, பால், இரண்டொருவிதமான பழம் இவைகளைத் தின்னும்.

குஞ்சு.

அணில் பாசி, மெல்லிய சுள்ளி, சருகு இவை களைச் சேர்த்து, நுட்பமாய் ஒன்று டன் ஒன்று இசைத்துப் பின்னிக் கட்டும் கூடு வெகு விந்தையான வேலைப்பாடுள் ளது. அது தன் கூட்டைச் சாதாரணமாய் மரப் பொந்துகளிலும், மனிதர்கண்ணுக்கு மறைந்து, கா ற்றுக்கும் மழைக்கும் ஒதுங்கியிருக்கின்ற மரக் கிளைகளின் இடுக்குகளிலும் கட்டும். அது ஒரு ஈற்றுக்கு நாலு ஐந்து குஞ்சுகள் ஈனும். அவைகள் சிலநாள்வரையில் கண்திறவாதிருக்கும். குஞ்சுக ள் தாமாய் இரைதேடத்தக்க பருவமுடையவைக ளாகிறவரையில் தாயணில் அவைகளுக்குப் பால் ஊட்டும். இந்துதேசத்தில் அணில் மேற்சொல்லி யபடி அத்தனை விந்தையாய்க் கூடு கட்டுகிறதில்லை. அது பருத்திப் பஞ்சு, தென்னந்தும்பு முதலிய மெல்லிய வஸ்துக்களை எடுத்து ஒன்றின்மேல்

ஒன்றைத் தாறுமாறாய் அடுக்கித் தன் கூட்டைப் பரும்படியாய்க் கட்டும். அது சாதாரணமாய் மரங்களிலும், வசதியான பதிவிடங்களுள்ள வீட்டுமுகடுகளிலும், மேல்மெத்தைகளிலும் அந்தக் கூட்டை வைத்து, அதில் வாசமாயிருக்கும்.

உபயோகங்கள்.

அணிலின் உறுப்புகளில் மனிதருக்கு உபயோகமாவது அதின் தோல் ஒன்றுமாத்திரமே. இந்துதேசத்தில் உரோமத்துடன் சேர்ந்த அணில் தோலினால் குல்லாக்களும், வேறு உபகாரணங்களும் செய்யப்படும். அவைகள் சாதாரண ஜனங்களால் உபயோகிக்கப்படும். சிற்றுருவாகிய அணிலைச் சில வேளை விநோதத்திற்காகச் சாதுவாக்குவார்கள்.

இந்துதேசத்தில் கிட்டத்தட்ட உடு-வருஷத்திற்குமுன் கிறிஸ்துமார்க்கபோதகராயிருந்த மெஸ்தர் ஊ-டுல் ஐயர் இதன் கீழ்வரும் கதையை எழுதினார். "நான் ஒரு நாள் ஒரு சிறு தேவாலயத்தை அடுத்த வஸ்திராலயத்தில் இருக்கையில், மிகவும் சிறிதான அணிற்குஞ்சு ஒன்று முகட்டிலிருந்து தரையில் விழுந்தது; விழுந்தும் அது காயப்படாமல் அதிக விரைவாய் ஓடியதினால், அதைப் பிடிப்பது சற்றுப் பிரயாசமாயிருந்தது. எப்படியும் நான் அதைப் பிடித்துப் பீடத்தின்மேல் பத்திரப்படுத்திவைத்தேன். பின்பு முகட்டில் இருந்த தாய் அணில் தன் குஞ்சை நான் பிடித்துக்கொண்டதைப் பார்த்து, பரிதபித்துச் சத்தமிட்டதினால், நான் அதைப் போகவிட்டேன். பின்பு அதின்

தாய் ஆலயத்தின் வழியாய் இறங்கி வாயில் வழியாகவோ, பலகணி வழியாகவோ அறைக்குட் சென்று, குஞ்சை வாயினுற் கவ்வி, திரும்பவும் அதைப் பத்திரமாய் முகட்டிற்கொண்டுபோய்ச் சேர்த்தது. இத்தேசத்திலுள்ள அணில்கள் நரை நிறமானவைகள். அங்கிலோதேசத்தில் இருப்பவைகளைப்போல வடிவானவைகளல்ல. இந்தியாவில் எங்கும் திரளான அணில்கள் உண்டு. சற்று இடங்கொடுத்தால், அவைகள் துணிவுடனே வீட்டுக்குள் வந்து, பீடத்தில் வைத்திருக்கும் ஆகாரத்தைக் கோதித்தின்னும். ஒருசோடு அணில்கள் ஒருமுறை என்புஸ்தகப்பலகையிலே கூடுகட்டி வாசமாயிருந்து குஞ்சு பொரித்தன. கொஞ்சநாள்வரையில் அவைகளை ஒருவரும் துரத்தவில்லை. பின்பு அவைகள் என் புஸ்தகத்தின் தோலுறைகளைப் பல்லால் கடித்துப்பழுதாக்கினதினுல் நான் அவைகளைத் துரத்திவிட்டேன். இங்குள்ள பொர்த்துகேசியர் அணிலை "பனை எலி" என்பார்கள்."

## வௌவால்.

வௌவால் என்பது ஒரு தேசத்தில்மாத்திரமல்ல, பொதுவாக எத்தேசங்களிலும் திரளாயுண்டு. ஜலம் உறையும்படியாய்க் குளிர் அதிகரித்திருக்கிற தேசங்களில் மாத்திரம் வௌவால் இல்லை. அது உஷ்ணதேசங்களில் அதிகமாயுண்டு.

எத்தேசங்களில் உள்ளது.

**தோற்றம்.** வௌவால்சாதியைச் சேர்ந்த மிருகங்கள் பல வேறுபாடுள்ளவைகளாயினும், யாவரும் அறிந்திருக்கிற வௌவால் துரிஞ்சில் ஒன்றே. அதின் நீளம் கிட்டத்தட்ட இரண்டரை அங்குலம். அது சுண்டெலியத்தனை பருமனானது. பொதுவாய் அதின் சிறகுகளென்று சொல்லப்படும் உறுப்புகள் சிறகுகளல்ல; அவைகள் அதின் முன்கால்களின் நாலு இடைவிரல்களாம். அவ்விரல்கள் அதிகம் நீண்டு இருண்டவர்ணமான மெல்லிய சவ்வினால் இணைக்கப்பட்டிருக்கும்; அந்தச் சவ்வு பின்கால்கள்மட்டும் அகன்று அங்கிருந்து வால்பரியந்தம் பரந்திருக்கும். துரிஞ்சிலின் தோல் செம்மைகலந்த சுண்டெலி வர்ணமான குறுகிய ரோமத்தால் மூடப்பட்டிருக்கும். அதின் கண்கள் சிறுத்திருக்கும். அதின் செவிக்கும் சுண்டெலியின்செவிக்கும் சற்றுவது பேதம் இல்லை.

**குணவிசேஷங்கள்.** விகாரமான மிருகமாகிய வௌவாலை முற்காலத்திலுள்ளவர்கள் பட்சிவகுப்பிற்சேர்த்திருந்தார்கள். பரீட்சித்துப்பார்க்குமிடத்தில், அது நாற்கால்மிருகங்களின் வகுப்பிலுள்ளதென்று தெளிவாகத் தெரியவருகின்றது. எப்படியும் அது மிகுந்த விரைவாகப் பறக்கும்படியான தன்மையுள்ள ஆச்சரிய உருவமுடையதாயிருக்கின்றது. அதற்கு நாசிப்புலன், பரிசவுணர்ச்சி, செவிப்புலன் ஆகியஇவைகள் மிகவும் அதிகரித்திருக்கும். அதின் செவிகளிலும்,

மூக்கிலும், பரந்த சிறகுகளிலும் எண்ணிறந்த பரி சநாடிகள் இருப்பதினால், அது குருடானபோதி லும், எதிர்ப்படுகிற தடக்குகளுக்கு எல்லாம் எளி தாய் விலகி, ஆகாயத்தில் தடையின்றிப் பறப்பது மல்லாமல், மிகவும் ஒடுக்கமான துவாரங்களையும் சமர்த்தாக ஊடுருவிச்செல்லும்.

வௌவால் அதிக மந்தநடையுள்ளது. அதுமு தல் ஒருபுறத்திற் காலை எடுத்து அடிவைத்து, அப் புறம் மறுபுறத்திற் காலை எடுத்து அடிவைத்து இவ் வாறு மெல்லென நடக்கும். அது செங்குத்தான மலை, மரம், மதில் இவைகளிலோ வெகுதுரிதமாய் ஏறும். வௌவாலுக்குக் காலை மாலையிலும், இரா த்திரி வேளையிலும் கண் அதிக துலக்கமாய்த் தெ ரியும்.

**வழக்கங்கள்.** சாதாரணவௌவால் மப்பு மந்தார மின்றி வெளுத்திருக்கிற சாயங்காலவேளைகளில் வெளிப்படும். அது பெரும் பாலும் காட்டுப்புறங்களிலும், காட்டின் இடை வெளிகளிலும், மரநிழலுள்ள வீதிகளிலும் போ வதுமன்றி, இராத்திரி காலத்தில் திரிகிற சுபாவமு ள்ள பூச்சி, புழு, நுளம்பு முதலிய ஜெந்துகள் எளி தாய் அகப்படக்கூடிய ஆறு, ஏரி இவைகளிலும் நீர்மட்டமாகப் பறப்பதும் வழக்கம். சற்றும் வெ ளுப்பின்றி மப்பு மந்தாரமாய் இருந்தாலோ, அது இடிந்து தகர்ந்திருக்கின்ற கட்டடங்களின் வெடிப் புகளிலும், அதற்கு அதிக கொண்டாட்டமானமர ப்பொந்துகளின் முடுக்குகளிலும் ஒதுங்கிப்பதுங்

கியிருக்கும். குளிர்காலத்தில் குடியிருக்கிற வீடுகள், தேவாலயங்கள் இவற்றின் முகடுகள், மரப்பொந்துகள் ஆகிய ஒதுக்கமான இடங்களில் துரிஞ்சில்கள் கூட்டங்கூட்டமாய்ச் சேர்ந்து, பின்காலால் மரமுதலியவைகளை இறுக்கிப் பிடித்துத் தலைகிழாய்த் தொங்கும்.

இரை. சிலசாதியான வௌவால்கள் பூச்சி புழுக்களை மாத்திரம் தின்னும்; மற்றவைகளோ முக்கியமாய்க் கனிகளைத் தின்னும். பலசாதி வேறுபாடுடையவைகளாய் இருக்கின்ற வௌவால்கள் அனைத்தும் இவ்விரண்டு வகுப்புகளில் அமையும்.

குஞ்சு. வௌவால் தன் குஞ்சுகளுக்காக நூதனமாய் ஒரு இருப்பிடத்தை எத்தினப்படுத்துகிறதில்லை; அதுமுதலில் தனக்கு எதிர்ப்படுகிற பொந்திற் புகுந்து அதுவே போதுமென்றிருக்கும். அது தன் பொந்தின் பக்கங்களில் நகத்தால் இறுக்கிப்பிடித்துத் தொங்கிக்கொண்டு தன் குஞ்சுகளுக்குப் பாலூட்டும். அது வெளிப்பட்டு இரைதேடுவது அவசியமென்று காண்கிறவளையில் இப்படிச் செய்யும்: இரைதேடப் போகும்பொழுது, அது தன் குஞ்சுகளை எடுத்து, தான் திரும்பிவருமளவும் மதிலில் தொங்கியிருக்கும்படி வைத்துப்போகும்.

உபயோகங்கள். உலகத்தில் சிலபட்சிகளால் உண்டாகும் பயனே வௌவாலாலும் உண்டாகின்றது. அது காலை மாலையிலும்,

இராத்திரிகாலத்திலும் பறக்கிற பூச்சி புழுக்களைப் பட்சிப்பதினால், ஆகாயத்தில் அவைகள்இல்லாதிருக்கும்படி செய்கின்றது.

## குரங்கு.

எத்தேசங்களிலுள்ளது.

குரங்குகள் பலவித சாதிகளை உடையவைகளாயிருக்கின்றன. பல சாதியான குரங்குகள் அமெரிக்காவிலும், இந்தியா, மலாக்காவை அடுத்த சமுத்திரத்திலுள்ள கூட்டமான தீவுகள் ஆகிய இவைகளிலும், ஆசியா, ஆபிரிக்காகண்டங்களின் மறுபாகங்களிலும் சஞ்சரிக்கின்றன. ஆகிலும் ஆபிரிக்காகண்டமே சாதிசாதியான குரங்குகளனைத்தும் சஞ்சரிக்கின்ற முக்கியஸ்தானமாக மதிக்கப்படும். அங்கே அவைகள் திரளாய் உண்டு. அந்தந்தச் சாதியான குரங்குகள் வெவ்வேறு எல்லைகளுக்குள்ளே சஞ்சரிக்கிறதென்றும், ஒரு சாதிக்குரங்கு தன் எல்லைக்குள்ளே மறுசாதிக்குரங்கை வர ஒட்டுகிறதில்லையென்றும் சொல்வார்கள்.

தோற்றம்.

ரூபத்திலும் சாயலிலும் ஒன்றுக்கொன்று பேதமுள்ளவைகளாயிருக்கின்ற குரங்குச்சாதிகள் பலவாயிருந்தும், அவைகளனைத்தும் வாலில்லாக்குரங்கு, குறுவாற்குரங்கு, சாதாரண குரங்கு என்னும் மூன்று வகுப்புகளில் அடங்கும்.

குரங்குகள் பொதுவாய் மனிதர் சாயலுக்கு ஒப் பான சாயலையுடையவைகள்: ஆகிலும் வாலில் லாக்குரங்கே உருவத்தில் அதிகமாய் மனிதனைப் போன்றிருப்பது. அதற்கு வால் இல்லை. அது இரண்டு காலால் நிமிர்ந்து நடக்கும்; அதின் காலில் மனிதருக்கு இருப்பதுபோல ஆடுதொடை இருக் கும். அதின் காலும் கையும் மனிதர்காலுக்கும் கைக்கும் சமானமாயிருக்கும். குறுவாற்குரங்கு அதிக அவலட்சணமுள்ளது. அது குறுவாலும், தன் கன்னத்தின் கீழே வாய்க்குட்செல்லும் இரை யைச் சற்றுநேரமளவும் கொள்ளும்படியான பைக ளுமுடையது. பொதுவாக அது மற்ற நாற்கால் மிருகங்களைப்போல நாலுகாலால் நடக்கும். அது இரண்டு காலில் நிமிர்ந்து நிற்கிறது அருமை. சாதாரண குரங்கு என்பதற்குப் பெரும்பாலும் கன்னத்தின்கீழே பைகள் இருக்கும். அதற்கு நர ம்புப்பெலனுள்ள நீண்டவாலுண்டு. அதின் இரு பக்கங்களும் பரிசவுணர்ச்சியின்றி விறைத்திருக் கும். இந்த வகுப்பைச் சேர்ந்த மிருகங்கள்தான் எண்ணிறந்தவைகளும் பலசாதிவேறுபாடுள்ளவை களுமாம். மேற்சொல்லிய மூன்று வகுப்பான குர ங்குகளின் சரீரம் நூனதிகமாய் ரோமத்தால் மூட ப்பட்டிருக்கும்.

குணவிசேஷங்கள்.

எவ்வகையான குரங்குகளும் தங்கள் முன்கால் பின்காலாகிய நான்கு கால்களினு லும் பொருள்களைப் பிடிக்கும்படி யான திராணியுள்ளவைகளாயிருப்பதினால், அவை

கள் சதுர்க்கரம் என்னும் மிருகங்களின் வகுப்பில் அமையும். சாதாரண குரங்கு என்பது வானரங்கள் எல்லாவற்றிலும் சிறியது. ஆதலால் அது வாலில்லாக்குரங்கு, குறுவாற்குரங்கு என்பவைகளைப்போல அத்தனை கெடுதி செய்கிறதில்லை. அது மிகவும் எளிதிற் சாதுவாக்கப்படும். அந்தந் தச் சாதியான குரங்குகளின் மூர்க்கம் அதினதின் பரிமாணத்தின்படி அதிகரித்தும் குறைந்தும் இருக்கும் என்பது சாமானியமாய் உறுதிப்பட்டிருக்கின்ற உண்மை. அந்த உண்மைக்கு இதுவும் ஒரு திர்ஷடாந்தமாம். வானரசாதிகளுக்குள்ளே சாதாரண குரங்கு என்னும் வகுப்பைச்சார்ந்தவைகள் தான் அதிக துரிதமும் வேகமுமுள்ளவைகள். அவைகள் அதிக விரைவாக மரங்களில் ஏறும். குட்டி தாய்க்குரங்கின் உடலோடு ஒட்டும்படி அதின் முது கை இறுக்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறபொழுதிலும், தாய்க்குரங்கு அதைச் சுமந்துகொண்டு, ஒரு மரத்திலிருந்து அதற்குச் சமீபமாயுள்ள மற்றொரு மரத்திற்குத் தாவவும், கைவழுவாமல் மரக்கிளைகளை உறுதியாகப் பிடித்திருக்கவும் திராணியுள்ளது. அமெரிக்காகண்டத்திற் சஞ்சரிக்கின்ற சிலசாதியான குரங்குகள் எதிர்ப்பட்ட எந்தப் பொருளையென்கிலும் தங்கள் வாலினுற் சுற்றி இறுக்கிப் பிடித்துக் கொள்ளும் சக்தியுள்ளவைகள். ஆதலால், அவைகளின் வால் பல விதத்திலும் அவைகளுக்குக் கைக்குச் சமானமாயிருக்கின்றது. இந்த நியாயம்பற்றி அவைகளுக்குக் கை ஐந்து என்று சொல்லலாம்.

மேலும் அவைகள் தங்கள் வாலால் மரத்தின் கொம்புகளை இறுக்கிப் பிடித்து ஊஞ்சலாடுவதும் உண்டு. சாதாரண குரங்கு என்னும் வகுப்பைச் சேர்ந்த பிராணிகளுக்கு யூகித்தல், தியானித்தல் என்னும் அந்தக் கரணங்களும், சாதாரணமாய் மிருகங்களுக்குள்ள இயற்கையறிவிலும் அதிக இயற்கை யறிவும் உண்டென்பதாகச் சில ஸ்தாவர சங்கம வித்தியாபாரகர்கள் எண்ணங்கொண்டார்கள். காரியத்தைப் பார்க்குமளவில் யானை, நாய் முதலிய பலநாற்கால்மிருகங்களைப்பார்க்கிலும் குரங்குகள் அறிவிலே மிகவும் குறைந்தவைகளாய்க் காணப்படுவதினால் அவர்கள் கொள்கை யதார்த்தமல்ல.

வழக்கங்கள்.

குரங்குச்சாதிகளில் அனேகம் கூட்டங்கூட்டமாய்ச் சேர்ந்திருக்கும் தன்மையுள்ளவைகள். ஒரு வகுப்பிலுள்ள குரங்குகளே எப்பொழுதும் ஒன்றாகக் கூடும். வனத்தில் வாழும் குரங்கு சிங்கம், புலி இவற்றைக் காணும்பொழுது, விரைவாய் ஓடியும், எதிர்ப்பட்ட மரத்தில் ஏறியும் எளிதாய் அவைகளுக்குத்தப்பித்துக்கொள்வதினாலும், சிங்கமாவது, புலியாவது அதற்கு எதிரிடைசெய்யாதிருப்பதினாலும், குரங்கே வனத்தலைவன் என்று சொல்வார்கள். அப்படிச் சொல்வது நியாயந்தான். ஒருவன் துப்பாக்கிக்குண்டையாவது, அம்பையாவது, குரங்கின் மேற் பிரயோகிக்கும்படி அதை இலக்காகவைத்துப் பார்க்கும்பொழுது, அது கத்தி, பல்லைக் கடிக்

கும். குண்டுபட்டாவது, அம்புபட்டாவது ஒரு குரங்கு விழுந்தால், அதின் இனத்தைச் சேர்ந்த குரங்குகளெல்லாம் ஓலமிட்டழும்; அது காயம்பட்டு விழாதிருந்தால், அவைகள் அதைத் தூக்கித் தங்கள் சத்துருவுக்கு அகப்படாதிருக்கும்படியான தூரத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கும். குரங்குகள் செய்யும் கெடுதி மிகுதி. தங்களுக்கு எதிர்ப்படுகிற யாவையும் துண்டுதுண்டாய் முறிப்பதும், சின்னபின்னமாய்க் கிழித்துப்போடுவதும், திருடிக்கொண்டோடுவதும் அவைகளுக்கு அதிக கொண்டாட்டம். அவைகள் கோபித்தால், அல்லது வெறுத்தால் மூர்க்கங்கொண்டு பற்கடிக்கும். பொதுவாகக் குரங்குகள் அடிபட்டால், கேட்போர் பரிதபிக்கும்படி குழந்தைகளைப்போல, பெருமூச்சுவிட்டு, விம்மிச் சத்தமிட்டலறும். அவைகள் க்ஷேமமாயிருக்கும்பொழுது, சிலவேளைகளில் நகைப்புண்டாகும்படி நையாண்டிகாட்டுவதும், பலவிகாரமான சேஷ்டைகள் பண்ணுவதும் வழக்கம். பரிகாசத்திற்கு இடங்கொடாதிருப்பவர்களுக்கும், அத்தருணங்களில் அவைகளைப்பார்ப்பது விநோதமாயிருக்கும்.

**இரை.** கனிகள், இளந்தளிர்கள், சாரம் அதிகரித்த கிழங்குகள், பூண்டுகள் இவைகளே குரங்குகளுக்கு முக்கியமான இரைகளாம். எவ்வகைக்குரங்குகளும் இனிமையான பதார்த்தங்களை விரும்பும். விசேஷமாய்த் தித்திப்பான பனஞ்சாறும், கருப்பஞ்சாறும் அவைகளு

க்கு அதிக உவப்பாயிருப்பதாகத் தோன்றும். அவைகளுக்குச் சாதாரணமான இரை அகப்படாதிருக்கும்பொழுது அவைகள் பூச்சி புழுக்களைத் தின்னும். கடலைச்சார்ந்த இடங்களில் சஞ்சரிக்கும். ரங்குகள் சிலவேளை கரைக்குப்போய், அங்குள்ள மட்டி, நண்டு இவைகளைத் தந்திரமாகப் பிடித்துத் தின்னும். அவைகள் கடற்கரையிலுள்ள பெருமட்டிகளைத் தெரிந்தெடுத்து, வாய்திறந்திருக்கின்ற மட்டிகளின்வாயின் இடையில் கற்களைப் போட்டுவைக்கும். அதினிமித்தம் அந்த மட்டிகள் ஊரத்திராணியற்றவைகளாவதினால், குரங்கு எளிதில் தன் இஷ்டப்படி அவைகளைப் பட்சிக்கும். மேலும் குரங்குகள் தேங்காய்பறித்து மிகவும் சூசனையாக அதிலுள்ள இளநீரைக் குடித்து வழுக்கையைத் தின்னும். இந்துதேசத்தார்கள் குரங்குகளை வெகுதந்திரமாய்ப் பிடிப்பார்கள். தேங்காயில் ஒருசிறுதுவாரம் உண்டுபண்ணி, அதைக் குரங்குகள் வழக்கமாய் வரப்போக இருக்கிற இடங்களில் போட்டுப்பக்கத்தில் பதிவிருப்பார்கள். குரங்கு அதைக் கண்டு எடுத்து, அதற்குள் இருக்கின்ற வழுக்கையை எடுத்துத் தின்னும்படியாகத் தன் கைவிரலைத் துவாரத்திற்குள்விட்டு, திரும்ப அதை இழுக்கக்கூடாமல் மாட்டிக்கொண்டிருக்கும் வேளையில், அவர்கள் ஓடிப்போய் அதைப் பிடித்துக்கொள்வார்கள்.

குரங்கு ஒரு ஈற்று முறையில் பெரும்பாலும் ஒரு குட்டியும், சிறுபான்மை இரண்டு குட்டிகளும் போடும். அது மனிதர் கைவசப்பட்டுக் கட்டாயத்தில் இருக்கும் பொழுது குட்டிபோடுவது அபூர்வம். குரங்கு தன் குட்டிகளிடத்தில் அதிக பட்சமுள்ளதாயிருக்கும். இதுபற்றி "குரங்குக்கும் தன் குட்டி பொன்குட்டி" என்பதாகப் பழமொழியுண்டாயிற்று. ஆண் குரங்கு பெண்குரங்கு இரண்டும் தங்கள் குட்டிகளை மிகவும் கருத்தாக வளர்த்துச் சீராட்டுவதுமன்றி, அதிக முயற்சியாய் அவைகளுக்கு அறிவுஊட்டுவதும் வழக்கம். அவைகள் குட்டிகள் விஷயத்தில் சற்றும் சலிக்கிறதில்லை. குட்டிகள் முரண்டு செய்யும்பொழுதும், தாய்தந்தையருடைய நடக்கையைப் பார்த்து, அவ்வாறு நடந்து அனுகூலம் பெற விரும்பாதிருக்கும்பொழுதும், அவைகளைப் பெற்றவைகளாகிய குரங்குகள் நன்றாய்த் தண்டிக்கும். காட்டில் சஞ்சரிக்கின்ற குரங்குக்கு இரண்டு குட்டிகள் இருந்தால், அது அங்கங்கே போக்குவரவு செய்யும்பொழுது, ஒரு குட்டியை முதுகிலும், மற்றதை மார்பிலும் கொண்டுபோகும். முதுகில் இருக்கும் குட்டி தாய்க்குரங்கின் கழுத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு அதின் இடுப்பைத் தன் காலால் பற்றிக்கொண்டிருக்கும்.

குட்டி.

அநேக ஏழைச்சனங்கள் குரங்குகளைப்பிடித்து, அவைகளுக்குப் பலவித ஆட்டங்கற்றுக்கொடுத்து அங்கங்கே கொண்டுதிரிந்து வேடிக்கைகாட்டி, அவ்வாறு சீவனம்பண்ணுவார்கள்.

உபயோகங்கள்.

மனிதருக்குக் குரங்குகளினால் உபயோகம் உண்டென்று சொல்வதற்கு இடமில்லை. இந்தியாவிற் பல இடங்களிலுள்ளவர்கள் மிகவும் அலங்காரமான ஆலயங்களைக் கட்டி, குரங்குகளுக்கு ஆராதனை செய்வார்கள். சிலநாடுகளில் குரங்குகள் திரளாயுண்டு. அவைகள் அடிக்கடி கூட்டங்கூட்டமாய்ப் பட்டணங்களுக்குப்போய் வீடுகளுக்குள் நுழைவதுண்டு. கள்ளிக்கோட்டையிலுள்ள ஜனங்கள் குரங்குகள் தங்கள் வீடுகளுக்குட் செல்லாதபடி பலகணிகளுக்கு இலைக்கதவுகள் போடுவார்கள். கூர்ச்சரதேசத்தின் ராஜதானியாகிய அமிதபாதநகரத்திலே முடக்குரங்குகளுக்கும் வியாதிக் குரங்குகளுக்கும், இஷ்டமுள்ள மற்றெந்தக் குரங்குகளுக்கும் இரைகொடுத்துப் பராமரிக்கும்படியாக மூன்று வைத்தியசாலைகள் உண்டு. அந்த நகரத்திலுள்ளவர்கள் உஷ்ணகாலத்தில் படுத்து நித்திரை செய்யும்பொருட்டாகத் தங்கள் வீடுகளின்மேல் ஒரு சிறுமெத்தை கட்டியிருப்பார்கள். நகரத்திற்குச் சமீபத்திற் சஞ்சரிக்கிற குரங்குகள் வாரத்திற்கு இரண்டுமுறை அதின் வீதிகளுக்கு வலியப்போவது வழக்கம். அவ்வேளைகளில் நகரத்தார்கள் தங்கள் சிறு மெத்

தைகளின்மேல் அந்தக் குரங்குகளுக்காகச் சோறு, சாமை, கனிமுதலிய இரைகளைப் போட்டிருப்பார்கள். இப்படிச்செய்வதில் ஜனங்கள் மிகவும் கருத்துள்ளவர்களாயிருப்பார்கள். குரங்குகள் மெத்தைமேல் ஏறி அந்த இரைகளைத் தின்றுபோகும். ஜனங்கள் யாதேனும் ஒரு காரணத்தால் அந்த இரைகளை மெத்தைமேல் வைக்காமற்போனால், குரங்குகள் தங்களுக்கு உண்டாகும் நம்பிக்கைக் கேட்டினாலே அதிக உக்கிரங்கொண்டு, வீடுகளின் தட்டோடுகளை உடைப்பதுமன்றி, வேறுபல விதங்களாகவும் கெடுதிபண்ணும்.

கதைகள்.

கண்ணாற்கண்டதைக் கையாற்செய்யும்படியானசக்தி குரங்குகளைப்போல மற்றெந்த மிருகங்களுக்கும் இல்லை அதைப் பின்வரும் கதையினால் அறியலாம். ஓர் இடத்திலே குரங்குகள் அடைத்துவைக்கப்பட்டிருந்தன. ஒரு துரைமகன் அப்போதப்போது அவைகளைப் போய்ப்பார்த்து, அவைகளுக்குத் தலைக்கொரு மாம்பழம் கொடுத்துவருவார். அந்தக் குரங்குகளில் ஒன்று சற்றுப் பலவீனமுள்ளதாயிருந்தது. அதற்குக் கிடைத்த பழத்தைப் பலமுள்ள மற்றக் குரங்குகளிற் சில எப்பொழுதும் அடித்துப் பறித்துத் தின்றுகொண்டுவந்தன. ஒரு நாள் அந்தக் குரங்குகளில் ஒன்று வைத்திருந்த பழத்தைப் பக்கத்தில் நின்ற பையன் ஒருவன் பறித்துக்கொண்டு ஓட, மேற்படி துரைமகன் தன் கையில் இருந்த ஊன்றுகோலால் அவனுக்கு ஒரு அடி கொடுத்

தார். அதைப் பார்த்திருந்த அந்தப் பலவீனமுள்ள குரங்கு, துரை வைத்திருந்த கோலைப் பிடுங்கி, தன் பழத்தைப் பறித்த குரங்குகளுக்கு நன்றாய் உறைக்கும்படி அடித்தது. பின்பு துரை மாம்பழம் கொடுக்கவரும்பொழுதெல்லாம், அந்தக் குரங்கு ஒருகையாற் பழத்தையும், மறுகையால் கோலையும் வாங்கும். அப்புறம் அதின் பழத்தைப் பறிக்கும்படி ஒரு குரங்காவது துணியவில்லை.

---

முற்றிற்று.